# இரு கண்ணிலும் உன் ஞாபகம்...

லட்சுமி பிரபா



## உள்ளே...


1. இரு கண்ணிலும் உன் ஞாபகம்... 5

2. எங்கே என் ஜீவனே...? 126

3. உன்னைத் தேடித் தேடியே... 237


# இரு கண்ணிலும் உன் ஞாபகம்...

## 1

படுக்கை அறையில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் 'கூ... குக்கூ' என்று இரட்டைக் குயில்கள் ஐந்து முறை வெளியில் தலை காட்டி, கதவை மூடிக் கொண்டு அடங்கின.

போர்வையை விலக்கி விட்டு விழிகளை மூடியபடியே எழுந்து அமர்ந்த ரதி... தன் இரு உள்ளங்கைகளையும் பரபரவென்று தேய்த்து அதில் முகம் பார்த்துக் கொண்டாள். கட்டிலில் அமர்ந்தபடியே இரு கைகளை உயர்த்தி சோம்பல் முறித்து விட்டு... கைக்கு எட்டும் தூரத்தில்

பக்கவாட்டு டேபிளின் மீது வைத்திருந்த புகைப்படத்தை எடுத்து உற்றுப் பார்த்தாள்.

லேமினேட் செய்யப்பட்டிருந்த படத்தில்... வசீகரமாய்ச் சிரித்துக் கொண்டிருந்தான் மதன்.

"குட்மார்னிங் மதன்! எப்படியிருந்த என்னை இப்படி மாத்திட்டீங்களே டியர்? அப்பான்னா... எனக்கு உயிர்னு உங்களுக்கே தெரியுமே?

அப்பா சதா வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் பறந்துக்கிட்டிருக்கிறவரு... அவரு அப்படி என்னை விட்டுப் பிரிஞ்சு போகும்போதெல்லாம்... அந்தப் பிரிவை என்னால தாங்கவே முடியாது.

அப்பாவோட ஞாபகமாகவே இருக்கும். அடிக்கடி ஏன் ஃபோன் பண்ணிப் பேசலைன்னு... அப்பாகிட்ட கோபமா கேட்பேன். கண்ணைக் கசக்கி அழுது சின்னதா சண்டை கூட போட்டிருக்கேன்.

ஆனா... இப்போ? 'அம்மாடி ரதி! என்னடா செல்லம்? இப்படி அடியோட மாறிட்டியே? நானா ஃபோன் பண்ணிப் பேசினால்தான் நீ பேசறே... கோவிச்சுக்கிட்டு அழுதுகிட்டு என்கிட்ட செல்லமா சண்டை போடறதையே நிறுத்திட்டியே?

மதனுக்கும் உனக்கும் நிச்சயம் பேசி ஒப்புத் தாம்பூலம் மாத்திக்கிட்டதிலேர்ந்து... உன்கிட்ட நிறைய மாற்றங்கள் வந்துடுச்சும்மா... திடீர்னு ஒரு பெரிய மனுஷி தோரணை, பொறுப்பு, பொறுமை, பக்குவம் எல்லாமே வந்திருக்கு. ஒரு பக்கம் ரொம்ப சந்தோஷமா இருக்கு. இன்னொரு பக்கம் வருத்தமாகவும் இருக்கு ரதி...!



எதுக்கு வருத்தம்னு கேட்கறியாம்மா? மூச்சுக்கு முன்னூறு தரம் 'அப்பா... அப்பா... அப்பா...'ன்னு என் மேல உயிரா இருந்த பொண்ணு நீ! இப்போ உன் மனசு பூராவும் மதன்தான் நிறைஞ்சிருக்கான். கூடிய விரைவில அவனுக்கு மனைவியாகி... புகுந்த வீட்டுக்கு மருமகளாப் போகப் போறே... அந்த வீட்டு மருமகளுக்குரிய அத்தனை தகுதிகளும் உன்கிட்ட இப்பவே வந்தாச்சு.

உன் பேச்சுல நடவடிக்கைகள்லே... எல்லாத்திலேயும் மதனோட வருங்கால மனைவிதான்... என் கண்ணுக்குத் தெரியறா... என் பொண்ணு, என்னோட செல்ல ரதி எங்கே? என்கிட்ட சண்டை பிடிக்கிற ரதிக்குட்டி காணலையே? என்னை அடியோட மறந்துட்டாளேன்னு... உள்ளூர சின்ன வருத்தமாத்தான் இருக்கு...

அதே சமயத்துல எனக்கு ரொம்பப் பெருமிதமாவும் இருக்குடா... ஒரு பெரிய தொழிலதிபரோட ஒரே பொண்ணு... தாயில்லாத பொண்ணுங்கிறதால அதீத செல்லமா வளர்க்கப்பட்டவ... விரலை அசைச்சா அந்த வேலையைச் செய்யறதுக்கு காத்திருக்கிற ஆட்படைங்க... உள்ளம்பாதம் தரையில படாம ஒரு பூவைப் போலத் தாங்கி வளர்க்கப்பட்டாலே... திமிர், ஆணவம், கர்வம், அகம்பாவம், ஜபர்தஸ்து, மமதைன்னு... எல்லாக் கெட்ட குணங்களும் வந்து ஒட்டிக்கும்.

பணக்காரப் பொண்ணுன்னாலே... இப்படித்தான் இருப்பாங்கன்னு... சமுதாயத்துலே எல்லாருமே நெனைக்கிறாங்க... அந்த நெனைப்பை நீ பொய்யாக்கிட்டே ரதி!

அடக்கம், பணிவு, பவ்யம், பண்பு, அன்பு, சூழ்நிலைக்கு ஏத்தபடி நடந்துக்கிற பக்குவம் எல்லாமே உன்கிட்டே இருக்குடா... அதிலேயும் மதனுக்கு உன்னை நிச்சயம் செய்தப்புறம்... நீ ரொம்பவே மாறிட்டே...

அவங்க வீட்டுப் பழக்கத்துக்கு ஏத்த மாதிரி நீயும் அதிகாலையில எழுந்திரிச்சு குளிச்சுட்டு பூஜைக்கேத்த பூக்களைத் தோட்டத்திலேருந்து உன் கையாலேயே பறிச்சுட்டு வந்து தொடுத்து சாமி படங்களுக்குப் போட்டு விளக்கேற்றித் தியானம் பண்றே...

சமையல்காரரை விலகி நிக்கச் சொல்லிட்டு, கரண்டியைக் கையில தூக்கிட்டு, நளபாகமும் பண்றே... இந்தக் காலத்துல இப்படியொரு பொண்ணை எங்கேயும் பார்க்க முடியாதுடா...

சும்மா சொல்லக்கூடாது ரதி! மதன் ரொம்பக் கெட்டிக்காரன்தான்... தாலி கட்டறதுக்கு முன்னாடியே உன்னைத் தனக்கேத்த மனைவியா மாத்திட்டானே?

பணக்கார வீட்டிலேருந்து பொண்ணு கிடைச்சா... நிறைய பேரு தன்மானத்தை அடகு வைச்சுட்டு கிட்டத்தட்ட தலையாட்டி பொம்மையாவே ஆயிடுவாங்க...

ஆனா மதன் அப்படியில்லை... சுய கவுரவம் கடுகளவுகூட குறைஞ்சு போயிடக் கூடாதுன்னு... வைராக்கியத்தோட வலம் வர்ற வணங்காமுடி!

இப்படிப்பட்டவன் கையில உன்னை நான் ஒப்படைக்கப் போறேன்கிறதிலே.. எனக்கு உள்ளூர பரம திருப்தி.... மனசுல இருக்கிற பெரிய பாரம் இறங்கினாப்பல



நிம்மதியா இருக்கு ரதி'ன்னு... அப்பா என்கிட்ட சொல்றாரு மதன்!

அப்பா சொல்றது உண்மைதான். உங்களுக்கு நான் மனைவியாகப் போறேன்னு நெனைச்சு... நானும் அளவு கடந்த சந்தோஷத்துல இருக்கேன்.

உங்ககிட்ட எனக்குப் பிடிச்ச விஷயங்கள் நிறைய இருக்கு. முக்கியமா உங்க வைராக்கியமும் முன் வைத்த காலைப் பின் வைக்காத குணமும், சுயகவுரவமும், தைரியமும்... என்னை ரொம்பவே ஈர்த்திடுச்சு.

பைத்தியம் மாதிரி உங்க ஃபோட்டோவைப் பார்த்தே காலங்கார்த்தால ரொம்ப நேரமா பேசிட்டிருக்கேன் இல்லையா?

அந்த அளவுக்கு நீங்க என்னை வசீகரிச்சட்டீங்க மதன். வர்றேன்... எல்லா வேலைகளையும் முடிச்சிட்டு சீக்கிரமா உங்க வீட்டுக்கு வர்றேன்.

நீங்க உங்க ஆபீசுக்குக் கிளம்பறதுக்கு முன்னே... உங்களைப் பிடிச்சுடறேன்... ஸீ யூ டார்லிங்!"

மான் போல் துள்ளிக் குதித்துக் குளியலறையை நோக்கி ஓடிய ரதி... பெயருக்கு ஏற்றாற்போல் ஒரு அழகுப் பெட்டகமாகத் திகழ்ந்தாள்.

அப்பா தர்மதுரை நகரில் மிக முக்கியமான பெரும்புள்ளி... ஏகப்பட்ட நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர்தான்.

ஆனால் அடிமட்டத்திலிருந்து வந்த மனிதர். குறிப்பிட்ட காலம் வரைதான்... பணத்தைச் சேர்க்க மிகவும் கஷ்டப்பட

வேண்டும். அதன் பின்பு அந்தப் பணமே தன்னைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொள்ளும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

அது தர்மதுரையின் விஷயத்தில் மிகச் சரியாக இருந்தாலும்... சிகரத்தைத் தொட்டு விட்ட உயர்ந்த ஸ்தானத்தைத் தக்க வைத்துக் கொள்ள... அவரும் இன்றளவும் பறந்து பறந்து நிறுவனங்களைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

ஆரம்ப காலத்தில் தனக்குப் பண உதவி செய்து கை தூக்கி விட்ட நண்பன் கங்காதரன், பத்து வருடங்களுக்கு முன்பு மாரடைப்பால் காலமாகி விட்டாலும்... தர்மதுரை இன்றைக்கும் அந்த நன்றியை மறக்காமல்... நண்பனின் குடும்பத்தாரிடம் பாசம் காட்டி உறவாடிக் கொண்டிருந்தார்.

தான் கைதூக்கி விட்ட நண்பன் உத்வேகத்துடன் உழைத்து மளமளவென்று உச்சாணிக் கொம்பில் ஏறுவதைப் பார்த்து பெருமிதப்பட்டார் கங்காதரன்.

புளகாங்கிதப்பட்டதோடு சரி... தான் செய்த உதவிக்குப் பிரதிபலனாக தர்மதுரையிடம் இருந்து எதையுமே எதிர்பார்க்கவில்லை.

"டேய் கங்கா! நல்ல மனசோட உன்னோட ராசியான கரத்தால எனக்குப் பணம் கொடுத்து உதவினே! இப்போ நான் தொட்டதெல்லாம் பொன்னாகிட்டிருக்கு... எல்லாம் உன் கைராசிதான்டா!

காலத்தால செய்த தக்க உதவியை... என் உயிர் இருக்கிறவரை மறக்க முடியாதுடா... இப்போ உன்



வியாபாரம் கொஞ்சம் மந்தமாயிருக்குன்னு நான் கேள்விப்பட்டேன்.

இந்தா... நீ கொடுத்த பணத்தை நாலு மடங்கா திரும்பக் கொடுக்கிறேன். வாங்கிக்கோ... கங்கா!"

பணத்தை நீட்டியபடி கிட்டத்தட்ட கெஞ்சினார் தர்மதுரை.

"தர்மா! இந்த மாதிரி பணத்தைக் கொடுத்து நம்ம நட்பைக் கொச்சைப்படுத்தாதேடா... பணத்தைத் திருப்பிக் கொடுத்துத்தான் தீருவேன்னு... நீ ஒத்தைக் கால்லே நின்னா... நான் வாங்கிக்கிறேன்.

ஆனா... மறுபடியும் வந்து என் முகத்துல நீ முழிக்கவே கூடாது தர்மா! பணமா? நட்பான்னு நீயே முடிவு பண்ணிக்கோ!"

திட்டவட்டமாய்க் கூறிவிட்டு முதுகு காட்டி நின்று கொண்டார் கங்காதரன்.

"என்னை மன்னிச்சுடு கங்கா! இந்தளவுக்கு உன் மனசு காயப்படும்னு நான் எதிர்பார்க்கலை. இந்த மாதிரி ஒரு நண்பன் கிடைக்கிறதுக்கு... நான் ரொம்பவே கொடுத்து வைச்சிருக்கணும்டா...!

என்கிட்ட இருக்கிற பணம், செல்வாக்கு, அந்தஸ்தைப் பார்த்துட்டு... நிறைய பேரு வலிய வந்து ஒட்டிக்கிட்டாங்க.

ஆதாயத்தை எதிர்பார்த்து உச்சி குளிரும்படி பேசிச் சிரிச்சு... காக்கா கூட்டமா சுத்திக்கிட்டிருக்காங்க... அவங்களுக்கு மத்தியில நீ கலங்கரை விளக்கா உசந்து நிக்கிறே கங்கா!

நம்ம நட்பு நம்மோடவே முடிஞ்சு போகக் கூடாது கங்கா! அது உறவா... காலா காலத்துக்கும் தொடரணும்னு நான் விரும்பறேன்..." என்று தழுதழுத்துப் பேசியபடி நண்பனை அணைத்துக் கொண்டார் தர்மதுரை.

"ஏ... என்னடா சொல்றே?"

"புரியலையா கங்கா? எதிர்காலத்துல உன் பிள்ளை மதனுக்கு என் பொண்ணு ரதியைக் கட்டி வச்சுட்டு... நாம்ப சம்பந்தம் செய்துக்கலாம்னு சொல்ல வர்றேன். தயவு செய்து நீ இதுக்கு மறுப்புத் தெரிவிச்சுடாதே கங்கா! என்னால தாங்க முடியாது."

"மதனுக்குத்தான் ரதின்னு... பகவான் முடிச்சுப் போட்டு வச்சிருந்தா... அதை யாராலும் மாத்த முடியாது. அப்படியொரு பிராப்தம் இருந்தா... நடக்கட்டும்.

ஆனா ஒண்ணு தர்மா! நாம இந்த மாதிரி முடிச்சுப் போட்டுப் பேசிக்கிட்ட விஷயம்... நமக்குள்ளேயே இருக்கட்டும். பசங்களுக்கு இது தெரியவே வேணாம். காலநேரம் வரும்போது... அவங்களுக்குத் தெரிஞ்சாப் போதும். சரியா?"

"சரி!" பலமாய்த் தலையாட்டினார் தர்மதுரை.

அன்றிலிருந்து தமது ஆசையை மனதில் போட்டுப் புதைத்து வைத்திருந்தார்.

தமது நிலைமை இன்னும் பன்மடங்காக உயர்ந்த போதும்... கங்காதரன் திடுதிப்பென்று மாரடைப்பால் காலமான போதும்... அவரது எண்ணம் மாறவே இல்லை.

அடிக்கடி தனது மகள் ரதியை அழைத்துக் கொண்டு... மறைந்த நண்பனின் மனைவி அபிராமியையும், மகன்



மதனையும் சந்தித்து, நலம் விசாரித்து... அந்தக் குடும்பத்தின் மீது தனக்கு இருந்த அக்கறையையும் உரிமையையும் ஊரறிய நிலைநாட்டிக் கொண்டுதான் இருந்தார் தர்மதுரை.

பெரியவர்கள் வெளிப்படையாய் எதுவும் பேசிக் கொள்ளாததால்... மதனும் சரி... ரதியும் சரி! தான் உண்டு தன் படிப்பு உண்டு என்றுதான் இருந்தார்கள்.

குணத்திலும் சுறுசுறுப்பிலும் அப்படியே அப்பாவை உரித்துக் கொண்டு வந்திருந்தான் மதன்.

பெருந்தன்மை, பிடிவாதம், சுயகவுரவம், தன்னம்பிக்கை, வைராக்கியம், விடாமுயற்சி என்று சகலத்திலும் தனது அப்பாவின் அடியொற்றி நடந்த மதனை... தர்மதுரைக்கு நிரம்பவே பிடித்திருந்தது.

அந்த வைராக்கியம், விடாமுயற்சியின் மூலமாக... மதனுக்கு மிகப் பெரிய விபரீதத்தை விளைவிக்க... விதி, தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது.

## 2

மதனின் வீடு, அதே மயிலாப்பூரில் தான் இருந்தது. மயிலை கபாலீஸ்வரர் கோவிலுக்கு வெகு சமீபத்தில்தான்... ரதியின் பங்களா அமைந்திருந்தது.

பணத்தாலேயே இழைத்து பங்களாவை வெகு நவீனமாய்க் கட்டியிருந்தார் அப்பா தர்மதுரை.

அங்கிருந்து காரில் ஏறினால்... பத்தே நிமிடங்களில் மதனின் வீட்டை அடைந்து விடலாம்.

அவனது வீடு, அந்தக் காலத்தில் கட்டப்பட்டதுதான்! பெரிய காம்பவுண்ட் கேட்டைத் தாண்டினால் அழகான தோட்டம்... தோட்டத்திற்கு மத்தியில் அமைந்திருந்த அந்தக் காலத்து வீட்டை முழுவதும் இடித்துவிட மனமின்றி நவீன முறையில் சில மாற்றங்களைச் செய்து... அம்சமாக மாற்றி விட்டிருந்தான் மதன்.

நான்கு பக்கமும் தாழ்வாரம்... ஒவ்வொரு தாழ்வாரத் திலும் ஒரு பெரிய அறை... நெருக்கமாகக் கம்பி போட்ட பெரிய முற்றம், கூடம், ரேழி, பின்கட்டு, சமையல் அறை, பின்பக்கத்திலும் தோட்டம் என்று பிரம்மாண்டமாய்தான் இருந்தது.

வீட்டின் நான்கு பக்கத்துத் தாழ்வாரங்களின் மேல்தளத்திலிருந்து பூந்தொட்டிகள் தொங்கின.

தோட்டத்தில் வேப்ப மரங்களும் தென்னை மரங்களும் இருந்ததால்... சுத்தமான ஆரோக்கியமான காற்றுக்குப் பஞ்சமில்லை.

மதனுக்குச் செடி கொடிகளை வளர்ப்பதில் ஆர்வம் அதிகம். படிக்கட்டுகளின் இருபுறமும் குரோட்டன்ஸ் வைத்திருந்தான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாமல் மதன் தோட்டத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பராமரித்ததில்... தோட்டம் கலைநயத்துடன் நேர்த்தியாக பச்சைப் பசேலென்று காண்போர் கண்களை ஈர்த்துக் கொண்டிருந்தது.

காரை நிறுத்தி விட்டு, மறக்காமல் டிபன் கேரியரை எடுத்துக் கொண்டு காரை விட்டு வெளிப்பட்ட ரதி...



தோட்டத்தைப் பார்வையால் வருடிக் கொடுத்தபடியே நடுவில் வகிடு போல் தெரிந்த நடைபாதையில் நிதானமாய் நடந்தாள்.

"அடடே... வாம்மா ரதி! மதன் இப்பதான் சாப்பிட டேபிள்ல உட்கார்ந்தான். கரெக்டா நீயும் வந்துட்டே. உட்காரும்மா... நீயும் அவனோடு சேர்ந்து டிபன் சாப்பிடு!"

கனிவாய் உபசரித்த அபிராமியைப் புன்முறுவலுடன் ஏறிட்டாள் ரதி.

அபிராமியின் நெற்றியில் பளிச்சென்று விபூதி துலங்கிக் கொண்டிருந்தது.

சாந்தம் தவழும் முகத்தில்... வழக்கத்திற்கு மாறாக ஏதோவொரு பீதி படர்ந்திருப்பதைக் கண்டதும்... யோசனையுடன் மதனை உற்றுப் பார்த்தாள் ரதி.

வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன், "என்ன ரதி! இன்னிக்கு என்ன விசேஷம்? கையில டிபன் கேரியரோட வந்திருக்கே? மாமா ஊர்லே இல்லாததால... உன்னோட நளபாகத்தை தனியா சாப்பிடப் பிடிக்காம... அதை அப்படியே பேக் பண்ணிக் கொண்டு வந்துட்டியாக்கும்?" என்றான் மதன்.

"ஏதோ... சீரியஸா பேசிட்டிருந்தீங்க போலிருக்கு? நான் திடீர்னு வந்து டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?" ரதியின் பார்வை, மீண்டும் அபிராமியின் வாடிய முகத்தில் வந்து நிலைத்தது.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல ரதி! நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம... எதிர்க்கேள்வி கேட்டா என்ன அர்த்தம்?" உரிமையாய் அதட்டினான் மதன்.

"இன்னிக்கு என்னோட பிறந்த நாள். என்கூடவே இருக்கணும்னு பிரியப்பட்டு... அப்பா, இந்த வாட்டி ஃபாரின் ட்ரிப்பை கேன்ஸல் பண்றதுக்கு டிரை பண்ணினாரு.

பிஸினஸ் சம்பந்தமான கருத்தரங்கத்துலே அவரு கட்டாயம் கலந்துகிட்டே ஆகணும்கிற சூழ்நிலை! நான்தான் வற்புறுத்தி அவரை அனுப்பி வைச்சேன். அப்பா கிளம் பறதுக்கு முன்னே... இதோ இந்தப் பட்டுச் சேலையையும், வைர நெக்லஸையும் பரிசா வாங்கிக் கொடுத்துட்டுத்தான் போனாரு.

கார்லே நான் இங்க வந்துட்டிருக்கும்போது... அப்பா என் செல்லுக்கு ஃபோன் பண்ணி வாழ்த்துச் சொன்னாரு... கற்பகாம்பாளையும் கபாலீசுவரரையும் சேவிச்சுட்டு மறக்காம அர்ச்சனை பண்ணிடும்மான்னு... சொன்னாரு.

நான் கோவிலுக்குப் போகாம... நேரா இங்கே வந்துட்டேன். அம்மா ஸ்தானத்துலே அத்தை இருக்காங்கல்ல! என்னைப் பொறுத்தவரை... இவங்கதான் நடமாடும் தெய்வம். இவங்ககிட்டேயும் உங்ககிட்டேயும் ஆசீர்வாதம் வாங்கினாப் போதும்னு... என் மனசுக்குப் பட்டுச்சு... அதான்...

என் கையாலேயே ஸ்வீட் செய்துடணும்னு தோணுச்சு. உங்களுக்குக் கேரட் அல்வான்னா... ரொம்பவும் பிடிக்கும்னு... அத்தை சொல்லியிருக்காங்க.

கேரட் அல்வாவும், பருப்பு அடையும் தொட்டுக்க தக்காளிச் சட்னியும் செய்திருக்கேன். நீங்க சொன்னது சரிதான்!



அப்பா வீட்டுலே இருந்திருந்தா... என்னோட நளபாகத்தை ரசிச்சு சாப்பிட்டிருப்பாரு... எனக்குத் தனியா சாப்பிடப் பிடிக்கலை. அதனால டிபன் கேரியர்லே வச்சு எடுத்துட்டு வந்துட்டேன்..."

"மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே ரதி! உன்னோட பிறந்த தேதியை என்னோட டைரியில குறிச்சு வச்சிருந்தேன். எப்படி மறந்தேன் தெரியலையே? சாரி! கை கொடு. ஆல் தி பெஸ்ட் ரதி!"

அவளது வலது கரத்தை மென்மையாகப் பற்றிக் குலுக்கினான்.

"உனக்கு எப்படி ஞாபகம் இருக்கும் மதன்? சதா எப்படி பிஸினஸை இன்னமும் டெவலப் பண்ணலாம்கிற சிந்தனை... அதை விட்டா நண்பர்களோடு தீவிரமா ஆலோசனைக் கூட்டம் நடத்தறே... அதையும் விட்டா... பத்திரிகை ஒண்ணை ஆரம்பிச்சு வச்சு ஒரு வருஷமா அதையும் கட்டிட்டு அழறியே?

இது நாள் வரைதான்... வீட்டுல வயசான அம்மா ஒருத்தி இருக்காளே? அவளுக்காக கொஞ்சமாவது நேரம் ஒதுக்குவோம்னு நெனைப்பே இல்லாம இருக்கிறே...

ரெண்டு மாசத்துக்கு முன்னே உனக்கும் ரதிக்கும் நிச்சயம் பேசி ஒப்புத் தாம்பூலம் மாத்தியிருக்கோம். நினைப்பு இருக்கா? இல்லையா மதன்?

இன்னமும் கொஞ்ச நாள்லே இந்தப் பொண்ணு உன்னை நம்பி இந்த வீட்டுக்கு வாழ வரப் போறா... உனக்குன்னு ஒரு குடும்பம் இருக்குங்கிற நினைப்பு எப்பவும் இருக்கணும் மதன்!

இல்லேன்னா... நாளைக்கு இவளும் கண்ணைக் கசக்கிக்கிட்டு நிப்பா... புரிஞ்சுக்கோ!

உன் இடத்திலே வேற யாராச்சும் இருந்திருந்தா... வருங்கால மனைவியோட பிறந்தநாளை ஞாபகம் வச்சிருந்து... அவ மனசுக்குப் பிடிச்ச பரிசா வாங்கிக் கொடுத்து இந்த நாளைக் கோலாகலமா கொண்டாடி யிருப்பான்.

போன மாசம் உன்னோட பிறந்த நாளை ஞாபகம் வச்சிருந்து... உன் பேருக்கு அர்ச்சனை பண்ணி கோவில்லே அன்னதானத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டு... பிரசாதத்தோட இங்க வந்து... லைட் கலர்லே டிரஸ் எடுத்துட்டு வந்து கொடுத்தா... கையில உனக்கு ராசிக்கல் மோதிரத்தை மாட்டி விட்டாளே? மறந்துட்டியா மதன்?

தாயில்லாத பொண்ணுப்பா அவ! என்னை அவளோட அம்மா ஸ்தானத்துல வச்சுப் பார்க்கிறா... கோவிலுக்குக் கூடப் போகாம இங்கே என்கிட்ட ஆசீர்வாதம் வாங்க வந்திருக்காளேடா?

எப்பேர்ப்பட்ட மனசு இவளுக்கு? என்னடா இது? நம்ம வருங்காலக் கணவருக்குப் பிறந்தநாள் கூட ஞாபகம் இல்லையேன்னு... மனசுல இவளுக்கு இன்னிக்கு சின்னதா ஆதங்கமும் வருத்தமும் இருக்கும் தெரியுமா?

இந்தக் காலத்து வயசுப் பசங்க எப்படியெல்லாம் நடந்துக்கிறாங்க? கொஞ்சம் மத்தவங்க மனசையும் புரிஞ்சு நடந்துக்கோ... மதன்! அவ்ளோதான் நான் சொல்லுவேன்...

அம்மாடி! வா... பூஜை ரூமுக்குப் போகலாம். இந்த மயில் கழுத்து வண்ணப் பட்டுப் புடவையில... நீ அப்படியே தேவதை மாதிரி இருக்கேம்மா..."



அபிராமி ஊசிப் பட்டாசாய்ப் பொரிந்து தள்ளுவாள் என்று சற்றும் ரதி எதிர்பார்க்கவில்லை.

தர்மசங்கடத்துடன் மதனை ஒரு பார்வை பார்த்துகிட்டு... அபிராமியைப் பின்தொடர்ந்து நடந்தாள்.

"தீர்க்க ஆயுசா... சௌபாக்கியவதியா ஒரு குறையும் இல்லாம... நீ நூறு வருஷம் வாழ்வாங்கு வாழணும்..."

தனது பாதங்களைத் தொட்டுப் பணிந்தவளின் நெற்றியில் மஞ்சள் குங்குமத்தைத் தீற்றி விட்டாள் அபிராமி.

"அப்படியே மகாலட்சுமி மாதிரி இருக்கே... மனசுல ஒண்ணும் வச்சுக்காதேம்மா... அத்தை நானிருக்கேன் உனக்கு! இந்தப் பயலை எப்படியாவது சரிக்கட்டி வழிக்குக் கொண்டாந்துடலாம்... கவலைப்படாதே ராஜாத்தி!"

ரதியின் கன்னங்களைத் தொட்டு வருடி, விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள் அபிராமி.

"அ... அத்தே! என் மனசுல எந்த வருத்தமும் இல்லையே அத்தே? அவருக்கு என்னோட பிறந்தநாள் ஞாபகமில்லாட்டி... என்ன இப்போ?

உண்மையைச் சொல்லப் போனா... அவரு இப்படி இருக்கிறதுதான்... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இந்தக் காலத்து இளைஞர்கள் லவ் பண்ணினாலோ... தனக்குன்னு ஒருத்தி வந்துட்டாலோ... அப்படியே பெத்தவங்களை சுத்தமா மறந்துடறாங்க....

அந்தப் பொண்ணுதான் இனி தனக்கு சகலமும்னு அவளையே சுத்தி வர்றாங்க... சதா அவ நெனைப்பிலேயே

இருந்து... இந்த உலகத்தையே ஞாபகம் வச்சுக்கிடறது இல்ல...

எனக்கு அதைப் பத்திக் கேட்கும்போதும்... பார்க்கும் போதும்... ரொம்ப வேதனையா இருக்கும். சுயநலம் பிடிச்ச பொறுப்பற்ற இளைஞர்கள் மத்தியில... மதன் மலையா உசந்து நிற்கிறாரு...

அப்பா கூட இவரைப் பத்திதான் சதா பெருமையா பேசிட்டிருப்பாரு... 'இப்பேர்ப்பட்ட பிள்ளை என் வயித்துல வந்து பொறந்ததுக்கு... நான் ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கணும்'னு... நீங்ககூட அடிக்கடி சொல்வீங்களே அத்தே?

இன்னிக்கு என்னாச்சு உங்களுக்கு?" வாத்சல்யத்துடன் அபிராமியின் கரங்களைப் பற்றியபடி அவளது விழிகளை ஊடுருவினாள் ரதி.

"வாஸ்தவம்தான் ரதி! அவன் ஒரு விஷயத்துக்காக ரொம்பவும் பிடிவாதம் பிடிக்கிறான். நான் இன்னிக்கு பலவாட்டி கெஞ்சிப் பார்த்தும்... ஒத்தைக் கால்லே நிற்கிறான்.

அவன் பண்ணப் போற காரியத்தைப் பற்றி... சொன்னா உனக்கும் அவன் மேல கோபம் வரும்... ஆபத்து வரும்னு சொன்னா... ஒதுங்கிடணுமா இல்லையா?"

"ஆமா... ஒதுங்கிடணும்."

ரதிக்கு திக்கென்றிருந்தது. ஓரக்கண்ணால் மதனை ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் அபிராமியின் மீது ஒரு பார்வையைப் பதித்தாள்.



"ஒதுங்க மாட்டானாம்... ஆபத்தைத் தேடிப் போவானாம்... ஆபத்து தானே? வந்தா வந்துட்டுப் போகதுன்னு விளையாட்டாப் பேசறான்... ஆபத்து வந்தா... உயிர் போயிடுமே? அதான் அதுக்குத்தான் நான் பயப்படறேன் ரதி!"

'ஆபத்து வந்தா... உயிர் போயிடுமா?' ரதிக்கு உள்ளூர சொரேல் என்றிருந்தது.

## 3

மதனின் வீட்டுக்குள் புகுந்தபோது... ரதியின் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது.

அத்தை அபிராமி பேசியதைக் கேட்டதும்... ஊசியால் குத்தப்பட்ட பலூனைப் போல்... மனதில் ததும்பிய மகிழ்ச்சி புஸ்ஸென்று அடங்கிக் காணாமல் போனது.

"அம்மா! என்னம்மா நீங்க? பிறந்த நாளும் அதுவுமா எதுக்கு வீணா ரதியைக் கலவரப்படுத்தறீங்க?

ரதி! இங்க வா... நாம சேர்ந்து சாப்பிடலாம். தி கிரேட் தர்மதுரை அங்கிளோட ஏகபோக வாரிசு நீ! துரும்பு தூசு படாம அவ்ளோ செல்லமா வளர்ந்த பொண்ணு நீ...

எனக்காக அடுப்படியிலே மணிக்கணக்கா கேரட் அல்வாவைக் கிண்டியிருக்கே... தேங்க் யூ ஸோ மச் ரதி!

டிபன் கேரியரைத் திறக்கும்போதே... கும்முனு வாசனை வந்து... நாக்குல ஜலம் ஊற வைக்குதே!

நல்ல கைப்பக்குவம் உனக்கு... அதெப்படி ரெண்டே மாசத்துல இவ்ளோ நல்லா சமைக்கக் கத்துக்கிட்டே?"

டிபன் கேரியரில் இருந்த கேரட் அல்வாவை ஒரு ஸ்பூனால் அள்ளி வாயில் போட்டுக் கொண்டான் மதன்.

"வாவ்! பிரமாதமா இருக்கு ரதி. அப்படியே தேவாமிர்தமா, சுவையா இருக்கு..." மும்முரமாய் பாராட்டியபடியே பருப்பு அடையைப் பிட்டு தக்காளி சட்னியில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்டு சப்புக் கொட்டினான்.

"அடேங்கப்பா... பருப்பு அடையும் சுவையும் மணமுமா இருக்கே? தொட்டுக்க வச்சிருக்கிற தக்காளி சட்னி, காரசாரமா ரொம்ப ரொம்ப ருசியா இருக்கு ரதி!

ஏதேது? கல்யாணத்துக்கு அப்புறமா... நான் சாப்பாட்டு ராமனா ஆயிடப் போறேன். பார்த்துட்டே இரேன்...

சமையல் கலையை சமீபத்துலதானே நீ கத்துக்கிட்டே? இவ்ளோ ருசியா எப்படி உன்னால சமைக்க முடியுது? ஆச்சரியமா இருக்கே ரதி...!"

"ஆர்வமும் விடாமுயற்சியும் இருந்தா... ஒரே வாரத்துலகூட எந்தக் கலையையும் கத்துக்கிடலாம்.

அக்கறையா, சிரத்தை எடுத்து சமைச்சா... கண்டிப்பா எந்தச் சமையலுமே ருசிக்கத்தான் செய்யும்.

இதில ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை. பேச்சை ரொம்ப சாமர்த்தியமா திசை திருப்பிட்டீங்களே மதன்? உங்களைப் பார்த்தாத்தான்... எனக்கு ஆச்சரியமா இருக்கு.



அத்தை கிழிச்ச கோட்டை நீங்க தாண்டியறியாத புள்ளைன்னு... நல்ல பேரெடுத்திருக்கீங்க... ஏன் அவங்க மனசு நோகும்படியா பிடிவாதம் பிடிக்கிறீங்க மதன்?"

"நீயும் அவங்க கூடச் சேர்ந்து ஆரம்பிச்சுட்டியா? ஒண்ணுமே இல்ல ரதி! அம்மா, அந்தக் காலத்து மனுஷி! கண்டதையும் நெனைச்சு கற்பனை பண்ணிக்கிட்டு... அனாவசியமா தானும் பயந்து... என்னையும் மூட் அவுட் ஆக்கிட்டிருக்காங்க..."

"ஆபத்தைத் தேடி நீங்க போகப் போறதா... சொல்றாங்களே? உயிர் பறிபோகக்கூடிய அளவுக்கு ஆபத்து வரும்னு சொன்னா... நீங்க காது கொடுத்து கேட்கவே மாட்டேங்கிறீங்களாம்?

எனக்கு 'திக் திக்'னு இதயத் துடிப்பு எகிறிக்கிட்டிருக்கு. என்ன சமாச்சாரம்? சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாங்க மதன்!"

டைனிங் டேபிளில் அவனுக்கு நேர் எதிரே வந்து அமர்ந்து... மதனையே தீவிரமாகப் பார்த்தாள் ரதி.

"என்னம்மா நீங்க? பர்த்டே பேபியை ஒரேயடியா கலங்கடிச்சுட்டீங்களே? சாப்பிடற நேரத்துல எதையும் பேசவே கூடாதுன்னு... நீங்கதானே சொல்வீங்க?

முதல்லே டிபன் சாப்பிடலாம். சாப்பிட்டு முடிச்சதும் ரதி கேட்கிற கேள்விகளுக்கு டாண்... டாண்னு பதில் சொல்றேன்.

ரதி! இன்னிக்கு அம்மா காரப் பணியாரம் செய்தாங்க... தொட்டுக்க வச்சிருக்கிற வெங்காயச் சட்னி... சூப்பர் காம்பினேஷன்! சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லு."

மந்தகாசமாய் மதன் முறுவலித்தான்.

அவனது பேச்சுக்குக் கட்டுப்பட்டவளாய்... காரப் பணியாரத்தைத் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள் ரதி.

"ஸ்கூல்லே, காலேஜுல... எப்பவுமே ஃபர்ஸ்ட்தான் வருவான். எல்லாத்திலேயும் மெரிட்தான். பி.ஈ. முடிச்சா போதாது. ஃபாரின்லே எம்.பி.ஏ. படிக்கிறேன்னு சொன்னான். நான் எதுக்குமே தடை சொன்னதில்ல...

பீரோவைத் திறந்தா... ஒரு பக்கம் இவன் வாங்கின மெடல்ஸ்... ஒரு பக்கம் இவன் வாங்கிக் குவிச்ச பரிசுக் கோப்பைகள்... பார்க்கப் பார்க்க புளகாங்கிதமா இருக்கும் ரதி!

எம்.பி.ஏ., முடிச்சு வந்ததும்... உங்கப்பா இவன்கிட்ட எவ்வளவோ கெஞ்சினாரு... தன்னோட நிறுவனங்களோட பொறுப்பை ஒப்படைக்கிறேன்னாரு...

மறுத்துட்டு, சுயமாவே சாஃப்ட்வேர் கம்பெனி ஒண்ணை ஆரம்பிச்சான்... இவன் திறமைக்கு பேங்க்ல லோன் சுலபமா கிடைச்சது...

உத்வேகமா உழைக்கிற நண்பர்களை வேலைக்குச் சேர்த்துக்கிட்டான். மளமளன்னு பிள்ளை முன்னுக்கு வந்தா... பெத்தவளுக்கு பெருமைதான். நான் இல்லேங்கல...

'தினச்சுடர்'னு பத்திரிகை ஆரம்பிச்சான் பாரு... அதைத்தான் என்னால தாங்க முடியலை..."



அபிராமி விட்டால் கோவென்று அழுது விடுவாள் போலிருந்தது.

"அத்தே! இப்போ... அதுவா பிரச்சினை? அதை ஆரம்பிச்சு ஒரு வருஷத்துக்கு மேலாகுதே?"

"வாஸ்தவம்தான்! நமக்கு எதுக்கு வீண் வம்பு? 'தினச்சுடர்'லே வியாபார நோக்கமில்லாம... நடுநிலைமையான செய்திகள் தரணும். பரபரப்பான விஷயங்களை அலசி ஆராய்ஞ்சு... உண்மையான தகவல்களை ஆதாரப்பூர்வமா தரணும்கிறதுக்காக... படற பாடு இருக்கே?

இப்போ எந்த எல்லைக்குப் போகத் துணிஞ்சுட்டான் தெரியுமா?"

"சும்மா இருங்கம்மா... முதல்லே சாப்பிட்டுட்டு பி.பி. மாத்திரை போடுங்க...

ரதி! உனக்கே தெரியுமே? சாஃப்ட்வேர் கம்பெனி தொடங்கினது சம்பாதிக்கிறதுக்காக.. பத்திரிகை நடத்தறது... ஆர்வத்துக்காக... ரசனைக்காக... நம்மாலான நல்ல விஷயங்களை ஜனங்களுக்கு தரணும்கிறதுக்காக...

அந்தப் பத்திரிகைக்கு எடிட்டர் நான் கிடையாது. என்னோட காலேஜ் புரஃபஸர் தாமோதரன் சார்தான்! ரிட்டையர்ட் ஆகி சும்மா இருந்தவரை... நாங்க கூப்பிட்டு வந்து எடிட்டரா உட்கார வச்சிருக்கோம்.

ஆபீஸ் நேரம் போக... மத்த நேரத்தை வீணாக்காம நண்பர்களோட சேர்ந்து டிஸ்கஸ் பண்ணி சிந்திச்சு செயல்படறது தப்பா?

ஊரைச் சுத்தி ஊதாரித்தனமா செலவு பண்ணி குடிச்சுக் கெட்டு சீரழிஞ்சு போனால்தானே... அம்மா வருத்தப் படணும்? கோபப்படணும்?

உருப்படியா நல்ல காரியம் பண்றவனைப் பார்த்து கோபப்பட்டா... அது நியாயமா? நீயே சொல்லு ரதி?"

ரதி மவுனமாய் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"என்னது இது? அம்மாவும் பிள்ளையுமா விஷயத்துக்கே வராம... மாத்தி மாத்திப் பூடகமாகவே பேசி டென்ஷன் பண்ணிட்டிருக்கீங்களே? இது நியாயமா?

அத்தை நீங்களாச்சும் எனக்குப் புரியும்படியா சொல்லுங்களேன்... இவரோட உயிருக்கு ஆபத்து... அது இதுன்னு சொல்றீங்களே? படபடப்பா திகிலா இருக்கு... விஷயத்தைப் போட்டு உடைங்க... ப்ளீஸ்!"

அவளது அகன்ற அழகிய விழிகளில் மளுக்கென்று கண்ணீர் குளம் கட்டியது.

"தினச்சுடர்லே... 'நடந்தது என்ன?'ன்னு ஒரு பகுதி வருது இல்லையா? அதுக்கு ஜனங்க மத்தியில நல்ல வரவேற்பு இருக்கு..."

பரபரப்பான திகில் சம்பவங்கள், அமானுஷ்யமான விஷயங்களை... நேர்லே போய் ஆராய்ஞ்சு தர்ற ரிப்போர்ட் அது... இந்த வாட்டி மேட்டருக்காக நானே ஒரு இடத்துக்குப் போகலாம்னு இருக்கேன்னு... தப்பித் தவறி அம்மாகிட்டே உளறிட்டேன்.

சொன்னது தப்பா போச்சு ரதி! பிலுபிலுன்னு சண்டை பிடிக்க ஆரம்பிச்சுட்டாங்க..."



"முழுசா சொல்லி முடிங்க மதன். நீங்க எங்கே போகணும்னு முடிவு பண்ணினீங்க? என்ன மேட்டர் அது? அத்தை பயப்படறதைப் பார்த்தா... ரொம்பவும் ஆபத்தான அமானுஷ்யம் நிறைஞ்ச இடத்துக்கு நீங்க போறீங்களா?"

"ஆமா... போகணும்னு முடிவு எடுத்தாச்சு. எந்தக் காரணத்துக்காகவும் முன்வைச்ச காலைப் பின் வைக்க மாட்டேன்.

வாதாடினாலும் சரி! கெஞ்சி மன்றாடினாலும் சரி! என் முடிவிலே எந்த மாற்றமும் இல்ல ரதி!

கிருஷ்ணகிரி மாவட்டத்துல ராயக்கோட்டைன்னு ஒரு இடம்... அந்த ஊர்லே சிவதுருவாசர் மலை ஒண்ணு இருக்காம்...

பக்கத்துல தலைக்கோட்டைன்னு சொல்லப்படற அரண்மனை, மலை மேலே இருக்காம்... அது 16ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்டதுன்னு சொல்றாங்க...

சிவதுருவாசர் மலையில சித்தர்கள் நடமாட்டம் இன்றைக்கும் இருக்கிறதாகவும், தலைக்கோட்டை அரண் மனையில அமானுஷ்யம் நிலவுறதாகவும் சொல்றாங்க... பாழடைஞ்ச அரண்மனையாம்!

மலை உச்சியில இருக்கிற அந்த அரண்மனை யிலேர்ந்து... அந்தக் காலத்துலே இளம் ராணி ஒருத்தி குதிச்சு தற்கொலை பண்ணிக்கிட்டாளாம்...

தற்கொலை செய்துக்கிட்ட அந்த ராணி... இன்னமும் பெண் தெய்வமா உலாவிக்கிட்டு இருக்கிறதாகவும் தகவல்கள் வந்திருக்கு.

அதைத்தான் நாளைக்கு நேர்லே போய் ஆராய்ஞ்சுட்டு வரலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்..."

ரதி உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

திடீரென்று அவளது வலது கண்ணும் புருவமும் துடிக்க ஆரம்பித்தன.

'ஐயோ... இது என்ன? கெட்ட சகுனமாக இருக்கின்றதே?'

அழகிய முகத்தில் பீதி படர்ந்தது.

# 4

ரதி, ஒரு தாயில்லாத பெண் என்பதால்... அவளை நல்லபடியாக வளர்ப்பதற்காக... தர்மதுரை, கிராமத்தில் இருந்து தூரத்து உறவுக்காரப் பாட்டி முத்துலட்சுமியை அழைத்து வந்து வீட்டோடு தங்க வைத்திருந்தார்.

மருமகள்களால் உதாசீனப்படுத்தப்பட்டு நொந்து போய் கிடந்தவள்... தர்மதுரை அழைத்ததும் சந்தோஷமாக வந்து விட்டிருந்தாள்.

அந்தக் காலத்து உடம்பு! வயதானாலும் ஆரோக்கியம் கெடாமல் வளைய வந்து கொண்டிருந்தவளுக்கு... ரதியை வளர்த்து ஆளாக்குவதில் சிரமம் ஒன்றும் தெரியவில்லை.

முத்துலட்சுமி சாஸ்திர சம்பிரதாயங்களில் ஊறிப் போனவள்.



தனது வளர்ப்பைப் பற்றி யாரும் குறை சொல்லிவிடக் கூடாது என்ற எண்ணத்தில்... முத்துலட்சுமி, ரதியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள்.

தேவாரம், திருவாசகம், திருக்குறள், ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை... என்று தனக்குத் தெரிந்த அத்தனையையும் ரதிக்கு உருவேற்றி விட்டிருந்தாள்.

தொட்டதற்கெல்லாம் கிராமத்து பழமொழிகளைச் சொல்லி... அவைகளுக்குத் தகுந்த உதாரணக் கதைகளைக் கூறி... நல்லது, கெட்டது என்று எல்லா விஷயங்களையும் புரிய வைத்து விட்டிருந்தாள்.

இந்தக் காலத்துப் பெண்... அதுவும் பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும்... ரதி சாஸ்திர, சம்பிரதாயங்களை மதித்து நடப்பவளாகவும், பக்தி, ஆன்மிகத்தில் நாட்டமுள்ளவளாகவும் இருப்பதில்... தர்மதுரைக்கு அலாதிப் பெருமை தான்!

முத்துலட்சுமி பாட்டி நான்கு வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டாலும்... பாட்டி சொன்ன விஷயங்கள் எதையுமே ரதி இம்மியளவுகூட மறக்கவில்லை.

"பெண்களுக்கு வலது கண் துடிக்கக்கூடாது. அது கெட்ட சகுனம்! இடது கண்தான் துடிக்கணும். அதுதான் நல்ல சகுனம்...

கண்ணகிக்கு வலது கண் துடிச்சதாம். என்னாச்சு? கோவலன் கொலையுண்டு போயிட்டான். சீதைக்கு வலது கண் துடிச்சப்போ... என்ன நடந்தது? இராவணன் தூக்கிட்டுப் போய் அசோகவனத்துல அவளைச் சிறை வச்சுட்டான்.

மகாபாரதத்துலே இளவரசி உத்தரைக்கு வலது கண் துடிச்சிருக்கு... விளைவு? வியூகத்தை உடைச்சு வெளியே வர முடியாம... மாவீரன் அபிமன்யு கௌரவர்கள்கிட்டே மாட்டி மாண்டு போயிட்டான்.

இராமாயணத்துல மண்டோதரிக்கு விடாம வலது கண் துடிச்சதாம்... அவ பயந்து பயந்து செத்தா... அவ பயந்த மாதிரியே... இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் அழிஞ்சே போயிட்டான்!

என்ன ரதி! முழிக்கிறே? வலது கண் துடிச்சதைப் பத்தின விவரங்களையே அடுக்கிட்டுப் போறாளே பாட்டி? அப்படின்னு நெனைக்கிறியா?

இடது கண்ணுக்கும் வர்றேன். சீதைக்கு இடது கண் துடிச்சது. ராமர், சிவதனுசை வளைச்சு உடைச்சாரு. சுயம்வர மண்டபத்துல இவ மாலை சூட்டி... சக்கரவர்த்தி திருமகனைக் கைப்பிடிச்சா...

மறுபடியும் இடது கண் துடிச்சப்போ... அவ அசோகவனத்துல சோகமா உட்கார்ந்திருந்தா...

கணையாழியோட ஆஞ்சநேயர் வந்து குதிச்சு... 'தாயே! கவலை வேண்டாம். சுடிய விரைவில் எம்பெருமான் வந்து தங்களை மீட்டுக் கொண்டு போவார்'னு சொல்லி... சீதாவோட கனன்ற மனசுல பாலை வார்த்தாரு...

குருக்ஷேத்திரப் போர் நடந்துட்டிருக்கும்போது... திரௌபதிக்கு இடது கண் துடிச்சது... போரிலே கவுரவர்கள் அத்தனை பேரும் மாண்டு போனாங்க...

திரௌபதி சக்கரவர்த்தினி ஆயிட்டா...



இதே மாதிரி நூத்துக்கணக்கா என்னால உதாரணங் களைக் காட்ட முடியும்..."

பெருமிதமாய் காவியேறிய பற்கள் தெரிய சிரிப்பாள் முத்துலட்சுமி.

"அடேங்...கப்பா! அதுக்குத் தகுந்த உதாரணங் களைச் சொல்லி... மேற்கோள் காட்டி ஏகப்பட்ட விஷயங்களை அள்ளி விடறீங்களே... பாட்டி!

நீங்க மட்டும் படிச்சிருந்தா... கண்டிப்பா ஒரு காலேஜுக்கு புரஃபஸரா ஆயிருப்பீங்க..

என்கூடப் படிக்கிறவங்க 'பாட்டிங்க பேச ஆரம்பிச்சா... சுத்த போர்... நாங்க கிட்டேயே போக மாட்டோம்'னு எரிச்சலா சொல்வாங்க.

எனக்கு மட்டும் நீங்க பேசறதைக் கேட்கும் போது சலிப்பே ஏற்படறதில்ல...

மணிக்கணக்கா உட்கார்ந்து கேட்டாலும்... கொஞ்சம் கூட போரடிக்க மாட்டேங்குது... "நம்ம பாட்டி எவ்வளோ பெரிய ஜீனியஸ்னு... மனசுக்குள்ளே பிரமிப்பா இருக்கு... பாட்டி!" என்று அடிக்கடி கூறுவாள் ரதி.

"என் ராஜாத்தி! உன்னை நான் வளர்த்தாலும்... பிறவியிலேயே நல்ல குணம் உனக்கு அமைஞ்சிருக்கு. அதனாலதான் பெரியவங்க வார்த்தையை மதிச்சு செவி சாய்க்கிறே... பணிவு, பவ்யம், மரியாதை, அடக்கம், அன்பு இதெல்லாம் பெத்தவங்க மூலமா... உனக்கு இயற்கை யிலேயே அமைஞ்சிருக்கு.

உனக்கு என்னிக்கும் ஒரு குறையும் வராது ராஜாத்தி... நீ அமோகமா இருக்கப் போறே..." என்று அவளது வகிட்டில் உச்சிமுகர்ந்து மனமார வாழ்த்துவாள் முத்துலட்சுமி.

ரதி ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தாள். வாய்க்குள் திணிக்கப்பட்ட காரப் பணியார விள்ளல்... தொண்டைக்குள் இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

"பெண்களுக்கு வலது கண் துடிக்கக்கூடாது. அது கெட்ட சகுனம்."

பாட்டியின் குரல் கணீரென்று திரும்பத் திரும்ப எதிரொலிப்பது போலிருந்தது.

மதனுக்கு ஏதாச்சும் நேர்ந்து விடுமோ?

ராயக்கோட்டையில் சிவ துருவாசர் மலை, பக்கத்து மலை மேல் அமைந்திருக்கும் பாழடைந்த அரண்மனை, மலை உச்சியிலிருந்து தற்கொலை செய்து கொண்ட இளவரசி... அவளே ஒரு பெண் தெய்வமாக அந்தப் பகுதிகளில் உலாவி வருதல்... இன்றளவும் சித்தர்களின் நடமாட்டம்...

இதைப் பற்றிப் பேசும்போது மிகச் சரியாக வலது கண் துடிப்பானேன்?

அப்படியென்றால்... மதனை நான் இழக்கப் போகிறேனா?

ஐயோ... இப்படி நினைக்கும்போதே... ஆயிரம் தேள்கள் ஒருசேரக் கொட்டியது போலிருக்கிறதே?



பெரியவர்கள் பேசி முடித்து என்றைக்கு... 'ஒப்புத் தாம்பூலம்' மாற்றினார்களோ? அன்றிலிருந்தே... மதனை என் கணவராகவே பாவிக்கத் தொடங்கி விட்டேனே?

மனதளவில் நான் மதனின் மனைவியாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?

'நமது கலாச்சாரத்திற்கு உரிய பலமே இதுதான் போலும்... அதெப்படி? நிச்சயித்த மறுகணமே... மதனின் மீது அப்படியொரு அன்பு, பாசம், அக்கறை, நேசம், காதல், கரிசனம்... எல்லாமே ஏற்பட்டு விட்டனவே?'

எல்லாவற்றிற்கும் மேலாக... மதனின் மீது உயிரையே வைத்திருக்கிறோமே...? அப்பாகூட இரண்டாம் பட்சமாகத்தானே போய் விட்டார்!

இந்த நாட்டில் பிறந்த பெண்ணுக்கு... 'கணவர்தான் சகலமும்...' என்ற எண்ணம் ரத்தத்தோடு ஊறிப் போயிருக்கும் என்று பெரியவர்கள் சொல்வது சரிதான் போலிருக்கிறதே? என்று தினமும் உள்ளூர அதிசயிக் கிறேனே?

மதனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்....

என்னால் தாங்கவே முடியாதே?

மறுகணமே.. என் இதயம் சுக்குநூறாக உடைந்து நானும் உயிரையே விட்டு விடுவேனே?

மதன் மெத்தப் படித்தவர்... நான்கும் அறிந்தவர்... அவரிடம் பேசும் விதத்தில் பேசிப் பார்க்கலாம்...'

மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டவள்... பேச வாயெடுக்கும் தருணத்தில்.. அபிராமி விருட்டென்று எழுந்து

எதிர்ப்புறத்திலிருந்த அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

தட்டில் கையைக் கழுவிக் கொண்டு சட்டென்று எழுந்தாள் ரதி.

"அத்தே... சாப்பிடாமலேயே எழுந்து போயிட்டீங்க... உங்களுக்கு பி.பி., சுகர் எல்லாம் இருக்கு. நேரத்துக்கு மாத்திரை போட வேணாமா?

எதுவா இருந்தாலும் பேசி சால்வ் பண்ணிக்கலாம். வாங்க அத்தே... ப்ளீஸ்! என்ன மதன் இது? உங்க மேல இருக்கிற கோபத்துல... அத்தை வயித்தைக் காயப் போடறாங்க... எந்திரிச்சு வாங்க மதன்!"

மதனும் கையை உதறிக் கொண்டு, அந்த அறையின் கதவைத் தட்டினான்.

"கதவைத் திறங்கம்மா... என்னம்மா இது? சின்னக் குழந்தை மாதிரி நடந்துக்கிறீங்க?"

"நான் பெத்த பிள்ளை நீ! உனக்கே இவ்ளோ பிடிவாதம் இருந்துச்சுன்னா... எனக்கு எவ்ளோ பிடிவாதம் இருக்கும்? நீ என் பேச்சைக் கேட்கிறேன்னு சொல்ற வரைக்கும்... பச்சைத் தண்ணி பல்லுல படாம இப்படித் தான் சத்தியாக்கிரகம் பண்ணுவேன்..." நா தழுதழுக்க உள்ளிருந்து பேசினாள் அபிராமி.

அப்போது...



# 5

"அத்தே! ராயக்கோட்டைக்குப் போனா... ஆபத்து வரும்னு உங்களுக்கு யார் சொன்னாங்க? சும்மா ஒரு அனுமானத்துலே சொல்றீங்களா... இல்ல...?" இழுத்தாள் ரதி.

"அனுமானம் இல்ல ரதி! நான் நிறைய கேள்விப் பட்டிருக்கேன். என் சிநேகிதி ஒருத்தி கிருஷ்ணகிரிக்குப் பக்கத்துலதான் வாழ்க்கைப்பட்டிருக்கா...

பாழடைந்த அரண்மனையில தங்கத்தைத் தேடிப் போய்... நிறைய பேரு ரத்தம் கக்கி செத்திருக்காங்க...

சிவ துருவாசர் தவம் செஞ்ச குகையில... சுயம்புலிங்கம் இருக்காம்... ஸ்வர்ண புஷ்பங்களாலேயே பவுர்ணமியிலே இன்றைக்கும் துருவாசர் பூஜை செய்வாராம்.

அந்தத் தங்கப் புஷ்பங்களை களவாடணும்னு ஆசைப்பட்டு சில பேரு குகைக்குள்ளாற அத்துமீறி நுழைஞ்சு... உயிரையே விட்டுருக்காங்க.

இதைப் பத்தியெல்லாம் கதை கதையா என் சிநேகிதி கடிதம் மூலமாவும் ஃபோன் மூலமாவும் சொல்லியிருக்கா...

குகைக்குள்ளே நுழைஞ்சு இறந்து போனவங்கள்லே... என் சிநேகிதியோட மைத்துனரும் இருந்திருக்காரு...

ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கு ராத்திரியில நிறைய அமானுஷ்யங்கள் நடக்கிறதாகவும் தும்பைப் பூவா வெள்ளை நிறத்துல... ராஜரீக உடையில பெண் தெய்வமும் உலாத்தறதாகவும்... அவ சொல்லியிருக்கா...

நிறைய பேரு வெள்ளை உருவத்தை நேரிலே பார்த்திருக்காங்களாம்... விஷயம் முழுவதும் தெரிஞ்சதால தானே... நாளைக்கு மதன் அங்கே போகக் கூடாதுன்னு தலைப்பாடா அடிச்சுக்கிறேன். இவன் என்னடான்னா என் சொல்பேச்சையே கேட்க மாட்டேங்கிறானே?"

அபிராமி அதற்கு மேல் தாங்கமாட்டாதவளாய் குரலுடைந்து விசும்பி விசும்பி அழுதாள்.

ரதிக்கு, அபிராமியின் அழுகுரலைக் கேட்டதும்... பச்சாதாபத்தில் அடிவயிற்றைப் பிசைவது போலிருந்தது.

"ம... மதன்! தாயைப் பறிகொடுத்து தாயன்புக்காக ஏங்கித் தவிக்கிறவ நான். தாயோட அருமை என்னன்னு எனக்குத்தான் தெரியும்.

உங்களுக்காக எவ்ளோ வேதனைப்படறாங்க? அவங்களை அழவிட்டு வேடிக்கை பார்க்கிறீங்களே? இது மகா பாவம் மதன்! அத்தையை முதல்லே சமாதானப் படுத்துங்க... ப்ளீஸ்!"

ராயக்கோட்டையைப் பத்தி நிறைய விஷயங்கள் ஏற்கனவே அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கிறதாலதான்... அத்தை ஏகத்துக்கும் பயப்படறாங்க.

அவங்க பயப்படறதிலேயும் ஒரு நியாயம் இருக்கு மதன்! நீங்க அம்மாவுக்காக இறங்கி வந்துதான் ஆகணும்!"

"சே! அம்மாகிட்ட உளறிக் கொட்டினது என்னோட தப்பு! முட்டாள்தனம் பண்ணித் தொலைச்சுட்டேனே?" முணுமுணுத்தபடி எரிச்சலும் கோபமுமாய் நெற்றியில் அடித்துக் கொண்டான் மதன்.



மறுகணமே குரலுயர்த்தி, "அம்மா! நான் உங்க பேச்சை மீறலைம்மா... நாளைக்கு நான் போகலை போதுமா? நீங்க கிழிச்ச கோட்டை இதுவரைக்கும் நான் தாண்டினது இல்ல... ஏதோவொரு ஆர்வக்கோளாறுலே அங்க போகணும்னு ஆசைப்பட்டுட்டேன்.

தப்புதான்! என்னை மன்னிச்சுடுங்கம்மா... ப்ளீஸ்! வெளியே வாங்க..." கெஞ்சினான் மதன்.

"நிஜமாத்தான் சொல்றியா? இல்ல... இப்போதைக்கு என்னைச் சமாதானப்படுத்தி, சாப்பிட வைச்சுடலாம்னு பொய் சொல்றியா மதன்?"

"நான் உன் பிள்ளைம்மா... என்னிக்காவது பொய் சொல்லியிருக்கேனா? எனக்கு நீதாம்மா முக்கியம்! சத்தியமா சொல்றேன்மா... நாளைக்கு நான் போகலை. போதுமா? இல்ல... சாமி ரூம்லே கற்பூரம் அடிச்சு சத்தியம் பண்ணட்டுமா?"

"இ... இல்லடா கண்ணா! போதும்... நீ சொன்னதே போதும்... இப்பத்தான்டா நீ என் பிள்ளை...!" என்று கூறியபடியே கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள் அபிராமி.

"எங்கே... என் வார்த்தையை மீறிக்கிட்டு துப்பு துலக்கறதுக்கு நாளைக்குக் கிளம்பிப் போயிடுவியோன்னு... நான் ரொம்பவே பயந்துட்டேன்..."

கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட... மகனது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள் அபிராமி.

"சாரிம்மா... உன்னை ரொம்ப வேதனைப் படுத்திட்டேன்!"

"பரவாயில்லப்பா... இந்த அளவுக்கு இறங்கி வந்தியே? எனக்கு அதுவே போதும்...!"

தினச்சுடர் பத்திரிகையை நிறுத்திடுப்பான்னு சொன்னா... நீ கேட்க மாட்டே... அததுக்குத் தகுந்த ஆட்களை துப்பு துலக்கறதுக்கு அனுப்பி வைச்சுட்டு... நீ நிம்மதியா இருக் கணும்...

வீண் வம்பு, பிரச்சினை, சிக்கல், வில்லங்கம், இக்கட்டு... இதிலே எல்லாம் என்னிக்கும் மாட்டிக்கிட்டு முழிக்கக்கூடாது சரியா?

இன்னும் கொஞ்ச நாள்லே ரதி இந்த வீட்டுக்கு விளக்கேத்த வந்துடுவா... அப்போ தன்னால உனக்கே பொறுப்பு வந்து... தினச்சுடரை கட்டி அழறதை நிறுத்திடுவேங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு...!"

அபிராமி பேசி முடிக்கும்போது... மதனின் பார்வை ரதியின் மேல் தாவியது.

நான்கு விழிகளும் ஒருகணம் நேசமாய் மோதிக் கொண்டன.

"அத்தே! உங்க பிள்ளை என்னிக்கும் உங்களை மீற மாட்டாரு அத்தே... வாங்க... நிம்மதியா வந்து சாப்பிடுங்க."

டைனிங் டேபிளை நோக்கி நடந்தாள் ரதி.

"டேய் மதன்! இன்னிக்கு உன் வேலையை எல்லாம் ஒதுக்கி வைச்சுட்டு... ரதியை எங்கேயாச்சும் வெளியில கூட்டிட்டுப் போயிட்டு வாடா...



இன்னிக்கு அவளோட பிறந்த நாளு... நகைக் கடைக்கு அழைச்சுட்டுப் போயி... மோதிரம், பிரேஸ்லெட்ன்னு ஏதாச்சும் நல்ல பரிசா வாங்கிக் கொடு. சரியா?"

மதன் மறுபேச்சு பேசாமல் தலையாட்டினான்.

"அத்தே! எதுக்கு அத்தே? அவர் ஆபீசுக்குப் போகட்டும் அத்தே!" தயக்கமாய் கூறினாள் ரதி.

"ஊரானோட ஆபீசுல வேலை பார்த்தா... ஒரு நாள் லீவு போட்டாலும் பதில் சொல்லணும்... இவனோட சொந்த ஆபீஸ்தானே? ஏன் கவலைப்படறே ரதி? அத்தை சொன்னா... நீயும் மீறப்படாது. சொல்லிட்டேன். ரெண்டு பேருமா சந்தோஷமா வெளியில போயிட்டு வாங்க."

ரதிக்கு உள்ளூர மகிழ்ச்சி பிரவாகமெடுத்தது.

"ஆங்... ரதி! உன்கிட்ட ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். வர்ற புதன்கிழமை எங்க அண்ணியும், என்னோட ஒண்ணு விட்ட அக்காவும் கூடவே ரெண்டு மூணு தூரத்து உறவுக்காரப் பெண்களும்... இங்கே வர்றாங்க.

நாங்க எல்லோருமா சேர்ந்து ஜோதிர்லிங்க ஸ்தலங்களைத் தரிசிக்கிறதுக்காக... வட நாட்டுக்கு டூர் போறோம். எங்க அண்ணி எனக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணிட்டாங்க...

திரும்பி வர்றதுக்குப் பத்து நாளாகும். மதன், ஹோட்டல்லேயே சாப்பிட வேண்டியிருக்குமேன்னு எனக்கு உள்ளூர கவலையா இருக்கு...

என்னைப் பத்தின கவலையை விட்டுடு... நீ நிம்மதியா போய் தரிசனம் பண்ணிட்டு வாம்மான்னுதான் சொல்றான்... இருந்தாலும் எனக்கு மனசே கேட்கலை ரதி!

நீதான் அருமையா சமைக்கிறியே? பத்து நாளைக்கு மதனுக்காக சமைச்சு டிபன்கேரியரை டிரைவர்கிட்டே கொடுத்து அனுப்பிடறியா? நீ வந்து சிரமப்பட வேணாம்...

உன் சமையலைத்தான் நம்ம பிள்ளை சாப்பிடறாங்கிற நிம்மதி எனக்கு இருக்கும்... உனக்கு இதுல ஒண்ணும் சிரமம் இல்லையே ரதி?"

"என்னத்தே இது? இப்படிக் கேட்கறீங்க? சமைச்சுப் போடுன்னு உரிமையா உத்தரவு போடுங்கத்தே..."

"ரொம்ப சந்தோஷம் ரதி! மதன் கேட்டுக்கிட்டே இல்ல...? சாப்பாடு டாண்ணு வீட்டுக்கே வந்துடும். நிதானமா சாப்பிட்டுட்டு ஆபீசுக்குக் கிளம்பு."

"வேண்டாம் ரதி! டிரைவர்கிட்டே நீ கொடுத்தனுப்ப வேணாம். ஆன் தி வே தானே? நான் உங்க வீட்டுக்கு வந்தே சாப்பிட்டுக்கிறேன்."

"ஏன் பிரிச்சுப் பேசறீங்க மதன்? நம்ம வீடுன்னு சொல்லுங்க."

"அதானே? இனிமே அதுவும் உன் வீடுதானேடா? சொல்லப்போனா... தர்மதுரைக்கு நீ மருமகன் மட்டுமல்ல... மூத்த மகனும்கூட..."

"ரதி! டிரைவருக்கு ஃபோன் பண்ணி வரச் சொல்லி... அந்தக் காரை பிக்கப் பண்ணிக்கச் சொல்லு... நாம்ப நம்ம கார்லே போயிடலாம்..."

மனதில் நிறைந்திருந்த மதனுடன் தனிமையில் வெளியில் செல்லப் போவதை எண்ணி ரதிக்கு உள்ளூர மகிழ்ச்சி குமிழியிட்டது.



விரைவில்.. அமானுஷ்யத்தை எண்ணி திகிலும் பயமும் அவளை ஆட்டிப் படைக்கப் போகின்றன என்பதை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

## 6

**கோ**வளம் பீச்!

பரந்து விரிந்த நீலக்கடலில்... அடிக்கடி வெள்ளி நிறப் பாய்களாய் சுருண்டு விழுந்து... கரையை முத்தமிட்ட அலைகளை... விழிகள் விரிய ரசித்துப் பார்த்தாள் ரதி.

சற்று முன்பு... மதன் தனக்குப் பரிசளித்த நீலக்கல் பதித்த மோதிரத்தின்மீது பார்வையைப் பதித்தாள்.

"உன்னோட சந்தன நிறத்துக்கு இந்த நீலக்கல் ரொம்ப எடுப்பா இருக்கு... பிடிச்சிருக்கா?"

"உம்... பிடிச்சிருக்கு!" சங்கோஜத்துடன் தலை குனிந்தவளின் முகத்தை ஆசையாய் ஊன்றிப் பார்த்தபடி... தனது கரத்தை அவளது கரத்துடன் கோர்த்துக் கொண்டான் மதன்.

"இந்த பீச்சுல கூட்டம் அதிகமா இருக்காது. அதனாலதான் இங்கே உன்னைக் கூட்டிட்டு வந்தேன். உட்காரேன்... இன்னிக்கு உன்கிட்ட மனசு விட்டுப் பேசணும்..."

இருவரும் ஒரு பெரிய மரப் படகின் அருகே சென்று முதுகு சாய்ந்து அமர்ந்தனர்.

"ரதி! இண்டியன் மித்தாலஜியைப் பத்தி நீ என்ன நெனைக்கிறே? உனக்கு அதுல நம்பிக்கை இருக்கா?"

"எ... என்ன மதன் இப்படிக் கேட்டுட்டீங்க?
முத்துலட்சுமி பாட்டியாலே வளர்க்கப்பட்டவ நான்.. அதுலே
நம்பிக்கை எக்கச்சக்கமாகவே இருக்கு... நீங்க ஃபாரின்லே
மேற்படிப்பை முடிச்சிட்டு வந்திருக்கீங்க. இண்டியன்
மித்தாலஜியைப் பத்தி... நீங்க என்ன நெனைக்கிறீங்க?"

"எக்கச்சக்கமா நம்பிக்கை இருக்குன்னு
சொல்லிட்டியே... ரொம்பவே சந்தோஷமா இருக்கு ரதி!
நிறைய விஷயங்கள் உனக்கும் எனக்கும் ஒத்துப் போகுது...
ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்...

மத்தவங்க மாதிரி அடிக்கடி ஃபோன் பண்ணி
கொஞ்சிப் பேசி... லவ்வை எக்ஸ்போஸ் பண்ண எனக்குத்
தெரியாது. பட்.. அடி மனசுலே இருந்து சொல்றேன். நான்
உன்னை ரொம்ப டீப்பா நேசிக்கிறேன்... தெரியுமா?"
என்றபடி அவளது கரத்தைப் பற்றி மிக மென்மையாக
முத்தமிட்டான்.

"ஆத்மார்த்தமான அன்பு இருந்தா போதும் மதன்!
அதை அடிக்கடி வெளிப்படையா சொல்லணும்கிற
அவசியம் இல்ல... சொல்லுங்க மதன்! வெளிநாட்டிலேர்ந்து
திரும்பி வந்து சாஃப்ட்வேர் கம்பெனியை ஆரம்பிச்சு
சக்ஸஸ்ஃபுல்லா நடத்திட்டு வர்ற இளைஞர் நீங்க...

இண்டியன் மித்தாலஜியைப் பத்தின உங்க கருத்தை...
நான் கேட்கணும்னு ரொம்ப ஆவலா இருக்கேன்..."
நாசூக்காய் மெல்லக் கையை உருவிக் கொண்டாள் ரதி.

"எனக்கு வர வர அதுலே நம்பிக்கை ஜாஸ்தியாயிட்டே
போகுது ரதி! இண்டியன் மித்தாலஜியைப் பத்திக் கேள்விப்
படற வெளிநாட்டுக்காரன் ஆச்சரியத்துலே மாய்ஞ்சு
போயிடறான்.



யோகக்கலை இன்னிக்கு உலகம் முழுவதும் பரவி
இருக்கு... அதைக் கண்டுபிடிச்ச இந்திய சித்தர்களைப் பத்தி
உலகமே வியந்து பேசிக்கிட்டிருக்காங்க...

போன நூற்றாண்டுலே தானே விமானத்தைக்
கண்டுபிடிச்சாங்க? ஆனா திரேதாயுகத்திலேயே இராவணன்
புஷ்பக விமானத்துல பறந்து வந்து சீதையைக் கடத்திக்
கிட்டுப் போனான்னு இராமாயணத்தில சொல்லப்பட்டிருக்கே?

இது எவ்வளவு பெரிய அதிசயம்னு வெளிநாட்டுக்
காரங்க மூக்கு மேல விரலை வைக்கிறாங்க... இன்னும்
எவ்வளவோ இருக்கு... அதை அப்புறமா சொல்றேன்...
இப்போ... நம்ம விஷயத்துக்கு வர்றேன். தெளிவா யோசிச்சு
நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லும்மா!"

"ஒரு நல்ல மனைவி... கணவன்கிட்டே எப்படி
நடந்துக்கணும்?"

"கணவரோட சுக, துக்கத்துல பங்கெடுத்துக்கணும்.
மனசைப் புரிஞ்சு நடந்துக்கணும். இன்னும் சொல்லப்
போனா... கணவரோட ஆர்வம், ரசனை, முயற்சி, விருப்பு
வெறுப்புகள்லே குறுக்கிடாம... அனுசரிச்சு, ஒத்துழைச்சு
நடந்துக்கணும்..."

"குட்... வெரிகுட்! நாளைக்கு நீ என் மனைவியானா...
இதே மாதிரி நடந்துப்பேன்னு நான் நம்பலாமா?"

"அதுல என்ன சந்தேகம் மதன்? இதே மாதிரி நூறு
சதவீதம் நடந்துப்பேன். போதுமா?"

"அதை இப்பவே பரீட்சை பண்ணிப் பார்த்துடலாமா?"

"தாராளமா...!" பதில் கூறியவளின் அழகு முகத்தில் குழப்ப ரேகைகள் படர்ந்தன.

"அம்மா ஊருக்கு இந்தப் பக்கம் கிளம்பினதும்... மறுநிமிஷமே நான் ராயக்கோட்டைக்குத் துப்புத் துலக்கக் கிளம்பிடுவேன். இந்த விஷயத்தை நீ யாருகிட்டேயும் மூச்சு விடக்கூடாது. சரியா?"

"மதன்! என்னது இது? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் அத்தைகிட்ட நான் போக மாட்டேன்னு சத்தியம் பண்ணினீங்க... சத்தியம் செய்துட்டு... அதை நீங்க மீறலாமா? தப்பாச்சே?" படபடத்தாள் ரதி.

"அவசரப்படறியே ரதி! நல்லா யோசிச்சுப் பாரு... நாளைக்கு நான் போக மாட்டேன்னுதான் சொன்னேனே தவிர... நான் போகவே மாட்டேன்னு... சொன்னேனா? இல்லையே? அம்மா ரூருக்குப் போறது நல்லதாப் போச்சு. அவங்களை வழியனுப்பி வைச்சுட்டு நான் கிளம்ப வேண்டியதுதான்..."

"இல்லை... நீங்க போகவே கூடாது. என்ன அப்படிப் பார்க்கிறீங்க? உங்களைப் போக விடாம தடுக்க வேண்டியது... என் கடமை மதன்!"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் வாக்கு கொடுத்தே... அஞ்சே நிமிஷத்துல நீ வாக்கு மீறலாமா?"

"வாக்கு மீறுகிற பழக்கம்... எப்பவுமே எனக்கு இல்ல... எந்த வாக்கை நான் மீறிட்டேன் மதன்?"

"நீதானே சொன்னே? கணவரோட ஆர்வம், ரசனை, முயற்சி, விருப்பு, வெறுப்புகள்லே... மனைவி குறுக்கிடாம



அனுசரிச்சு, ஒத்துழைச்சு நடந்துக்கணும். அதே மாதிரி நான் கண்டிப்பா நடந்துப்பேன்னு சொல்லிட்டு... இப்போ என்னைப் போக விடாம தடுத்தா... என்ன அர்த்தம் ரதி?"

"அங்கே போனா... ஆபத்து வரும்னு அத்தை சொல்றாங்க... அதைக் கேள்விப்பட்டும்... உங்களை நான் தடுக்காம இருக்க முடியுமா மதன்? உங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... என்னால தாங்க முடியாது. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க...."

அவனது கரத்தை சட்டென்று இறுகப் பற்றித் தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டவளின் விழிகளிலிருந்து மடை திறந்த வெள்ளமாய்... கண்ணீர் வழிந்தோடியது.

"படிச்ச பொண்ணு... பணக்கார வீட்டுப் பொண்ணு ரொம்ப தைரியமா வழியனுப்பி வைப்பேன்னு எதிர் பார்த்தேன். நீ என்னடான்னா... அம்மா மாதிரியே நடந்துக்கிறியே?

மாமியாருக்கு ஏத்த மருமகள்தான்... ரதி! பிறந்த நாளும் அதுவுமா அழுதா... எப்படி? ப்ளீஸ்! கண்ணைத் துடைச்சுக்கோ... யாராச்சும் பார்த்தா என்ன நெனைப் பாங்க?"

அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல்... பார்வையைத் தழைத்தபடி கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள் ரதி.

அவளைத் தேற்றும் வழி வகை தோன்றாமல் தர்மசங்கடத்துடன் கைகளைப் பிசைந்தான் மதன்.

"என் மேல உனக்கு இவ்ளோ அன்பு, காதல்னு நெனைக்கும்போது... உள்ளூர சந்தோஷமா இருக்கு ரதி!

மனசளவில நாம இப்போ கணவன், மனைவிதான்... நீ என்னுள் பாதி ரதி!

அம்மா கிட்ட கூட சொல்லாத விஷயத்தை... இப்போ உன்கிட்ட சொல்லப் போறேன்...

ஒரு மிராக்கிள் நடந்துச்சு ரதி! அதை வைச்சுப் பார்க்கும்போது... ராயக்கோட்டைக்குப் போனா... எனக்கு எந்த ஆபத்தும் வராதுன்னு நம்பிக்கை வந்திருக்கு. அதனாலதான் துப்பு துலக்கறதுக்கு நானே போகணும்னு துடிக்கிறேன்...

உனக்கும் அந்த நம்பிக்கை வந்தா... என்னைத் தடுக்காம அங்கே அனுப்பி வைப்பியா ரதி?"

ரதி சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். நீர்த் திரையிட்ட விழிகளால் அவனைப் ஊன்றிப் பார்த்துவிட்டு, "அற்புதம் நிகழ்ந்துச்சா? எப்போ? எப்படின்னு விலாவாரியா சொல்லுங்க... எனக்கும் நம்பிக்கை வந்தா... அப்புறம் யோசிக்கலாம்!" என்றாள்.

"அந்த அற்புதத்தைப் பற்றி அம்மாகிட்ட நான் சொல்லலை. அதை இப்போ நெனைச்சுப் பார்த்தாலும்... சில்லுன்னு உடம்பெல்லாம் புல்லரிக்குது ரதி... இதோ பாரேன்!" என்று தனது கரங்களைக் காண்பித்தான்.

நிஜம்தான்! புல்லரித்துப் போன அவனது கைகளைப் பார்த்து விழிகளை விரித்தாள் ரதி.

அவன் அந்த விஷயத்தைச் சொல்லச் சொல்ல... வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டாள்.

அவளுக்கும் சிலீரென்று மேனி சிலிர்க்கத் தொடங்கியது.



# 7

"தினச்சுடர்'லே... 'நடந்தது என்ன?'ன்னு ஒரு செக்மெண்ட் இருக்குல்ல... அதுக்கு வாசகர்கள் கிட்டேயிருந்து நிறைய லெட்டர்ஸ் வரும்.

சில வாசகர்கள் அவங்க ஊருப் பக்கம் நடக்கிற திகில் சம்பவங்கள், அதிசய நிகழ்வுகளைப் பத்தின விவரங்களை எழுதி... அதை ஆராய்ச்சி செய்து 'நடந்தது என்ன?' பகுதியில நல்ல மேட்டரா கொண்டு வாங்களேன்னு... எடிட்டோரியலுக்கு வேண்டுகோள் வைப்பாங்க.

அதே மாதிரிதான்.. அன்னிக்கு ஒரு நாள் ஒரு சஜஷன் லெட்டரைப் படிச்சேன். ராயக்கோட்டையில சிவதுருவாசர் மலை, பாழடைஞ்ச அரண்மனை, பெண் தெய்வம், சித்தர்களின் நடமாட்டம்னு... இருந்ததை வாசிச்சேன்.

அப்பக்கூட, இந்த மேட்டருக்காக நானே அங்கே போகணும்னு எனக்குத் தோணலை... ஆனா லெட்டரை வாசிச்சதிலேர்ந்து சதா அதோட ஞாபகமாகவே இருந்துச்சு...

ராத்திரிகூட ரொம்ப நேரமா தூக்கம் வராம அதைப் பத்தியே நெனைச்சுட்டிருந்தேன். நடுராத்திரியில எப்படியோ கண் அசந்தேன்.

என் புஜத்தைத் தட்டி, யாரோ எழுப்புற மாதிரி இருந்துச்சு. டக்குன்னு கண்ணு முழிச்சுப் பார்த்தா... ஜடாமுடியோட ஒரு சித்தர் இருக்காரு... பூட்டின அறைக் குள்ளே ஏ.ஸி. ரூம்லே இவரு எப்படி வந்தாரு?

அந்த லெட்டரை வாசிச்சுட்டு... சதா அந்த ஞாபகமாகவே இருந்ததால... சித்தர் கனவுல வந்துட்டாரோ?ன்னு... எனக்குள்ளே சின்ன சந்தேகம்!

"இது கனவல்ல மதன்! நிஜம்தான்னு, மந்தகாசமா அந்தச் சித்தர் சிரிச்சதும்... எனக்குத் தூக்கி வாரிப் போட்டுச்சு....

இதுவும் கனவாத்தான் இருக்கும்னு நெனைச்சு... என் கையில நானே பலமா கிள்ளிப் பார்த்தேன்... வலிச்சதும் திகைச்சுப் போயிட்டேன்.

நம்ம வீட்டுக்குள்ளே அதுவும் நம்ம படுக்கை அறைக்குள்ளே... யாராச்சும் அந்நிய மனுஷங்க அனுமதியில்லாம நுழைஞ்சா... நமக்கு நியாயமா கோபம்தானே வரணும்?

எடுத்த எடுப்பிலே அவரைப் பார்த்ததும் கோபமே வரலை... கையெடுத்துக் கும்பிடணும்போல இருந்துச்சு.

என்னடா இது? இது நிஜம் போலிருக்கே? சிவதுருவாசர் மலையில நடமாடற சித்தர்... இங்கேயே வந்திருக்காரே? என்ன காரணம்னு யோசிச்சேன்.

கிள்ளின இடத்தில வலிச்சதுமே... என்னையும் அறியாம எழுந்து நின்று அவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டேன்.

நைட் லேம்ப் வெளிச்சத்துல உத்துப் பார்த்தா... கிட்டத்தட்ட எங்கப்பாவோட சாயல்லே அந்தச் சித்தர் தெரிஞ்சாரு...



'ஆகாய மார்க்கமா நாளைக்கு நீ பயணப்படலாம்னு இருக்கே... வேண்டாம். அதை ஒத்திப் போடு மதன்'னு சொன்னாரு...

எனக்கு ஆச்சரியத்துக்கு மேல ஆச்சரியம்!

"நாம உருவாக்கிற புராஜெக்ட்டுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறதால... மலேசியாவில இருக்கிற ஒரு நிறுவனம் நம்மகூட டீலிங் வச்சுக்க பிரியப்பட்டு... என்னை உடனடியா மலேசியாவுக்கு வரும்படி ஃபேக்ஸ் அனுப்பியிருந்தாங்க.

திடீர் பிரயாணங்கிறதால முதல் நாள்தான் ஏஜென்ஸி மூலமா... எப்படியோ கஷ்டப்பட்டு அந்த டிக்கெட்டை வாங்கி வச்சிருந்தேன்.

டிக்கெட் கிடைச்சதுமே கன்ஃபார்மா கிளம்பி வர்றேன்னு பதிலுக்கு ஃபேக்ஸ் வேற அனுப்பி வைச்சுட்டேன்.

அந்த டீலிங் மட்டும் முடிஞ்சதுன்னா... நம்ம நிறுவனத்துக்குக் கோடிக்கணக்கா லாபம் வரும்.

மளமளன்னு கிளை நிறுவனங்களைத் தொடங்கி ரெண்டே வருஷத்துலே நல்லா முன்னுக்கு வந்துடலாம்கிறது என்னோட திட்டம்!

'உன்னோட திட்டப்படி... நீ நல்லா முன்னுக்கு வரணும்னா... திட்டமிட்ட பயணத்தை ரத்து செஞ்சுடு!'ன்னு அந்தச் சித்தர் சொன்னாரு.

என்னோட திட்டம்... அவருக்கு எப்படித் தெரியும்? மறுநாள் நான் ஃபிளைட்டுலே மலேசியா போற விவரம்... எப்படித் தெரிஞ்சது?

சரி... சித்தர்கள் எங்கும் நிறைஞ்சவங்க... முக்காலமும் உணர்ந்த ஞானிகளாச்சே...?

சில்லுன்னு உடம்பு புல்லரிச்சுப் போச்சு.

மனசெல்லாம் ஒரு தெய்வீக அதிர்வு.

"ஐயா! என்னய்யா சொல்றீங்க? காரணம் ஒண்ணும் விளங்கலையே ஐயா? தயவு செய்து கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்களேன் ஐயா!"ன்னு கிட்டக்கப் போனேன்.

கடகடன்னு சிரிச்சாரு... மறுகணமே பனிப்புகை வந்தது... சித்தர் மறைஞ்சுட்டாரு...

அவர் நின்ன இடத்தைக் கைகளாலே துழாவிட்டு... சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன்.

அடுத்த செகண்டே... அவரு வந்ததுக்கான சுவடே தெரியலை...

அவரும் மறைஞ்சாச்சு... பனிப்புகை மாதிரி மங்கலா வந்ததே... அதுவும் மறைஞ்சுடுச்சு.

ஏ.ஸி. ரூமுக்குள்ளேகூட... எனக்குக் குப்புன்னு வேர்க்க ஆரம்பிச்சிடுச்சு.

மனசுக்குள்ளே பெரிய குழப்பம்! இது நிஜம்தானா? சித்தர் சூட்சுமமா பேசினது புரியலைன்னாலும்... பயணத்தை ரத்து செய்துடுன்னு சொன்னது மட்டும் நல்லாப் புரியுது....

பயணத்தை ரத்து செய்துடலாமா?

முதல்லே இது உண்மையான நிகழ்வுதானான்னு சந்தேகமா இருக்கே?



ஒருவேளை... இது மனப்பிரமையோ?

ஒரு மனோதத்துவப் புத்தகத்துல... ரொம்ப நாளைக்கு முன்னாடி வாசிச்ச விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

அதாவது... ஏதோ ஒரு விஷயம்... நம்ம மனசுல ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திட்டா... அது சம்பந்தப்பட்ட நிகழ்வுகள்... நிஜத்தைப் போலவே பரிணமிக்கும்னு சொல்லப்பட்டிருந்தது.

சரி... லெட்டரை வாசிச்சுட்டு நம்ம மனசுல ஏற்பட்ட தாக்கம்தான்... இப்படியொரு நிஜமான நிகழ்வா உருவாகியிருக்கு...

இது கண்டிப்பா மனதில் உருவான பிரமைதான்னு... என்னை நானே சமாதானப்படுத்திக்கிட்டேன்.

டிக்கெட்டை கேன்ஸல் பண்ண மனசில்லாததால பயணத்துக்கும் தயாராயிட்டேன்...

அன்னிக்குப் பார்த்து பயங்கர டிராஃபிக் ஜாம்! ஊர்ந்து போகாத குறையா... கார் நகர்ந்து நகர்ந்து தான் போச்சு.

நேரம் ஆக... ஆக... எனக்கு டென்ஷன் எகிறிட்டிருந்தது. மீனம்பாக்கத்துல கார் போனப்போ... திடீர்னு என் காதுகிட்டே ஒரு சப்தம்...!"

ரதி மதனையே மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

# 8

"ஆகாய மார்க்கமா பயணப்படாதேன்னு சொன்னேன். என்னை நீ நம்பலையா? நம்பிக்கை இல்லாத தாலதானே... நீ பயணத்தை ரத்து செய்யலே...!"ன்னு சித்தர் என்கிட்ட உட்கார்ந்து கேட்கிற மாதிரி இருந்துச்சு.

எனக்கு திக்குன்னு இருந்துச்சு. டிரைவருக்கு ஒண்ணுமே கேட்கலை போல...

சாவகாசமா காரோட்டிக்கிட்டிருந்தாரு...

சித்தரோட வார்த்தையை மீறிட்டோமேங்கிற குற்ற உணர்வு ஒரு பக்கம்...

இன்னொரு பக்கம்... இந்தக் குரல் கூட மனப்பிரமையா இருக்குமோங்கிற சந்தேகம்.

குழப்பமான மனநிலையில நானிருந்தேன்.

கார் போய் ஒரு வழியா சேர்ந்தது. அதுக்குள்ளே ஃபிளைட் பறந்தாச்சு.

ஃபிளைட்டை மிஸ் பண்ணிட்டோமேங்கிற கவலையில மூட் அவுட்டாயிட்டேன்.

உனக்கே தெரியுமே? நியூஸ்லே பார்த்திருப்பியே? ஃபிளைட் ஆகாய மார்க்கமா போயிட்டிருந்தபோது... எந்திரக் கோளாறு ஏற்பட்டு வெடிச்சுச் சிதறினதாலே... அதுல பயணம் செய்த அத்தனை பேரும் அகாலமா மாண்டு போயிட்டாங்க...



இந்த நியூஸை பார்க்கையில... அப்படியே நான் ஆடிப் போயிட்டேன் ரதி!

எப்பவும் ஃபங்க்சுவாலிட்டியை மெயின்டெயின் பண்ணக்கூடியவன் நான்...

ஃபிளைட்டை மிஸ் பண்ற அளவுக்கு டிலே பண்ணிட்டோம்கிற குற்ற உணர்வு முதல்லே எனக்கு இருந்துச்சு.

ஃபிளைட்டை மட்டும் மிஸ் பண்ணாம இருந்திருந்தா... என் கதி என்னவாயிருக்கும்?

சித்தரோட அருள்லேதான் அந்தக் கால தாமதம் ஏற்பட்டிருக்கும்... ஒரு அற்புதத்தை நிகழ்த்தி சித்தர் என்னைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாத்தியிருக்காரே? அதை நெனைச்சுப் பார்த்ததும்... ஜிவ்வுன்னு புல்லரிச்சுடுச்சு.

மானசீகமா கண்ணை மூடி அவரை வணங்கினேன். மனப்பிரமைன்னு நெனைச்சு நம்பாம இருந்ததற்காக மனப்பூர்வமா அவர்கிட்டே மன்னிப்புக் கேட்டேன்.

அதுக்கு அப்புறம்... நேரா தினச்சுடர் பத்திரிகை ஆபீசுக்குப் போயி... அதே லெட்டரை எடுத்துத் திரும்பவும் வாசிச்சுப் பார்த்தேன்.

கூடவே... புதுசா இன்னொரு லெட்டரும் வந்திருந்தது. அதாவது...

சிவ துருவாசர் மலையையும், குகையையும், பாழடைஞ்ச அரண்மனையையும் ஒரு கும்பல் கெட்ட நோக்கத்தோட சுற்றி வர்றதாகவும் தகவல் வந்திருந்தது...

ஒரு மிராக்கிள் நடத்திக் காட்டி... எனக்குள்ளே பெரிய மனமாற்றத்தை சித்தர் ஏற்படுத்திட்டதால...

"நடந்தது என்ன?" பகுதி மேட்டருக்காக... உதவியாளரை அனுப்பி வைக்காம... நானே ராயக் கோட்டைக்குப் போகணும்னு முடிவு எடுத்தேன்.

இப்போ சொல்லு ரதி! இவ்ளோ பெரிய ஆபத்திலே இருந்து சித்தர் காப்பாத்திட்டாரு...

அதே சித்தர் மறுபடியும் காப்பாற்ற மாட்டாரா?

ஆபத்து வரும்... நிஜம்தான். ஆனா அங்கே சித்தர்கள் நடமாடறாங்களேங்கிற தைரியம் எனக்கு...!"

"மதன்! ரொம்ப அதிசயமா இருக்கு... மயிரிழையில தப்பியிருக்கீங்க... சித்தரோட பரிபூரண அருள் உங்களுக்கு இருக்கு. நீங்க ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்.

இனிமே நான் உங்களைத் தடுக்கவே மாட்டேன். ஆமா... கெட்ட எண்ணத்தோட ஒரு கும்பல் சுத்தி வர்றாங்கன்னு தகவல் வந்திருக்கே?

எதுக்காக அந்தக் கும்பல் அங்கே சுத்தி வரணும்?" விழிகளில் ஆர்வம் மினுங்கக் கேட்டாள் ரதி.

"அம்மா சொன்ன விஷயத்தை... அதுக்குள்ளே மறந்து போயிட்டியா ரதி! பாழடைஞ்ச அரண்மனையிலே தங்கத்தைத் தேடிப் போயி... நிறைய பேரு ரத்தம் கக்கிச் செத்துருக்காங்கன்னு... சொன்னாங்கல்ல...?

அதே மாதிரிதான்... ஏதோவொரு ஆதாயத்தைத் தேடி அந்தக் கும்பல் அங்கே சுத்துது போலிருக்கு...



கெட்ட நோக்கத்தோட சுத்தற கும்பலை... எந்த விதத்துலேயாவது தடுக்கணும் ரதி!

நான் அங்கே போறது... துப்பு துலக்கறதுக்காக மட்டுமல்ல... ஏதோ என்னால முடிஞ்சதைச் செய்யணும்... அந்தக் கும்பலைக் கண்டுபிடிக்கணும். அவங்க எந்த நோக்கத்துக்காக வந்தாங்களோ? அதை நிறைவேற விடாம... எப்பாடு பட்டாவது தடுக்கணும்.

அதான் என்னோட குறிக்கோள்!

எங்கேயோ சென்னையில ஒரு மூலையில கிடக்கிற சாதாரண இளைஞன் நான்... சிவ துருவாசர் மலையில் வாசம் கொண்டிருக்கிற சித்தர்... என் அறையிலேயே தோன்றி காட்சி கொடுத்து கண்டத்திலே இருந்து காப்பாத்தியிருக்காரே?

இவ்வளவு தத்ரூபமா எனக்கு அவர் ஏன் காட்சி தரணும்? 'சிவ துருவாசர் மலைக்கு நீயே கிளம்பி வாடா மதன்!'னு மறைமுகமா அழைப்பு விடுத்த மாதிரி... எனக்குள்ளே ஒரு ஃபீலிங்!

எஸ்... இது அழைப்புதான். அதிலும் என் அப்பாவோட சாயல்ல வந்திருந்தாரே?

ரதி! தெய்வம் என்னைக் கூப்பிட்டாச்சு... என் அப்பா என்னைக் கூப்பிட்டிருக்காரு...

சித்தர்ன்னா யாரு... சிவனோட ஐக்கியமானவங்க.. இன்னும் சொல்லப் போனா... சிவனோட அம்சம்தான்!

நான் பார்த்தது, கேட்டது எதுவும் மனப் பிரமை யில்லை... நிஜம்! நிதர்சனம்! இதை... இந்தச்

சந்தோஷத்தை வெளியில எல்லோர்கிட்டேயும் சொல்லிடணும்னு... என் மனசு பரபரக்குது.

ஆனா... உன்கிட்டே தவிர வேற யாரு கிட்டேயும் என்னால சொல்ல முடியலை... அதுக்கான உத்தரவு பகவான் கிட்டேயிருந்து வரணும்.

வந்தாத்தான் எதையும் பட்டவர்த்தனமா, பகிரங்கமா சொல்ல முடியும். ஏன்னா... இது சித்த ரகசியமாச்சே...?

எமோஷனலாயி வெளியில உளறிக் கொட்டிட்டா... நாளைக்குச் சித்தரோட கோபத்துக்கு ஆளாயிடக் கூடாது... பாரு. அதான்!

மனசுக்குள்ளேயே போட்டுப் புதைச்சுட்டேன்.

நான் எடுத்த முடிவு சரிதானே ரதி?"

"நூறு சதவீதம் சரிதான் மதன்! உங்களைப் பார்க்கவே பிரமிப்பாவும் பெருமையாவும் இருக்கு... ஒரு சின்னத் திருத்தம் மதன்! சென்னையில ஒரு மூலையில கிடக்கிற சாதாரண இளைஞன் நான்...னு ரொம்பத் தாழ்மையா உங்களைப் பத்திச் சொன்னீங்க...

அது தப்பு மதன்! ஒரு சாதாரணப்பட்ட இளைஞனுக்கு சித்த தரிசனம் கிடைக்குமா? கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, தெய்வ பக்தி, மனிதநேயம், திறமை, வைராக்கியம், தன்னம்பிக்கை, உயர்ந்த உள்ளம், பரோபகாரம்னு... எல்லா நல்ல குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர் நீங்க!

அதனாலதான் சித்தரே நேர்ல தோன்றி பேசி, பெரிய ஆபத்திலிருந்து மீட்டிருக்காரு... மறைமுகமா ராயக்கோட்டைக்கு வரும்படி அழைப்பும் விடுத்திருக்காரு...



இப்பேர்ப்பட்ட உங்களுக்கு மனைவியாகப் போறேன்னு நெனைச்சா... உள்ளூரப் பெருமிதமா இருக்கு.

அம்மாகிட்டே கூட சொல்லாத விஷயத்தை... என்னை மதிச்சு என்கிட்ட சொல்லியிருக்கீங்களே? தேங்க் யூ ஸோ மச் மதன்!

இப்போ நான் உங்ககிட்டே ஒண்ணே ஒண்ணு கேட்கப் போறேன். மறுக்காம சரின்னு சொல்வீங்களா மதன்?"

"என் இதயத்துல குடியிருக்கிற இளவரசிக்கு... இன்னிக்குப் பிறந்த நாள் வேற.... நீ கேட்டா... நான் மறுக்கவா போறேன்? என்ன கேட்கணுமோ கேளு... ரதி!"

ரதி மவுனமாய்க் கடற்கரை மணலில் சுட்டு விரலால் மதன் என்று அவனது பெயரை எழுதி அழகு பார்த்தாள்.

"என்ன கேட்கப் போறே? பீடிகை பலமா இருக்கே?" சிரித்தான் மதன்.

"ஒரு நல்ல மனைவின்னா... தன் கணவரோட ஆர்வம், ரசனை, முயற்சி, விருப்பு, வெறுப்புகள்லே குறுக்கிடாம... அனுசரிச்சு, ஒத்துழைச்சு நடந்துக்கணும்னு... நான் சொன்னேன் இல்லையா?"

"நீயும் அப்படித்தானே இருக்கே? விஷயத்தை எடுத்துச் சொன்னா... மறுபேச்சு பேசாம... பச்சைக் கொடி காட்டிப் போயிட்டு வாங்கன்னு சொல்லிட்டியே..!"

"இல்ல... அனுசரிச்சு, ஒத்துழைச்சு நான் நடந்துக்க வேணாமா?" பூவாய் மலர்ந்து புன்னகைத்தபடி அவனைக் குறுகுறுவென்று பார்த்தாள் ரதி.

"என்னது இது? புரியலையே! நீயும் சித்தர் மாதிரி பூடகமா பேச ஆரம்பிச்சுட்டே? சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாயேன்...!" என்றபடி மணலில் கிடந்த சின்னச் சின்ன சங்குகளையும் கிளிஞ்சல்களையும் பொறுக்கி ஒன்று கூட்டினான்.

"கணவரோட சுகதுக்கத்துல பங்கெடுத்துக்க வேண்டியது ஒரு நல்ல மனைவியோட கடமை இல்லையா?"

"ஆமா..."

"அதனால நானும் உங்க கூடவே வர்றேன். நீங்க இதுக்கு மறுப்புத் தெரிவிக்கக்கூடாது."

சரேலென்று நிமிர்ந்து பார்த்தான் மதன். சீரியஸான முகபாவனையுடன் அவளது விழிகளை ஊடுருவினான்.

"என்ன விளையாடறியா நீ? நோ... நான் இதுக்கு ஒத்துக்கவே மாட்டேன்.... ஆம்பிளை நான்! அதுவும் இளந்தாரி... என்னையே அனுப்ப மாட்டேன்னு அம்மா எப்படி சத்தியாகிரகம் பண்ணினாங்க?

தர்மதுரை அங்கிள் உன்னைக் கண்ணுக்குள்ளே வச்சு பொத்திப் பொத்தி வளர்ந்திருக்காரு...

நாம்ப போற இடத்தைப் பத்தி... அங்கிள்கிட்டே இலேசா கோடி காட்டிப் பாரு... என்ன நடக்குதுன்னு அப்புறம் தெரியும்..."

"எதுக்கு நான் இலேசா கோடி காட்டணும்? விஷயம் வெளியில தெரிஞ்சாத்தானே பிரச்சினை?"

"என்ன உளர்றே? அங்கிளுக்கு எப்படித் தெரியாமப் போகும்?"



"அப்பாதான் ஊர்லேயே இல்லையே? கான்ஃபரன்ஸ் முடிஞ்சதும் யூரோப்பியன் கண்ட்ரீஸுக்கு டூர் போயிட்டு வர்ற பிளான்லே இருக்காரே?

அப்பாகிட்டே மூச்சே காட்டாம... நாம பாட்டுக்குக் கிளம்பிப் போயிட்டு வந்துடலாம்..."

"உன்னை ரொம்ப புத்திசாலிப் பொண்ணுன்னு நெனைச்சேன். இப்படி அபத்தமாப் பேசறியே ரதி! டிரைவர், சமையல்காரர், வேலைக்காரம்மா, தோட்டக்காரர், கூர்க்கா, எடுபிடி ஆளுங்க...

உன் ரூமுக்குப் பக்கத்திலேயே காவலாப் படுத்துக்கிற ஆயாம்மா... அவங்க பொண்ணு... ஏ... அப்பா! இத்தனை ஆட்படையிலே... யாராவது ஒருத்தர் அங்கிளுக்கு ஃபோன் பண்ணி சின்னம்மாவைக் காணோம்னு ஒரு வார்த்தை சொன்னா போதும்...

அடுத்த செகண்டே... சென்னை மாநகரமே திமிலோகப்பட்டுப் போயிடும்..."

"அதுக்கு ஒரு ஐடியா வைச்சிருக்கேன் மதன்! என்னோட தோழிக்கு கிருஷ்ணகிரியிலே கல்யாணம்... நான் அவசியம் போகணும்... பொண்ணு வீட்டுக்காரங்க கூடவே கிளம்பிப் போயிட்டு... அவங்க கூடவே பத்திரமா வந்துடுவேன் அப்பான்னு சொல்லப் போறேன். காரும், டிரைவரும் தேவையில்லைன்னு சொல்வேன்.

நான் ஆசைப்பட்டு ஏதாச்சும் கேட்டா... அப்பா உடனே சம்மதிச்சுடுவாரே!"

"நோ... நோ! பொய் சொல்றது பெரிய தப்பு ரதி! வேணாம் நான் ஒத்துக்கவே மாட்டேன்."

"ஹலோ... அங்கே மட்டும் என்ன வாழுதாம்? நீங்க மட்டும் அத்தை கிட்ட பொய் சொல்லலாமா? அது தப்பு இல்லையா? அது சரின்னா... இதுவும் சரிதான்!

இதுக்கு நீங்க மறுத்தா... நான் அத்தைகிட்டே கண்டிப்பா போட்டுக் கொடுப்பேன்..."

"சக்கரவர்த்தித் திருமகள் மாதிரி நீ பூப்போல வளர்க்கப்பட்டவள்... உன்னைப் பார்க்கும்போதெல்லாம் மென்மையான அழகான பன்னீர் ரோஜாதான் ஞாபகத்துக்கு வரும்.

சிவ துருவாசர் மலையிலே நிறைய ராஜ நாகங்கள் உலாவறதாகவும் தகவல் வந்திருக்கு... அடர்ந்த காடு, மலை, வனாந்தரம்னு அலைய வேண்டியிருக்கும். என்கூட வந்தா... நீ ரொம்பவே கஷ்டப்படுவே ரதி!

துப்பு துலக்கறதுக்குப் பகல் நேரம் தோதுப்படாது. ராத்திரியிலே ஆபத்தான மலைப் பகுதியிலே ஏறி இறங்கி அலைஞ்சு சிரமப்படணுமா? வேணாம்... இந்தப் பேச்சை இத்தோட விட்டுடு ... ப்ளீஸ்! புரிஞ்சுக்கோ... ரதி!

உன்கிட்ட உண்மையைச் சொன்னது தப்பாப் போச்சு... எதுவுமே சொல்லாம அம்மாவை வழியனுப்பி வச்சுட்டு... நான் கிளம்பியிருந்தா... நீ என்ன செய்வே?"

"அதே சக்கரவர்த்தி திருமகள் சீதை என்ன செய்தாங்களாம்? ராமர் இருக்கும் இடம்தான்... சீதைக்கு அயோத்தின்னு சொல்லி... தன் கணவரோடவே பிடிவாதமா வனவாசத்துக்குப் புறப்பட்டாங்களே?

அவங்க மனசைப் புரிஞ்சுகிட்டு... ராமரும் கூடவே வனாந்தரத்துக்குச் சீதையைக் கூட்டிக்கிட்டுப் போனாருல்ல?



காடு, மேடு, மலை, வனாந்தரம், அதலபாதாளம்... எதுவா இருந்தாலும் சரி. உங்க கூட இருந்தா... எல்லாமே எனக்குச் சுவர்க்கம்தான்!

அடுத்து என்ன சொன்னீங்க? நீங்க என்கிட்ட சொல்லிக்காமப் போனா... என்னால ஊகிக்க முடியாதா?

ஒண்ணு மட்டும் தெளிவாப் புரிஞ்சுக்கோங்க... என்னைக் கூடவே அழைச்சுட்டுப் போயிடுங்க.

இல்லேன்னா நான் துணிஞ்சு தனியாவே சிவ துருவாசர் மலைக்கு உங்களைத் தேடிக்கிட்டு வந்துடுவேன்!"

சுட்டு விரலை நீட்டி எச்சரித்தாள் ரதி.

அவளது குரலில் இருந்த தீவிரமும், உறுதியும்... மதனைத் திகைக்க வைத்தன.

"ஐயோடா... வேணாம் சாமி! கூடவே வந்துரு... அப்பப்பா... அம்மா கிட்டே போட்டுக் கொடுப்பேங்கிற... தனியா கிளம்பி வந்துடுவேன்னு சொல்றே... மிரட்டியே என்னைச் சம்மதிக்க வைச்சுட்டியே நீ கில்லாடிதான் ரதி!"

"சம்மதிச்சதுக்கு ரொம்ப நன்றி மதன்!"

"என் கூடவே வந்து என் கஷ்டத்துல பங்கெடுத்துக்கத் துடிக்கிறே... உன் மேல எனக்கு அன்பு இன்னமும் கூடிப் போச்சு ரதி! இருந்தாலும்... மனசுக்குள்ளே ஒரு ஏமாற்றம்தான்... நீதான் ஏமாத்திட்டே...!" மதனின் குரலில் ஒரு சோகம்.

"ஏமாத்திட்டேனா... நானா? எந்த விதத்துலே?"

திருதிருவென்று விழித்தவளை ரசித்துப் பார்த்தான் மதன்.

"அலங்க மலங்க முழிக்கும்போது, ஒரு குழந்தை மாதிரியே இருக்கியே? ஐ லைக் இட்!

'நான் உங்ககிட்டே ஒண்ணே ஒண்ணு கேட்பேன்'னு சொன்னே இல்லே? நான்கூட... பிறந்த நாள் பரிசா ஸ்வீட்டா கன்னத்துல ஒண்ணு ஞாபகார்த்தமா கேட்கிறியோன்னு நெனைச்சேன்... கடைசியிலே ஏமாந்திட்டேன்."

வெள்ளிக்காசுகளை அள்ளி இறைத்தாற்போல்... கலீரென்று சிரித்தாள் ரதி.

"ஆசை... தோசைதான்...! அட... உங்களை, கடமையை கண்ணா நெனைச்சு சுத்தி வர்ற கர்மவீரர்னு இதுநாள் வரை நெனைச்சுட்டிருந்தேன். உங்களுக்குள்ளே காதல் உணர்வான்னு ஆச்சரியமா இருக்கே?"

"நல்ல கதையா இருக்கே? கர்மவீரனுக்குக் காதல் உணர்வே இருக்காதுன்னு நெனைச்சுட்டியா?" அவளது தலையில் நறுக்கென்று குட்டு வைத்துச் செல்லமாய் காதைத் திருகினான்.

"இருக்கட்டும்... இருக்கட்டும்! கடமை ஃபர்ஸ்ட்! காதல் நெக்ஸ்ட்! அதுவும் கல்யாணத்துக்கு அப்புறமா... நாம்ப இங்க வந்து ரொம்ப நேரமாச்சு. கிளம்பலாமா கர்மவீரரே?" அவனது கையை நாசூக்காய் விலக்கியபடி மெல்ல எழுந்து கொண்டாள் ரதி.

"உத்தரவு மகாராணி... தங்கள் சித்தம் என் பாக்கியம்!" பேண்டின் பின்புறத்தில் ஒட்டிய மணலைத் தட்டி விட்டபடி அவளுடன் இணைந்து நடந்தான்.

இருவரும் கலகலவென்று சிரித்தபடி... காரை நோக்கி நடந்தனர். விதி, விகாரமாய் சிரித்தபடியே அவர்களைப் பின்தொடர்ந்தது.



# 9

அடுத்து வந்த மூன்று நாட்களும் நத்தையாய் நகர்ந்தன.

புதன்கிழமையன்று கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சென்றுவிட்டு... நேராக மதனின் வீட்டிற்குச் சென்றவளை... இன்முகத்துடன் வரவேற்றாள் அபிராமி.

கலகலவென்று உள்ளிருந்து பெண்களின் பேச்சுச் சப்தம் வந்தது.

"கோவிலுக்குப் போயிட்டு வந்தேன். பிரசாதம் எடுத்துக்கோங்க அத்தே!" பவ்யமாய் அர்ச்சனைக் கூடையை நீட்டினாள்.

"என்கூட டுருக்கு வர்றவங்க... எல்லோரும் அந்த அறையிலே உட்கார்ந்திருக்காங்க... அவங்களுக்கும் பிரசாதம் கொடும்மா."

"சரிங்க அத்தே!"

வந்திருந்தவர்கள் விபூதி குங்குமப் பிரசாதத்தை எடுத்துக் கொண்டே... ரதியைப் பார்வையால் அளவெடுத்தனர்.

"அபிராமி! நீ ரொம்பக் கொடுத்து வச்சவ... பணக்கார வீட்டுப் பொண்ணாயிருந்தாலும் பவ்யமா அடக்கமா இருக்கா...! என்றாள் அந்தக் குண்டுப் பெண்மணி.

"ஆமாமா... ஆளு பார்க்கக்கூட வெள்ளிக் குத்து விளக்காட்டம் அம்சமா இருக்காளே!" என்று ஓரக்கண்ணால் பொறாமையுடன் நோட்டமிட்டாள் ஒல்லியாய் இருந்தவள்.

அபிராமிக்குப் பெருமிதமாகவும் இருந்தது... உள்ளூர பயமாகவும் இருந்தது.

"ரதி! இப்படி வாம்மா..." என்று அவளது கையைப் பிடித்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு அழைத்துப் போனாள்.

"அத்தே! புளியோதரை வாசனை ஆளைத் தூக்குதே... பிரயாணத்துக்குச் சாப்பாடு கட்டி எடுத்துட்டுப் போறீங்களா?"

"ஆமா ரதி! சப்பாத்தியும் தக்காளி ஊறுகாயும் செய்தேன். புளியோதரையும் எள்ளுத் துவையலும் வேற செய்துட்டேன்... தோட்டத்துல வாழை இலையை நறுக்கி எடுத்துட்டு வந்து பார்சலும் போட்டு வச்சுட்டேன்.

நீ வருவியேன்னு உனக்குக் கிண்ணத்துல தனியா எடுத்து வைச்சிருக்கேன். சாப்பிடறியா?"

"சரிங்க அத்தே!" மறுபேச்சு பேசாமல்... ஒரு தட்டில் புளியோதரையைக் கொஞ்சமாக வைத்துக் கொண்டு கொறித்தாள்.

"பெருமாள் கோவில் புளியோதரை மாதிரி கமகமன்னு வாசனையா காரசாரமா இருக்கு அத்தே!"

"வந்தவங்க ஒவ்வொருத்திக்கும் மருமகளுங்க சரியா வாய்க்கலை... உன்னைப் பொறாமையா அவங்க பார்த்த பார்வை இருக்கே? டிரெயினுக்குக் கிளம்பற அவசரத்துல இருக்கேன்... இல்லேன்னா... ஆழாக்குலே பிடி உப்பும் வரமிளகாயும் போட்டு உனக்கு சுத்திப் போட்டிருப்பேன்.



கல்லடி பட்டாலும் படலாம்... ஆனா கண்ணடி படக்கூடாதும்மா... உங்க வீட்டுலே ஆயா இருக்காள்லே? அவகிட்ட சொல்லி இன்னிக்கு ராத்திரி மறக்காம உனக்குச் சுத்திப் போடச் சொல்லு... மறந்துட மாட்டியே?"

"நீங்க சொன்னதை நான் மறப்பேனா அத்தே? கண்டிப்பா சொல்லிடறேன்...!"

"என் ராஜாத்தி!" அவளது தாடையை ஆசையாய்த் தொட்டுத் தடவினாள் அபிராமி.

"அத்தே! கார் ஹார்ன் சத்தம் கேட்குது. உங்க பிள்ளை வந்துட்டாரு போலிருக்கு...!"

"அப்போ... நாங்க ஸ்டேஷனுக்குக் கிளம்ப வேண்டியதுதான்!" அபிராமிக்கு பரபரப்பு தொற்றிக் கொண்டது.

"அம்மா... ரெடியா? பேக் எல்லாத்தையும் காரிலே ஏத்திடட்டுமா?" என்றபடியே கூடத்திற்கு வந்தான் மதன்.

"உம்... ஏத்திடுப்பா. ரதி! நான் போயிட்டு வர்றேன் கண்ணு... நான் சொன்ன விஷயத்தை மறந்துடாதே!"

"சரிங்க அத்தே! ஸ்டேஷன் வரைக்கும் வந்து உங்களை ரயிலேத்தி விட்டுட்டுத்தான்... நான் வீட்டுக்குப் போவேன் அத்தே...!"

அபிராமிக்கு உள்ளூர நெகிழ்வாய் இருந்தது.

"சரிம்மா... உன் இஷ்டம்!" விழிகளில் கண்ணீர் கொப்புளிக்க ஆதுரமாய் மருமகளின் உச்சந்தலையை வருடி விட்டுக் காரை நோக்கி நடந்தாள்.

ரதிக்கு... கண்ணில் பட்ட மணலாய் மனசாட்சி உறுத்தியது.

"பெத்த தாய்க்கும் மேலா பாசம் காட்டற அத்தைகிட்டே போய்... உண்மையை மறைச்சுட்டோமே? இவங்களுக்குத் தெரியாம சிவதுருவாசர் மலைக்குப் பிரயாணப்பட்றோமே...? அது சரியா?"

மனதில் கேள்விகள் கொக்கிகளாய் முளைத்து அவளைக் கீறின.

மற்ற பெண்களும் காரில் ஏறி அமர... இவளைப் பார்த்து தலையசைத்து விட்டு தனது காரைக் கிளப்பினான் மதன்.

இவள் நிதானமாய்த் தனது காரில் அமர்ந்து ஸ்டேஷனை நோக்கி ஓட்டினாள்.

ஸ்டேஷனில்... மற்ற பெண்கள் ரயிலில் ஏறியதும் கடைசியாக அபிராமி ஏறப் போனாள்.

ரதியையும் மதனையும் ஒரு பார்வை பார்த்தவள்... விருட்டென்று திரும்பி வந்து ரதியை ஆரத் தழுவிக் கொண்டாள்.

ஏற்கெனவே மனசாட்சி உறுத்திக் கொண்டிருந்ததாலும்... அத்தை பாசத்துடன் தழுவிக் கொண்டதாலும்.. ரதிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"பார்த்து... பத்திரமா போயிட்டு வாங்கத்தே! ரெகுலரா போடற மருந்து மாத்திரையெல்லாம் மறக்காம தவறாம போட்டுக்கோங்க அத்தே...!"



"சரிம்மா... ஏன் கண்ணு கலங்குது? நான்தான் பத்தே நாள்லே வந்துடுவேன் இல்ல...? மதன்! ரதி உனக்காகத் தினமும் சமைச்சுடுவா... சங்கோஜப்படாம போய் சாப்பிட்டுக்கோ...!"

"அதெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்... எதைப் பத்தியும் கவலைப்படாம முதல்லே டிரெயின்லே ஏறுங்கம்மா...!"

பிரியாவிடை பெற்றுக் கொண்டு ரயிலில் ஏறினாள் அபிராமி.

கார் பார்க்கிங் செய்த இடத்தை நோக்கி இருவரும் நடந்தனர்.

"ரதி! ஏன் என்னமோ மாதிரி இருக்கே? விட்டா கொன்னு அழுதுடுவே போலிருக்கு..."

"அத்தைகிட்ட உண்மையை மறைச்சுட்டு... அவங்களுக்குத் தெரியாம ஆபத்தான இடத்துக்கு நாம்ப பிரயாணப்படறதை நெனைச்சா... உள்ளர மனசாட்சி உறுத்துது மதன்!"

"நீயும்தான் உங்கப்பாகிட்ட பொய் சொல்லிட்டியே? அதை நெனைச்சா... எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கே!"

"ஒரு நல்ல காரியம் நடக்கணும்னா... ஆயிரம் பொய் சொல்லலாம்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க...

அதன்படி பொய் சொல்லிட்டோம்... மனசாட்சியை ஓரங்கட்டி வெச்சுட்டு நடக்க வேண்டியதைப் பார்ப்போம்.

மணி இப்போ ஏழாச்சு... என் தோழியோட வீட்டுக்கு என்னை உங்க கார்லே கூட்டிட்டுப் போயி டிராப் பண்ணப் போறதா... அப்பா கிட்டே சொல்லிட்டேன்.

இன்னும் கொஞ்ச நேரத்துல அப்பா உங்க செல்லுக்கு ஃபோன் பண்ணுவாரு. அதுக்குத் தகுந்த மாதிரி பதில் சொல்ல வேண்டியது உங்க பொறுப்பு..."

"பொய் சொல்ல வேண்டிய தர்மசங்கடத்துக்கு என்னை ஆளாக்கிட்டே... நீயும் கூட வர்றதால என்னோட பொறுப்பும் டென்ஷனும் ஏகத்துக்குக் கூடிப் போச்சு!

சரி! என்னோட காரை வீட்டுலே கராஜுலே விட்டுட்டு டிராவல்ஸ் வேனை எடுத்துட்டு வர்றேன். எட்டு இல்ல எட்டரைக்கு வந்துடுவேன். தயாரா இரு."

"டின்னரை முடிச்சுட்டே கிளம்பலாம் மதன்... எதுக்கு வேன் மதன்? கார் போதாதா?"

"மினி ஏ.ஸி. வேன்தான்... ராஜா வீட்டுக் கன்னுக் குட்டிக்காக... காலைக் கையை நீட்டிப் படுத்துக்கிட்டே வருவேயில்ல...!

இன்னிக்கு ஒருநாள்தான் இந்த சவுகர்யம்! மலையையும் அரண்மனையையும் ஆராயப் போயிட்டோம்னா... நிறைய சிரமப்பட வேண்டியிருக்கும்... அதனாலதான்!

கிருஷ்ணகிரியில இருக்கிற ஏஜெண்ட் நமக்காக ஒரு டிராவலர்ஸ் பங்களாவை புக் பண்ணி வச்சிருக்காரு.

அங்க போய் இறங்கி ரிலாக்ஸ் பண்ணிட்டுக் குளியலை முடிச்சுட்டு நேரா ராயக்கோட்டைக்குப் போயிட வேண்டியதுதான்...

ராயக்கோட்டையிலே ஊருக்குள்ளே தங்கினா நமக்குத் தோதுப்படாது. நாடோடி மாதிரி கிடைச்ச இடத்தில



படுத்துக்கிட்டு நம்ம ஆராய்ச்சியைத் தொடர வேண்டியிருக்கும்."

"லக்கேஜ் ஜாஸ்தியா எடுத்துக்கலை. ரெண்டே செட் டிரஸ்தான் வச்சிருக்கேன். போதும் இல்லையா?"

"போதும் ரதி! நீ வீட்டுக்குக் கிளம்பு... எட்டரைக்கு நான் வந்துடறேன்!"

சகஜமாய் இருப்பது போல் காட்டிக் கொண்டாலும்... ரதிக்கு உள்ளூர திகில் ஊறிய வண்ணம் இருந்தது.

**கி**ருஷ்ணகிரியில்... அந்தப் பயணிகள் தங்கும் மாளிகையில் அதிக நேரம் செலவிடவில்லை.

குளித்து உடை மாற்றிக் கொண்டு ராயக்கோட்டையை நோக்கிப் பயணப்பட்டு விட்டனர்.

காலை ஏழு மணிக்கெல்லாம்... ஊரை விட்டுத் தாண்டி இருந்த மலைப் பக்கம் வந்து விட்டிருந்தனர்.

இறங்கியதுமே வேனை அனுப்பி விட்டு... அந்தப் பச்சைப் பசேலென்று கண்களை ஈர்த்த மலையை அண்ணாந்து பார்த்தனர்.

அதற்குப் பக்கத்திலேயே இன்னொரு மலையில் கம்பீரமாய் உச்சியில் நின்றிருந்த அரண்மனை! நூற்றாண்டுகள் சில கடந்து விட்டதால்... பாழடைந்து சிதிலமாகும் தருவாயிலிருந்தது.

பல மர்மங்களை உள்ளடக்கியபடி மவுனமாய் நின்றிருந்த மலையையும் அரண்மனையையும் பார்க்கும் போதே... அடிவயிற்றில் ஒரு பயம் பந்தாய் உருண்டது.

மதன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

சற்று தூரத்தில்... கையில் சிறு மரக் கொம்புடன் நான்கைந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுவன்... பார்வையில் அகப்பட்டான்.

"தம்பி! தம்பி...! கொஞ்சம் இங்கே வாப்பா...!"

மதனையும் ரதியையும் மாறி மாறிப் பார்த்தபடியே மெல்ல அருகில் வந்தான் அந்தப் பையன்.

"தம்பி! நாங்க சென்னையிலேர்ந்து வர்றோம். பழங்காலத்து அரண்மனைகள் கோட்டைகளைப் பத்தி ஆராய்ச்சி பண்ண வந்திருக்கோம்.

எங்களுக்குச் சில தகவல்கள் வேணும். செடி, கொடிகள் அடர்ந்து போய்க் கிடக்கு. அந்த மலைக்கும், இதோ இந்த மலை உச்சியில இருக்கிற அரண்மனைக்கும் போறதுக்கான வழியை... எங்களுக்குக் காட்ட முடியுமா?"

"வழி மட்டும் காட்டினா போதுமா? இல்லை... தகவல்கள் வேணுமா?"

"தகவல்கள் வேணும்... ஆராய்ச்சிக்கு அதானேப்பா முக்கியம்?"

"அப்படின்னா... ஊருக்குள்ளாரதான் நீங்க போகணும்.... ஊருல ஸ்கூல் ஹெட் மாஸ்டர் ஒருத்தரு



இருக்காரு... கோட்டை அரண்மனையைப் பத்தின வரலாற்றுச் செய்திகளை விலாவாரியா சொல்லுவாரு...

ஏழாப்பு வரைக்கும் நான் அவருகிட்டத்தான் படிச்சேன்...!"

பின்னந்தலையைச் சொறிந்தபடி பெருமிதமாய்ச் சிரித்தான் சிறுவன்.

"ஓ... இங்கே பக்கத்துலே வேற யாருமே இல்லையா?"

"ஆங்... இருக்காரே... ஒரு வயசானவரு இருக்காரு. அதோ இந்த மலை அடிவாரத்துலே அந்தப் பெரிய மரத்துக்கு அடியில பாருங்களேன்... இடிஞ்சும் இடியாததுமா ஒரு கருங்கல் கட்டிடம் தெரியுதா? அங்கேதான் அவரு ரொம்ப வருஷமா தங்கியிருக்காரு.

கையில ஒரு திருவோட்டை வச்சுக்கிட்டு... அப்பப்போ அந்த மலைக்கு மேல போயிட்டு வர்றதை நான் பார்த்திருக்கேன். மலை மேலே ஒரு சிவலிங்கம் இருக்கு.

சிவராத்திரி அன்னிக்கு நிறைய ஜனங்க கும்பிட வருவாங்க... அந்த மாதிரி ஜனங்க வர்ற சமயத்துல இந்த வயசானவரை கண்ணுலேயே பார்க்க முடியாது.

ஆள் நடமாட்டமே இல்லாதபோதுதான்... இவரு நடமாடுவாரு... அந்தக் கருங்கல் கட்டிடம் ஒரு காலத்துல சத்திரமா இருந்துச்சாம்.

கிருஷ்ண... ஆங்... கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்துல கட்டப்பட்டதுன்னு... எங்க வாத்தியார் அடிக்கடி சொல்லியிருக்காரு... கருங்கல் சத்திரத்தில இருக்கிற வயசானவரு கிட்டே கேட்டுப் பாருங்க... சொன்னாலும் சொல்லுவாரு...

நானும் எனக்குத் தெரிஞ்ச தகவலைச் சொல்லி உங்களுக்கு உதவியிருக்கேன். டீயும், பன்னும் வாங்கிச் சாப்பிட ஏதாச்சும் குடுங்க சாரு...!"

சிறுவன் வாயெல்லாம் பல்லாக... பின்னந்தலையை மீண்டும் சொறிந்தான்.

"ரொம்ப தேங்க்ஸ் தம்பி! டீயும் பன்னும் எதுக்கு? நல்ல டிபனா வாங்கிச் சாப்பிடு... இந்தா!" என்று ஒரு ஐம்பது ரூபாய்த் தாளை நீட்டினான்.

"ஆட்டை மேய்க்கிறதுக்கு தெனமும் இங்கன வருவேன். பொழுது சாயறப்போ தான் ஊருக்குள்ளார போவேன். எதுவாச்சும் தேவைப்பட்டா ஒரு குரல் குடுங்க... ஓடியாந்து உதவறேன்."

சிறுவன் பெரிய கும்பிடு போட்டுவிட்டு அப்பால் நகர்ந்தான்.

"அந்தக் கருங்கல் சத்திரத்தில இருக்கிற பெரியவர் தனிமை விரும்பி போலிருக்கு... அவரு இங்கேயே தங்கி இருக்கிறதால... அவருக்கு நெறய தகவல் தெரிஞ்சிருக்கும். இல்லையா மதன்?"

"கண்டிப்பா... பேசற விதத்தில பேசி தகவலை நாம்ப கறக்கணும்... அப்படியே அவரு அனுமதிச்சா நாம்ப அந்த சத்திரத்திலேயே டேரா போட்டுட வேண்டியதுதான்...

நாம்ப தங்கறதுக்கு இதுதான் தோதான இடம்னு என் மனசுக்குப் படுது... என்ன நடக்குதுன்னு பார்க்கலாம். வா..!"

இருவரும் சிதிலமடையத் தொடங்கியிருந்த அந்த சத்திரத்தை நோக்கி நடந்தனர்.



"சமீபத்தில் பெய்த மழைக்கு... குத்துச் செடிகளும் முட்புதர்களும் புசுபுசுன்னு வளர்ந்திடுச்சு போல... பார்த்து கவனமா நடக்கலேன்னா... அவ்வளவுதான்!"

முணுமுணுத்தபடி காலைத் தூக்கி வைத்து வெகு ஜாக்கிரதையாய் நடந்தான் மதன்.

"பார்த்து ரதி! ஆள் நடமாட்டமே இல்லாததால... காடு வண்டிப் பாதை எதுவும் கண்ணுக்குத் தட்டுப்படலை...

கோட்டை அரண்மனைக்குப் போகணும்னா... கண்டிப்பா அந்தக் காலத்துல படிக்கட்டுகள் அமைச்சிருந்திருக்கணும். செடி கொடிகள் காடா மண்டிப் போய்.. படிக்கட்டுகளை மறைச்சிடுச்சு போலிருக்கு..."

"நமக்கு அந்தப் பெரியவர் உதவினாத்தான் உண்டு. நம்ம கூடவே வந்து எல்லா இடத்தையும் காட்டினாத்தான் துப்புத் துலக்க வசதியா இருக்கும். இல்லேன்னா.. கண்ணைக் கட்டி காட்டில விட்டாப்பல வழியும் தெரியாம... வாய்க்காலும் தெரியாம தவிக்க வேண்டியதுதான்..."

"வெளிச்சம் இருக்கும்போதே... முக்கியமான இடங்களைப் போய்ப் பார்த்து வெச்சுக்கிறது நல்லது. அதுதான் புத்திசாலித்தனமும்கூட...

பவுர்ணமி இன்னிக்கு! அந்தக் கும்பல் கூட... இங்கே எங்கேயாச்சும் டேரா போட்டுத் தங்கியிருப்பாங்க போல... ராத்திரி ஆனதும் பேய் மாதிரி சுத்தக் கிளம்பிடணும்னு நெனைக்கிறேன். ஒரு முக்கியமான விஷயம் ரதி!

எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம்ப அந்தக் கும்பல்கிட்டே மாட்டிக்கவே கூடாது. மாட்டிக்கிட்டோம்னா...

நம்ம காரியம் கெட்டுடும்... அவங்க கண்ணுல சிக்கவே கூடாது.

அதே சமயத்துல அந்தக் கும்பலைக் கண்டுபிடிச்சு ஃபாலோ பண்ணணும்.... எதுக்காக இங்கே வந்திருக்காங்க? அவங்களோட உண்மையான நோக்கம் என்னன்னு தெரிஞ்சுக்கணும்... தெரிஞ்சுகிட்டு அதை நிறைவேத்த விடாம தடுக்கணும்....!"

அடிக்குரலில் பேசியபடி நடந்தான் மதன்.

"நாம்ப துப்புத் துலக்க வந்தோமா? அந்தக் கும்பலை ஃபாலோ பண்ண வந்தோமா?"

"ஏக காலத்துல, ரெண்டையும் பண்றதுக்குத்தான் வந்திருக்கோம்..."

வழித்தடம் தெரியாவிட்டாலும் புதர்களையும் முட்செடிகளையும் சிரமப்பட்டுக் கடந்து சென்று... அந்தக் கருங்கல் சத்திரத்தை அடைந்தனர்.

செவ்வக வடிவில் அமைந்த சத்திரம்... சுவர்களின் மூலைகளில் ஆலமர வேர்கள் ஊடுருவி... கருங்கல் கட்டிடத்தை அடியோடு தரைமட்டமாக்க கங்கணம் கட்டிக் கொண்டிருந்தன.

"கிட்டக்க போக வேணாம். இங்கே இருந்தே குரல் கொடுத்துப் பார்ப்போம்... பெரியவரு வெளியே எட்டிப் பார்க்கட்டும்...!"

ரதி அடிக்குரலில் எச்சரித்தாள்.

"ஐயா... ஐயா... பெரியவரே!" மதன் அழைத்தான்.



எதிர் வெயிலில் நின்றிருந்ததால்... இருவரும் கண்ணுக்கு மேல் கையைக் கூரையாகக் கொடுத்து சத்திரத்தின் வாசலையே உற்று நோக்கினர்.

"ஐயா... ஐயா...!"

நிதானமாய் உள்ளேயிருந்து ஒரு பெரியவர் வந்தார்.

இடுப்பில் காவி வேஷ்டி, கழுத்தில் ருத்திராட்சம், நெற்றியில் பட்டையாக விபூதி... வயது எழுபதுக்குள் இருக்கும்.

வாட்டியெடுக்கும் குளிரிலும் சட்டை எதுவும் அணியாமல் வெற்று மார்புடன் அவர் வந்து நின்றதை... இருவரும் ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.

"வணக்கம் ஐயா!" கோரஸாய்க் கூறியபடி கைகளைக் கூப்பினர்.

பதிலுக்கு அவரும் மரியாதையாய் "வணக்கம்!" என்றார்.

"ஐயா! நாங்க சென்னையிலேருந்து வர்றோம்" என்று ஆரம்பித்து, ஆடு மேய்க்கும் சிறுவனிடம் தெரிவித்ததையே பெரியவரிடமும் கூறினான் மதன்.

"ரொம்ப வருஷமா நீங்க இங்கேயே தங்கியிருக்கீங்கன்னு கேள்விப்பட்டோம். உங்களுக்குத் தெரிஞ்ச தகவல்களைச் சொல்லி... எங்களுக்கு உதவ முடியுமா ஐயா?"

"என்னை நம்பி வந்து கேட்கறீங்க... எனக்குத் தெரிஞ்சதைத் தாராளமா சொல்லிட்டுப் போறேன். ஆமா...

வயசுப் பொண்ணையும் வனாந்தரத்துக்கே கூட்டிட்டு வந்துட்டீங்க...!

இது அமானுஷ்யங்கள் நடக்கிற இடம்னு தெரியு மில்ல? இந்தப் பொண்ணு நல்ல தைரியசாலியோ?" என்று கேள்விக்கணைகளைத் தொடுத்தபடி ரதியை ஊன்றிப் பார்த்தார் பெரியவர்.

அவரது பார்வையில் ஒருவித தீட்சண்யம் தெரிந்தது. திடீரென பலத்த காற்று வீச... மரக்கிளைகள் சலசலவென்ற சப்தத்துடன் ஆடின. ஏதோவொரு அச்சம் ரதியின் பின்னங்கழுத்தைச் சில்லென வருடியது.

## 11

**சி**ல கணங்கள் அங்கே கனத்த மௌனம் நிலவியது. தொண்டையைச் செருமியபடி, மதன் பெரியவரை ஏறிட்டான்.

"இவளுக்கும் எனக்கும் கூடிய விரைவில் கல்யாணம் நடக்கப் போகுதுங்க ஐயா! நானும் வருவேன்னு பிடிவாதம் பிடிச்சு கூடவே வந்துட்டா...!"

"ஓ... சரி! இப்படி உட்காருங்க..." என்று கை காட்டினார்.

வாயிலின் இருபுறமும் இருந்த திண்ணை போன்ற பகுதியில் தயக்கமாய் இருவரும் நின்றனர்.

"தூசு தும்பு இருக்காது... தாராளமா உட்காரலாம்..." உபசரித்தார் பெரியவர்.

ரதி ஓரக்கண்ணால் சத்திரத்தின் உட்பகுதியை நோட்டமிட்டாள்.



ஒட்டடையோ தூசோ எதுவுமில்லாமல்... தரைகூட சுத்தமாய்ப் பளிச்சென்று பெருக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிசயித்தாள்.

"வெளியில பார்க்கத்தான் சிதிலமடைஞ்சிருக்கு... உள்ளே பர்ணசாலை மாதிரி அவ்ளோ சுத்தபத்தமா இருக்கு... மதன்!" குரலைத் தழைத்து மதனுக்கு மட்டும் கேட்கும்படி பேசினாள் ரதி.

"பேக்கோட புறப்பட்டு வந்திருக்கீங்க? ஊருக்குள்ளே தங்கற உத்தேசம் இல்லையா?"

"எங்க ஆராய்ச்சிக்கு ராத்திரியிலே ஊருக்குள்ளே யிருந்து புறப்பட்டு வர முடியாது... இங்கேயே கிட்டக்க தங்கினாத்தான் தோதுப்படும்..." மதன் பவ்யமாய்க் கூறினான்.

"அது சரிதான்... கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்துலதான் கோட்டை அரண்மனை கட்டப்பட்டது. இதோ இதுகூட அவரு கட்டின சத்திரம்தான்... 16, 17ஆம் நூற்றாண்டுலே கிருஷ்ணதேவராயரோட வம்சம்தான் அஞ்சு தலைமுறையா ஆண்டு வந்திருக்காங்க...

கடைசியா வந்த கெஜதேவராயரோட மருமகள்தான் உச்சியில இருந்து குதிச்சு தற்கொலை பண்ணிக்கிட்டா...

அவதான் பெண் தெய்வமா இன்னமும் உலாவிட்டிருக்கா... அவ குதிச்சு உயிர் துறந்த இடத்துல... அந்தக் காலத்துல கோவில் கட்டினாங்க...

ஜனங்க வருஷத்துக்கு ஒரு வாட்டி வந்து வணங் கிட்டுப் போவாங்க... மலைப் பகுதிங்கறதால அடிக்கடியும் வர முடியாதுல்ல...?

காலப் போக்குல அந்தக் கோவில்கூட கவனிப்பார் இல்லாம அப்படியே சிதைந்து இடிஞ்சுப் போச்சு... அரண்மனைக்கு நேர் கீழேதான் இடிபாடடைந்த அந்தக் கோவில் இருக்கு..."

"ஐயா... நீங்க கூடவே வந்து கொஞ்சம் எல்லா இடத்தையும் காட்ட முடியுமா? எங்களுக்குத் திக்கு திசை தெரியாது. அதான்..." தயங்கி இழுத்தான் மதன்.

"நான் தினமும் கறந்த பாலை திருவோட்டுலே எடுத்துக்கிட்டு சிவ துருவாசர் மலைக்குப் போய் அங்க இருக்கிற சிவலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணிட்டு வருவேன்... நீங்க பிரியப்பட்டா தாராளமா என்கூடவே வரலாம்.

ஆமா... ஆராய்ச்சி முடியறவரை எங்கே தங்கறதா உத்தேசம்?"

மதன் பதில் பேச வாயெடுப்பதற்குள்...

"இந்தச் சத்திரத்தில வயசுப் பொண்ணு தங்கறது அவ்வளவு நல்லது இல்லப்பா... சமீபகாலமா கண்டவங்க நடமாடறாங்க. தடிதடியா... ரவுடிப் பசங்க உலாவுறதை நானே பார்த்திருக்கேன். சில சமயத்தில அத்துமீறி சத்திரத்துக்குள்ளே நுழைஞ்சு வட்டமா உட்கார்ந்து குடிச்சு கூத்தடிப்பாங்க...

இது சத்திரம்தானே? யார் அவங்களைத் தடுக்க முடியும்? நடமாட்டம் தெரிஞ்சதுன்னா... நான் தூரமா ஒதுங்கிப் போயிடுவேன். துஷ்டர்களைக் கண்டா நாமதான் தூர விலகிக்கணும்... இல்லையா?"



மதனும் ரதியும் ஏமாற்றத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"அப்போ நாங்க ஊருக்குள்ளேதான் தங்கியாகணுமா?"

"சத்திரத்தைப் பின்பக்கமா சுத்திக்கிட்டு போனீங்கன்னா... பத்து நிமிஷ நடையில ஒரு சமணர் குகை ஒண்ணு வரும். அதுவும் அந்தக் காலத்துல கட்டப்பட்டது தான்... உள்ளே நிறைய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும்... நீங்க அதுலே தங்கிக்கலாம்...

சத்திரத்தின் பின்பக்கம் செடி, கொடிகள் அடர்ந்திருக்கிறதால யாரும் அந்தப் பக்கம் போகத் துணிய மாட்டாங்க...

உங்களைப் பார்த்த உடனே... என் மனசுல நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுப் போச்சு... நானே உங்களை அங்கே கூட்டிட்டுப் போறேன்.

அதுக்கு முன்னாடி... கொஞ்சம் இருங்க வந்துடறேன்!" என்று கூறியபடி உள்ளே சென்றவர்... இரு நிமிடங்கள் கழித்து வெளியே வந்தார்.

அவரது கையில் மூங்கில் கூடை. அதில் பச்சைப் பசேலென்று இலைகள்...

"இந்தாங்க... இதுல ஆளுக்குக் கொஞ்சம் எடுத்து வாயிலே போட்டுக்கோங்க... இது ஒரு அற்புதமான மூலிகை. தலைச்சுருளின்னு பேரு... இங்க அதிகமா ராஜநாகங்கள் நடமாடறதால இந்தத் தலைச்சுருளியை நாங்க பயன்படுத்திக்கிறது வழக்கம்...

படமெடுக்கிற ராஜநாகத்துக்கு முன்னாடி இந்த மூலிகையைக் காட்டினா போதும்... அப்படியே தலையைச் சுருட்டி பாம்பு அடங்கிப் படுத்துக்கும்... அதுக்குத்தான் இந்த மூலிகைக்குத் தலைச்சுருளின்னு ஒரு பேர் வந்துச்சு போல...

இதை ஒரு கைப்பிடி எடுத்து சாப்பிட்டிருங்க... பூச்சி பொட்டு அண்டவே அண்டாது. கையிலேயோ உங்க பையிலேயோ தலைச்சுருளியைக் கைவசம் எப்பவும் வைச்சுக்கோங்க...."

"ஐயா, ரொம்ப நன்றிங்க! எங்க மேல இவ்ளோ அக்கறை காட்டறீங்க? ரொம்ப ரொம்ப நன்றி..."

ரதி எழுந்து நின்று கைகூப்பினாள்.

"என்னை நம்பி வந்துட்டீங்க.... நீங்க என்னோட விருந்தாளிகள் மாதிரி... உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது என் கடமையாச்சே! அதுவும் வயசுப் பொண்ணு நீ... ஒரு கடமை உணர்வோட துணிஞ்சு இந்த வனாந்தரத்துக்கே வந்தியே?

உனக்காகவாவது நான் அக்கறை எடுத்துத்தானே ஆகணும்?"

கரிசனத்துடன் கனிவாய் பேசிய பெரியவரின் அருகே சென்ற ரதி... சட்டென்று அவரது பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கய்யா...!"

"ஆயுஷ்மான் பவ...!" மதனும் வந்து வணங்கினான். இருவரையும் உச்சி தொட்டு ஆசீர்வதித்தார்.



மூங்கில் கூடையில் இருந்த இலைகளை ஆளுக்குக் கொஞ்சம் சாப்பிட்டனர். கொஞ்சம் அள்ளி மதன், தனது பேண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

ரதி அந்த இலைகளை தனது முந்தானையில் வைத்து முடிச்சுப் போட்டுக் கொண்டு... அப்படியே முந்தானையை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

"உங்க பேக்கை அந்தச் சமணர் குகையில் வச்சுட்டீங்கன்னா... பாரமில்லாம சுலபமா நீங்க மலையேறலாம்... வாங்க... என்கூட!" மூங்கில் கூடையைத் திண்ணையில் வைத்து விட்டுக் கையில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு நடந்தார்.

செடி, கொடிகளை, புதர்களை லாவகமாகப் பிரம்பால் விலக்கி விலக்கி விட்டுக் கொண்டே முன்னே நடந்தார்.

"மதன்! அந்தப் பிரம்பைப் பார்த்ததும் பெரியவர் ஊன்றிக்கிட்டு நடக்கத்தான்... அதை எடுத்துட்டு வர்றாருன்னு நெனைச்சேன். செடி, கொடிகளை விலக்கத்தான் அதை வச்சுக்கிட்டிருக்காரு போல... இந்த வயசுல கொஞ்சம்கூட தடுமாறாம எப்படி நடக்கிறாரு பாருங்க!"

ரதி வியந்து போய் முணுமுணுத்தாள்.

"வனாந்தரம், மலையிலே கிடைக்கிற மூலிகைங்க... காய் கனிகளைச் சாப்பிட்டு உடம்புலே ஒரு வஜ்ரத் தன்மை வந்துடுச்சு போல... அதான் இவ்ளோ ஆகிருதியா இருக்காரு..."

மதனும் பெரியவரை அதிசயமாய்ப் பார்த்தபடி நடந்தான்.

சமணர் குகை! பட்டப் பகலிலேயே கும்மிருட்டாக உள்ளே இருக்கும் என்று இருவரும் எதிர்பார்க்கவில்லை.

"கொஞ்சம் இங்கேயே நில்லுங்க... பத்துப் படிகள் இறங்கணும்... நான் முன்னாலே போய் சுளுந்தைக் கொளுத்தி வைக்கிறேன்..." என்றபடி இருளில் சகஜமாய்த் தடதடவென்று இறங்கிச் சென்றார்.

"ஆங்... இப்போ நீங்க வரலாம்!" என்று குரல் கொடுத்தார். குரல் வந்த திசையிலிருந்து சுளுந்து வெளிச்சமும் சேர்ந்து வந்ததால்... படிக்கட்டுகளில் இறங்கி உள்ளே சென்றனர்.

சுற்றிலும் மன்னர்கள், ராணிகளின் சிற்பங்கள் அழகுற செதுக்கப்பட்டிருந்தன. பிரதானமாய் நடுநாயகமாய் இருந்த இளம்பெண்ணின் சிற்பம் படுநேர்த்தியாய், தத்ரூபமாய் வடிவமைக்கப்பட்டிருந்தது.

"கண்ணும் மூக்கும் தீர்க்கமா... அப்பப்பா பேரழகு! யாரோ ஒரு பேரழகியை நிக்க வைச்சு.. அவளைப் பார்த்துச் சிற்பம் வடிச்சிருப்பாங்க போலிருக்கு...!"

ராஜரீக உடையில் அம்சமாயிருந்த சிற்பத்தைத் தொட்டு ஆசையாய் வருடியபடி சொன்னாள் ரதி.

"இவதான் கெஜதேவராயரோட மருமகள்... கோட்டை அரண்மனையிலேர்ந்து குதிச்சுத் தற்கொலை செஞ்சுகிட்டவ..." என்று பெரியவர் கூறினார்.

ரதிக்குச் சுரீர் என்றிருந்தது.

சட்டென்று கையை எடுத்துக் கொண்டாள்.



## 12

அந்த இளவரசியின் கண்கள் தத்ரூபமாய்த் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு... ரதிக்கு ஏற்பட்டது.

"பெண் தெய்வமா உலாவிட்டிருக்காங்கன்னு... கேள்விப்பட்டோம். நீங்க, அவங்க நடமாடறதைப் பார்த்திருக்கீங்களா ஐயா?"

"ஓ... பார்த்திருக்கேனே... நான் இங்கேயே இருக்கிறவன் தானே! பார்க்காம இருக்க முடியுமா? எல்லோருடைய கண்ணுக்கும் தெரியறாளான்னு கேட்டா... எனக்குப் பதில் சொல்லத் தெரியாதும்மா...!"

"கோட்டை அரண்மனையிலே... சில பேரு தங்கத்தைத் தேடிப் போனதாகவும்... அப்படிப் போனவங்க ரத்தம் கக்கிச் செத்துட்டதாகவும் சொல்றாங்களே? அது உண்மையா?"

"முன்னூறு நானூறு வருஷங்களுக்கு முன்னாடி... இந்தப் பொண்ணு தற்கொலை பண்ணிக்கிட்டதாச் சொல்றாங்க... நல்ல ஆத்மாவுக்கு எப்பவுமே அழிவு கிடையாது. அது தன்னை ஆத்மார்த்தமா நெனைக்கிற வங்களையும் வணங்கறவங்களையும் ஆசிர்வதித்துக்கிட்டே இருக்கும்னு சொல்வாங்க...

கல்வெட்டுலே இவ பேரைக்கூட ஜெயதேவராயர் குறிப்பிட்டிருக்காரு... 'படே அசலம்மா'ன்னு சொல்லப்பட்ற மணிமேகலை... மணிமேகலா தெய்வமா இவ இன்னமும் உலாவிட்டிருக்கா...

நல்லவங்களுக்கு... அவ நல்லவ... தெய்வம்! கெட்டவங்களுக்கு அவ கெட்டவதான்!

அரண்மனையில அந்தப்புரத்துல இளவரசி ஏகாந்தமா குளிச்சு நீந்தித் திளைக்கிறதுக்கு தோதா அழகான குளத்தை மேலே அமைச்சிருந்திருக்காங்க...

இன்னமும்கூட நாம்ப அதைப் பார்க்கலாம்... அந்தக் குளத்துக்குப் பக்கத்துல... படிக்கட்டு போன்ற அமைப்பிலே ஏறி நின்னு குதிச்சு மணிமேகலை தற்கொலை பண்ணிக் கிட்டாளாம்.

தற்கொலைக்குக் காரணம்... பல்வேறா சொல்லப் பட்டிருக்கு. சரியான காரணம் தெரியலை... ஒருவேளை காதல் தோல்வியாக் கூட இருக்கலாம்.

தோண்டித் துருவி ஆராய்ச்சி பண்ணினா... அது ஒரு பெரிய கதையா வளர்ந்துட்டுப் போகும்... அந்த விவரம் எல்லாம் உங்களுக்குத் தேவைப்படாது இல்லையா...?

இப்போ உங்க கேள்வி என்ன? தங்கத்தைத் தேடி கோட்டை அரண்மனைக்குப் போனவங்க... ரத்தம் கக்கிச் செத்துட்டாங்களா? இல்லையான்னு தெரியணும் அவ்வளவுதானே!"

"ஆமாங்க ஐயா!" தலையை அசைத்தாள் ரதி.

"அதான் சொன்னேனே அம்மா...! மணிமேகலை தெய்வம் நல்லவங்களுக்கு நல்லவ... கெட்டவங்களுக்குக் கண்டிப்பா கெட்டவதான்...!

ஊருக்குள்ளே போய் விசாரிச்சுப் பாருங்க நெறைய குடும்பங்களுக்கு இவதான் குல தெய்வம். 'எங்க



குலதெய்வம் ரொம்ப சக்தி வாய்ந்தவள்'னு பெருமையாப் பேசிப்பாங்க...

அப்புறம் இன்னொரு விஷயம்... மணிமேகலா குதித்துத் தற்கொலை பண்ணினாள் இல்லையா? அவ குதிச்ச இடத்துல அதாவது அந்தக் குளத்துக்குப் பக்கத்திலேயே... அவளோட உடைகளையும், வைரமாலை, வைர அட்டிகை, ஏராளமான தங்க நகைகளையும்... மொத்தத்துலே, அவ அதுநாள் வரை உபயோகப்படுத்தின எல்லாவற்றையும் போட்டுப் புதைச்சுட்டதாக ஒரு தகவல் இருக்கு...

அவளை ஞாபகப்படுத்தற எந்தப் பொருளும் அரண்மனையில இருக்கக் கூடாதுன்னு முடிவு எடுத்து ஜெயதேவராயர் விரக்தியில புதைச்சுட்டதா சொல்றாங்க... அரண்மனையில இருந்த ஆஸ்தான ஜோதிடர் அந்த மாதிரி புதைக்கச் சொன்னதாகவும் சொல்றாங்க...

இந்த விஷயம் எப்படியோ வெளியே கசிஞ்சிருக்கும் போலிருக்கு... ஆண்டாண்டு காலமா இன்னமும் புதைச்ச இடத்தைத் தோண்டி விலை மதிப்புள்ள வைர, தங்க நகைகளைக் கொள்ளையடிக்க முயற்சி நடந்துட்டுத்தான் இருக்கு...

அந்த முயற்சி நடக்கும்போதெல்லாம்... முயற்சியில ஈடுபட்டவங்க... ரத்தம் கக்கிச் செத்திருக்காங்க... செத்ததுக்குக் காரணம் மணிமேகலா தெய்வமாக்கூட இருக்கலாம்...

யாரும் நேரிலே அந்தச் சம்பவத்தைப் பார்த்தது இல்லை... ஆனா... அவ, கெட்ட நோக்கத்தோட வந்தவங்க முன்னாடி தோன்றியிருக்கா... அசுரவதை பண்ணியிருக்கிறது மட்டும் என்னால உறுதியா சொல்ல முடியும்...

சில பேருக்கு அவ சாந்த ஸ்வரூபிணி! சில பேருக்கு அவ பயங்கர ரூபிணி! அதாவது அசுரர்களை வதம் செய்யற மகிஷாசுரமர்த்தினி!"

"ஐயா... ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் அவங்க வெள்ளை நிற ராஜரீக உடையில நள்ளிரவில உலாவுறதா சொல்றாங்களே? அது உண்மையா? அவங்க எந்த இடத்தில உலாவுவாங்க?

அவங்க குதிச்ச இடத்திலேயா? கீழே விழுந்து உயிர் துறந்த இடத்தில கோவில் கட்டப்பட்டதே? அங்கேயா? கோட்டை அரண்மனைக்கு உள்ளேயா? இல்லை... சிவ துருவாசர் மலையிலேயா? மலைக்குப் பக்கத்தில இருக்கிற வனாந்தரத்திலேயா?"

கேள்விகளை அடுத்தடுத்து அடுக்கிக் கொண்டே போனவளைப் பார்த்து மந்தகாசமாய்ப் புன்னகைத்தார் பெரியவர்.

"இதோ... இந்த மணிமேகலா சிற்பம் இருக்கே... இதுக்குப் பக்கத்தில இதே குகையில பலமுறை உலாவி யிருக்காளே...?" என்று கூறிவிட்டு கடகடவென்று சிரித்தார் பெரியவர்.

அவர் சிரித்த சிரிப்பு... குகைக்குள் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

அதே சமயத்தில்... அந்த மணிமேகலாவின் சிற்பத்தின் விழிகளில் அலாதி கூர்மையும் பளபளப்பும் தோன்றியது போலிருந்தது.



இதழ்க்கடையில் குட்டி முறுவல் பூத்தாற் போல் இருந்தது.

ரதிக்குத் தன் முதுகுத் தண்டுவடத்தில் யாரோ பனிக்கத்தியால் செருகியது போலிருந்தது.

அவளது நாடி, நரம்புகள் தந்தியடிக்க ஆரம்பித்தன.

# 13

அந்தச் சிற்பத்தையும் பெரியவரையும் மாறி மாறிப் பார்த்த ரதி... திடுதிப்பென்று குப்பென்று வியர்த்துப் போனாள்.

அகன்ற விழிகள் திகிலில் மேலும் விரிந்தன. பயத்தில் நா உலர்ந்து போனது.

உலர்ந்த உதட்டை நாவால் ஈரப்படுத்தியபடியே... துணிவைத் திரட்டிக் கொண்டு பெரியவரை ஏறிட்டாள்.

"ஐயா... நீங்க சொல்றது நிஜம்தானா?"

"நிஜம்தானம்மா... நீ கேள்விப்பட்டு அடுக்கினே பாரு.. அத்தனை இடங்களிலும் இவ உலாவறது உண்டு... இங்கேயும் உலாவறது உண்டு. போதுமா?

குறிப்பிட்டு ஒரு இடம்னு யாரும் சொல்ல முடியாது... பல பேரு பல இடங்கள்லே அவ உலாவறதைப் பார்த்திருக்காங்க...

பல குடும்பங்களுக்கு இவதான் குலதெய்வம்னு சொன்னேன் இல்லையா? இவளை வணங்கி வர்றதால நல்ல சுபிட்சமும் அபிவிருத்தியும் கண்டவங்க அவங்க...

அவங்க... மாசா மாசம் பவுர்ணமிக்கு இவளை
நெனைச்சு வணங்கி பூஜை செஞ்சு படையல்கூட வைக்
கிறாங்க...

அப்படிப்பட்டவங்களுக்கு ஊருக்குள்ளேகூட இவ
சில சமயத்துல காட்சி கொடுத்திருக்கிறதாகவும்... நான்
கேள்விப்பட்டிருக்கேன்...!"

"ஓ... அப்படியா ஐயா!"

ரதியின் விழிகள் சுற்றும் முற்றும் குகையைப்
பீதியுடன் ஆராய்ந்தன.

மணிமேகலா சிற்பத்தில் மீண்டும் அவளது பார்வை
பயத்துடன் பதிந்தன.

"என்னம்மா... குபீர்ன்னு உன் முகமெல்லாம்
வேர்த்துப் போச்சு. இந்தக் குகைக்கு ஒரு சிறப்பம்சம்
இருக்கு... ராயர் வம்சத்துல கட்டப்பட்ட குகைதான்...
கருங்கல்லாலே செயற்கையா கட்டப்பட்ட இந்தக் குகையில
வந்து உட்கார்ந்து பார்த்தா... ஏ.ஸி. அறையில உட்கார்ந்த
மாதிரி குளுகுளுன்னு இருக்கும்...

வெயில் எவ்ளோ கடுமையா இருந்தாலும்... இந்தக்
குகையினுள்ளே மட்டும் குளுகுளுன்னு இருக்கும்.
விஞ்ஞானரீதியா நம்ம உலகம் இன்னிக்கு படுவேகமா
வளர்ந்திருக்கலாம்....

ஆனா... பல நூற்றாண்டுகளுக்கு முன்னாடி எப்படி
சிந்திச்சு கட்டியிருக்காங்க பாரேன்? அதாவது இந்த இடத்தில
பூமிக்கடியிலே அதிக நீரோட்டம் இருக்கு... நீரோட்டம் மிக
அதிகமா இருக்கிற இடத்தில கட்டப்பட்டிருக்கிறதாலதான்...
இந்தக் குகை இவ்ளோ குளுமையா இருக்கு...



நம்ம முன்னோர்களோட தீர்க்கதரிசனத்தையும்
கட்டிடத் திறமையையும் நெனைச்சா வியப்பா இருக்குல்ல...?

அது சரி! இவ்ளோ குளுமையா இருக்கிற
குகைக்குள்ளேயே... உனக்கு இப்படி வேர்த்துப் போச்சே?

பயந்துட்டியா? உன்னை ரொம்ப தைரியசாலின்னு
நெனைச்சேன்? பார்க்கிற பார்வையிலேயே என்னால எடை
போட முடியும்.

உங்க ரெண்டு பேத்துக்குமே கல்மிஷம் இல்லாத
நல்ல மனசு இருக்கு... பகவானோட அனுக்கிரகம்
உங்களுக்கு எப்பவுமே இருக்கும்...

அப்புறம் ஏன் பயப்படறே? நல்லவங்களுக்கு இவ
நல்லவள்னு... நான் அப்பவே சொல்லிட்டேனே?"

முறுவலித்தபடியே அவளருகில் வந்த பெரியவர்
ஆதுரமாய் உரிமையாய் அவளது முதுகில் மெல்லத் தட்டிக்
கொடுத்தார்.

அப்போதுதான் அவளது படபடப்பு மெல்ல
அடங்கியது. "இ... இல்லைங்க ஐயா! அது வந்து... இவங்க
இங்க கூட உலாவுவாங்கன்னு... நான் கொஞ்சம்கூட
எதிர்பார்க்கவே இல்லை... அதான் திக்குன்னு ஆயிடுச்சு...

அதுவுமில்லாம ராத்திரி நாங்க இங்கேதானே தங்கப்
போறோம்? ஒருவேளை மணிமேகலா தெய்வம் இன்னிக்கு
இங்க உலாவுவாங்களோன்னு நெனைச்சுப் பார்த்தேன்.
இனம் புரியாத பயத்துல குபீர்னு வேர்த்துப் போச்சு...!"

"அவ உலாவுறதைப் பார்க்கணும்... ஆராயணும்னு
தானே ஆசைப்பட்டீங்க? இன்னிக்கு ராத்திரி இவ வந்தா

நல்லதுதானே? ஆராய்ச்சியிலே வெற்றி அடையணும்னா பயப்படக்கூடாது... பயந்தா எதையும் சாதிக்க முடியாது..."

“ஏ... என்னை மன்னிச்சுடுங்க ஐயா! இனிமே நான் எதுக்கும் பயப்பட மாட்டேன். தைரியமா இருப்பேன்!" சங்கோஜமாய்ப் பதில் அளித்தாள் ரதி.

“அதான் நல்ல பொண்ணுக்கு அடையாளம்... உங்க பேக்கை இங்கே வைச்சுக்கோங்க... நாம்ப கிளம்பலாமா? சிவ துருவாசர் மலைக்கு என்கூடவே வரணும்னு பிரியப்பட்டீங்களே? புறப்படலாமா?"

அவசர அவசரமாய் தாங்கள் சுமந்து வந்த பேக்குகளை ஓரமாய் வைத்து விட்டு... பெரியவரைப் பின்தொடர்ந்தனர்.

கடைசியாய் படிக்கட்டில் ஏறப்போன ரதி தற்செயலாய் திரும்பிப் பார்த்தாள். அதே சமயத்தில்...

மணிமேகலையின் சிற்பம் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைப் போலிருந்தது.

சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு முதல் படியில் காலை வைத்த ரதி... மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்!

மணிமேகலா சிற்பத்தில்... அந்த அழகிய விழிகளின் இமைகள்... ஒரு கணம் மூடித் திறந்தன.

அதே சமயத்தில்... இதழ்கள் விரிந்து ‘களுக்’ என்று சிருங்காரமாய் சிரிக்கும் சப்தம் கேட்டது.

என்னதான் துணிவைத் திரட்டியிருந்தாலும்... பகீர் என்று பயம் குடலை முறுக்கிப் போட்டது.



## 14

**நி**லை தடுமாறி பயத்தில் பொத் தென்று படிக்கட்டில் விழுந்தாள் ரதி.

“ம... மதன்! கொ... கொஞ்சம் நில்லுங்க... தோ வந்துட்டேன்!"

குழறலாய் உளறிக் கொட்டியபடி... எழுந்து ஒரே ஓட்டமாய்க் குகையை விட்டு வெளியேறினாள்.

மூச்சிரைத்தபடியே பெரியவருக்கும் மதனுக்கும் இடையில் வந்து நின்றாள்.

"என்னம்மா? இன்னும் பயம் உன்னை விட்டுப் போகலையா? பயத்துக்கு அடிப்படையே சந்தேகம்தான்... ஏதாச்சும் ஆபத்து வந்துடுமோன்னு சந்தேகம் உள்ளூர ஜனிக்கும்போது... பயமும் கூடவே பிறந்திடுமே?"

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைங்க ஐயா! நீங்க ஆறுதல் சொன்னதுமே... என் மனசைத் திடமாத்தான் வைச்சிருக்கேன்!" மிடறு விழுங்கியபடி பூசி மெழுகினாள் ரதி.

"எப்பவுமே நாம... அது எந்தத் தெய்வமா இருந்தாலும் முழுமையா நம்பிக்கை வைச்சு சரணாகதி அடைஞ்சுடணும். துளியளவுகூட மனசுல சந்தேகம் எட்டிப் பார்க்கக்கூடாது. அப்படி சந்தேகப்பட்டா... தெய்வம் சோதிக்க ஆரம்பிச்சுடும். சில தெய்வங்களுக்கு உக்கிரமா கோபம் வரும். சில தெய்வங்கள் திருவிளையாடல் பண்ணிப் பார்ப்பாங்க... நாம்பதான் நம்ம மனசைத் திடமா வைச்சுக்கணும்... சந்தேகம் புகுந்தா பயமும் சேர்ந்து வந்து... நம்மைத் தடுமாற வச்சுடும். புரியுதா?"

"புரியுது ஐயா!" முணுமுணுத்தவள் மதனைப் பார்த்து திருதிருவென்று விழித்துவிட்டு, பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"மனசை நான் திடமாத்தான் வைச்சிருக்கேன்னு உன் வாய்தான் சொல்லுதே தவிர... உன் கண்ணு வேற எதையோ மறைக்குதே? மூச்சிரைக்க ஓடி வந்திருக்கே?

என்ன? மணிமேகலா உன்கிட்ட விஷமம் பண்ணினாளா? உன்கிட்டே இருந்து இன்னமும்... சந்தேகமும், பயமும் போகலைன்னு புரிஞ்சு... உன்கிட்ட விளையாடிப் பார்த்துட்டாளா?

இனியாவது நிஜமாவே மனசைத் திடப்படுத்திக் கோம்மா...!"

சரேலென்று அவரை நிமிர்ந்து பார்த்து ரதி... உள்ளூர ஆச்சரியத்தில் அதிர்ந்தே போயிருந்தாள்.

'குகைக்கு உள்ளே நடந்த சம்பவம்... இவருக்கு எப்படித் தெரிந்தது?

எனக்கு முன்னால் நடந்த மதனுக்கே... இது தெரிய வாய்ப்பில்லையே?

இனி நானாகச் சொன்னால்தானே... மதனுக்கே தெரியும்?

மணிமேகலா சிற்பம் விஷமமாய் கண்ணைச் சிமிட்டி களுக் என்று சிரித்ததை நேரில் பார்த்தாற்போல்... இந்தப் பெரியவர் பேசுகிறாரே?

இந்தப் பெரியவர் சாமானியமானவர் அல்ல... இவரிடம் ஏதோவொரு சக்தி இருக்கிறது...!'



மனதில் ஒருவித பிரமிப்பும் பெரியவரின் மீது தனி மரியாதையும் ஏக காலத்தில் உதித்தன.

பெரியவர் பிரம்பின் உதவியால் காட்டுக் கொடிகளையும் கிளைகளையும், புதர்களையும் விலக்கியபடி விடுவிடுவென்று நடக்க... அவரது வேகத்திற்குக் கிட்டத்தட்ட இவர்கள் ஓட்டமும் நடையுமாகத்தான் பின்தொடர வேண்டியிருந்தது.

சத்திரத்தின் அருகே வந்ததும் "இங்கேயே நில்லுங்க... கொஞ்ச நேரத்துல வந்துடறேன்!" என்றபடி விரைந்து நடந்தார் பெரியவர்.

"இதோ... இந்தப் பாதை வழியாத்தான் சிவ துருவாசர் மலைக்குப் போகணும் போலிருக்கு..."

தனக்குள் பேசியபடியே வழித்தடத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான் மதன்.

ரதி பின்னால் திரும்பி... அந்தப் பெரியவர் போன திக்கையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

ரதி யோசனையுடன் பத்தடி தூரம் நடந்து சத்திரத்தின் வாயிலை உற்று நோக்கினாள்.

பார்வையை மறைத்த மரக்கிளையை ஒதுக்கி அவள் பார்த்தபோது... அவளது புருவங்கள் ஆச்சரியத்தில் மேலேறின.

பெரியவர் ஒரு திருவோட்டை எடுத்துக் கொண்டு வெளிப்பட்டார்.

சத்திரத்தின் திண்ணையைத் தாண்டி இறங்கி வந்து தனது உதட்டைக் குவித்து, "ம்மே...!" என்று குரல் எழுப்பினார். திருவோட்டைத் தரையில் வைத்தார்.

அவர் குரல் எழுப்பியதுதான் தாமதம்... புசுபுசுவென்று கொழுத்த ஆடு ஒன்று... பாய்ந்தோடி வந்தது.

அதன் கழுத்தில் கட்டப்பட்ட சிறுமணியிலிருந்து அழகாய் மணியோசை கிளம்பி வந்தது.

மரக்கிளையை இன்னும் நன்றாக ஒதுக்கி குதிகால்களால் எம்பி நின்றபடி ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ரதி.

அந்த ஆடு பெரியவரின் எதிரே... முன்னங்கால்களை மண்டியிட்டுப் பவ்யமாய் பணிந்தது... அதன் செய்கை கிட்டத்தட்ட அவரை வணங்குவது போலிருந்தது.

தடக்கென்று எழுந்து குடுகுடுவென்று அவரை மூன்று முறை சுற்றி வந்து மீண்டும் முன்னங்கால்களை மண்டி யிட்டுப் படுத்துக் கொண்டது.

பெரியவரின் முகத்தில் தெய்வீகக் களை மிளிர்ந்து கொண்டிருந்தது. புன்னகை பூத்தபடி குனிந்து அந்த ஆட்டின் முதுகை... அவர் பரிவுடன் தடவிக் கொடுத்தார்.

தடவிக் கொடுத்ததும்... "ம்மே.. ம்மே..." என்ற ஆடு செல்லமாய்ச் சிணுங்கி விட்டு... அந்தத் திருவோட்டின் அருகே சென்றது.

நிமிர்ந்து பெரியவரைப் பார்த்தது. "உம்... நடக்கட்டும்!" என்பது போல் பெரியவர் விழிகளாலேயே சமிக்ஞை செய்தார்.



மறுகணமே தன் மடியிலிருந்த பாலை, நேராக... திருவோட்டில் சொரிய ஆரம்பித்தது.

பெரிய திருவோடு அது! அது நிரம்பி வழியும் வரை பாலைச் சொரிந்த ஆடு... திருவோட்டையும் பெரியவரையும் சேர்ந்தாற்போல் வலம் வந்துவிட்டு... வந்த வழியாகத் திரும்பவும் ஓடி மறைந்தது.

நுரை பொங்கப் பால் தளும்பியிருந்த திருவோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு கவனமாக நிதானமாக அவர் நடந்து வருவதைப் பார்த்ததும்...

சட்டென்று ரதி ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்து... தான் முன்பு நின்று கொண்டிருந்த இடத்தின் அருகே சென்று முதுகு காட்டி நின்று எதையோ வேடிக்கை பார்ப்பது போல... போக்குக் காட்டினாள்.

## 15

"மதன்! இந்தப் பாதை வழியாகத்தான் நாம போகணும்!" என்றபடி மதனின் அருகே சென்றார் பெரியவர்.

"நீங்க முன்னாடி நடங்க ஐயா! நாங்க உங்களைப் ஃபாலோ பண்றோம். ரதி! இங்கே வா... சேர்ந்தாப்பல நடந்து வரணும்..." அவளைப் பார்த்து அதட்டி விட்டு முன்னே நடந்தான்.

பாதை செங்குத்தாக மேலேறிச் சென்றதால்... ஆங்காங்கே பாறைகளில் கால் பதித்துக் கவனமாய் ஏற வேண்டியதாயிருந்தது.

கைகளில் பால் நிரம்பிய திருவோடு! இருப்பினும் கொஞ்சம்கூட தட்டுத் தடுமாறிடாமல்... லாவகமாக, அதே வேகத்துடன் பெரியவர் மலை ஏறியதைக் கண்டபோது... மதனுக்கு உள்ளூர மலைப்பாகவே இருந்தது.

தான் கண்ட அதிசயத்தை மதனிடம் தனிமையில் சொல்ல வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாள் ரதி.

'மலைக் காட்டில் வளரும் ஆடு... பெரியவரைக் கண்டு மண்டியிட்டு வணங்கி மூன்று முறை வலம் வந்து அவரது திருவோட்டில் பவ்யமாய் பாலைச் சொரிந்து விட்டுச் செல்கிறதே?

இது அனுதினமும் நடக்கும் சம்பவம்போல் தெரிகின்றதே?

'தீயசக்தி நடமாடினாலும் சரி... தெய்வ சக்தி நடமாடினாலும் சரி... ஐந்தறிவு கொண்ட பிராணிகளுக்கு அது தெளிவாய்த் தெரிந்து போய்விடும்' என்று பாட்டி அடிக்கடி கூறுவாரே?

அப்படியென்றால்... 'இந்தப் பெரியவர் தெய்வ சக்தி படைத்தவர்' என்று அந்த ஆடு உணர்ந்திருக்கிறதோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இவர் சாதாரண மனிதர் அல்ல என்பது மட்டும் ஒருமுறைக்கு இருமுறையாக எனக்குப் புரிந்து விட்டது.

இவரது அறிமுகமும் அன்பும் கிடைப்பதற்கு... நானும் மதனும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா?

ஆமாம்... இந்தப் பெரியவரின் பெயர் என்ன? எத்தனை வருடங்களாக இந்த வனாந்தரத்தில் தங்கியிருக்கிறார்?



இவரது பூர்வாசிரமம் எது?

இவர் ஏன் இங்கேயே தங்கியிருக்கிறார்?

எதைப் பற்றியும் விசாரிக்கவில்லையே?

எது எப்படியோ? இவரிடம் அபூர்வ சக்தி இருப்பது மட்டும் உண்மை!

சிவ துருவாசர் மலையில் சித்தர்களின் நடமாட்டம் இன்றளவும் உள்ளது என்று கேள்விப்பட்டோம்.

அதைப் பற்றி இவரிடம் விசாரிக்க மறந்து விட்டோமே?

'மணிமேகலா தெய்வம்' உலாவுவதைப் பார்த்திருக்கும் பெரியவர்... சித்தர்களின் நடமாட்டத்தையும் பார்த்திருப்பார் அல்லவா?

இவர் தனது கண்ணால் சிறு சமிக்ஞை செய்ததும்... ஆடு திருவோட்டில் பவ்யமாய் பாலைச் சொரிந்ததே?

என்னே அற்புதம்! சித்தரைப் போல் இவரும் தான் அற்புதம் நிகழ்த்துகிறார்.

ஒருவேளை... இவர் சித்தராக இருப்பாரோ? அப்படியிருந்தாலும் இருக்கும்... யார் கண்டது?

இவர் சித்தராக இருந்து விட்டால் இவ்வளவு நேரமும் எனக்குள் வரி வரியாய் ஓடிய மன ஓட்டத்தைத் தெளிவாய் இவர் அறிந்து கொண்டிருப்பாரே?

நான் திருட்டுத்தனமாய் அவரை வேவு பார்த்ததுகூட இவருக்குத் தெரிந்திருக்குமே?

ஐயோ! அவர் என்னை என்னவென்று நினைப்பார்?

'இன்னமும் உன் மனதிலிருந்து சந்தேகம் நீங்கவில்லையா?' என்று என்னைப் பார்த்துக் கேட்கப் போகிறார்.

கேட்காவிட்டாலும்... தீட்சணியம் மிக்க விழிகளால் உற்று என்னை நோக்கினால் போதுமே?

குற்ற உணர்வில் நான் தலைகுனியப் போகிறேன். ஐயையோ... ஆர்வக் கோளாறில் தவறு செய்து விட்டேன்...

இனிமேல் சர்வ ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது தான்...

இவரது அருமை தெரியாத வரையில்... இவரிடம் வளவளன்னு பேசி கேள்விகளை அடுக்கி வாயடித்துக் கொண்டிருந்தேன்.

இவர் இன்னார் என்று அறிவுக்கு எட்டியும் அருமை புரிந்ததும்... இவரிடம் பேச நா எழும்பவே மாட்டேன்கிறதே?

இவரைப் பார்த்தாலே... பயத்திலா? பக்தியிலா? என்று தெரியவில்லை... வாயடைத்துப் போய் விடுகிறதே?

மதனுக்கு உண்மை தெரியவில்லை. பாவம்... அதனால்தான் கண்ணில் பட்ட கல்லையும் புல்லையும் பற்றி ஏதேதோ அவரிடம் சகஜமாய் பேசியபடி மலையேறிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் நான்...? பேந்தப் பேந்த விழித்தபடி மவுனமாய் மலையேற வேண்டியதாயிருக்கிறதே? பட்டப் பகலில் மலையேறுவதற்கே இவ்வளவு சிரமமாய் இருக்கிறதே? ராத்திரியில் இருட்டில் எப்படி ஏறி வரப் போகிறோம்?



பெரியவர் கண்டிப்பாக இரவில் துணைக்கு வர மாட்டாரே?

பகலில் எல்லா இடங்களுக்கும் துணையாய் வந்து வழிகாட்டிக் கொண்டு இருக்கிறாரே? இதுவே பெரிய விஷயம்தான்...

இரவில் அவர் துணையில்லாமல்... நானும் மதனுமாக வரவேண்டியதுதான்...!"

மனதிற்குள் எண்ணியபடியே நடந்தவள்... கவனக் குறைவாய் வழுக்குப் பாறையில் பாதம் பதித்து விட்டாள்.

சரக்கென்று வழுக்கி விட்டது.

நல்லகாலமாய் தாழ்வாய் வளைந்திருந்த மரக் கிளையை சட்டென்று பிடித்துக் கொண்டு... சரிந்து விழுந்து விடாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டாள்.

'ஐயோ... ஈஸ்வரா!' அவளையும் அறியாமல் அலறியதைக் கேட்டு மதனும் பெரியவரும் திரும்பிப் பார்த்தனர்.

"நல்ல வேளையா... மரக்கிளையைப் பிடிச்சுக்கிட்டதால தப்பிச்சேன்...!" அசடு வழிந்தாள் ரதி.

"அடி ஒண்ணும் படலையே ரதி?" அக்கறையாய் விசாரித்தான் மதன்.

"இல்லை... நான் விழவே இல்லை... சமாளிச் சுட்டேன்."

"மனசுல எப்பவும் துணிவே துணைன்னு நெனைக் கணும். அந்த நினைப்பே உனக்கு யானை பலத்தைக் கொடுக்கும்.

உன்னோட துணிவுதான்... கடைசி வரைக்கும் உனக்குத் துணையா வரும்... மற்றது எல்லாமே தற்காலிகமா கிடக்கிற துணைதான்... உன்கிட்ட இருக்கிற துணிவுதான், என்னிக்கும் நிரந்தரத் துணையா இருக்கும்கிறதை மறந் துடாதேம்மா...!"

பெரியவர் புன்னகை மாறாத முகத்துடன் அவளிடம் பேசினார்.

ரதி அரண்டே போய்விட்டாள்.

"நான் மனதிற்குள் துணையைப் பற்றி நினைத்தது... அப்பட்டமாய் இவருக்குத் தெரிந்து விட்டதே?

சந்தேகமே இல்லை... இவர் சித்தரேதான்!'

அவளது மனம் அறுதியிட்டு உறுதி கூறியது.

சில்லென்று அவளது பூமேனி சிலிர்த்து நடுங்கியது.

## 16

மலை உச்சியை அடைந்ததும் சமதளமாய் பரந்து விரிந்த தரையில் நடுநாயகமாய் பெரிய சிவலிங்கம் இருப்பதைக் கண்டு மதனும் ரதியும் ஸ்தம்பித்துப் போய் நின்றனர்.

"இதான் சிவ துருவாசர் மலை! இது அவர் கையாலேயே தினமும் அபிஷேகம் செய்துட்டு வந்த



சிவலிங்கம்!" என்று கூறியபடியே... தான் கொண்டு வந்த திருவோட்டிலிருந்த பாலை, லிங்கத்திற்கு அப்படியே அபிஷேகம் செய்தார் பெரியவர்.

பயபக்தியுடன் கண்களை மூடி மனதார வணங்கினாள் ரதி.

பத்மாசனமிட்டு தியானத்தில் அமர்ந்தார் பெரியவர்.

"மதன்! சித்தர்களோட நடமாட்டத்தைப் பத்தி ஐயாகிட்ட கேளுங்க... துருவாசர் தவம் செய்த குகையைப் பத்திக் கேட்கணும். அப்புறம்... மறக்காம ஐயாவோட பேர் என்னன்னு கேளுங்க..."

மதனின் செவியில் ரகசியமாய்க் கிசுகிசுத்தாள் ரதி. பத்து நிமிடங்கள் நிசப்தத்தில் கரைந்தன.

சட்டென திருவோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்தார் பெரியவர்.

"என்ன மதன்? உனக்கு வேறென்ன தெரியணும்? இந்த சிவதுருவாசர் மலை... சித்தர்களோட சாம்ராஜ்யம்னு சொல்லலாம்... இன்றளவும் சூட்சும ரூபத்துல நடமாடிக் கிட்டுத்தான் இருக்காங்க...

என்ன ரதி? போதுமா? ஆங்... மணிமேகலா தெய்வம் உலாவறதைப் பார்த்த மாதிரியே... சித்தர்கள் உலாவறதையும் நான் பார்த்திருக்கேன்... துருவாசர் தவம் செஞ்ச குகை கீழே அந்தப் பக்கமா இருக்கு... அதைக் கடைசியா காட்டறேன்.

பாழடைஞ்ச கோட்டை அரண்மனையை நான் காட்டிட்டா... என் வேலை முடிஞ்ச மாதிரிதான்!

அப்புறம் வேறென்ன தெரியணும்? ஆங்... இந்தக் கிழவனோட பேரு... ருத்ரமூர்த்தி ஈஸ்வரன்...!" பேசி முடித்து விட்டு கடகடவென்று சிரித்தார் பெரியவர்.

காற்று அசுர வேகத்துடன் 'உய்ய்ங்' என்ற சப்தத்துடன் சுழன்றடித்தது.

ரதிக்குச் சப்தநாடியும் ஒடுங்கிப் போனது.

'கடவுளே! நான் மனதில் நினைத்த ஒவ்வொரு கேள்விக்கும் மிகச் சரியாய்ப் பதில் சொல்லிக் கொண்டு வருகிறாரே... இவர் சித்தர்தான்!'

"என்ன ரதி? வேற எதுவும் தெரியணுமா?"

"இ... இல்லை ஐயா! வேற எதுவுமே தெரிய வேணாம்..." திக்கித் திணறியபடி பதில் சொன்னாள்.

"தெரிய வேண்டியதெல்லாம் தெரிஞ்சு போச்சு... இதுக்கு மேல எதுவும் தெரிய வேணாம்னு சொல்றே... அப்படித்தானே?"

"என் குற்றம் குறைகளை மன்னிச்சு... என்னை ஆசீர்வதிக்கணும் ஐயா!" சட்டென்று அவரது பாதங்களை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

மதன் மறுபக்கமாய் சென்று கீழே குனிந்து குகை எதுவும் கண்ணுக்குத் தட்டுப்படுகின்றதா? என்று சீரியஸாய் ஆராய்ந்து கொண்டிருந்ததால்... இவர்களது சம்பாஷணையை அவன் கவனிக்கவே இல்லை.

"பெண்புத்தி பின்புத்தின்னு சொல்வாங்க. ஆர்வக் கோளாறுலே கொஞ்சம்கூட யோசிக்காம வேவு பார்த்துட்டேன். தப்புதான்! என்னை மனப்பூர்வமா மன்னிக்கணும் ஐயா!"



அவளது விழிகளிலிருந்து வழிந்த கண்ணீர்... சூடாய் அவரது பாதத்தை நனைத்தது.

"எழுந்திரும்மா... எப்பவுமே ஒரு ஆணைவிட பெண்ணுக்குப் பொதுவா ஆன்மிகத்துல நாட்டம் அதிகம் இருக்கும். உள்ளத்துல அன்பும் அதிகமா சுரக்கும். அன்பு அதிகமா சுரக்கிற காரணத்துக்காகத்தான்... பகவான் அவளுக்குத் தாய்மை அடையக்கூடிய பாக்கியத்தையும் கொடுத்தாரு...

சூட்சுமத்தை கிரகிச்சுப் புரிஞ்சுக்கிற சக்திகூட அவளுக்கு அதிகமாத்தான் அமைஞ்சிருக்கு... ஆன்மிக அதிர்வை ரொம்ப சீக்கிரமா துல்லியமா அவ உணர முடியும்கிறதை... நீ சரியா நிரூபிச்சுட்டே ரதி!

உன் மேல எந்தத் தப்பும் இல்லம்மா... சொல்லப் போனா உன்னோட சமயோசிதத்தையும் தைரியத்தையும் நான் பாராட்டியே ஆகணும்.

நீயா புரிஞ்சு தெரிஞ்சுக்கிட்டதை உன் மனசோட வெச்சுக்கோ ரதி! உன் வருங்கால கணவன்கிட்டே மூச்சு விட வேணாம்...

அவனா ஆராய்ஞ்சு புரிஞ்சு உன்கிட்ட சொன்னா... ஆச்சரியப்பட்டுக் கேட்டுக்கோ... இதை நான் எதுக்கு சொல்றேன்னா... 'நமக்குத் தெரியாத சூட்சுமத்தை இவ கண்டுபிடிச்சுட்டாளே? நம்மைவிட ஒரு படி மேலா இருக்காளே?'ன்னு தாழ்வு மனப்பான்மையில புழுங்கித் தவிப்பான்.

இல்லேன்னா... 'நம்மால ஏன் முதல்லே புரிஞ்சுக்க முடியலை? நம்மகிட்ட என்ன குறைபாடு இருக்குன்னு

தனக்குத் தானே குறுக்கு விசாரணை பண்ணுவான். இது ஒரு ஆணோட இயல்புதானே? எதுக்கு அதுக்கு இடம் கொடுக்கணும்?"

"சரிங்க ஐயா! அவரா தெரிஞ்சுக்கிட்டு வந்து சொல்ற வரைக்கும்... நான் வாயைத் திறக்க மாட்டேன். ஐயா! ஒரே ஒரு விஷயத்தைக் கேட்டு என்னைத் தெளிவு படுத்திக்க விரும்பறேன்.

என் மாமனாரோட சாயல்லே ஒரு சித்தர்... மதனோட அறைக்கே நேர்லே வந்து காட்சி கொடுத்து... 'ஆகாய மார்க்கமா போற பயணத்தை ரத்து செய்துடு'ன்னு சொல்லி மறைஞ்சிருக்காரு... மறுநாள் அந்தச் சித்தர் தன்னோட அருளாலே காலதாமதத்தை ஏற்படுத்தி... மதனை மயிரிழையில உயிர் தப்ப வச்சிருக்காரு...

அந்தச் சித்தர்... என் மாமனாரோட சாயல்லே வந்த சித்தர்.. நீங்கதானே ஐயா?"

மீண்டும் கடகடவென்று நகைத்தார் ருத்ரமூர்த்தி.

"கெட்டிக்காரி நீ! ஒவ்வொரு வாட்டியும் நீ கேள்வி கேட்டு மடக்கும்போது உன்னோட புத்திக்கூர்மையை நெனைச்சு... என்னால வியக்காம இருக்க முடியலை... பார்க்க சின்னப் பெண்ணாயிருக்கே!

கேள்வி கேட்டே மடக்கிட்றியே? உன்னோட அறிவு ஜீவிதத்தைப் பார்த்து சிலாகிச்சுப் போறேன் ரதி! உன் மேல எனக்கு அன்பும், மரியாதையும் கூடிகிட்டே போகுதும்மா... மனசார சொல்றேன்... நீ அமோகமா இருக்கப் போறே..."



அவளது உச்சந்தலையில் கை வைத்து ருத்ரமூர்த்தி ஆசீர்வதித்தபோது... சிலீர் என்று ஒரு மின்னல் கேசாதி பாதம் வரை பாய்ந்தது போலிருந்தது.

ஆனந்த மிகுதியில் ரதிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"உங்களுக்கு அனந்த கோடி நன்றி ஐயா! என்னோட வருங்காலக் கணவரோட உயிரை... காப்பாற்றிக் கொடுத்ததுக்கு கோடானு கோடி நன்றி ஐயா! இப்பவும் உங்களோட அன்பு எனக்குக் கிடைச்சிருக்கே?

உங்க மனசுல நான் இடம் பிடிச்சதுக்கு... எத்தனை எத்தனை ஜென்மங்கள் தவம் செய்தேனோ? தெரியலையே! உங்க அனுக்கிரகமும் அன்பும் என்னிக்கும் எனக்கு வேணும்..."

மறுபடியும் அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"எழுந்திரு ரதி! பெண்கள் கண்ணீர் சிந்தக் கூடாதும்மா...! அழுதா... குடும்பத்துக்கு நல்லது இல்லை!"

"இது ஆனந்தக் கண்ணீர் ஐயா! சோகத்துல அழுதால்தான் தப்பு! இது சந்தோஷத்துல வடிக்கிற கண்ணீர் ஆச்சே!" - துடுக்குத்தனமாய் அவள் எதிர்க் கேள்வி கேட்டதும்... ருத்ரமூர்த்திக்கு சிரிப்பு பீறிட்டது.

"எதுக்கு அழறா இவ?" என்றபடி அருகில் வந்தான் மதன்.

"சிவ துருவாசரே பூஜை செஞ்ச லிங்கத்தை நேரில பார்த்த சந்தோஷத்துல... ஆனந்தக் கண்ணீர் வடிக் கிறாளாம்..." என்றார் ருத்ரமூர்த்தி.

"இவ இப்படித்தான் ஐயா! அடிக்கடி எமோஷனலாயிடுவா...! ஐயா... அடுத்து அரண்மனையைப் பார்த்துடலாம். போலாமா?" என்றான்.

மலையை விட்டு இறங்கி... பக்கத்து மலையில் அமைந்த கோட்டை அரண்மனையை அடைந்து... பாழடைந்து கிடந்த அந்தப்புரம் அரண்மனை அறைகள், அழகான குளம்... மணிமேகலை குதித்த இடம்... ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்து உன்னிப்பாய்க் கவனித்து விட்டுத் திரும்புவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

அரண்மனையில்... எங்கு பார்த்தாலும் நூலாம் படைகள்! சிலந்தி வலைகள்...! சர்... சர்... என்று முகத்தில் மோத வந்த பெரிய பெரிய வௌவால்கள்!

ரதிக்கு அலைச்சல் மிகுதியால் கைகால்களில் வலி பின்னியெடுத்தது.

கடைசியாய்... கீழே அந்தக் குகையைக் காட்டினார் ருத்ரமூர்த்தி. பெரிய மலையின்மீது இன்னொரு மலையைக் கவிழ்த்து வைத்தாற்போல் இருந்தது. இரு பெரிய பாறைகளுக்கு இடையே இருந்த இடைவெளியில்... படுத்து ஊர்ந்து கொண்டுதான் குகையின் உள்ளே செல்ல வேண்டும்.

"கொஞ்ச தூரம் படுத்து ஊர்ந்து போனா போதும்... அப்புறம் அழகா உட்கார்ந்து பூஜை பண்ணும்படி விஸ்தாரமாத்தான் குகை இருக்கு... குகையினுள்ளே ஒரு வெளிச்சப் பொட்டுகூட இல்லை ரதி!" என்று உள்ளே போய் விட்டு மதன், குகையின் அமைப்பை விவரித்துக் கூறினான்.



"ரதி! இன்னிக்குத்தானே பவுர்ணமி? அப்படின்னா குருவாசர் இன்னிக்கு ராத்திரி குகையில சுயம்பு லிங்கத்துக்கு ஸ்வர்ண புஷ்பங்களாலே அர்ச்சனை பண்ணுவார் இல்லையா? ஐயா! இன்றளவும் அந்த மாதிரி பூஜை நடக்குதா... ஐயா!"

ருத்ரமூர்த்தியும் ரதியும் அர்த்தபாவனையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நடக்குதா? இல்லையான்னு வந்து ஆராய்ஞ்சு பார்த்து தெரிஞ்சுக்கோயேன் மதன்! ஏதோ... என்னால முடிஞ்ச மட்டும் கூடவே வந்து வழி காட்டிட்டேன்... இனி உன் பாடு மதன்!"

"சாரி ஐயா! இதுக்கு மேல நான் தொந்தரவு பண்ண மாட்டேன். ரொம்ப ரொம்ப நன்றி ஐயா! ரதி... சமணர் குகையில கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு... ராத்திரி ஆனதும் நம்ம ஆராய்ச்சியைத் தொடரலாம் சரியா?"

சமணர் குகை என்றதும்... 'மணிமேகலா சிற்பம்' அவளது மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. இதயத் துடிப்பு இனம் புரியாமல் திக்... திக்... என்று அதிர ஆரம்பித்தது.

## 17

அவர்கள் மறைவாயிருந்த குகையை அடைந்தபோது... சூரியன் மேற்கு வானில் வழுக்கி மறையத் தொடங்கியிருந்தான்.

குகையின் வாசலிலிருந்து தயக்கமாய் உள்ளே கீழே சென்ற படிக்கட்டுகளில் பார்வையைப் பதித்து

விட்டு... "மதன்! உள்ளேயிருந்து வெளிச்சம் வருதே?" என்றாள் ரதி.

"வரத்தானே செய்யும்? நாம அந்த சுளுந்தை அணைக்காமத்தானே வெளியேறிப் போனோம்.

சரி இறங்கு! காலையிலேர்ந்து ரெண்டு மலையில ஏறி இறங்கியிருக்கோம். அதிலும் அந்தப் பிரமாண்டமான அரண்மனையை வேற சுத்திப் பார்த்திருக்கோம்.

அரண்மனையும் அந்தப்புரமும் எவ்ளோ விசாலம்? அதைச் சுத்திப் பார்த்து முடிக்கும்போது... யாருக்குமே களைச்சு மயக்கம்தான் வரும் போலிருக்கு!

பாவம்... நீ! எனக்கே கால் ஓய்ஞ்சு போச்சே? பாவம்... பத்தடி கூட நடந்து பழக்கப்படாத நீ... எனக்காக பயங்கர கஷ்டத்தை அனுபவிச்சுட்டே...!

எனக்கு அதை நெனைச்சாத்தான் ரொம்ப கில்ட்டியா இருக்கு ரதி!"

காதலும் கரிசனமும் கண்களில் பொங்கி வழிய... அவளது கரத்தை மிருதுவாய்ப் பற்றினான் மதன்.

"சாரி ரதி!"

"எதுக்கு சாரி கேட்கறீங்க மதன்? நானா விருப்பப் பட்டு பிடிவாதம் பிடிச்சுத்தானே உங்ககூட வந்தேன்... இங்க வந்ததுக்கு... உண்மையிலேயே நான் கொடுத்து வச்சிருக்கணும் மதன்!

நிஜமா... நான் அப்படி நெனைச்சு புளகாங்கிதம் அடைஞ்சு போயிருக்கேன்... தெரியுமா?



சிவதுருவாசர் மலையிலே இருக்கிற சிவலிங்கத் துக்கு... ஐயா அபிஷேகம் செய்யும்போது மெய்சிலிர்த்துப் போயிட்டேன்.

சாந்நித்யம் நிறைஞ்ச பூமி இது! சித்தர்கள் நடமாடற பகுதியாச்சே? நான் அதிசயத்திலே ஸ்தம்பிச்சுக் கிடக்கேன். நீங்க என்னடான்னா... என்கிட்டே சாரி கேட்கறீங்களே?"

"ஓ... அப்படின்னா... எனக்குச் சந்தோஷம்தான் ரதி! ஆங்... ஒரு விஷயத்தை கவனிச்சியா? கிருஷ்ணகிரி யிலேருந்து புறப்பட்டு நாம்ப வேன்லே வந்தோம் இல்லையா? வர்ற வழியிலே இறங்கி ஒரு ஹோட்டல்லே டிபன் சாப்பிட்டோம். அவ்வளவுதான்!

இன்னிக்குக் காட்டுலே சுத்தி ரெண்டு மலை ஏறி இறங்கி, அரண்மனையை கால் ஓயும் மட்டும் ரவுண்ட் வந்து... எவ்ளோ அலைஞ்சிருக்கோம்? கொஞ்சம்கூட பசி, தாகம் எடுக்கலை பார்த்தியா?"

'ஒரு மகா சித்தர் நமக்குத் துணையா கூடவே வந்தாரே? அவர் கிட்ட இருக்கும்போது... பசி, தாகம் மயக்கமெல்லாம் எப்படி வரும்? எல்லாம் அவரோட செயல்தான்...' என்று சொல்லத் துடித்த நாக்கைச் சிரமப்பட்டு கடித்து அடக்கினாள் ரதி.

"அட... ஆமா மதன்? நீங்க சொன்னதும்தான்... இது எனக்கு ஞாபகத்துக்கே வருது. ஆமா... வலது கையில கட்டிப் பூசணிக்காய் சைஸில ஏதோ ஒரு பழத்தை வச்சிருக்கீங்க? இதை எங்கே பறிச்சீங்க? இது என்ன பழம்?"

"இதுக்குப் பேரு ரம்பா பழமாம். ஐயாதான் இதை என் கிட்ட கொடுத்து... நம்மைச் சாப்பிடச் சொன்னாரு... ரதி! ஒரு விஷயத்தைக் கவனிச்சியா?

காலையில ஐயா தலைச்சுருளிங்கிற ஒரு மூலிகை இலைகளை நமக்குக் கொடுத்து சாப்பிடச் சொன்னாருல்ல? சாப்பிட்டா பூச்சிப் பொட்டு அண்டாதுன்னு சொன்னாரே? அதுமட்டுமில்ல...

அதைச் சாப்பிட்டா... பசியே எடுக்காது போலிருக்கு... நமக்குப் பசி, தாகம், எடுக்காம இருந்ததுக்கான சூட்சுமம் என்னன்னு இப்போ புரிஞ்சுதா?

எல்லாம் அந்த தலைச்சுருளியோட மகிமைதான்...!"

"ஓ... நீங்க அப்படிச் சொல்றீங்களா? நீங்க சொன்னா அது சரியாய்தான் இருக்கும் மதன்!" வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்டாள் ரதி.

"இன்னும் பல சூட்சுமங்களைக் கண்டுபிடிச்சு... உன்னை ஆச்சரியத்துலே மூழ்கடிச்சு... திக்குமுக்காட வைக்கிறேன் பாரு!" என்று கூறியபடி 'ரம்பா பழ'த்துடன் படிக்கட்டுகளில் இறங்கி குகைக்குள் புகுந்தான்.

'ருத்ரமூர்த்தி ஒரு சித்த மகா புருஷர்' என்பது தெளிவாய்த் தெரிந்து அவரிடம் மனம் விட்டுப் பேசியதும்... ரதிக்கு 'மணிமேகலா தெய்வ'த்திடம் இருந்த பீதியும், பயமும் அடியோடு நீங்கி விட்டிருந்தன.

மணிமேகலா சிற்பத்தின் அருகே சென்று... அந்தச் சிற்பத்தையே திடமாய்த் தைரியமாய் உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள்.

மதன் தரையில் அமர்ந்து ரம்பா பழத்தின் மேல் தோலை மும்முரமாய் உரித்துக் கொண்டிருந்தான்.



"உள்ளே ஆரஞ்சு சுளைங்க மாதிரி இருக்கு ரதி! காட்டுப் பழம் இல்லையா? அதான்... சதைப்பற்றா பெரிசா இருக்கு...!" என்றபடி பேசிக் கொண்டிருந்தான்.

மணிமேகலா சிற்பத்தில்... அந்த அழகிய இமைகள் மீண்டும் மூடித் திறந்தன.

ரதிக்கு ஜிவ்வென்று தலை முதல் பாதம் வரை சிலிர்த்தது.

சட்டென்று அந்தச் சிற்பத்தின் பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டாள். நீர்த்திரையிட்ட விழிகளால் அந்த அழகிய முகத்தை உற்று நோக்கினாள்.

"நீங்க யாருன்னு நான் புரிஞ்சுகிட்டேன் தாயே! மானசீகமா மன்னிப்பு கேட்கிறேன், தயாபரியே...! நான் உங்க பொண்ணு... இனிமே நீங்க எப்படிச் சோதித்தாலும் சரி... நான் கடுகளவுகூட... கலங்க மாட்டேன் - தாயே!

நான் தாயில்லாதவள்... நீதான் எனக்குக் கடைசி வரைக்கும் துணையா இருந்து... என்னைக் காத்து ரட்சிக்கணும் அம்மா! உன்கிட்ட சரண் புகுந்துட்டேன் அம்மா...!"

மானசீகமாய் மணிமேகலா தெய்வத்திடம் பேசி முடித்தபோது... மனதில் பெருத்த நிம்மதி குடிபுகுந்தாற் போலிருந்தது.

"வா ரதி! எல்லாச் சுளைகளையும் உரிச்சுட்டேன். வந்து சாப்பிடு... சுளை படு சுவையாவும் இருக்கு... உள்ளே ஈரமாவும் இருக்கு... இந்த ஒரு ரம்பா பழமே நம்ம ரெண்டு பேத்துக்கும் போதும் போலிருக்கு... வயிறு கும்முன்னு நிறைஞ்சுடும் பாரேன்... வா... வந்து சாப்பிடு!

வாழ்நாள்லே இன்னிக்குத்தான்... பாவம்! நீ பட்டினியா கிடந்திருக்கே... தர்மதுரை அங்கிளுக்குத் தெரிஞ்சா... என்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவாரு... தெரியுமா?'

ரதி மவுனமாய் அவனருகே வந்து அமர்ந்தாள். அவளது மனம் ஒருவித மோனத்தில் லயித்திருந்ததால்... மதனின் கேள்விக்குப் பதில் அளிக்காமல்... சுளைகளைப் புசிக்க ஆரம்பித்தாள்.

மனம் நிறைந்திருந்ததால்... அவளுக்கு உண்மையில் இன்னமும்கூட பசியே எடுக்கவில்லை. மதன் சதா தொந்தரவு செய்ததால்... அவனது திருப்திக்காக சாப்பிட அமர்ந்தாள்.

சாப்பிட்டு முடித்ததும்தான் தாமதம்...

இருவருக்கும் கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. தங்களது பேக்குகளை எடுத்து தலைக்குத் தலையணை போல் வைத்துக் கொண்டு... ஆளுக்கு ஒரு பக்கம் சரிந்து படுத்தனர்.

தூக்கம் அவர்களை ஆசையுடன் தழுவி, இழுத்துக் கொண்டு போனது. நேரம் நழுவியது.

இரவில்... ஏதோ வினோதமான ஒலியைக் கேட்டு டக்கென்று விழித்துக் கொண்டாள் ரதி.

சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினாள்... மணிமேகலா சிற்பத்திலிருந்து குபுகுபுவென்று பனிப்புகை வர... அடுத்த சில கணங்களில்... மணிமேகலா தெய்வம் வெள்ளை வெளேரென்ற ராஜரீக உடையில்... கைநிறைய



வளையல்கள், கால்களில் தங்கக் கொலுசு... இடுப்பில் ஒட்டியாணம்... தலைநிறைய பூச்சூடி... சர்வ அலங்கார பூஷிதையாக நேரில் தோன்றினாள்.

## 18

ரதி வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்தாள்.

'அப்பப்பா! என்னவொரு பேரழகு? கண்களைக் கூச வைக்கும் பேரழகுடன் மணிமேகலா தெய்வம் மிளிர்கிறாரே? இந்தத் தரிசனம் கிடைக்க... நான் புண்ணியம் செய்திருக்க வேண்டுமே?'

இமை கொட்டாமல் அந்த அழகு உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரதி.

அந்த மணிமேகலா தெய்வம் நான்கடி நடந்தது. பின்பு திரும்பி இவளைப் பார்த்து புன்னகைத்து, தன்னுடன் வரும்படி சைகை செய்தது.

தூங்கிக் கொண்டிருந்த மதனை... ஒரு பார்வை பார்த்துவிட்டு... 'அவனை எழுப்பலாமா? வேண்டாமா?' என்பது புரியாமல் திணறிவிட்டு... மணிமேகலையை ஏறிட்டாள்.

மணிமேகலா தெய்வம் விழிகளாலேயே சமிக்ஞை செய்து மதனை எழுப்புவதற்கு அனுமதி கொடுத்ததும்... ரதி அவனது முதுகைத் தட்டி எழுப்பினாள்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த மதன்... தூக்கக் கலக்கம் மிதந்த விழிகளால் ரதியை நிமிர்ந்து பார்த்தான்.

அவளது பார்வை சென்ற திக்கிலேயே பயணித்த வனுக்கு... மணிமேகலா தெய்வத்தைக் கண்டதும்... தூக்கி வாரிப் போட்டது.

"ர...தி! என்னது இது? இது... நிஜம்தானா? நான் காண்பது கனவில்லையே? ஒருவேளை... இது கனவோ? கொஞ்சம்கூட பயப்படாம கேஷுவலா இருக்கே? அதான் கேட்கிறேன்...

ஐயா சொன்னாப்பல இவங்க இங்கேயே உலாவ வந்துட்டாங்க போல... இன்னிக்குப் பவுர்ணமி வேற...!"

தூக்கக் கலக்கம் பஞ்சாய் பறந்தோடி விட்டது.

ஒரு அரிய சம்பவத்தை நேரில் பார்த்துவிட்ட திருப்தியில்... அவனுக்குள் உற்சாகம் பீறிட்டது.

"சின்னப் பூனையைப் பார்த்தாலே... பயத்துல அலறியடிச்சுடுவேன்னு... அடிக்கடி உன்னோட பயந்த சுபாவத்தைப் பத்தி அங்கிள் என்கிட்ட சொல்லியிருக்காரு...

ஆனா... இன்னிக்கு நீ இவ்ளோ தைரியமா நிக்கிறே? என்பொருட்டு... எந்த ஆபத்தும் எனக்கு வந்துடக் கூடாதேன்னு கூடவே துணிஞ்சு வந்தே...!

எல்லாத்துக்கும் சிகரம் வைச்சாப்பல... பெண் தெய்வம் பளீர்னு வெள்ளை நிற உடையில் நள்ளிரவில் நடமாடறதைப் பார்த்தும்கூட அசராம நிக்கிறியே?

உன்னை... உன் அன்பை... உன் துணிவை எப்படிப் பாராட்டறதுன்னு தெரியலையே.. ரதி?"

அடிக்குரலில் பேசிய மதனின் கையைச் சட்டென்று இறுகப் பற்றினாள் ரதி.



"பேசறதுக்கு இது நேரமில்ல... மதன்! நாம்ப மணிமேகலா தெய்வத்தை ஃபாலோ பண்ணலாம். மறைமுகமா அவங்க நமக்கு அழைப்பு விடுக்கிற மாதிரி இருக்குல்ல...!

எப்படியும் இன்னிக்கு ராத்திரி ஆராயப் போகலாம்கிற முடிவுலதானே இருந்தோம்...!"

"ஆமாமா... வா போகலாம்! ரதி... இவங்க மறை முகமா நமக்கு எதுக்காக அழைப்பு விடுக்கிறாங்கன்னு தெரியலையே?"

மதனுக்கு ஆர்வம் தாங்கவில்லை. தனது பேண்ட் பாக்கெட்டில் மினி டார்ச் உள்ளதா? என்று தொட்டுத் தடவி உறுதிப்படுத்திக் கொண்டு நடந்தான்.

"இவங்களைப் பின்தொடர்ந்து போனா... கொஞ்ச நேரத்துல என்ன விஷயம்னு நமக்கே தெரிஞ்சுடும் மதன்!

இவங்க நெனைச்சா காத்தாப் பறந்து போயிட முடியுமே? நம்மை அழைச்சுட்டுப் போகணும்கிற நோக்கத்திலேதான்... இப்படி நிதானமா நடந்து போறாங்கன்னு... என் மனசுக்குப் படுது..."

"யூ ஆர் கரெக்ட் ரதி!"

அரை மணிநேரம் நழுவியதே தெரியவில்லை.

"ரதி! இவங்க தன்னோட கோட்டை அரண்மனைக்கு நம்மைக் கூட்டிட்டுப் போறாங்கன்னு நெனைக்கிறேன்.

ஆமா... இது அரண்மனைக்குப் போற பாதைதான்!"

பாதை வளைந்து நெளிந்து மேலேறியது.

"பவுர்ணமி வெளிச்சம் இருக்கிறதால... கொஞ்சமாச்சும் கண்ணு தெரியுது... இல்லேன்னா கும்மிருட்டுலே புதர்லே பாறையில முட்டிக்கிட்டு திண்டாட வேண்டியதுதான்...

ரதி! என்ன அதிசயம் பாரேன்? அந்த மணிமேகலா தெய்வம் நடந்து போற பாதையில... அவங்க மேல யாரோ பளீர்ன்னு ஃபோகஸ் லைட்டைப் போட்டாப்பல வெளிச்சம் தெரியுதே?"

"தெய்வங்களுக்கும் சித்தர்களுக்கும் இந்த மாதிரி அலாதியா வெளிச்சம் இருக்கும். சில சமயங்கள்லே தலைக்குப் பின்னாடி ஒரு ஒளி வட்டம் இருக்கும்னு... பாட்டி அடிக்கடி சொல்லியிருக்காங்க மதன்!"

சில இடங்களில் பாதை செங்குத்தாக இருந்ததால் மதன், ரதியின் கையைப் பிடித்துத் தூக்கி உதவ வேண்டிய தாயிருந்தது.

'தஸ் புஸ்' என்று மூச்சிரைத்தாலும்... கொஞ்சம்கூட சோர்வடையாமல் வைராக்கியமாய் கீழுதட்டை அழுந்தக் கடித்தபடி மலைப் பாதையில் ஏறி வந்தவளைப் பார்க்க... மதனுக்கு மிகவும் பாவமாயிருந்தது.

கோட்டை அரண்மனை வாசலை நெருங்கியதும்... மணிமேகலா தெய்வம் மாயமாய் மறைந்து விட்டது.

"என்னது இது? அவங்களைக் காணோமே?" மதன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

மினி டார்ச்சை உயிர்ப்பித்து சுழற்றிச் சுழற்றிப் பார்த்தான்.



"மதன்! ஏதோ டங்கு டங்குனு இடிக்கிற சத்தம் மாதிரி வருதுல்ல? விட்டு விட்டு வருது மதன்!"

"ஆ...மா! அரண்மனைக்குள்ளே இருந்துதான் வருது போலிருக்கு... ரதி! யாரோ ஆட்கள் உள்ளே புகுந்திருக்காங்கன்னு தோணுது...!

அப்படின்னா... மணிமேகலா தெய்வமும் உள்ளே தான் போயிருக்கணும்... காலடிச் சப்தம் கேட்காம மெதுவா நாம்ப போகணும்...

மறைஞ்சிருந்து என்ன நடக்குதுன்னு கவனிப்போம். அதான்... நமக்கு நல்லது. ஜாக்கிரதை ரதி!" அடிக்குரலில் எச்சரித்துவிட்டு டார்ச்சை அணைத்து பாக்கெட்டில் பத்திரப்படுத்திவிட்டு... ரதியின் கையை இறுகப் பிடித்தபடி இருளில் மறைந்து மறைந்து கோட்டை அரண்மனைக்குள் நுழைந்தான்.

ஒவ்வொரு அறைக்குள்ளும் புகுந்து மறைந்து... சத்தம் வந்த திசை நோக்கி மெல்ல மெல்ல முன்னேற வேண்டியதாயிருந்தது.

சில இடங்களில் சுவற்றோடு பல்லி போல் ஒட்டிக்கொண்டு மெல்ல நகர்ந்து நகர்ந்து சென்றனர்.

"ரதி! அந்தப்புரத்துல அழகான குளத்துக்குப் பக்கத்துலேதானே... இளவரசியோட தங்க, வைர நகை எல்லாம் உடமைகளைப் புதைச்சதா... ஐயா சொன்னாரு...

இப்போ சப்தம் அங்கிருந்துதான் வர்ற மாதிரி தெரியுது. ஐயா ஏற்கனவே வந்து வழி காட்டினதாலேதான்... அதனால இருட்டுலகூட... சமாளிக்க முடியுது... இல்லேன்னா...

ரொம்பவும் திண்டாடியிருப்போம்... வா ரதி! இப்படியே நேரா போயி திரும்பணும்..

இ... இதோ... இந்தப் பெரிய தூணுக்குப் பின்னால ஒளிஞ்சு நின்னு கவனிக்கலாம்..."

இருவரும் பிரம்மாண்டமான தூணுக்குப் பின்புறம் மறைந்து கொண்டனர்..

"மதன்! நிலா வெளிச்சத்துல அந்தக் குளம் நல்லா தெரியுது.. அ... அதோ பக்கத்துல கடப்பாரையால யாரோ இடிக்கிறாங்களே...?" ரதி கிசுகிசுத்தாள்.

"மூணு பேரு இருக்காங்க... அந்த இடத்துலதான் விலை உயர்ந்த நகைங்க புதைக்கப்பட்டிருக்கு போலிருக்கு!

"இடிக்கிற இடத்துக்குப் பக்கத்தில ஒரு தூண் வேற இருக்கிறதால... மொத்தம் மூணு பேர்தானா? இல்லை... மூணுக்கும் மேற்பட்டவங்க இருக்காங்களான்னு நமக்கு சரியாத் தெரிய மாட்டேங்குது...!"

"ஆமாமா... அந்தத் தூண் மறைக்கிறதால தெளிவா எத்தனை பேரு இருக்காங்கன்னு அனுமானிக்க முடியலை!

திடீரென்று அண்டசராசரங்கள் நடுங்கும்வண்ணம் பயங்கர இடிச்சத்தம் கேட்டது.

கூடவே கலகலவென்று யாரோ இளம்பெண் சிரிக்கும் சப்தமும் கேட்கவே...

மதன் அவளைத் தன் தோளோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான்.



# 19

"ரதி! பயப்படாதே டார்லிங்... நானிருக்கேன் உனக்கு! தைரியமா இரு... ஐயா சொன்ன மாதிரி மனசைத் திடமா வச்சுக்கோ... துணிவுதான் நமக்குத் துணை! சரியா?" என்றபடி அவளது முதுகையும் கூந்தலையும் ஆதுரமாய் நீவி விட்டான்.

இருவருமே விழிகளை இறுக மூடியபடி அணைப்பில் கட்டுண்டு கிடந்தனர்.

சிரிப்புச் சத்தத்தின் ஊடே... செங்கல்லும் மண்ணும் பொலபொலவென்று எங்கிருந்தோ உயரத்திலிருந்து விழுவது போன்ற ஓசையும் கேட்ட வண்ணம் இருந்தது.

ரதி, மதனின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால் அவனோ விடாப்பிடியாய் அவளை இறுக அணைத்துக் கொண்டிருந்தான்.

சிரிப்புச் சத்தமும் மற்ற ஓசையும் அடங்கியதும்தான் அவளை மெல்ல விடுவித்தான்...!

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு தூணின் மறைவிலிருந்து எட்டிப் பார்த்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி...

"மை காட்! நாம்ப இடிச் சத்தம்னு நெனைச்சோமே? அது தப்பு ரதி! இடி இடிக்கலை... அந்தப் பெரிய பிரம்மாண்டமான தூண்தான் திடீர்னு பலத்த ஓசையோட இடிஞ்சு விழுந்திருக்கு...."

"ஓ... அதான்... செங்கல்லும் மண்ணும் பொல பொலன்னு உதிர்ந்தாப்பல வேற சப்தம் வந்துச்சே? இதனாலதான் போலிருக்கு மதன்!

ஆமா... அந்த நகைங்களைத் தோண்டி எடுக்க முயற்சி செஞ்சுட்டிருந்தாங்களே! அவங்க எங்கே?"

"ஒரே நிசப்தமா இருக்கே? ரதி! தூண் அவங்க மேலதான் இடிஞ்சு விழுந்திருக்கணும். சத்தத்தையே காணோமே? கண்டிப்பா மூணு பேரும் க்ளோஸ் ஆயிருப் பாங்க ரதி!"

இருவரும் கைகளைக் கோர்த்தபடி அந்த இடத்தை நோக்கி ஓடினர்.

அந்தப் பிரம்மாண்ட தூண் இடிந்து விழுந்ததில் மூவருமே மாண்டு போயிருந்தனர்.

"ரதி! வழக்கம்போல கெட்ட நோக்கத்தோட வந்தவங்களை மணிமேகலா தெய்வம் அசுரவதை பண்ணி முடிச்சுடுச்சு...!"

"அசுரவதையை முடிச்ச திருப்தியிலதான்... அவங்க கலகலன்னு சிரிச்சிருக்காங்க போல..."

"இந்தக் காட்சியை நாம்ப நேரடியா பார்க்கணும்னு தான்... மறைமுகமாக அழைப்பு விடுத்து இங்கேயே கூட்டிட்டு வந்தாங்க போலிருக்கு...!"

"இன்னும் ஒரே ஒரு விஷயம் பாக்கியிருக்கு மதன்!"

"ஆமா... வா கிளம்பலாம். காலதாமதப்படுத்தாம மலையை விட்டு இறங்கி சிவதுருவாசர் தவம் செய்யற குகைக்குப் போகணும்.



துருவாசரோட தரிசனம் கிடைக்குதான்னு பார்க்கணும். அவர் சொர்ண புஷ்பங்களாலே சுயம்புலிங்கத்தை அர்ச்சித்துப் பூஜிக்கிறது உண்மையான்னு பார்த்துட்டா... நாம வந்த வேலை முழுவதுமா முடிஞ்சுடும் ரதி!"

டார்ச் லைட்டை உயிர்ப்பித்தபடியே வந்த வழியே வேகமாய்த் திரும்பினர்.

அடுத்த அரை மணி நேரத்தில்.. அந்தக் குகையை வந்தடைந்தனர்.

குகையின் வாயிலில் படுத்து ஊர்ந்து உள்ளே சென்றபோது... 'ஓம் நமச்சிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரம் ஒலிக்கும் ஓசை கேட்டது.

இருளில் உற்றுப் பார்த்தபோது... ஈசானிய மூலையில் சிறு அகல் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது தெரிந்தது.

அதன் அருகே... ஒரு அடி அளவே உள்ள சுயம்பு லிங்கம்! அதனடியில்... சம்பங்கிப் பூவின் அளவில்... அதே வடிவில் ஆனால் தங்கத்தால் செய்யப்பட்ட புஷ்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

"மதன்! ஸ்வர்ண புஷ்பங்களாலே அர்ச்சனை நடந்திருக்கு. இதோ... இந்தப் பக்கமா முதுகு காட்டி உட்கார்ந்திருக்காரே இவர்தான் துருவாசர் போலிருக்கு...!"

பத்மாசனமிட்டு தியானத்தில் நிமிர்ந்து அமர்ந்திருந் தவரின் முதுகையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந் தனர்.

"துருவாசருக்கு அதீதமா கோபம் வரும்னு புராணங் களிலே படிச்சிருக்கேன். நாம பாட்டுக்கு குகைக்குள்ளே நுழைஞ்சுட்டோம். கோபப்பட்டு சபிச்சுட்டா... என்ன பண்றது?"

"இல்லை மதன்! கண்டிப்பா சாபம் விட மாட்டாங்க... எங்கேயோ சென்னையில இருக்கிற உங்களுக்கு நேர்லே காட்சி கொடுத்து காப்பாத்தி... மறைமுகமா இங்க வரவழைச்சிருக்காங்களே...?

அப்படி வரவழைச்சுட்டு... சபிப்பாரா? கண்டிப்பாக சபிக்க மாட்டாரு... புராணங்கள்லேயும் இதிகாசங்கள்லேயும் சொல்லப்பட்ட துருவாச முனிவர் இவர்!

நாம்ப எவ்ளோ பெரிய பாக்கியசாலிகள்! நிஜமாலே நாம்ப ரொம்பவே கொடுத்து வைச்சிருக்கோம் மதன்!" கிசுகிசுப்பாய்ப் பேசினாள் ரதி.

"துருவாசர் அசையறாரு... தியானத்தை முடிச்சுட்டாரு போல...."

அவர் சட்டென்று திரும்பிப் பார்த்ததும்... இருவருக்குமே தூக்கி வாரிப் போட்டது.

"நீங்... நீங்... நீங்களா ஐயா?" மதன் உளறிக் கொட்டினான்.

ரதி ஏற்கெனவே எதிர்பார்த்ததுபோல்... ருத்ரமூர்த்தி சித்தர் மட்டுமல்ல... அதையும் தாண்டி சிவதுருவாசரே அவர்தான்! என்று அறிந்தபோது... மெய்சிலிர்த்துப் போனாள்.

'சித்தர்னு புரிஞ்சுகிட்டேன்... ஆனா... நீங்க புராணங்கள்லே வந்த துருவாசரா இருப்பீங்கன்னு கொஞ்சமும் எதிர்பார்க்கலை ஸ்வாமி!

உமக்கு அனந்தகோடி நமஸ்காரம்!' என்று மனதிற்குள் பேசிக் கொண்டாள்.



"ரதி! ருத்ரமூர்த்தி ஐயாதான் அன்னிக்கு எங்கப்பா ரூபத்துல வந்திருக்காருன்னு... இப்ப எனக்குத் தோணுது. சித்தரும் இவர்தான்... துருவாசரும் இவருதான்... என்ன சமசன்னு ஸ்தம்பிச்சுப் போய் நிக்கிறே... வா! ஆசீர்வாதம் வாங்கிக்கலாம்."

இருவரும் ஜோடியாய்ப் பணிந்தனர். இருவரையும் சிரம் தொட்டு ஆசிர்வதித்தவர்... சட்டென்று குகையின் வாயிலைப் பார்த்தார்.

"ரெண்டு பேருமே சீக்கிரமா போயிடுங்க... இன்னும் சில கணத்துல ஸ்வர்ண புஷ்பங்களை அபகரிக்க சிலர் வரப் போறாங்க... அவங்களுக்குத் தக்க தண்டனை காத்திருக்கு... வாங்க போயிடலாம்."

படுத்து ஊர்ந்து குகையை விட்டு வெளியில் வந்ததும் தனது கமண்டலத்தில் இருந்த தீர்த்தத்தைக் குகையின் வாயிலில் தெளித்துவிட்டு... விடுவிடுவென்று நடந்தார் ருத்ரமூர்த்தி.

சற்று தூரம் நடந்ததும்... ஒரு ஆலமரத்தடியில் இருந்த மேடையில் ருத்ரமூர்த்தி ஒரு காலைத் தொங்கப் போட்டபடி அமர்ந்தார்.

அவர் அமர்ந்த கோலத்தைப் பார்த்தபோது... அப்படியே, தட்சிணாமூர்த்தியாக... குரு பகவானாக... ஆதி சிவனாக... காட்சி அளித்ததைப் போலிருந்தது.

"ஐயா! என்னை மறைமுகமா இங்கே வரப் பண்ணியிருக்கீங்க... தினச்சுடர்லே... நான் இங்கே பார்த்து தெரிஞ்சுகிட்டதை எழுதலாமா? எழுதினாலதான்... கெட்ட நோக்கத்தோட இங்கே வர்றதுக்கு யாரும் பயப்படுவாங்க...!

மத்தவங்களுக்கு நேர்ந்த கதியைப் படிச்சா... கண்டிப்பா தப்பு செய்யப் பயப்படுவாங்க...!"

"உன் இஷ்டம் மதன்!"

"ஐயா... சாரி... ஸ்வாமி! என்னிக்கும் எங்களுக்கு உங்க அனுக்கிரகமும் அருளும் அன்பும் வேணும். இதான் உங்ககிட்டே நாங்க கேட்கிற வரம்!" கைகூப்பினாள் ரதி.

"அந்த வரத்தை ஏற்கெனவே நீ வாங்கிட்டியேம்மா... போயிட்டு வாங்க!"

இருவரும் அவரை வணங்கி எழுந்தபோது... அவரது தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் ஒளிர்ந்ததைக் காண முடிந்தது.

மறுநாள் காலையில் வேனில் பயணித்தபோது...

மதன் மும்முரமாய் டைரியில் எழுதிக் கொண்டிருந்தான்.

"சித்தர்கள் என்றாலே மாயாவிகள் என்றும் பித்துப் பிடித்தவர்களைப் போல மனம் போன போக்கில் திரிபவர்கள் என்றும் பலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

சித்தர்கள் சிவபெருமானால் இந்த உலகிற்கு அனுப்பப் பட்டவர்கள். சிவபெருமானே ஆதி சித்தன் என்றுதான் அழைக்கப்படுகிறார்.

இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்லும் உண்மைகளைக் கேட்டு பிரமிக்கிறோம். ஆனால் அதே உண்மைகளை என்றைக்கோ சித்தர்கள் சொல்லிவிட்டுச் சென்றதை மறந்து விட்டோம்.



நமது யோகக் கலையையும் தியானக் கோட்பாடு களையும் கண்டு உலகமே வியந்து கொண்டிருக்கிறது. அவற்றை இந்த உலகிற்குத் தந்த சித்தர்களை... அவர்களின் அருமையை நாம் உணரத் தவறி விட்டோம்..." வாய் விட்டுச் சொல்லியபடியே எழுதிக் கொண்டிருந்த மதனின் புஜத்தில் கை வைத்தாள் ரதி.

"துருவாசரும், மணிமேகலா தெய்வமும் இன்னமும் கண்ணுக்குள்ளேயே நிற்கிற மாதிரி இருக்கு மதன்! நாம அடிக்கடி வந்து அவங்களைத் தரிசிக்கணும் மதன்!"

"கண்டிப்பா... நம்ம குழந்தைகளுக்கு மணிமேகலா, சுந்தரமூர்த்தின்னு நான் பேர் வைச்சுட்டேன்...!"

"இன்னும் கல்யாணமே ஆகலை.. பேர் வைச்சாச்சா? அதுவும் ரெண்டு குழந்தைகளா? சரிதான் போங்க..." கலகலவென்று சிரித்த ரதியின் தலையில் செல்லமாய்க் குட்டு வைத்தான் மதன்.

# எங்கே என் ஜீவனே...?

## 1

**நே**த்ராவுக்கு, இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை. கவலை, அவளது மனதை செல்லாய் அரித்துக் கொண்டே இருந்தது.

புரண்டு புரண்டு படித்தபடி சிந்தித்துக் கொண்டேயிருந்தாள். 'நாளைக்கு நரேந்திரன் வெளிநாட்டிலிருந்து வந்துவிடுவாரே? அவர் வரப்போகும் சந்தோஷம் கூட மனதில் ஒட்ட மறுக்கிறதே? இதற்கு யார் காரணம்?'

அப்பா தசரதன், நேற்று இரவு வீடு திரும்பவில்லை. சென்னையை அடுத்த குன்றத்தூர் அரசு பொது



மருத்துவமனையில் தலைமை மருத்துவராக அவர் பணியாற்றி வந்தார்.

சுற்றுவட்டாரத்தில் 'கைராசியான டாக்டர்' என்று பெயர் எடுத்தவர். தனது வீட்டின் முன் பகுதியைத் தடுத்து சிறு கிளினிக் ஒன்றும் நடத்தி வருபவர்.

நேத்ராவை கண்ணுக்குக் கண்ணாகப் பாசமாய் பார்த்துக் கொள்வார் தசரதன்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தான்... நேத்ராவின் தாய் தவமணி இறந்து விட்டிருந்தாள்.

தாயை இழந்த துக்கம் தெரியாதவண்ணம்... பாசமழை பொழிந்து, நேத்ராவுக்கு தாயுமானவராய் நடந்து வருபவர்.

தெய்வ பக்தி மிகுந்தவர். சதா அவரது நெற்றியில் விபூதி துலங்கிக் கொண்டிருக்கும்.

ஓய்வு கிடைக்கும் நேரத்தில் தியானம், யோகாசனம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்.

திருமூலர் எழுதிய திருமந்திரத்தை அவ்வப்போது எடுத்து வாசித்துக் கொண்டேயிருப்பவர்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள, 'சுருளி'க்கும் 'மருந்துமலை'க்கும் சென்று வருபவர்.

சுருளி அருவியில் குளித்துவிட்டு சுருளி ஆண்டவரை தரிசித்துவிட்ட கையோடு மருந்துமலையில் உள்ள பஞ்சலிங்கத்தை கண் குளிர சேவித்தால்... அவருக்கு அலாதி திருப்தி, நிம்மதி!

அந்த மூன்று நாட்களுக்கு மகளைத் தனியே விட்டு செல்வதற்கு முன்... அவரது மனம் படாத பாடுபடும்.

"அம்மாடி! பக்கத்து வீட்டுப் பாட்டிம்மாகிட்டே சொல்லிட்டுப் போறேன். வயசுப் பொண்ணை இப்படித் தனியே விட்டுட்டுப் போறது... தப்புதான்! ஆனா... மூணு மாசத்துக்கொரு வாட்டி அங்கே போயிட்டு வந்தாத்தான் மனசுக்குத் தெம்பா இருக்கு. ஏதோ ரீசார்ஜ் ஏத்திக்கிட்ட மாதிரி புத்துணர்ச்சியா இருக்கு..." என்று தயங்கி நிறுத்துவார்.

"அடுத்தவங்களுக்கு நம்மால முடிஞ்ச மட்டும் உதவி செய்யணும். உபத்திரவம் பண்ணக்கூடாதுன்னு நீங்கதானே சொல்வீங்க? பாட்டிக்கு எதுக்குப்பா சிரமம்?

எனக்கு ஒரு பயமும் இல்லேப்பா.. இது நீங்க பார்த்துப் பார்த்துக் கட்டின அழகான வீடு... பந்தோபஸ்தான வீடு! பின்னால அவுட் ஹவுஸிலே தோட்டக்காரரு தங்கியிருக்காரு. ஒரு குரல் கொடுத்தா ஓடி வரப் போறாரு. எல்லாத்துக்கும் மேல... ஜிம்மி இருக்குப்பா... ஒரு சின்ன சிட்டுக்குருவிகூட நம்ம காம்பவுண்ட் கேட் மேல உட்கார முடியாது. இந்தத் தெருவே அதிரும்படியா குலைச்சுடும் உங்களுக்குத் தெரியுமே?

எனக்குத் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் ஊட்டி வளர்த்திருக்கீங்க... நான் இப்போ சின்னப் பொண்ணு இல்லேப்பா... எம்.பி.பி.எஸ். முடிச்ச டாக்டர்! ஒரு [illegible] தனியார் மருத்துவமனையில வேலைக்குச் சேர்ந்திருக்கேன் என்னைப் பத்தின கவலையை விட்டுட்டு நிம்மதியா போயிட்டு வாங்கப்பா.." என்று சென்ற முறை தசரதனுக்கு தைரியம் கூறி அனுப்பி வைத்திருந்தாள்.



கடந்த முறை அவர் திரும்பி வந்தபோது... "அம்மாடி நேத்ரா! இந்த வாட்டி எனக்குத் திரும்ப வர்றதுக்கே மனசில்லைம்மா... நிறைய சுவாரஸியமான விஷயங்களைப் பத்தி நான் கேள்விப்பட்டேன். நேரடியா ஒரு அற்புதத்தை நான் கண்ணால பார்த்துட்டேன். வாட் எ மிராக்கிள்!" என்றார் தசரதன்.

"ஊருக்குத் திரும்பி வர்றதுக்கே மனசில்லைன்னு சொல்றீங்களேப்பா? நிச்சயமா ரொம்ப அற்புதமான நிகழ்ச்சி... உங்க மனசைத் தொட்டிருக்கு... என்ன விஷயம்னு நான் தெரிஞ்சுக்கலாமா அப்பா?" ஆர்வமாய் கேட்டாள் நேத்ரா.

"கண்டிப்பா... நீ இதை அவசியம் தெரிஞ்சுக்கணும்டா... சுருளி மலை ஒரு புண்ணிய பூமின்னு உனக்குச் சொல்லியிருக்கேன் இல்லையா?"

"ஆமாப்பா... சித்தர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் தவம் செய்த ஸ்தலம்னு சொல்லியிருக்கீங்க... கைலாச குகை, விபூதி குகைன்னு... சித்தர்கள் தவம் செய்த குகைகள் நிறைய இருக்குன்னு சொல்லியிருக்கீங்க..."

இன்றைக்கும் நிறைய சந்நியாசிகள் அங்கே தவம் செய்துட்டு வர்றதா சொன்னீங்களேப்பா?"

"அது மட்டுமில்ல... அற்புதமான மூலிகைச் செடிங்க அங்க நிறையவே இருக்கு... சுருளி மலையிலும் அதை [illegible] மருந்து மலையிலும் அரிய வகை மூலிகைகள் நிறையவே இருக்காம் நேத்ரா! நோய் தீர்க்கக்கூடிய மூலிகைகள் நிறைஞ்சிருக்கிறதால... 'மருந்து' மலைன்னு பேர் உண்டாயிடுச்சாம். உன்னை நரேந்திரன் கையில

ஒப்படைச்சுட்டா... உங்க ரெண்டு பேத்தையும் மாலையும் கழுத்துமாப் பார்த்துட்டா... நான் நிம்மதியா மருந்து மலையிலேயே பஞ்சலிங்கத்தை சதா தரிசனம் பண்ணிக் கிட்டு அங்கேயே மடத்துல தங்கிடலாம்னு இருக்கேன்... இப்பக்கூட கடமைக்காக... அதாவது உன்னைக் கரை யேத்தணும்கிற கடமைக்காகத் தான் திரும்ப வந்திருக்கேன்..."

"அப்பா! என்னப்பா இப்படிச் சொல்றீங்க? அடிக்கடி நீங்க அங்க போவீங்க... மூணு நாள் கழிச்சு திரும்பி வரும்போது புத்துணர்ச்சியோடு திருப்தியா வந்து இறங்குவீங்களேப்பா? இந்த வாட்டி என்னாச்சு? இன்னமும் நீங்க ரிட்டையர்டு ஆகலை... உன்னதமான டாக்டர் தொழிலையும் உயிரா நினைக்கிற பொண்ணையும் விட்டுட்டு... அங்கேயே தங்கிடணும்னு முடிவு பண்ற அளவுக்கு... அங்க என்னப்பா நடந்துச்சு?"

"மருந்து மலையில பஞ்சலிங்கத்தை தரிசனம் பண்றதுக்காக போறப்போ... அடிக்கடி சிவகுருங்கிற வைத்தியரைப் பார்த்திருக்கேன். பரஸ்பரம் அறிமுகம் ஆகி எங்களுக்குள்ளே ஒரு நட்பே உருவாயிடுச்சுன்னு வச்சுக்கோயேன்..."

"அந்த வைத்தியர் உங்களை மாதிரி பஞ்சலிங்க தரிசனத்துக்காக அவ்வப்போது வந்து போறவரா அப்பா?"

"நோ... நோ! அவர் அங்கேயே தங்கியிருக்காரு... பஞ்சலிங்கங்கிறது திறந்த வெளிக் கோவில் தான். மலை உச்சியில இருக்கு. இவரு மலையடிவாரத்துல ஒரு பர்ணசாலை போட்டு தங்கி மூலிகை வைத்தியம் பண்ணிட்டிருக்காரும்மா... தீராத வியாதிகளை எல்லாம்



தீர்த்து வச்சுட்டிருக்காருன்னு... பல பேர் சொன்னாங்க. அவரைத் தேடி நிறைய ஜனங்க நம்பிக்கையோடு வந்துட்டிருக்காங்க...

போன வாட்டி நான் அவரோட குடிலுக்கு போனப்போ... ஒரு குஷ்ட ரோகியைப் பார்த்தேன். மூலிகை இலைங்களை விழுதா அரைச்சு அவனோட உடம்பெல்லாம் பூசியிருந்தாங்க. அவன் சோர்வா திண்ணையில படுத்துக் கிடந்தான்.

"இப்படி மோசமா அங்க ஹீனமடைஞ்சவனை... மூலிகை வைத்தியத்தால குணப்படுத்த முடியுமா?'ன்னு... நான் சந்தேகமா கேட்டேன். 'மூலிகைகளாலே குணப்படுத்த முடியாத வியாதி... இந்த உலகத்துல இல்லைன்னு சொல்லலாம் நீங்க அடுத்த வாட்டி வரும் போது அவனைப் பாருங்க... அப்படியே அசந்து போவீங்க'ன்னு சிவகுரு சிரிச்சபடி சொன்னாரு.

இந்த வாட்டி நான் மருந்து மலைக்குப் போனப்போ... தரிசனம் முடிச்சுட்டு அவரோட குடிலுக்குப் போனேன். சிவகுரு தியானத்துல இருந்தாரு. உதவியாளர் ஒருத்தன் சட்ட வடிவக் கல்லுல ஏதோ மூலிகைகளை அரைச்சுட் டிருந்தான். காட்ல புஷ்பங்களை மூங்கில் கூடையில பறிச்சுட்டு வந்து ஒரு இளைஞன் வாழை நார்லே வேக வேகமா மாலையா தொடுத்துட்டிருந்தான். அவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே'ன்னு நான் யோசிச் சுட்டிருந்தேன். கொஞ்ச நேரத்துல... என்ன தசரதா? இவன் யாருன்னு அடையாளம் தெரியுதா? இல்லையா? குஷ்டரோகியா இருந்தவன், மூலிகையோட மகிமையாலே முழு மனுஷனாயிட்டான் பாத்தீங்களா?'ன்னு சிவகுரு

சிரிச்சுட்டே கேட்டாரு... நான் ஆச்சரியத்துல ஆடிப் போயிட்டேன். பச்சிலை மருந்தை அரைச்சுட்டிருந்த உதவியாள், "கால் சூம்பி பிறவி ஊனமா பிறந்த என்னை... சிவகுரு 'ஐயா தான் குணப்படுத்தினாரு... அதுக்கு அப்புறம் ஊருக்குத் திரும்பிப் போக மனசில்லாம... சேவகம் செய்யற பாக்கியத்தைக் கொடுங்கன்னு கேட்டுக்கிட்டு... இங்கேயே செட்டிலாயிட்டேன்'னு சொன்னான்.

"அ... அப்பா! கேட்கும்போதே மெய் சிலிர்க்குதே? நேரடியாவே பார்த்த உங்களுக்கு எப்படியிருந்திருக்கும்னு என்னால புரிஞ்சுக்க முடியுதுப்பா... என்னதான் இருந்தாலும் நீங்க நிரந்தரமா என்னை விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா... என்னால தாங்க முடியாது. அப்படிப் போறதா இருந்தா... என்னையும் கூடவே கூட்டிக்கிட்டுப் போயிடுங்கப்பா" அவரது கரத்தைப் பற்றிக்கொண்டு தழுதழுத்தாள் நேத்ரா.

"நேத்ரா! அழக்கூடாது. உன் கண்ணுல இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வந்தாக்கூட என்னால தாங்க முடியாதும்மா... இப்போதைக்கு இதைப் பத்தி நாம பேச வேணாம். சரியா?" என்று அப்பா தசரதன் அன்று பேசிய வார்த்தைகள்... திரும்பத் திரும்ப அவளது செவிகளில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

## 2

திகிலும் பயமும் போட்டி போட்டுக் கொண்டு நேத்ராவை ஆட்டிப் படைத்தன.

'முந்தாநாள் நடந்த சம்பவத்தைப் பார்த்தால்... அப்பா தசரதன் ஏதோவொரு சிக்கலில் மாட்டிக்கொண்டார் போலிருக்கிறதே?



அன்று... அப்பாவுடன் அரசு பொது மருத்துவமனையில் வேலை பார்க்கும் சக டாக்டர் வாசுதேவன் வீடு தேடி வந்தாரே?"

அதிகாலை நேரத்தில்கூட நேத்ராவுக்கு வியர்த்து வழிந்தது. அவளது நினைவலைகள் பின்னோக்கிச் சுழன்றன.

முந்தா நாள் காலையில்... அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த மணத் தக்காளி வத்தக் குழம்பில் பெருங்காயப் பவுடரைத் தூவி கரண்டியால் நன்கு கிளறி விட்டு, பாத்திரத்தை இறக்கி வைத்தபோது... தலையில் முண்டாசு கட்டியபடி தோட்டத்திலிருந்த பிஞ்சுக் கத்தரிக் காய்களை தன் கைகளாலேயே பறித்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் அடுக்களைக்குள் நுழைந்தார் தசரதன்.

"வத்தக் குழம்பு வாசனை கும்முனு இருக்கு நேத்ரா! உங்கம்மா மாதிரியே உனக்கும் நல்ல கைப் பக்குவம்டா... தொட்டுக்க என்ன வச்சிருக்கே?"

"கொத்தவரைக்காய் பருப்பு உசிலிப்பா... போங்கப்பா! காரசாரமான ருசியான சாப்பாட்டை அப்படியே ஒரு பிடி பிடிக்கிறவரு மாதிரியில்ல பேசறீங்க? சமீப காலமா உப்பு உறைப்பு எதுவுமில்லாம வெறும் தயிர் சாதத்தை ரெண்டு நேரம் சாப்பிட்டு எந்திரிச்சுடறீங்க... வர வர முற்றும் துறந்த முனிவர் மாதிரி ஆயிட்டீங்கப்பா..."

"ஊகூம்! அப்படியெல்லாம் சொல்லாதம்மா... நான் முற்றும் துறந்திருந்தா... வீட்டுக்குத் திரும்ப வந்திருக்கவே மாட்டேனே? மலையிலேயே தங்கியிருப்பேனே? சரி... கண்ணு! உனக்கு எண்ணெய் கத்தரிக்காய் வதக்கல்னா ரொம்பவும் பிடிக்குமே? நான் செய்துடறேன்."

"எதுக்குப்பா உங்களுக்கு சிரமம்? உங்களுக்கும் எனக்கும் சேர்ந்தாப்பல 'ட்யூட்டி' இல்லன்னா... உடனே நளபாகம் பண்றேன்'னு அடுக்களைக்குள்ளே நுழைஞ்சிடறீங்களேப்பா? தோட்டக்காரருக்கு குரல் கொடுத்தா... தோட்டத்திலேர்ந்து காய்களைப் பறிச்சுட்டு வந்துடமாட்டாரா? அதையும் நீங்களே பறிச்சுட்டு வர்றீங்களே?" ஆதங்கப்பட்டாள் நேத்ரா.

"என் கையால சமைச்சதை நீ ருசிச்சு சாப்பிடும் போது... மனசுக்கு எவ்ளோ திருப்தியா இருக்கு தெரியுமா? என் மனசு உனக்கு எங்க புரியுது?

நீதான்... 'என் டிபார்ட்மெண்ட்டுக்குள்ளே அநாவசியமா நுழையாதீங்கப்பா'ன்னு கண்டிஷன் போட்டுடறியே! தோட்டத்துச் செடியிலேர்ந்து நம்ம கையாலேயே காய்களை பறிச்சுட்டு வர்றதிலே... ஒரு அலாதி சுகம் இருக்கு. அதான்..."

"இப்படி சொன்னா எப்படிப்பா? எல்லாத்துக்கும் ஒரு காரணத்தைச் சொல்லி என் வாயை அடைச்சுடறீங்களேப்பா?" செல்லமாய் சிணுங்கியபடி அப்பாவை ஏறிட்டாள்.

"உள்ளதைத் தானே சொல்றேன்? நீ மட்டும் என்னவாம்? அதிகாலையில எந்திரிச்சு பூஜைக்கேத்த புஷ்பங்களை உன் கையாலேயே பறிச்சு மாலையாத் தொடுத்து சுவாமிக்கு, ஏம்மா மெனக்கெடறேன்னு நான் கேட்டா,

'மனசுக்கு நிம்மதியாவும் நாள் முழுக்க புத்துணர்ச்சியாவும் இருக்கு'ன்னு நீ சொல்றேயில்ல... அது மாதிரிதான் இதுவும்..." அப்பா இதமாய் முறுவலித்தார்.



நேத்ரா ஏதோ பேச வாயெடுக்கும் முன்... வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. சட்டென்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

"அப்பா! உங்க கொலீக் வாசுதேவன் சார் வர்றாருப்பா..."

"வாசுதேவனா? என்னத்துக்கு திடுதிப்புன்னு வீடு தேடி வந்திருக்கான்'னு தெரியலையே?..." யோசனையுடன் புருவங்கள் நெரிய, முன்னறைக்கு விரைந்தார் தசரதன்.

பழச்சாறு நிறைந்த டம்ளர்களை ட்ரேயில் வைத்து எடுத்துக்கொண்டு, மரியாதை நிமித்தமாக "வாங்க... நல்லா இருக்கீங்களா அங்கிள்?" என்று இரண்டு வார்த்தைகளை உதிர்த்துவிட்டு மீண்டும் அடுக்களைக்குள் அடைக்கலமானாள் நேத்ரா.

அப்பா தசரதனுக்கு நெருங்கின நண்பர்கள் யாரும் கிடையாது. தான் உண்டு தன் வேலையுண்டு என்று ஒரு வட்டத்துக்குள் வாழும் வழக்கமுடையவர்.

என்றைக்காவது அரிதாக யாராவது அவரைத் தேடி வந்தால்... முகமன் கூறி வரவேற்றுவிட்டு நாசூக்காக தன் அறைக்குள் புகுந்துகொள்வாள் நேத்ரா.

அந்த நபர் விடைபெற்றுச் சென்றபின்... அப்பாவிடமிருந்து அழைப்பு வந்தால்தான்... அறையை விட்டு வெளியே வருவாள்.

இன்றும் அப்படித்தான்... ஈரத்துணியால் அடுப்பு மேடையை மெல்லத் துடைத்துக் கொண்டிருந்தவள்... காரசாரமான விவாதத்தால் அதீத சப்தம் வரவே... அடுக்களை வாசலருகே வந்து நின்று செவிமடுத்தாள்.

"என்ன, தசரதன் நீ? புரிஞ்சுக்காம பேசறியே? 'மருந்துமலை' 'சுருளி மலையைப் பத்தி பேசினாலே... பாவம்கிற மாதிரி பயந்து சாகறியே? நேத்து நைட்டுல டி.வி. பார்த்திருந்தா... இப்படிப் பேசியிருக்க மாட்டே' வாசுதேவனின் குரலில் எரிச்சலும் ஏமாற்றமும் ததும்பி வழிந்தன.

"மருந்துமலைக்கும் டி.வி.க்கும் என்ன சம்பந்தம்? டி.வி.யில செய்திகளை மட்டும் நான் பார்க்கிறது வழக்கம்."

"அதனால தான் உனக்கு விஷயமே தெரியலை... பிரபல தனியார் தொலைக்காட்சியில நிஜம் நிகழ்ச்சியில மருந்து மலையில நடக்கிற அதிசயங்களைப் பத்தி காட்டினாங்க தெரியுமா?"

தீராத வியாதிகளைத் தீர்க்கிற மூலிகைகள் நிறைஞ்சிருக்கிற அதிசய மலையாமே அது?

சிவகுருங்கிற வைத்தியரைப் பத்தியும் நிறையவே சொன்னாங்க... டி.வி நிருபர்களைப் பார்க்க விருப்பம் இல்லைன்னு சொல்லி... பர்ணசாலையை விட்டு வெளியே வர மறுத்துட்டாராம்.

இன்னொரு அற்புதமான விஷயத்தைப் பத்தியும் டி.வி.யில சொன்னாங்க. கேட்கவே ரொம்ப அதிசயமா இருந்துச்சு. நீ அடிக்கடி மருந்துமலைக்குப் போய் வர்றவனாச்சே? இந்த விஷயத்தைப் பத்தி ஏன் என்கிட்டே மூச்சே விடலை?"

"மருந்து மலையில நிறைய அதிசயங்கள் நிகழ்ந்துட்டு இருக்கு. நீ எந்த அதிசயத்தைப் பத்தி இப்போ கேட்கறே?" கம்மிய குரலில் கேள்விக் கணையைத் தொடுத்தார் தசரதன்.



"யாரோ ஒரு தம்பதிகளாம்... பல வருஷங்களாகவே கணவன் மனைவியுமா பக்கத்துப் பக்கத்து குகைகள்லே தவமிருக்காங்களாமே? கிட்டத்தட்ட எண்பது வயசு முதியவரு... டி.வி.யில பேட்டி தர்றாரு. அவரு ரெண்டு தலைமுறையைப் பார்த்தவரு... அவர் சொன்னதைக் கேட்டதும் எனக்கு ரொம்பவே ஷாக்காயிடுச்சு."

"அந்தப் பெரியவரு அப்படி என்னதான் சொன்னாரு?" குழைந்த குரலில் கேட்டார் தசரதன்.

"அந்தத் துறவி தம்பதிகள் காயகல்பம் சாப்பிட்ட மாதிரி இன்னமும் அவ்ளோ இளமையா இருக்காங்களாம்...

ஒவ்வொரு பௌர்ணமி அன்னிக்கும் அந்தம்மா பேரு கங்கையம்மனாம்... அவங்க மட்டும் பஞ்சலிங்கத்தை நடு ஜாமத்துல வந்து தரிசனம் பண்ணுவாங்களாம். சிவகுருங்கிற வைத்தியர்கிட்ட ரெண்டொரு வார்த்தை பேசுவாங்களாம்... நிறைய பக்தர்கள் வர்றாங்களாம்.

அதிர்ஷ்டம் உள்ளவங்களுக்கு மட்டும் கிட்டத்துல தரிசனம் கிடைக்குமாம். விபூதி பூசிவிட்டு உச்சந்தலையில கையை வைச்சு ஆசிர்வதிப்பாங்களாம்... மூலிகை தீர்த்தம் தருவாங்களாம்...

தீராத வியாதியெல்லாம் உடனே தீர்ந்துடுமாம். அவங்க தரிசனத்துக்காக நிறைய ஜனங்க தூரத்துல முண்டியடிச்சு காத்துக் கிடக்கிறாங்களாம்.

அந்தம்மா மனசு வச்சு... கூட்டத்துல இருக்கிற ஆளுங்களைப் பார்த்து ஏதாச்சும் பேர் சொல்லிக் கூப்பிடறாங்களாம். அந்தப் பேர் உள்ள நபருக்குத்தான் அந்த அரிய வாய்ப்பாம்...

அதுக்கு அப்புறம் கொஞ்ச நேரம்கூட நின்னு நிதானிக்காம... அந்த கங்கையம்மா மலையின் மறுபக்கமா கிடுகிடுன்னு இறங்கிடறாங்களாம்... இருட்டுல அந்தச் சரிவுல இறங்கறது இலேசுப்பட்ட விஷயம் இல்லையாம்...

அந்தம்மா தன்னோட குகைக்குள்ளே போனா... திரும்பவும் அடுத்த பவுர்ணமிக்குத்தான் வெளியே வர்றாங்களாம்.

வருஷத்துக்கு ஒரு வாட்டி சித்ரா பௌர்ணமி அன்னிக்குத் தான் தம்பதி சமேதரா பஞ்சலிங்க தரிசனத்துக்கு வருவாங்களாம்...

தசரதா! அந்த முதியவரு டி.வி.யில பேசப் பேச நான் வியப்போட விளிம்புக்கே போயிட்டேன். மூலிகையோட மகிமையால தான் அந்தத் தம்பதிகள் இளமையா இருக்காங்க... மரணத்தை ஒத்திப் போடக்கூடிய மூலிகையை அவங்க சாப்பிட்டிருப்பாங்கன்னு எனக்குத் தோணுது. இதைப் பத்தி ஏன் என்கிட்ட நீ சொல்லலை? நீ அடிக்கடி மருந்துமலைக்குப் போறவனாச்சே! நிச்சயமா நீ இதைப் பத்தி கேள்விப்பட்டிருப்பியே?"

"சொல்லணும்னு எனக்குத் தோணவே இல்லை. அதான் உண்மை! என் பொண்ணுகிட்டேயே நான் இதைச் சொல்லலை தெரியுமா? அவகிட்ட ஒரு சில விஷயங்களைச் சொல்லியிருக்கேன்.

மருந்து மலையும் சுருளிமலையும் சித்தர்கள் வாழுற பகுதி... தெய்வச் செயலாலே நடக்கிற அதிசயங்களையும் அற்புதங்களையும் வெளியில சொல்றதுக்கு எனக்கு மனசு வரலை. போதுமா?"



"அது சரி! நா விஷயத்துக்கு வர்றேன். தசரதா! நீ மனசு வச்சா... மருத்துவத் துறையில மிகப்பெரிய அளவுலே நாம்ப சாதிக்க முடியும். இந்த உலகமே நம்மை திருப்பிப் பார்த்து அதிசயிக்கிற அளவுக்கு நாம்ப 'அச்சீவ்' பண்ண முடியும்...?

'புரியலை வாசுதேவா! சுத்தி வளைக்காம நேரடியா விஷயத்துக்கு வாயேன்..." தசரதனின் குரலில் எரிச்சல் மண்டிக் கிடந்தது.

"நீ அடிக்கடி மருந்து மலைக்குப் போறதால... வைத்தியர் சிவகுருகிட்ட நீ நெருங்கிப் பழகிட்டு வர்றேன்னு... நீ ஏற்கனவே சொல்லியிருக்கே... சிவகுருவுக்கு எல்லா மூலிகைகளும் அத்துப்படி இல்லையா?

சிவகுரு மூலமா நாம்ப இளமையைக் கட்டிக் காக்கிறதுக்கும் மரணத்தைத் தள்ளிப் போடறதுக்கும் உரிய மூலிகைகளைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்..."

"தெரிஞ்சு என்ன பண்ணப் போறே? டி.வி.யில் பார்த்தேயில்ல? டி.வி.காரங்களைப் பார்க்க விருப்பம் இல்லைன்னு சொல்லி பர்ணசாலையை விட்டு சிவகுரு வரவே இல்லைன்னு சொன்னேயில்ல?

நீயும் நானும் போய் கேட்டா... மூலிகைகளைப் பத்தி விலாவாரியா சொல்லிடுவாரா? உனக்கே இது முட்டாள் தனமா படலையா வாசு?"

"இல்ல தசரதா! எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ மனசு வச்சா இது நடக்கும். உனக்காக அந்த சிவகுரு எதையும் செய்வாருன்னு... என் மனசுக்குப் படுது."

"இல்ல... எனக்கு இதுல சுத்தமா உடன்பாடு இல்ல. என்னால சிவகுருகிட்ட எதையும் கேட்க முடியாது. கேட்கவும் மாட்டேன்..."

தசரதனின் குரலில் உறுதியும் பிடிவாதமும் தொனித்தன.

"ஒரு நிமிஷம் நான் சொல்றதைக் கேளேன்... லாஸ் ஏஞ்சல்ஸ்லே இருக்கிற என் நண்பன் டாக்டர் டேவிட் கிட்டே இதைப் பத்தி நான் சொன்னேன்.

அந்தக் குறிப்பிட்ட மூலிகைகள் நம்ம கைக்குக் கிடைச்சா... அதை வச்சு நாம்ப கோடானுகோடி சம்பாதிக்கலாம்னு சொன்னான்.

இளமை குன்றாம இருக்கிறதுக்கும் மரணத்தைத் தள்ளிப் போடறதுக்கும் மருந்து கிடைச்சா... அது என்ன விலையா இருந்தாலும் கொட்டிக் கொடுக்க மக்கள் தயங்கவே மாட்டாங்கன்னு டேவிட் சொன்னான்.

இன்டர்நேஷனல் லெவல்லே புகழ், பணம், அந்தஸ்து கிடைக்குமே? யோசிச்சுப் பாரு தசரதா! உன் மகளுக்கு இன்னமும் கல்யாணம் ஆகலை... கல்யாணத்துல நீ அவளுக்கு கிலோ கணக்குல தங்க நகை பூட்டி அழகு பார்த்துடலாம். என்ன சொல்றே?"

"முக தாட்சணியத்துக்காகத் தான் இவ்ளோ நேரம் உட்கார்ந்து நீ கேட்கற கேள்விகளுக்கு பதில் சொல்லிட்டிருந்தேன்.

தயவு செய்து இதுக்கு மேல ஒரு வார்த்தைகூட பேசாம எந்திரிச்சு போயிட்டே இரு...



மூலிகைகள் நம்ம நாட்டோட பொக்கிஷம்! அதை வெளிநாட்டுல இருக்கிற உன் நண்பனோட சேர்ந்து காசு பணமாப் பார்க்கிறியே? இது அடுக்குமா?

மருந்துமலையில நடக்கிற அதிசயங்கள் எல்லாம் தெய்வச் செயல்...! சித்தர்களோட அருளாசியால நடக்குதுன்னு சொல்லிட்டிருக்கேன். முட்டாள்தனமா பேசிட்டிருக்கே?

கெட்ட எண்ணத்தோட மூலிகைகளைத் தேடி... அங்க போனா என்ன நடக்கும் தெரியுமா? அழிவு நிச்சயம் தான்.

'விநாச காலே விபரீத புத்தி'ன்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க? இத்தோட இந்த விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வச்சுடு வாசு!" உக்கிரமடைந்து கத்திவிட்டார் தசரதன்.

"நல்ல ஐடியா கொடுக்க வந்த நண்பனை... அவமானப்படுத்தி அனுப்பறே... நீ பேசினதுக்காக ரொம்பவும் வருத்தப்படப் போறே தசரதா!"

கோபத்தாலும் அவமானத்தாலும் கொந்தளித்துப் போய் உறுமிவிட்டு வெளியேறினார் வாசுதேவன்.

நேற்றிரவு வேலைக்குப் போன தசரதன் வீடு திரும்பவில்லை.

'டியூட்டி முடிந்து எட்டரைக்கு மணிக்கு 'டாண்' என்று வந்துவிடும் அப்பா... ஒன்பது மணியாகியும் இன்னமும் வரவில்லையே? அவரது செல்ஃபோனுக்கு முயற்சித்துப் பார்க்கலாமா?" என்று நேத்ரா யோசித்துக் கொண்டிருந்த வேளையில்... அவளது செல்ஃபோன் செல்லமாய் சிணுங்கியது.

அப்பாதான்!

"ஹலோ நேத்ரா! முக்கியமான விஷயமா நான் வெளியூர் போறேன்மா... திரும்பறதுக்கு கொஞ்ச நாளாகும்..."

"என்னப்பா திடீர்னு? எங்கேப்பா போறீங்க?"

"நான் திரும்பி வந்து சொல்றேன்மா... நீ பார்த்து பத்திரமா இருந்துக்கோ..."

மறுகணமே 'இணைப்பு' துண்டிக்கப்பட்டது.

நேத்ரா முயற்சித்த போது 'ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருக்கிறது' என்ற அறிவிப்பு தான் வந்தது.

"அப்பா ஒருக்காலும் இப்படி நடந்து கொள்ள மாட்டாரே? வாசுதேவனால் அப்பாவுக்கு ஏதாச்சும் ஆபத்து நேர்ந்துவிட்டதா?"

அப்பா ஒருவேளை கடத்தப்பட்டுவிட்டாரா?

விழிகளிலிருந்து வெப்ப நீரூற்று இடைவிடாமல் பொங்கியது.

## 3

**நே**ரம் நத்தையாக நகர்ந்து கொண்டிருந்தது. குளித்து முடித்து நேராக பூஜையறைக்குள் சென்று அமர்ந்தாள் நேத்ரா.

பத்து நிமிடங்கள் விழிகளை மூடி தியானம் செய்து விட்டு எழுந்த போது... மனம் ஒருநிலைப்பட்டிருந்தது.



'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...'

மேஜையிலிருந்த செல்ஃபோன் அவசரக் குரலில் அழைப்பு விடுத்ததும்... நான்கே எட்டில் ஓடிச் சென்று செல்ஃபோனை எடுத்தாள்.

திரையில் மின்னி மின்னி சிரித்த நம்பரைப் பார்த்தாள்.

நரேந்திரன்!

"ஹலோ நேத்ரா! உன் மேல ஏகப்பட்ட கோபத்துல இருக்கேன். விமான நிலையத்துக்கு நீ வருவேன்னு எவ்ளோ எதிர்பார்த்தேன் தெரியுமா? ஏன் வரலே?"

"சாரி! நரேன்... எ... என்னால வரமுடியல..."

"வர முடியலையா? உதைப்பேன் உன்னை... சே! மோசமான பொண்ணுப்பா நீ... நீயும் நானும் மனப்பூர்வமா விரும்பற காதலர்கள்... அந்த நெனப்பு இருக்கா உனக்கு? இல்ல... அதை மறந்துட்டியா?"

"நா... எதையும் மறக்கலை நரேன்" தழுதழுத்தாள் நேத்ரா.

"மறக்கலையா? பரவாயில்ல... என் திருப்திக்கு விலாவாரியா ஒரு வாட்டி ஞாபகப்படுத்திடறேனே? நாம ரெண்டு பேரும் ஒரே கல்லூரியில படிச்சோம். நீ எனக்கு ஜூனியர். படிப்புல நீயும் என்னைப் போலவே நம்பர் ஒண்ணா இருக்கிறதைப் பாத்துட்டு... மனசைப் பறிகொடுத்து... உன்கிட்ட வந்து 'ஐ லவ் யூ நேத்ரா'ன்னு சொன்னேன்.

'இந்தக் காதல் கத்தரிக்காய்லே எனக்கு நம்பிக்கை இல்ல... ஒவ்வொரு பொண்ணுக்கும் காதல்ங்கிற உணர்வு கல்யாணத்துக்கு அப்புறமா தன்னோட கணவன் கிட்டதான் வரணும்னு நெனைக்கிறவ நான்...

உங்க நேசம் நிஜமானதுன்னா... உங்க வீட்டு பெரியவங்களை அழைச்சுட்டு வந்து எங்கப்பா கிட்ட முறைப்படி பொண்ணு கேளுங்கன்னு கறாரா நீ சொல்லிட்டே...

படிப்பு முடிய இன்னமும் மூணு மாசந்தானே இருக்குன்னு எங்க வீட்டுலே பேசி பெரியவங்களை அழைச்சிட்டு வந்து பொண்ணு கேட்டோம்.

உங்கப்பாவும் கடைசியில சம்மதிச்சாரு. மேற்கொண்டு பாரினுக்குப் போய் எம்.எஸ். முடிச்சுட்டு வரணும்னு பிரியப்பட்டேன். படிப்பை முடிச்சுட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கலாம்னு... நீயும் நானும் தீர்மானிச்சோம்.

நம்ம ரெண்டு வீட்டுலேயும் ஒப்புத் தாம்பூலம் மாத்தி நிச்சயம் செய்துட்டாங்க... ஃபோன்லே நான்தான் காதலை உரம் போட்டு வளர்த்துட்டு வந்தேன்.

நீ அழுத்தக்காரி! உனக்கு சுய கவுரவம் ஜாஸ்தி. ஒரு நாளாவது நீயா எனக்கு ஃபோன் பண்ணி 'ஐ லவ் யூ நரேன்'னு சொல்லியிருக்கியா?

இப்போகூட பாரேன். ரெண்டு வருஷம் கழிச்சு நம்ம லவ்வர் வந்திருக்கானே? அவனை விமான நிலையத்துக்குப் போய் வரவேற்போம்னு நினைப்பு வருதா உனக்கு? கல் மனசுக்காரிப்பா நீ!" படபடத்தான் நரேந்திரன்.



"நரேன்! ப்ளீஸ்... உங்க கவனம் சிதறிடுமேங்கிற பயத்துல தான்... நான் ஃபோனே பண்ணாம இருந்தேன்.

இன்னிக்கு நான் விமான நிலையத்துக்கு வரலை. தப்புதான்! வர முடியாம போனதுக்கு ஒரு காரணம் இருக்கு. நேர்ல வாங்க... நான் சொல்றேன்.

டியூட்டிக்கு நான் போகலை. லீவு போட்டாச்சு. வீட்டுலே தான் இருக்கேன். நேர்லே வாங்க... நிறைய சொல்ல வேண்டியிருக்கு..."

முட்டிக்கொண்டு வந்த அழுகையை அடக்கியபடி பேசினாள் நேத்ரா.

போரூரில் தான் நரேந்திரனின் வீடு இருந்தது. அப்பா, அம்மா, கல்லூரியில் படிக்கும் தம்பி என்று அளவான அன்பான குடும்பம்.

பிள்ளைகளின் விருப்பத்திற்கு, பெற்றவர்கள் என்றுமே முட்டுக்கட்டை போட்டதே இல்லை.

"வாப்பா நரேன்! நல்லாயிருக்கியா? இப்படி இளைச்சுப் போயிட்டியேப்பா? விமான நிலையத்துக்கே வந்திருப்போம். நீதான் எங்க யாரையும் வரவேணாம்னு சொல்லிட்டியே?" ஆரத்தி சுற்றியபடியே சிரித்தாள் அம்மா பத்மாவதி.

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்னு தான் வேணாம்னு சொன்னேன்."

"விமான நிலையத்துக்கு சம்பந்தியும் நேத்ராவும் வந்திருந்தாங்களா நரேன்?" என்று கேட்ட அப்பா தணிகாசலத்தை ஏறிட்டான்.

"இல்லப்பா அவங்க வரலை."

"ரெண்டு நாளா சம்பந்தி செல்ஃபோனுக்கு முயற்சி செஞ்சேன். ஸ்விட்ச் ஆஃப் பண்ணியே வச்சிருக்காரு. ஏன்னு தெரியல. நேத்ராகிட்ட ஃபோன்லே நேத்து நைட் பேசினேன். குரல்லே வழக்கமா தொனிக்கிற கலகலப்பே இல்லை... சோர்வா பேசின மாதிரி இருந்துச்சு."

"குளிச்சிட்டு டிபன் சாப்பிட்டுட்டு நேரா நேத்ரா வீட்டுக்குத் தான் போகப் போறேன். மாமாவையும் அவளையும் நேர்லே பார்த்து தெளிவா என்னன்னு கேட்டுடறேன். சரியாப்பா?"

அடுத்த அரைமணி நேரத்தில் தனது பைக்கை எடுத்துக்கொண்டு குன்றத்தூரில் இருக்கும் நேத்ராவின் வீட்டை அடைந்தான்.

பைக் தடதடத்து வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள் நேத்ரா.

"வா... வாங்க நரேன்! நல்லா இருக்கீங்களா?" சோக முலாம் பூசிய முகத்துடன் வரவேற்றவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"உன்னை எந்த நேரத்துல வந்து பார்த்தாலும் சரி... சும்மா இன்னிக்குப் பூத்த புது பன்னீர் ரோஜா மாதிரி சதா ஒரு மலர்ச்சியோட இருப்பியே? என்னாச்சு உனக்கு? உடம்பு சரியில்லையா? மாமா எங்கே? அவர்தான் சின்சியர் டாக்டராச்சே? டியூட்டி இருக்கு"ன்னு இன்னிக்கும் கிளம்பிப் போயிட்டாரா?"

கேள்விகளை அடுக்கியபடியே முன்னறை சோபாவில் வந்து அமர்ந்தான்.



கீழுதட்டை அழுந்தக் கடித்தவண்ணம், தரையில் பார்வையைப் பதித்தபடி நின்றிருந்தவளின் கரத்தை உரிமையாய் பற்றி இழுத்து தன்னருகே அமர வைத்தான் நரேந்திரன்.

"கேட்டுக்கிட்டே இருக்கேன். பதிலே சொல்லாம இருந்தா... என்ன அர்த்தம்? மாமா ஏன் செல்ஃபோனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வச்சிருக்காரு?"

குபு குபுவென்று விழிகளிலிருந்து கண்ணீர் பொங்கி தாரை தாரையாக வடிய.. தேம்பியபடி அவனது தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

"எ... என்னாச்சு நேத்ரா?" கேட்ட நரேந்திரனின் குரலில் பதற்றம் தொற்றியிருந்தது.

மெல்ல ஆசுவாசப்படுத்திக் கொண்டு நடந்ததை எல்லாம் விவரித்தாள்.

"நீ சொல்றதை வச்சுப் பார்க்கும்போது... அந்த வாசுதேவன் தான் மாமாவைக் கடத்தியிருக்கணும்னு தோணுது பேசாம போலீஸ்லே புகார் கொடுத்துடலாமா?"

"வே... வேணாம் நரேன். போலீஸ்க்குப் போனா... கோபத்துல அந்தாளு அப்பாவை ஏதாச்சும் பண்ணிடுவானோன்னு பயமா இருக்கே..."

"அதையும் யோசிக்க வேண்டியிருக்குல்ல? சரி... அந்த அரிய வகை மூலிகைகளை உடனடியா தெரிஞ்சுக்கிட்டு கைப்பற்றணும்கிற வெறியோடு வாசுதேவன் இருக்கிறதால... கண்டிப்பா மாமாவை அந்த மலைக்குத்தான் கடத்திட்டுப் போயிருப்பான்..."

"ஐயோ நரேன்! எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கே? அப்பா ரொம்ப வைராக்கியம் உடையவரு... வாசுதேவன் எப்படி சித்ரவதை செஞ்சாலும் சரி... அப்பா அசைஞ்சே குடுக்கமாட்டாரே?... அந்தக் கோபத்துல அப்பாவோட உயிருக்கே உலை வச்சிடுவானோன்னு... ரொம்பவும் திகிலா இருக்கே?

அப்பாவுக்கு மட்டும் ஏதாச்சும் ஆயிடுச்சன்னா... அதை என்னால தாங்கவே முடியாது நரேன்..."

குரலுடைந்து முதுகு குலுங்க தேம்பியவளை ஊன்றிப் பார்த்தான் நரேந்திரன்.

"மனசை திடமா வச்சுக்கோ நேத்ரா! மனசு திடமா தெளிவா இருந்தா... எப்பேர்ப்பட்ட பிரச்சினை வந்தாலும் சரி... நம்மால சுலபமா அதுக்குத் தீர்வு காண முடியும். கண்ணைத் துடைச்சுக்கோ...

முதுகில் ஆதுரமாய் தட்டிக் கொடுத்தான்.

"நேரத்தைக் கடத்தாம நேரா நாமளும் மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் போக வேண்டியது தான்..."

"என்ன சொல்றீங்க நரேன்?"

"சுருளி மலை, மருந்து மலைப் பகுதிகளுக்குப் போய் மாமாவைத் தேடிக் கண்டுபிடிச்சு காப்பாத்தி கூட்டி வந்துடலாம்னு சொல்றேன்."

"நா... நம்மால முடியுமா நரேன்? அப்பாவைக் காப்பாத்திடலாமா?"

"முடியும்னு நம்பணும்... நம்பிக்கை தானே வாழ்க்கை?



சுருளி மலையும் மருந்து மலையும் சித்தர்கள் நடமாடற வனப் பகுதின்னு சொல்றே...

நம்ம மாமாவுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதுன்னு... என் உள்ளுணர்வு சொல்லுது நேத்ரா!

மாமாவைக் காப்பாத்தணும்கிறது தான் நம்மோட பிரதான நோக்கமா இருந்தாலும்... மருந்து மலை, சுருளி மலையில நடக்கிற அற்புதங்களைக் கேள்விப்பட்டதும்... எனக்கும் அங்கே போகணும்கிற ஆர்வம் கிளர்ந்துவிட்டு எரியுது நேத்ரா!

நீயும் மாமாவும் தூரத்து சொந்தக் காரங்களோட கல்யாணத்துக்காக... தேனிப் பக்கம் வரை போயிருக்கிறதா... எங்க வீட்டுல சொல்லிடறேன்.

இனி நான் சொந்தமா மருத்துவமனை தொடங்கணும். அது சம்பந்தமா திருச்சியில இருக்கிற முக்கியமான நபரை நேர்லே சந்திச்சு ஆலோசனை பெற வேண்டியிருக்கு.

அதனால திருச்சி வரை போக வேணும்னு வீட்டுல சொல்லிட்டு வந்துடறேன். மதுரை வரைக்கும் நாம்ப ஃபிளைட்டுல போயிடலாம்... அப்புறமா அங்கிருந்து கார் ஏற்பாடு பண்ணிக்கலாம்.

பயணத்துக்கு தயாரா இரு. நான் சீக்கிரமா வந்துடறேன். சரியா நேத்ரா?"

தசரதனை ஆபத்திலிருந்து மீட்பதற்காக பயணத்தை மேற்கொண்டார்கள்.

ஆனால் விதி, அவர்கள் இருவரையும் ஆபத்தில் மாட்டிவிட... தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

# 4

தாள லயத்துடன் ஹோவென்ற இரைச்சலுடன் பாலாய் கொட்டிய சுருளி அருவியில் நனைந்து குளித்துவிட்டு அருவியின் அருகாமையில் உள்ள உடை மாற்றும் அறையில் மாற்றுடை அணிந்துகொண்டு வெளிப்பட்டாள் நேத்ரா.

நரேந்திரன் பளிச்சென்று வெள்ளை நிற டீ சர்ட்டும், கறுப்பு நிறத்தில் பேண்டும் அணிந்துகொண்டு... ஒரு மரத்தடியில் இருந்த பாறையில் வாகாய் அமர்ந்திருந்தான்.

"வா நேத்ரா! தேனியில நல்ல ஹோட்டல்லே இட்லியும் வடையும் வாங்கிட்டு வந்தது நல்லதாப் போச்சு.

சாப்பிட்டுட்டு நம்ம வேலையை ஆரம்பிப்போம்" என்றபடி உணவுப் பொட்டலங்களைப் பிரித்தான்.

"இல்ல நரேன்! நீங்க சாப்பிடுங்க... எனக்குப் பசியில்ல..."

"பொய் சொல்லாதே நேத்ரா! அருவியில குளிச்சதும் கபகபன்னு பசிக்குது. இந்த வனாந்தரத்துக்கு நாம்ப புதுசா வந்திருக்கோம்.

பாதை தெரியாததால காட்டுல நிறைய அல்லாட வேண்டியதிருக்கும். பட்டினியாக் கிடந்தா போற வழியிலே மயக்கம் அடிச்சு நீ விழுந்துட்டா?... அலைஞ்சு தேடறதுக் காவது உடம்புல தெம்பு வேணாமா?

நீ படிச்ச பொண்ணு. அதுவும் ஒரு டாக்டர்! பிடிவாதம் பண்ணாம வந்து சாப்பிடு நேத்ரா."



அதற்கு மேல் மறுக்கத் தோன்றாமல்... அவனருகில் அமர்ந்து இட்லியை சாப்பிட ஆரம்பித்தாள்.

சுற்றிலும் காட்டு மரங்கள்... அடர்த்தியாக, விண்ணை முட்டிப் பார்க்கும் ஆசையோடு கிடுகிடுவென்று வளர்ந்து வனாந்தரத்திற்கே உரிய வனப்பைப் பறைசாற்றிக் கொண டிருந்தன.

அருவியிலிருந்து கொட்டிய தண்ணீர் ஆறாகி பாறைகளை முத்தமிட்டு செல்லமாய் ஜதி போட்டுக்கொண்டு ஓடிய அழகில்... ஒரு கணம் மனம் லயிக்கத்தான் செய்தது.

"அப்பா மட்டும் காணாம போகாம இருந்திருந்தால்... இந்நேரத்துக்கு இந்த அருவியை விட்டு சாமானியத்துல நான் நகர்ந்திருக்கமாட்டேன் நரேன்."

"மாமாவை கண்டிப்பா நாம்ப கண்டுபிடிச்சுடலாம். மாமா பத்திரமா கிடைச்சதும்... நம்ம கல்யாணம்தான்! தேனிலவுக்கு தேனிக்கே வந்து தங்கிடலாம்.

சுருளி மலை, மருந்து மலையை ஆசை தீரப் பார்த்துட்டு தேக்கடி, மூணாறு, குமுளி எஸ்டேட்டுக்குப் போயிட்டு வரலாம். சரியா?"

குறும்புத்தனமாய் அவளைப் பார்த்து முறுவலித்தான் நரேந்திரன்.

"அப்பா பத்திரமா கிடைச்சுடுவாருன்னு... எப்படி இவ்ளோ உறுதியா சொல்றீங்க நரேன்?"

சிறு இட்லி துண்டம் அவளது தொண்டையை விட்டு இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

"மாமாவுக்கு தெய்வ நம்பிக்கை ஜாஸ்தி. அதுவும் தவிர... இது சித்தர்கள் நடமாடற புண்ணிய பூமி.

நல்லவங்களை பகவான் எப்போதும் கைவிடவே மாட்டாருன்னு... நான் உறுதியா நம்பறேன். பார்த்துட்டே இரேன்... நாம்ப இந்த வனத்தை விட்டுப் போகும்போது மாமாவையும் கூட்டிக்கிட்டுத்தான் போகப் போறோம். சரியா?"

"உங்க வாக்கு பலிக்கட்டும் நரேன்."

கன்னத்தில் வாய்க்கால் போட்டுக்கொண்டு இறங்கிய கண்ணீரைப் புறங்கையால் துடைத்துவிட்டு... மளமள வென்று சாப்பிட்டு முடித்தாள் நேத்ரா.

ஈரக் கூந்தலை விரித்துப் போட்டபடி... பேக்கை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டு நரேந்திரனுடன் இணைந்து நடந்தாள்.

"தலையை நல்லா துவட்டிக்கோ... ஈரம் இன்னமும் சொட்டிட்டு இருக்கு பார் நேத்ரா?"

கரிசனத்துடன் பேசியவனை நிமிர்ந்து பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

"இது வனாந்தரம். சுத்தமான காத்து எப்படி சுழன்றடிக்குது பாருங்களேன். தலை துவட்டத் தேவையில்லை... சீக்கிரமா ஆறிடும்..."

காட்டு மரங்கள் துரித கதியில் கிளைகளை அசைத்துக் காற்றோடு காதல் மொழி பேசிக் கொண்டிருந்தன.

சற்றே சரிந்து வளைந்து சென்ற பாதையில்... நரேந்திரனின் வேகத்திற்கு ஈடு கொடுத்தபடி நடக்க நேத்ரா யோசனையுடன் அவனை ஏறிட்டாள்.



"நரேன்! நாம்ப இப்போ எங்க போறோம்?"

"மருந்து மலைக்கு... அங்க போறதுக்கு வாகனங்கள் எதுவும் கிடையாதாம். இன்னமும் கொஞ்ச தூரத்துல "மருந்து மலைக்குப் போகும் பாதை"ன்னு... அம்புக்குறி போட்ட போர்டு தென்படுமாம்...

அது வழியா போனா ஒரு மணி நேரத்துல மருந்து மலைக்குப் போயிடலாம். அருவிக்குப் போற வழியில சின்ன டீக்கடை இருக்கு பாரு... அங்கதான் விசாரிச்சு வச்சேன்?

"மருந்து மலையில உச்சியில பஞ்சலிங்கத்தை தரிசனம் பண்ணிட்டு நம்ம தேடலை தொடங்கப் போறோமா?"

"ஆமா நேத்ரா! பஞ்சலிங்கத்தை தரிசனம் பண்ணிட்டு அடிவாரத்துல பர்ணசாலையில தங்கியிருக்கிற சிவகுருவைப் பார்த்துப் பேசணும்..."

"சிவகுருங்கிற மூலிகை வைத்தியரை தன் வழிக்குக் கொண்டு வரணும்கிற பேராசையால் தானே... அந்த நாகதேவன், அப்பாவைக் கடத்தியிருக்கான்?"

"ஆமா..."

"அப்பாவை கடத்தினவங்க... அவரை சென்னையில அடைச்சு வைக்கமாட்டாங்க... அரிய வகை மூலிகைகளை அபகரிக்கிறதுக்காக... நேரா இந்த மலைக்கு அவரைக் கொண்டு வந்திருப்பாங்கன்னு நீங்க சொன்னீங்க... இல்லையா?"

"ஆமா... சொன்னேன்."

"இவ்ளோ காரியம் பண்ணினவங்க... மருந்த மலையில இருக்கிற சிவகுருவையும் கடத்தியிருக்க மாட்டாங்களா? இவ்ளோ நேரத்துக்கு அவரை சும்மாவா விட்டு வச்சிருப்பாங்க?"

"எனக்கு என்னமோ அப்படித் தோணலை நேத்ரா!"

"சிவகுருவைப் பிடிச்சா... அவங்க நெனச்சதை சாதிச்சுடலாமே? முதல்லே சிவகுருவையும் கடத்திட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பாங்க...

மலையடிவாரத்துல பர்ணசாலையில அவரு இருக்க மாட்டாருன்னு நான் நெனைக்கிறேன். நாம்ப அவ்ளோ தூரம் போயிட்டு ஏமாற்றத்தோட தான் திரும்பப் போறோம்..

"மாமா சொன்னதை வச்சுப் பார்க்கும்போது... சிவகுரு மேல எனக்கு தனி மரியாதையே உண்டாயிடுச்சு.

அவரு அவ்ளோ சுலபத்துல... வாசுதேவன் கூட்டத்துகிட்டே சிக்கியிருக்க மாட்டாருன்னு எனக்குள்ளே ஒரு ஊகம்...

ஆங்! நேத்ரா... இதோ... அம்புக்குறி போட்ட போர்டு.. நாம்ப வலது பக்கமா போற பாதையில போக வேண்டியது தான்."

சமீபத்தில் பெய்த மழையால், பாதை குண்டும் குழியுமாய் கரடு முரடாய் இருந்தது. பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தால் பெரிய சரிவு பயமுறுத்தியது.

"மலைப்பாதை ஏத்தமா இருக்கிறதால உனக்கு நடந்துவர சிரமமா இருக்குல்ல? மூச்சிரைக்குதே நேத்ரா!



வேணும்னா கொஞ்ச நேரம் ஓய்வா உட்கார்ந்துட்டு போலாமா?"

"வே... வேணாம் நரேன். இந்த சிரமத்தைப் பார்த்தா முடியுமா? அப்பாவை நாம்ப கண்டுபிடிச்சாகணும். இந்த சிரமத்துக்கே ஓய்ஞ்சு நான் உட்கார்ந்துடமாட்டேன்."

வைராக்கியத்துடன் மேல் மூச்சு வாங்க நடந்தவளைக் கண்டு "குட்! பொண்ணுங்க இப்படித்தான் வைராக்கியமா கருமமே கண்ணா இருக்கணும்" என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தான்.

"நீங்க கூட இருக்கீங்களே நரேன்? கல்யாணத்துக்கு முன்னாடியே வருங்கால மனைவியோட கஷ்ட நஷ்டத்துல பங்கு எடுத்துட்டிருக்கீங்க... ரியலி யூ ஆர் கிரேட்!

மனசுக்கு எவ்ளோ தெம்பா ஆறுதலா இருக்குத் தெரியுமா? இந்த தைரியத்துல நான் இமயமலையைக் கூட ஏறிக் கடப்பேன். தெரியுமா?"

"இந்த வனாந்தரத்துல ஊதல் காத்து சில்லுனு உடம்பைப் பதம் பார்க்குதே? இது போதாதுன்னு நீ வேற டன் கணக்குல ஐஸ் வைக்கிறியே நேத்ரா! என்னால தாங்க முடியலைடா செல்லம்."

அவன் பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு பேசிய விதம்... அவளுக்கு குபீரென்று சிரிப்பை வரவழைத்தது.

கலகலவென்று சிரித்தபடியே "நான் நிஜத்தை தானே சொன்னேன் நரேன்...? எனக்கு ஐஸ் வைக்கத் தெரியாதுப்பா" என்றாள்.

"விளையாடாதே நேத்ரா! பார்த்து கவனமா ஏறு. என் கையைப் பிடிச்சுக்கோ" என்றபடி அவளது வலது கரத்தை ஆதரவாய் இறுகப் பற்றியபடி நடந்தான் நரேந்திரன்.

விதி சிரித்தது. நரேந்திரனையும் நேத்ராவையும் பிரிக்க சதி செய்தது.

அதி பயங்கரமான வனாந்தரத்தில்... நள்ளிரவில்... தன்னந்தனி ஆளாய் அவளைத் தவிக்கவிட... விதி தக்க தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

## 5

மருந்துமலையில் உள்ள பஞ்ச லிங்கக் கோயில் ஒரு திறந்தவெளி ஆலயமாகத் தான் இருந்தது.

நான்கு புறமும் நான்கு லிங்கங்கள். நடுவே சற்றே பிரம்மாண்டமாய் பெரிய லிங்கம். அதற்கு நேர் எதிரே பிரம்மாண்டமான நந்தி.

மலை உச்சியில் காற்று ஹோவென்ற இரைச்சலுடன் சுழன்றடித்தது.

"கொஞ்சம் அசந்தோம்னா காத்து நம்மளை அதள பாதாளத்துல தள்ளி விட்டுட்டுத் தான் மறுவேலை பார்க்கும் போலிருக்கே" முணுமுணுத்தபடி சுற்றும் முற்றும் பார்த்தான் நரேந்திரன்.

"மலையுச்சியில இருந்து பார்க்கும்போது சுற்றிலும் பச்சைப் பசேல்னு பெரிய பிரபஞ்சத்தையே பகவான் கொண்டு வந்து வச்ச மாதிரி... பிரமிப்பா இருக்குல்ல?" அவன் கேட்ட கேள்விக்கு பதில் ஏதும் சொல்லாமல்...



காற்றில் படபடத்த சேலை முந்தானையை இழுத்து இடுப்பில் செருகியபடி பெரிய லிங்கத்தை நெருங்கினாள் நேத்ரா.

மண்டியிட்டு அமர்ந்து கைகளைக் கூப்பி கண்ணீர் மல்க மனமுருகப் பிரார்த்தித்தாள்.

'அப்பா பத்திரமா எனக்கு திரும்பக் கிடைக்கணும். இந்த வனாந்தரத்தை விட்டு நாங்க போகும்போது அப்பா கூடத்தான் போகணும். அருள் புரியணும் ஐயனே!'

லிங்கத்தின் மீது காவி நிற வஸ்திரம் சுற்றப் பட்டிருந்தது.

அதிகாலையில் யாரோ பூஜை செய்துவிட்டு வில்வ மாலையை சூட்டிவிட்டுச் சென்றிருப்பார்கள் போலும்!

லிங்கத்தின் உச்சியில் ஒற்றை நாகலிங்கப் பூ வைக்கப்பட்டிருந்தது.

இத்தனை வேகமாய் சுழன்றடித்த காற்றுக்குக்கூட அந்தப் பூ அசைந்து கொடுக்காமல் இருந்த அதிசயத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

நேத்ரா உள்ளம் உருக வேண்டிவிட்டு தரையில் விழுந்து கும்பிட்டு நிமிர்வதற்கும்... அந்த நாகலிங்கப்பூ பொத்தென்று அவளது மடியருகே வந்து விழுவதற்கும் மிகச் சரியாக இருந்தது.

மெய்சிலிர்த்துப் போன நேத்ரா... சட்டென்று திரும்பி நரேந்திரனை ஏறிட்டாள்.

அதே கணத்தில் 'டண்... டண்... டண்...' என்று மணியோசை மலைப் பிரதேசமே அதிரும்படி ஒலிக்கவே

இருவரும் ஏக காலத்தில் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தனர்.

நந்திக்கு அப்பால்... இருபுறமும் இரண்டு பிரம்மாண்டமான கல்தூண்கள் நடப்பட்டிருக்க... இரண்டு தூண்களின் மீது பெரிய இரும்புச் சட்டம் பொருத்தப்பட்டு... நடுவில் பெரிய மணி மாட்டப்பட்டிருந்தது.

அவ்வளவு பெரிய பிரம்மாண்டமான மணியிலிருந்து தொங்கிய சங்கிலியை, சுமார் ஐந்தாறு பேராவது இழுத்துப் பிடித்து அடித்தால் மட்டுமே மணியோசையை உண்டு பண்ண முடியும்.

ஆனால்... என்னே ஒரு அதிசயம்? என்ன தான் பலத்த காற்று வீசினாலும்... இவ்வளவு பெரிய கனத்த மணி அசைவதற்குக்கூட வாய்ப்பே இல்லையே?

ஐந்தாறு பேர் கூடி இழுத்து அடித்த தினுசில் மணி யோசை ஒலித்ததைக் கண்டு இருவருக்குமே ஜிவ்வென்று மேனி சிலிர்த்தது.

நேத்ரா சட்டென்று அந்த நாகலிங்கப் பூவை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு எழுந்து நின்றாள்.

"ந... நரேன்! இ... இந்த அதிசயத்தைப் பார்த்தீங் களா?"

பரவசத்தில் அவளுக்கு நா குழறியது.

"நேத்ரா! எல்லாமே தெய்வச் செயல் தான்! மாமா காணாம போயிட்டாருன்னு... அவரைத் தேடிக்கிட்டு நாம்ப வந்தோம்.



இந்த ஸ்தலத்துல இப்படியொரு அதிசயத்தை நாம்ப பார்க்கணும்கிறது பிராப்தம்! உண்மையிலேயே நாம்ப ரொம்ப பாக்கியசாலிகள், இல்லையா?

இனிமே நீ எதுக்கும் கவலைப்படாதே... மாமா பத்திரமா நமக்கு கிடைச்சிடுவாருன்னு பரிபூரணமா நம்பு!

இது சித்தர்கள் நடமாடற வனப் பகுதின்னு எல்லாரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கோம். இன்னிக்கு அது கண்கூடா நிரூபணமாயிடுச்சு.'

"ஆமா... நரேன்! சித்தர்கள் தான் இப்படியொரு அற்புதத்தை நிகழ்த்திக் காட்டியிருக்காங்க... அரூபமான உருவத்துல நடமாடிக்கிட்டிருக்காங்க... அதனால தான் அப்பாவுக்கு இந்த இடத்தை விட்டுத் திரும்ப வர்றதுக்கு மனசே வரலை போலிருக்கு..."

"நம்ம கல்யாணத்தை நடத்தி முடிச்சுட்டு வந்து, இங்கேயே தங்கிடணும்கிற முடிவுக்கு... மாமா வந்துட்டாருன்னு நீ சொன்னியே?

இதே மாதிரி அற்புதங்களை அவர் கண்டிப்பா கண்கூடாப் பார்த்திருப்பாரு.

சரி நேத்ரா! நாம்ப மலையைவிட்டு இறங்கலாமா? அடிவாரத்துல பர்ணசாலையில தங்கியிருக்கிற சிவகுருவைப் பார்க்கணும்.

அவரை மட்டுமில்ல... முடிஞ்சா கங்கையம்மாவையும் பார்த்துடணும்..." பேக்கை தோளில் மாட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"க... கங்கையம்மாவை நாம்ப எப்படிப் பார்க்க முடியும்? அவங்க பவுர்ணமிக்கு மட்டும் தான் வெளியே வருவாங்களாமே?"

"பவுர்ணமிக்கு இன்னமும் ரெண்டொரு நாள் தானே இருக்கு?"

"என்ன அவ்ளோ சுலபமா சொல்லிட்டீங்க நரேன்? அதுவரைக்கும் நாம்ப எங்க தங்கறதாம்?"

"சிவகுருவைப் பார்க்கப் போறோமில்ல? அவருகிட்ட கேட்டுப் பார்க்க வேண்டியதுதான். மாமாவுக்கு சிநேகிதராச்சே? உதவி பண்ணாமலா போயிடுவாரு?"

சரிந்து கீழே சென்ற பாதையில் கவனமாக கால் பதித்து மெல்ல இறங்கியபடி யோசனையுடன் அவனை ஏறிட்டாள்.

"வாசுதேவன் நம்ம வீட்டுக்கே வந்து, 'நிஜம்' நிகழ்ச்சியில் கங்கையம்மாவைப் பத்தி சொன்ன தகவலை, அப்பாக்கிட்ட பிரமிச்சுப் போய் சொல்லிட்டிருந்தாரு அப்பக்கூட நான் அதை நம்பலை நரேன்!

ஏதோவொரு கட்டுக்கதையா இருக்கும்னு நெனச்சேன் நடக்கிறதை எல்லாம் பார்க்கும்போது எல்லா விஷயங்களுமே உண்மையா இருக்கும் போலிருக்கே?"

"கண்டிப்பா... எனக்கும் அந்த நம்பிக்கை வந்ததால தானே கங்கையம்மாவைப் பார்த்துடணும்னு சொல்றேன்...?"

"டி.வி.யில விஷயத்தை வெட்டவெளிச்சமாக்கிட்டாங்க... வாசுதேவன் மாதிரி எத்தனைப் பேரு கெட்ட எண்ணத்தோட இங்க வந்திருக்காங்கன்னு தெரியலை.



இதையெல்லாம தெரிஞ்சு... ஒருவேளை அந்த கங்கையம்மா இந்த வாட்டி பவுர்ணமிக்கு.. குகையை விட்டு வெளியே வராம இருந்துட்டா?

பஞ்ச லிங்க தரிசனத்துக்கு பவுர்ணமியில அவங்க வந்தாத்தானே நாம்ப பார்க்க முடியும்?"

"பார்த்து... கவனமா இறங்கு. கையைப் பிடிச்சுக்கோ நேத்ரா! நீ சொல்றதும் சரிதான். ஒருவேளை, அவங்க வராம இருந்துட்டாலும்... நாம்ப சோர்ந்துடக்கூடாது. எப்படியாவது முயற்சி பண்ணி அவங்களைப் பார்த்துடணும்."

"என்ன சொல்றீங்க? அவங்க வராட்டி எப்படிப் பார்க்க முடியும்?"

"அவங்க இருக்கிற இடத்துக்கே போக வேண்டியது தான்."

திக்கென்று அதிர்ந்து போய் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

விதி... தன் விபரீத விளையாட்டைத் தொடங்க ஆர்வமாய் காத்திருந்தது.

## 6

**அ**டிவயிற்றில் பயப் பந்து வேகமாய் உருண்டது.

"வேணாம் நரேன். நாம்ப எதுக்கு அவங்களைப் பார்க்கணும்? அவங்க, மருந்து மலைக்கு மறுபக்கமா இருட்டுல சரிவுலே சரசரன்னு இறங்கிப் போயிடுவாங்களாம்.

அவ்ளோ வேகமா அப்படி யாராலும் இறங்க முடியாதுன்னும்... அவங்க இருக்கிற குகையை இது வரைக்கும் யாரும் பார்த்ததில்லைன்னும் கேள்விப் பட்டேனே...

எதுக்கு நாம்ப ரிஸ்க் எடுக்கணும்? போற இடத்துல வனாந்தரத்துல ஏதாச்சும் ஆபத்து வந்துடுச்சுன்னா?

அதுவும் தவிர... நாம்ப கங்கையம்மாவைப் பார்க்க முயற்சி பண்றதே தப்பா? சரியான்னு தெரியாம... எப்படி காரியத்துல இறங்க முடியும்?

ஏதாச்சும் தெய்வ குத்தம் ஏற்பட்டுடுச்சுன்னா... என்ன பண்றது? நாம்ப அப்பாவைத் தேடித் தானே வந்தோம்? பேசாம நம்ம வேலையை மட்டும் பார்க்கலாம் நரேன்!

வீணா வம்பை விலை கொடுத்து வாங்கணுமா?" நேத்ராவின் பீதி படர்ந்த முகத்தை உற்றுப் பார்த்து முறுவலித்தான்.

என்னத்துக்கு தெய்வக் குத்தம் ஏற்படும்னு பயப் படறே? வாசுதேவன் மாதிரி எந்தக் கெட்ட எண்ணமும் நமக்கு இல்லையே?

நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதுன்னு... என் உள் மனசு சொல்லுது. ஏன் தெரியுமா?

வந்ததும் வராததுமா பஞ்சலிங்க தரிசனத்தோட பெரிய அற்புதமும் நம் கண் முன்னே நிகழ்ந்திருக்கே?

வாசுதேவனோட நோக்கமே... இளமை மாறாம இருக்கவும், மரணத்தை ஒத்திப் போடறதுக்கும் உரிய மூலிகைகளை அடையணும்ங்கிறது தானே?



அந்த ரகசியம் தெரிஞ்சவங்க இந்த வனாந்தரத்துல ரெண்டு மூணு பேர்தான். சிவகுரு, கங்கையம்மா, அப்புறமா அவங்களோட கணவர்.

வாசுதேவன் தன் சகாக்களோட இந்த வனாந்தரத்துல எங்கேயோ பதுங்கியிருக்கணும். சிவகுருவையும் கங்கை யம்மாவையும் அவன் சும்மா விட்டு வைப்பானா?

அவங்ககிட்ட எப்படியும் தன் கைவரிசையைக் காட்டித் தான் நெனச்சதை சாதிக்கப் பார்ப்பானே?"

"ஐயோ! அவனால இவங்க ரெண்டு பேத்துக்கும் ஆபத்து ஏற்படும்னு சொல்றீங்களா? அந்தப் பேராசைக் காரன் கொலை பாதகம் பண்றதுக்கும் தயங்கமாட்டான் போலிருக்கே?"

"பயப்படாத நேத்ரா! வாசுதேவன் இப்படித்தான் திட்டம் தீட்டியிருப்பான்னு சொல்ல வந்தேன். அவன் நெனச்ச தெல்லாம் அப்படியே நடந்துட்டா... அப்புறம் தெய்வம்னு எதுவுமில்லையே?

நீ சொல்றதை வச்சுப் பார்க்கும்போது... அந்த கங்கையம்மா ஒரு தெய்வீக சக்தி கொண்ட பெண்ணாகத் தான் இருக்கணும்.

அவங்களுக்கே இந்நேரம் எல்லாம் தெரிஞ்சிருக்கும். மீன்... தன்னோட ஞான திருஷ்டியால வாசுதேவனோட சகாக்களைப் பத்தியும் மாமாவைப் பத்தியும் நம்மளைப் பத்தியும்கூட தெரிஞ்சு வச்சிருப்பாங்க...

மனசுல எந்தவித கல்மிஷமும் இல்லாம... நேர்மையா உள்ளார்ந்த பக்தியோட அந்த கங்கையம்மாவைப் பார்க்கணும்னு நாம்ப பிரியப்படுறோம். இல்லையா?

அவங்களே தானா நமக்கு தரிசனம் தருவாங்கன்னு என் மனசுக்குப் படுது. சின்னதா ஒரு முயற்சி பண்ணலாமே?

நாம ஒரு அடி எடுத்து வச்சா... தெய்வம் நம்மை நோக்கி பத்தடி எடுத்து வைக்கும்னு பெரியவங்க சொல்வாங்க.

தைரியமா இரு... எல்லாம் நல்லதே நடக்கும்..."

அதற்கு மேல் வாதாடத் தோன்றாமல் மவுனமாய் நடந்தாள் நேத்ரா.

மலை அடிவாரத்தை அடையும் வரை இருவரிடையே மவுனம் கெட்டிச் சுவராய் எழும்பி நின்றது.

அடிவாரத்தில் சிவகுருவின் பர்ணசாலை பளிச்சென்று பார்வையில் அகப்பட்டது. வாசலருகே இருந்த திண்ணையில்...

காவி உடை அணிந்த இளைஞன் ஒருவன், வட்ட வடிவக் கல்லில் கலவையான பச்சிலைகளை சேர்த்து சிரத்தையாய் அரைத்துக் கொண்டிருந்தான்.

"வணக்கங்க... நாங்க சென்னையிலேர்ந்து சிவகுரு ஐயாவைப் பார்க்க வந்திருக்கோம். ஐயா இருக்காருங்களா?" நரேந்திரன் பணிவாய் கேட்டான்.

இருவரையும் ஏற இறங்கப் பார்த்த இளைஞன் "சமீபகாலமா நெறைய பேரு ஐயாவைத் தேடி வர்றாங்க... எல்லாரையும் அவரு பார்க்கப் பிரியப்படமாட்டாரே?

நீங்க என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்னு சொல்லுங்க... ஐயா பிரியப்பட்டாத்தான்... உங்களை நான் உள்ளே அனுப்ப முடியும்..."



"நான் டாக்டர் தசரதனோட ஒரே மகள். இவரு என்னோட வருங்காலக் கணவர்... எங்கப்பாவை...?" அவள் மேற்கொண்டு பேசி முடிக்கும் முன்பாக... உள்ளிருந்து ஒரு குரல் இடைமறித்தது.

"சாமிநாதா! அவங்களை உள்ளே அனுப்பு."

"நேத்ரா! குனிஞ்சு உள்ளே வா... தலை இடிச்சுக்கப் போகுது...

நரேந்திரனப் பின் தொடர்ந்து தயக்கமாய் உள்ளே நுழைந்தாள் நேத்ரா.

பர்ணசாலை சற்றே விஸ்தாரமாகத் தான் இருந்தது. நடுநாயகமாக புலித்தோலில் அமர்ந்திருந்தவரின் மீது பார்வையைப் பதித்தாள்.

நெற்றியில் விபூதிப் பட்டையுடன் சிவப்பழமாக காட்சியளித்தார் சிவகுரு.

இடுப்பில் மட்டும் சாயம் போன காவி வேஷ்டி... தோளில் சிறு துண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

சிறு கல்லுரலில் ஏதோ விதைகளையும் விபூதியையும் சேர்த்து இடித்துப் பொடித்துக் கொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட அப்பா தசரதனின் வயது தான் அவருக்கும் இருக்கும்.

அவரைப் பார்த்ததும் அப்பாவையே நேரில் பார்த்துவிட்டாற் போன்ற உணர்வில்... கண் கலங்கிப் போனாள் நேத்ரா.

அவள் பேச வாயைத் திறக்கும் முன்... "என்னம்மா நேத்ரா! அப்பா காணாம போயிட்டாருன்னு... அவரைத்

தேடிக்கிட்டு காட்டுக்கே வந்துட்டியா?" என்று சிவகுரு நிமிர்ந்து பார்க்காமலே கேள்விக் கணையைத் தொடுத்தார்.

திக்கென்ற அதிர்வில் ஆடிப் போனவளுக்கு... பொலபொலவென்று கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

## 7

**தோ**ளில் மாட்டிக்கொண்டு வந்த கனத்த பையை பொத்தென்று கீழே போட்டுவிட்டு... ஓடிச் சென்று சிவகுருவின் எதிரே மண்டியிட்டு அமர்ந்தாள் நேத்ரா.

"ஐயா! நான் உங்களைத் தான் மலைபோல நம்பி வந்தேன். அப்பா காணாம போயிட்டாரு... அவருக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை.

உங்களைப் பார்த்தா... என் கஷ்டத்துக்கு ஒரு விடிவு கிடைக்கும்னு நம்பித்தான்... இங்கே வந்தோம்..."

"என்னை மலை போல நம்பி... மருந்து மலைக்கு வந்தீங்களா? சிவ சிவா...! மருந்து மலைவாசனை நம்பு... ஐயன் ஈசன் மீது நம்பிக்கை வை... அவரை தரிசனம் பண்ணி உன் குறையைச் சொல்லிட்ட இல்ல? இனி அவரு பார்த்துப்பாரு..."

சாந்தம் தவழும் அவரது விழிகளை ஊன்றிப் பார்த்தாள்.

"ஐயா! எங்களைப் பத்தி நான் எதுவுமே சொல்லாமலேயே எல்லாத்தையும் புட்டு புட்டு வச்சுட்டீங்க...

நீங்க சாதாரண மூலிகை வைத்தியர் கிடையாது. அதுக்கும் மேல... நீங்க முற்றும் உணர்ந்த ஞானி... ஒரு



மகான்... சொல்லுங்க ஐயா! எங்கப்பா பத்திரமா திரும்பக் கிடைச்சுடுவாரா? அவரு எப்போ வருவாரு?"

சட்டென்று கையை அமர்த்தினார் சிவகுரு.

"முற்றும் உணர்ந்த ஞானியா? பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதேம்மா... 'நான் யார்'னு இன்னமும் எனக்குள்ளே ஒரு தேடல் இருந்துட்டே இருக்கே?

என் தேடலுக்கான விடை இன்னமும் கிடைக்கலையே? நீ கேட்கிற கேள்விகளுக்கு என்னால விடை எப்படிச் சொல்ல முடியும்? சொல்ல முடியாது... சொல்லவும் கூடாது...

காட்டுக்கே வந்துட்டேயில்ல? போகப் போக நீயே எல்லாத்தையும் புரிஞ்சுப்பே... எல்லா பதிலும் உனக்குத் தன்னால கிடைக்கும்...

"சூட்சுமமா நீங்க பேசறது எனக்குப் புரியலைன்னாலும்... உங்களைப் பார்த்ததும் எங்கப்பாவை நேரில் பார்த்தது மாதிரி ஒரு நிம்மதி ஏற்பட்டிருக்கு. இனி பகவான் எல்லாத்தையும் பார்த்துப்பாருன்னு வேற சொல்லிட்டீங்க... எனக்கு இது போதும் ஐயா..."

"ஐயா! மாமாவைத் தேடி கண்டுபிடிக்கணும்கிற வேகத்துல கிளம்பி வந்துட்டோம். 'அப்பாவை பார்க்காம இந்த வனாந்தரத்தை விட்டு வரவே மாட்டேன்'னு நேத்ராவும் பிடிவாதம் பண்றா...

எங்க தங்கறதுன்னு தெரியலை... எங்களுக்கு உங்களை விட்டா... வேறு யாரையும் தெரியாது... நீங்க தான் பெரிய மனசு பண்ணி... உதவணும்.

நேத்ராவுக்கு மட்டும் இடம் கிடைச்சா போதும். நான் வெளியில மரத்தடியிலகூட படுத்து சமாளிச்சுப்பேன்..."

"எப்பவுமே ராத்திரி நேரத்துல பச்சை மரத்தடியிலே படுக்கக்கூடாது. வெளிநாட்டுக்குப் போய் மருத்துவத்தில பெரிய படிப்பு படிச்சு வந்தவன் நீ. உனக்கு இதுகூடத் தெரியாதா நரேந்திரா?"

'வெளிப் பார்வைக்குத் தான் இவர் ஒரு மூலிகை வைத்தியர்... உண்மையில் இவர் ஒரு சித்தர் தான்.'

நரேந்திரனின் மனதில் வரிவரியாய் எண்ணம் ஓடியது. சிவகுருவின் மேல் அலாதி மரியாதையே ஏற்பட்டுவிட்டது.

"இல்ல நரேந்திரா! நான் சாதாரண மூலிகை வைத்தியன் தான்..." நரேந்திரனுக்கு திக்கென்றிருந்தது.

அவனும் சட்டென்று மண்டியிட்டான்.

"ஐயா! நான் மனசுல நெனச்சதை... நான் உள்ளே நெனச்ச விஷயத்துக்கு டக்குனு பதில் சொல்றீங்களே? இது யாரால முடியும்? நீங்க சித்தர் தான்... சந்தேகமே இல்ல..."

இருவரையும் மாறி மாறிப் பார்த்த நேத்ரா, "எனக்கு அப்படியே புல்லரிக்குது... இது விநோதமான அனுபவம்" என்றாள்.

"இதுக்கே புல்லரிச்சுட்டா எப்படி? இன்னமும் நிறைய சம்பவங்களை நீ பார்க்கப் போறியே? சரி... எல்லாம் தெய்வச் செயல்... நரேந்திரா! நீ இங்கே எங்ககூடவே படுத்துக்கலாம்.

நேத்ரா! இதோ வலது பக்கமா... அங்க மறைவா நீ படுத்துக்கலாம்..." அவர் தனது சுட்டுவிரலால் காட்டிய திசையில்... தனது பார்வையால் பயணித்தாள் நேத்ரா.



பர்ணசாலையின் வலதுபுறத்தில் குறுக்கே ஓலையால் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டிருந்தது.

"ஐயா! ரொம்ப நன்றிங்க... இந்த உதவியை நாங்க என்னிக்குமே மறக்கமாட்டோம்" கைகூப்பினான் நரேந்திரன்.

"சாமிநாதா! இவங்க பாவம்... பசியோட இருக்காங்க... சாப்பிடறதுக்கு ஏதாச்சும் கொண்டா..." உதவியாளுக்கு உத்தரவிட்டார் சிவகுரு.

உண்மையில் இருவருக்குமே அபார பசிதான்! வனாந்தரத்திலிருந்த காய் கனிகள் தேவாமிர்தமாக இருந்தன.

வெகுதூரம் கரடுமுரடான மலைப் பாதையில் ஏறி இறங்கிய களைப்பு வேறு...

ஓய்வின்றி வெகுநேரம் நடந்ததால்... கால்கள் இரண்டிலும் விண் விண் என்று வலி பின்னியெடுத்தது.

வெளிச்சம் விடைபெற்றுப் போய்... இருள் வேகமாய் கவியத் தொடங்கியது.

சுளுந்து வெளிச்சத்தில் சிவ குருவும் சாமிநாதனும் சிரத்தையாய் மூலிகைகளை அரைத்து இடித்து தயார் செய்து கொண்டிருந்தனர்.

நரேந்திரன் அவர்களுக்கு எதிரே சம்மணமிட்டு அமர்ந்து மடியில் ஏதோ மருத்துவ நாளிதழைப் புரட்டியபடி... அவ்வப்போது அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஓலைத் தடுப்புக்கு அப்பால் தனக்கென்று ஒதுக்கித் தரப்பட்ட இடத்தில் தனது பையை வைத்தாள் நேத்ரா.

மூலையில் சில மண் குடுவைகளும் மண் கலயங்களும் அடுக்கப்பட்டிருந்தன. பெரிய மண் சட்டியில் படிகாரக் கற்கள் வைக்கப்பட்டிருந்தன.

அதனருகே சிறு மான் தோல் விரிக்கப்பட்டு... அதன் மேல் நிறைய வேர்க் கட்டுகள் நேர்த்தியாய் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பக்கத்திலிருந்த சிறு சாளரத்தின் வழியே வெளியே பார்வையை ஓட்டினாள் நேத்ரா.

பலமாய் காற்று வீசியதில் காட்டு மரங்கள் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

மின்மினிப் பூச்சிகள் அசுர வேகத்துடன் இங்கும் அங்குமாய் பறந்து கொண்டிருந்தன. ஒரு மரத்தடியில் நின்றிருந்த கரிய உருவம் சாளரத்தையே குரூரத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

## 8

திக்கென்ற அதிர்வில் பதறிப் போனா நேத்ரா... சட்டென்று நகர்ந்துகொண்டாள். படபடவென்று இதயம் அடித்துக் கொண்டது. "யாரோ கெட்ட நோக்கத்தோடு ஜன்னலையே உற்றுப் பார்க்கிறார்களே?

யாராக இருக்கும்?

நாங்கள் இங்கு வந்திருப்பதை அறிந்துகொண்டு... வாசுதேவன் தனது ஆளை அனுப்பி வேவு பார்க்கிறானோ?

அப்பாவைக் கடத்தியது போல்... சிவகுருவையும் கடத்த முயற்சிக்கிறானோ?



வாசுதேவன் நினைத்திருந்தால்... எங்களுக்கு முன்பாகவே இங்கு வந்து சிவகுருவைக் கடத்தியிருக்கலாமே?

வாசுதேவன் இங்கு வந்து சிவகுருவிடம் நைச்சியமாக ஏதாவது பேசிப் பார்த்திருப்பானோ?

அப்பாவிடம் அப்படித்தானே பேச்சை ஆரம்பித்தான். இதுபற்றி சிவகுரு ஐயாவிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

யாரோ பர்ணசாலையையே நோட்டம் விடுவதையும் சொல்லிவிட வேண்டும்.

எந்த நேரத்திலும், எது வேண்டுமானாலும் நடக்கும் போலிருக்கிறதே?

மீண்டும் மெல்ல சாளரத்தின் வழியே பார்வையைச் செலுத்தினாள்.

அந்தக் கரிய உருவம் சிகரெட் புகைக்கிறது போலும். சிறு நெருப்புப் புள்ளி பளிச்சென்று தெரிந்தது.

காற்று வாக்கில் சிகரெட் நாற்றம் மிதந்து வந்து அவளது முகத்தில் மோதியது.

"ஊகூம்! கண்டிப்பாய் இதைப் பற்றிக் கூறி எச்சரிக்கை செய்ய வேண்டும்.

முதலில் நரேனை அழைத்து வந்து இதைக் காட்ட வேண்டும்...'

சாளரத்தை விட்டு அவசரமாய் விலகினாள்.

இவள் வந்து நின்ற வேகத்தைப் பார்த்ததும் புருவங்கள் நெரிய 'என்ன?' என்பது போலப் பார்த்தான் நரேந்திரன்.

பதிலுக்கு மவுனமாய் சமிக்ஞை காட்டி அழைத்தாள். மருத்துவ நாளிதழை கீழே வைத்துவிட்டு யோசனையுடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

"என்னாச்சு நேத்ரா?" தழைந்த குரலில் கேட்டான்.

"எ... எனக்கு பயமா இருக்கு நரேன்" என்றபடி சாளரத்தை சுட்டிக் காட்டினாள்.

"ஏன் பயப்படறே? ஒருவேளை இது வழியா பாம்பு, விஷ ஜந்துக்கள் ஏதாச்சும் புகுந்திடுமோன்னு பயப்படறியா?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்ல... ஏதோவொரு கரிய உருவம், பர்ணசாலையையே உத்து உத்துப் பார்த்துட்டிருக்கு... சிகரெட்டோ சுருட்டோ பிடிச்சிட்டிருக்கான். நெருப்புப் புள்ளி பளிச்சுனு தெரிஞ்சது."

"அப்படியா?" என்றபடியே அவனும் ஆர்வமாய் பார்த்தான்.

"எங்கே? என் கண்ணுக்கு எதுவுமே தெரியலையே நேத்ரா?"

"அதோ... அங்க தான் எதிர்த்தாப்பல இருக்கிற மரத்தடியிலதான்... அந்த உருவம் நின்னுட்டிருந்தது."

"யாரையும் காணோமே?"

அவளும் எட்டிப் பார்த்தாள்.

"அட... யாரையும் காணோமே? அதற்குள் அந்தக் கரிய உருவம் மறைந்துவிட்டதே?"



"வனாந்தரத்துல வந்து தங்கியிருக்கோமேன்னு உன் மனசுல ஒரு பயம்... அதான்! மரத்தடியில மரக்கிளையோட நிழலைப் பார்த்துட்டு... கரிய உருவம் நிக்கிறதா நெனச்சு பயந்திருக்கே... எல்லாம் ஒரு பயப்பிராந்திதான்."

"பிராந்தின்னே வச்சுக்கோங்க... வெறும் நிழலா இருந்தா சுருட்டுப் பிடிக்குமா? அதிலேர்ந்து நாத்தம் வேற வந்துச்சே? அதுவுமா பிரமையா இருக்கும்?"

"அதானே? யோசிக்க வேண்டிய விஷயம்தான்..."

"வாசுதேவனோட ஆட்கள்லே... எவனோ ஒருத்தன் வந்து வேவு பார்த்துட்டுப் போயிருக்கான். ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போகுதுன்னு... என் மனசுக்குப் படுது நரேன்!

சிவகுரு ஐயாகிட்டே இதைப் பத்தி சொல்லிடலாமா? இதைக் கேட்டா... அவரும் ஒரு எச்சரிக்கையோட இருப்பாருல்ல?"

"மக்கு! நாம்ப போய் சொல்லித்தான் அவருக்குத் தெரியப் போகுதாக்கும்? அவரே ஞான திருஷ்டியில எல்லாத்தையும் பார்த்துட்டுதான் இருப்பாரு தெரியுமா?"

கங்கையம்மாவை நேரில் பார்க்கணும். அவங்களோட குகையையும் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. ஐயாகிட்டே சந்தர்ப்பம் பார்த்து அனுமதி கேட்கலாமான்னு யோசிச்சுட்டு இருக்கேன்...

பவுர்ணமி நெருங்கிட்டு வருதுல்ல? நிலா வெளிச்சம் நல்லாத்தான் இருக்கு. இன்னிக்கு நடுராத்திரியில சிவகுரு ஐயா மூலிகைகளைப் பறிக்கிறதுக்காக... வெளியில போயிடுவாராம்..."

"இதை யாரு சொன்னாங்க? தனியாவா போறாராம்?" ஆவலும் திகிலுமாய் கேட்டாள் நேத்ரா.

"சாமிநாதன் என்கிட்ட சொன்னாப்பல... எப்பவுமே ஐயா மட்டும் தான் போவாராம். விடியறப்போ பிரம்ம முகூர்த்தத்துலே திரும்பிடுவாராம். சில சமயங்கள்லே ஒரு வாரம் கழிச்சுக்கூட வருவாராம்.

எங்க போறாரு? வனாந்தரத்துலே எங்க தங்கறாருன்னு... இதுவரைக்கும் சாமிநாதனுக்குக் கூடத் தெரியாதாம்..."

"நரேன்! சிவகுரு ஐயாவை விட்டா நமக்கு வேற யாரையும் தெரியாது. அப்பாவைப் பத்தினத் தகவல் இன்னமும் நமக்கு கிடைக்கலை. சிவகுரு ஐயா பாட்டுக்கு ஒரு வாரம் கழிச்சு திரும்ப வந்தாருன்னா? நாம்ப என்ன செய்யறது?"

"அதனால...? நீ என்ன சொல்ல வர்றே நேத்ரா?"

"நாமளும் ஐயா கூடவே போகலாமா?"

"அவரு மூலிகைகளைப் பறிக்கப் போறாராம். சாமிநாதனையே இதுவரைக்கும் அவரு அழைச்சுட்டுப் போகலையாமே? நம்மளை எப்படி அவரு அனுமதிப்பாரு?"

"ஒருவேளை சம்மதிச்சுட்டா? சம்மதிப்பாருங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு நரேன். பகவானோட அனுக்கிரகம் நமக்கு இருக்குங்கிறதை... நாம பஞ்சலிங்க தரிசனத்திலேயே தெரிஞ்சுகிட்டோமே?"

"சரி... உன் இஷ்டம்! ஐயாகிட்டயே கேட்டுப் பார்த்துடலாம்..."



ஓலைத் தடுப்பைத் தாண்டி இருவரும் சிவகுரு அமர்ந்திருக்கும் இடத்தருகே மெல்ல வந்து நின்றனர்.

மெல்லிய சுளுந்து வெளிச்சத்தில் தன் அருகே நிழலாடியதும் நிமிர்ந்து பார்த்தார் சிவகுரு.

'எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?' என்ற தயக்கத்தில் நேத்ராவும் நரேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இது உசிதம்னு உங்களுக்குப் படுதா? படுதுன்னு நீங்க நெனச்சா... தாராளமா நடு ராத்திரியில என்கூட வரலாம்."

"சரிங்க ஐயா" இருவருமே ஒரு சேரக் கூறினார்கள்.

ஆனால் உள்ளுக்குள் இருவருக்குமே 'சொரேல்' என்று திகில் ஊறியது நிஜம்!

## 9

**நி**லவுப் பெண் பால் ஒளியை சிந்தியபடி, நட்சத்திரப் பரிவாரங்களுடன் பவனி வந்து கொண்டிருந்தாள்.

மலைத் தரை முழுக்க காய்ந்த இலைச் சருகுகள் சுள்ளிகள். மூவரும் நடக்கையில் பலமாக சலசலத்தன.

சப்தம் கேட்டு, ஒளிந்திருக்கும் முயல்களும், காட்டுப் பெருச்சாளிகளும் திபுதிபுவென்று ஓடி நேத்ராவை அச்சப் படுத்தின.

நிலவு வெளிச்சம் கொஞ்சம் வழி காட்டிய போதும் பனி மூட்டம் பெரிய தொல்லையாக இருந்தது.

சிவகுருவுக்கு பக்கவாட்டில் நடந்த நரேந்திரன் டார்ச்சை உயிர்ப்பித்திருந்தான்.

அவனுக்குப் பின்னால் நடந்த நேத்ரா சுற்றும் முற்றும் பார்வையால் துழாவியபடி... பின் தொடர்ந்தாள்.

"நிலா வெளிச்சத்தில் நடு ராத்திரியில் தான் மூலிகை பறிக்க வேணுமா? பகலில் வெளிச்சத்தில் சுலபமாய் கண்டுபிடித்துப் பறித்துச் செல்லலாமே?

ஏன் இருட்டில் வனாந்தரத்தில் வந்து தேடித் தவிக்க வேண்டும்?"

மனதில் எண்ணமிட்டபடியே நடந்தாள் நேத்ரா.

"நிலா வெளிச்சத்துக்குன்னு ஒரு சக்தி உண்டு. அப்ப சில மூலிகைகள் எட்டிப் பார்க்கும். அதிலேயும் பவுர்ணமி அன்னிக்கு ஒருவித வீரியத்தோட பளிச்சுன்னு இருக்கும். மத்தபடி பகல்லே வெளிச்சத்துலே நம்ம கண்ணுக்கு சில அரிய மூலிகைகள் புலப்படறது இல்லை..."

நேத்ராவின் மனதில் முளைவிட்ட கேள்விக்கு பதில் சொல்லும் விதமாய் சிவகுரு பேசியபடி மெல்ல நடந்தார்.

நேத்ரா விழிகள் விரிய அவரையே பார்த்தபடி நடந்தாள். "ஐயா! ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நிலா வெளிச்சத்துக்கு அவ்ளோ சக்தியா?" என்று கேட்ட நரேந்திரனை மெல்ல ஏறிட்டார் சிவகுரு.

"என்ன இப்படிக் கேட்டுட்டே? பவுர்ணமிக்கு விசேஷ சக்தி கூடும். அதிலேயும் சித்ரா பவுர்ணமிக்கு அதி அற்புதமான விசேஷ சக்தி உண்டு தெரியுமா?



கோடை வெப்பத்துல தாவரமெல்லாம் அனல் கண்டு அதோட வேர்கள் ஈரத்தை முடிஞ்ச அளவு உறிஞ்சி, தண்டுப் பகுதியில் சேமிச்சு வெச்சிருக்கும். தரைப் பரப்புல நித்ய ஈரம், நிதான ஈரம், பத்திய ஈரம், பதமான ஈரம்னு பல பக்குவங்கள் இருக்கு. அதுல பத்திய ஈரம் பூமிக்கு, அடியில நிலவறப்போ தான் 'சந்திரகாந்தி' உருவெடுக்கும்.

அது ரொம்ப ரொம்ப அபூர்வமான மூலிகை. அது கிடைச்சுட்டா அதை வச்சு வைத்தியம் செய்து பலவிதமான நோய்களை குணமாக்கலாம். மனசைக் கட்டுப்படுத்தற வசிய மை கூடத் தயாரிக்கலாம். இப்படி எவ்வளவோ செய்யலாம். தெரியுமா?"

"அடேங்கப்பா... மனசை வசியப்படுத்தற மை கூடத் தயாரிக்கலாமா? விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட சக்தியா இருக்கே?"

"கண்டிப்பா... இந்த உலகத்துல மூலிகைகளால ஆகாதது எதுவுமே இல்ல. பண்ணத் தெரியணும். இந்த விஷயத்துக்கு இன்ன மூலிகைன்னு விஷயம் தெரிஞ்சிருக்கணும். தெரிஞ்சிட்டா என்னென்னவோ பண்ணலாம்..."

"கேட்கவே ரொம்ப பிரமிப்பா இருக்கு ஐயா" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்த நேத்ராவை திரும்பிப் பார்த்துவிட்டு முறுவலித்தார் சிவகுரு.

"இதுக்கே பிரமிச்சுப் போயிட்டா எப்படி? ஒரு மூலிகை வேர் இருக்கு. அதை முகர்ந்து பார்த்தாலே நாம மாயமா மறைஞ்சுடலாம். நம்ப முடியுதா இதை?"

"நீங்க சொன்னா... நம்பாம எப்படி இருக்க முடியும் ஐயா? நீங்க சொல்லச் சொல்ல... அந்த வேரை நேர்லே பார்க்கணும்கிற ஆவல் அதிகரிக்குது. இந்த மாதிரி அபூர்வ மூலிகைங்க... வாசுதேவன் மாதிரி ஆளுங்க கையில் கிடைச்சா... அவ்ளோ தான்."

"நீ சொல்றது சரி தாம்மா... நான் சாமிநாதன் கிட்டே கூட அதிகமா பேசமாட்டேன். உங்க ரெண்டு பேத்துக்கும் பவித்ரமான மனசு இருக்கு. அதனாலதான் வெளிப்படையாப் பேசுறேன். உள்ளதைச் சொல்லட்டுமா?

அபூர்வமான விஷயமெல்லாம் அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்காது. அப்படிக் கிடைச்சுட்டா அப்புறம் ஆளாளுக்கு தப்பு பண்ணிட்டு... மூலிகை வேரைக் கொண்டு மாயமா மறைஞ்சு தப்பிச்சுக்குவாங்களே?"

பேசியபடியே தரையில் கவனமாய் பார்வையை செலுத்தியபடியே வந்த சிவகுரு... ஆங்காங்கே தெரிந்த சின்ன சின்ன மூலிகைச் செடிகளைப் பறித்து தன் மூங்கில் கூடையில் போட்டுக் கொண்டார்.

அவரது விழிகள் உன்னிப்பாக இங்கும் அங்குமாய் அலை பாய்ந்தன. விழிகளில்.. பெரிதாக தேடி வந்தது கிடைக்காத மாதிரி ஒருவித ஏமாற்றம் தெரிந்தது.

நடுவில் நீரோடை ஒன்று குறுக்கிட்டது. சலசலவென்ற சப்தத்தோடு அதன் சப்தம் காதில் விழ... அதை நோக்கி மூவரும் நடந்தனர்.

பளிங்கு போன்று தெள்ளத் தெளிவாய் இருந்த நீரில் பாதம் பதித்ததும்... சிலீரென்று குளிர் உச்சந்தலை வரை பாய்ந்தது.



குனிந்து நீரை அள்ளிப் பருகிவிட்டு அவள் நிமிரும் வரை... அவள் அருகிலேயே நின்றிருந்தான் நரேந்திரன்.

"வா நேத்ரா! ஐயா நம்மை விட்டு ரொம்ப தூரம் போயிடப் போறாரு. கால் ரொம்ப வலிக்குதா?"

சேலைக் கொசுவத்தை உயர்த்திப் பிடித்தபடி அவனது கையைப் பிடித்துக் கொண்டு தடுமாறியபடி நடந்தாள் நேத்ரா.

"வந்ததிலேர்ந்து ஓய்வே இல்லாம சுத்திட்டு இருக்கோம் இல்லையா? அதான்..."

இருவரும் நீரோடையைக் கடந்தனர். அடர்ந்த செடிகொடிகளை விலக்கியபடி நடந்த சிவகுரு... ஓரிடத்தில் சட்டென்று நின்றார்.

இவர்களும் மெல்லத் தயங்கி நின்றனர். விதி குரூரமாய்ச் சிரித்தபடி இவர்களை நெருங்கியது.

## 10

**சி**வகுரு அண்ணாந்து பார்த்தார். உயரமான மலை வேம்புகளும், மஞ்சக் கடம்புகளும் நிலா வெளிச்சத்தில் சந்தோஷமாய் கிளைகளை அசைத்து சாமரம் வீசிக்கொண்டிருந்தன.

தரைப் பரப்பில் சிவகுரு பரபரப்புடன் தேடினார். ஏராளமாய் மண்டிக்கிடந்த செடி கொடிகளுக்கு நடுவே பளிச்சென்று வித்த்யாசமாய் ஊடாடிக் கொண்டிருந்த 'சந்திரகாந்தி'யின் மீது அவரது பார்வை நிலைத்தது.

தேடி வந்த பொக்கிஷம் கிடைத்து விட்டாற் போன்று அவரது முகத்தில் பரம திருப்தி! விழிகளில் ஒரு வித பளிச்சிடல் தென்பட்டது.

பவ்யமாய் குனிந்து பக்குவமாய் மிருதுவாய் சந்திரகாந்தி மூலிகைச் செடியைப் பறித்து மூங்கில் கூடைக்குள் போட்டுக் கொண்டார்.

"இதைத் தேடி எவ்ளோ அலைஞ்சேன் தெரியுமா? கிட்டத்தட்ட இருநூத்தி அம்பது பவுர்ணமி ராத்திரி அலைஞ் சிருக்கேன். இன்னிக்குத்தான் கண்ணுல பட்டிருக்கு. நீங்களும் என்கூட வரும்போதுதான்... இது கிடைக்கணும்னு ஒரு பிராப்தம் போலிருக்கு."

சிவகுருவின் முகத்தில் மகிழ்ச்சிக் களை தாண்டவ மாடியது.

"இதைக் கண்ணால பார்க்கிறதுக்கு எங்களுக்கு குடுத்து வச்சிருக்கணுமே ஐயா? விடாமுயற்சியோட சளைக்காம இதைத் தேடி பல காலமா அலைஞ்சிருக் கீங்களே ஐயா?" என்றபடி அவரது மூங்கில் கூடையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் நேத்ரா.

"நீ சொன்னது ரொம்ப கரெக்ட் நேத்ரா! நாம்ப உண்மையிலேயே ரொம்ப பாக்கியம் செய்திருக்கணும். நாம கூட வர்றதுக்கு ஐயா சம்மதிச்சது பெரிய விஷயம்.

அதைவிட பெரிய விஷயம் என்னன்னா... இந்த அற்புதமான மூலிகையை நாம்ப பார்த்துட்டோம்... ஐயாவுக்கு நாம்ப நன்றி சொல்லணும்..."



நரேந்திரன் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தபோது சலசலவென்று செடி கொடிகள் அசையும் சப்தம் கேட்டது.

இலைச் சருகுகள் பலமாய் நொறுங்கும் சப்தமும் கேட்கவே... மூவரும் சப்தம் வந்த திக்கை நோக்கித் திரும்பிப் பார்த்தனர்.

திமுதிமுவென்று ஏழெட்டுப் பேர் அவர்களுக்கு எதிரே வரிசையாக வந்து நின்றனர். அனைவரின் கைகளிலும் கூரான கத்திகள்... நிலா வெளிச்சத்தில் பளபளவென்று மின்னின.

பக்கவாட்டில் நிதானமாக நடந்து வந்து நின்றவனை ஏறிட்ட நேத்ராவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

"ஐயோ நரேன்! இந்தாளுதான் வாசுதேவன்." திகிலில் மெல்ல முணுமுணுத்தாள்.

"ஓ... இந்தாளுதானா?"

"நான் அப்பவே சொன்னேன் இல்ல? பர்ண சாலையை யாரோ வேவு பார்க்கிறாங்கன்னு? இப்ப வசமா நாம்ப மாட்டிக்கிட்டோமே நரேன்?"

அவனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல முணு முணுத்தாள்.

"யார் நீங்க? எதுக்காக எங்க முன்னாடி வந்து நிக்கிறீங்க?" ஒன்றும் தெரியாதது போல் கேட்டபடியே... தோளில் கிடந்த தனது துண்டை உதறி கழுத்தில் ஒரு மாலை மாதிரி போட்டுக்கொண்டு... நேத்திராவுக்கும் நரேந்திரனுக்கும் நடுவில் வந்து நின்றார் சிவகுரு.

"என்ன மூலிகை வைத்தியரே? ஒண்ணும் தெரியாதது போலப் பேசறீங்க? நான் ஏற்கனவே உங்களை சந்திச்சுப் பேசியிருக்கேன். ஞாபகமிருக்குல்ல?

இளமையைக் கட்டிக் காக்கிற மூலிகைக்கும், மரணத்தை ஒத்திப் போடற மூலிகைக்கும் விலை மதிப்பே கிடையாது.

எவ்ளோ பணம் வேணும்னாலும் கொட்டித் தர்றதுக்கு நாங்க தயார்! எங்களுக்கு மூலிகைகளை மட்டும் இனம் காட்டிக் கொடுங்கன்னு கெஞ்சினேனே? மறந்துட்டீங்களா? எடுத்தெறிஞ்சு பேசி திட்டி அனுப்பிச்சீங்களே?"

"இதோ பாருங்க... நான் ஒரு சாதாரண வைத்தியன் அவ்வளவுதான்! அரிய வகை மூலிகைகளை நீங்களோ, நானோல்லாம் அடையவே முடியாது. அதுக்கு பகவானோட அனுக்கிரகம் வேணும். அது சுயநலமில்லாத சித்தர்கள் கண்ணுக்குத்தான் தென்படும்.

எனக்கு மூலிகைகளைப் பத்தி எதுவும் தெரியாது. எங்க நேரத்தை எதுக்கு வீணடிக்கிறீங்க?"

"மூலிகைகளைப் பத்தி எதுவும் தெரியாதுன்னு... அண்டப் புளுகு புளுகினா எப்படி? ஒரு குஷ்ட ரோகியை முழுசா நீங்க குணப்படுத்தின விவரம்... இந்தப் பகுதியிலே எல்லோருக்குமே தெரிஞ்சிருக்கே?

அதை உங்களால மறுக்க முடியுமா? இப்ப இந்த ராத்திரியில இந்த மலைக்காட்டுக்குள்ளே எதுக்கு அலையறீங்களாம்? மூலிகைகளைப் பறிக்கத்தானே வந்திருக்கீங்க?"



இளக்காரமாய் கோணல் சிரிப்பு சிரித்தபடி பேசிய வாசுதேவனை ஏற இறங்கப் பார்த்தார் சிவகுரு.

"நான் ஏதோ சில பச்சிலைகளை வச்சு வைத்தியம் பண்ணக்கூடிய சாதாரண ஆளு... உங்களுக்குத் தேவைப்பட்ட மூலிகைகளே நீங்களே வனாந்தரத்துல அலைஞ்சு தேடிக் கண்டுபிடிச்சுக்க வேண்டியதுதானே?"

"ஊகூம்! மயிலே மயிலேன்னு கெஞ்சினா இறகு போடாது. 'லட்சம் லட்சமா கொட்டித் தர்றேன். மூலிகைகளை காமிச்சுக் கொடு'ன்னு கெஞ்சறேன். மசியவே மாட்டேங்கிறான். ஆனா... அந்த தசரதனோட பொண்ணுக்கும் அவ லவ்வருக்கும் இந்த மூலிகை வைத்தியன் எவ்ளோ மதிப்பு தர்றான் பார்த்தீங்களாடா? கூடவே காட்டுக்கு அழைச்சு வந்து மூலிகை பறிக்க வந்திருக்கான். பாருங்களேன்.

இவன் சரிப்பட்டு வரப்போறதில்ல... இவன் கண்ணு முன்னாடியே தசரதனோட பொண்ணையும் அவ லவ்வரையும் தீர்த்துக் கட்டினாத்தான் வழிக்கு வருவான்..."

கண் மண் தெரியாத ஆத்திரத்தில் வாசுதேவன் சரேலென்று திரும்பி தன் சகாக்களைப் பார்த்து உசுப்பேற்றினான்.

அவன் முதுகு காட்டி நின்றதுதான் தாமதம்... சிவகுரு தன் இருபுறமும் நின்றிருந்த நேத்ராவின் கரத்தையும் நரேந்திரனின் கரத்தையும் பற்றி சட்டென்று அழுத்தினார்.

"என் கையை இறுக்கமா பிடிச்சுக்கோங்க... பின்னால இருக்கிற சரிவுல நாம்ப இப்போ குதிக்கணும்..."

அவர் விழிகளால் சமிக்ஞை செய்து மெல்ல முணுமுணுத்ததும்... நேத்ராவும் நரேந்திரனும் எள்ளளவு கூட யோசிக்கவில்லை.

கண் இமைக்கும் நேரத்தில்...

அவரது கையை இறுகப் பற்றியபடி பின்னாலிருந்த சரிவில் குதித்தனர்.

கும்மிருட்டில் அது பள்ளமா? அதல பாதாளமா? என்றுகூட தெரியவில்லை.

குதிக்கும் கணத்தில் சிவகுரு "திருச்சிற்றம்பலம்... நமச்சிவாய..." என்று உரத்துச் சொன்னது மட்டும் காதில் விழுந்தது.

பயத்திலும் திகிலிலும் நேத்ரா விழிகளை மூடிய படிதான் குதித்தாள்.

'மறுகணம் என்ன அபாயம் நேரப் போகிறது?' என்று இருவருமே சிந்திக்கவில்லை.

நேத்ராவின் மனக் கண்ணில் ஒரு கணம் தசரதன் வந்து போனார். அவளது மனம் முற்றிலுமாக மருந்துமலை ஈசனை தஞ்சம் அடைந்திருந்தது.

சிவகுருவை மலைபோல் நம்பியிருந்தாள்.

காற்றைக் கிழித்துக் கொண்டு உச்சியிலிருந்து விழும்போது அடிவயிற்றில் குடல் முடிச்சுப் போட்டுக் கொண்டாற் போன்ற பயங்கர உணர்வு ஏற்பட்டதால்... சட்டென்று நேத்ரா மூர்ச்சையானாள்.



# 11

**வ**னாந்தரத்துப் பட்சிகள் பூபாள ராகமிசைத்து இன்னிசை கீதம் பாடிக் கொண்டிருந்தன.

விழிகளை மெல்ல மலர்த்தினாள் நேத்ரா.

'எங்கிருக்கிறேன் நான்?'

பர்ணசாலையில் ஓலைத் தடுப்புக்கு அப்பால்... தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் ஓலைப் பாயில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தாள்.

சாளரத்தின் வழியே இளம் காலை வெளிச்சம் உரிமையாய் உள்ளே நுழைந்திருந்ததைக் கண்டதும்... வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

'இங்கு எப்படி வந்தேன்?

நரேன் என்ன ஆனார்?

சிவகுரு ஐயாவின் கைகளைப் பற்றியபடி உச்சி யிலிருந்து குதித்தோமே? அப்புறம் என்ன ஆயிற்று?

ஒரு வேளை இதெல்லாம் என் கனவாக இருக்குமோ?

அடித்துப் போட்டாற்போல் இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே?

பர்ணசாலையில் யாரையுமே காணோமே?'

அவசரமாய் வெளியில் வாசலில் வந்து நின்றாள் நேத்ரா.

எதிரே இருந்த வில்வ மரத்திலிருந்து வில்வ இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தான் சாமிநாதன்.

சுற்றும் முற்றும் பார்த்தாள் நேத்ரா. பக்கவாட்டில்...

ஈரத்துணிகளைப் பிழிந்து மரக் கிளைகளுக்கு இடையே கட்டப்பட்டிருந்த காட்டுக் கொடியில் காயப்போட்டுக் கொண்டிருந்த நரேந்திரனின் எதிரே போய் நின்றாள்.

"பக்கத்துல அழகான சுனை ஒண்ணு இருக்கு. குளிச்சுட்டு வந்தேன். சுனையை நீ பார்த்தேன்னா... அதை விட்டு சாமானியத்துல நகரவே மாட்டே தெரியுமா?

நான் அப்பவே எழுந்துட்டேன். நீ அசந்து போய் தூங்கிட்டிருந்தே... எழுப்ப மனசு வரலை... வந்த வேலை முடிஞ்சுட்டா கூட... இங்கிருந்து கிளம்ப மனசே வராது போலிருக்கே... போற போக்கைப் பார்த்தா மனசு மாறி சாமிநாதன் மாதிரி இங்கேயே செட்டிலாகிடுவோம்னு தோணுது நேத்ரா."

கண்ணிமைக்காமல் அவனது முகத்தையே ஊன்றிப் பார்த்தாள்.

"என்ன நரேன்? இவ்ளோ சர்வசாதாரணமா பேசிட்டிருக்கீங்க? நேத்து என்னென்னவோ களேபரங்கள் நடந்துச்சே? ஒண்ணுமே நடக்காதது மாதிரி பேசிட்டிருக்கீங்க?

நடந்ததெல்லாம் கனவா? நனவான்னு நான் குழம்பித் தவிச்சுட்டிருக்கேன். சரிவுலே ஐயாவோட கையைப் பிடிச்சுக்கிட்டு குதிச்சோமே?



நாம்ப அப்படி குதிக்காம இருந்திருந்தா... என்ன கதி ஆகியிருப்போம்னு நெனச்சா... பகீர்னு இருக்கு.

நீங்க என்னடான்னா... சுனையில குளிச்சுட்டு ஈரத் துணியை உலர்த்திக்கிட்டு ரொம்ப கேஷுவலா பேசிட்டிருக்கீங்க?"

"எப்பவும் நடந்து முடிஞ்சதைப் பத்தியே நெனச்சுட்டிருக்கக் கூடாது. நடக்கப் போறதைப் பத்தித்தான் யோசிக்கணும்."

முறுவலித்தான் நரேந்திரன்.

"விளையாடாதீங்க நரேன்! எவ்ளோ பெரிய சம்பவம் நடந்திருக்கு? அது சரி... நாம இங்க எப்படி வந்தோம்? குதிக்கும்போதே திகில்லே எனக்கு நினைவு தப்பிடுச்சு..."

நரேந்திரன் அசடு வழிய சிரித்துவிட்டு குரலை ஏகத்திற்கும் தழைத்துக் கொண்டு பேசினான்.

"இதைச் சொல்றதுக்கு எனக்கு வெட்கமாத்தானிருக்கு. குதிக்கும்போது எனக்கும் பயமாத்தான் இருந்துச்சு. என்னையும் அறியாம கண்ணை இறுக்கமா மூடிக்கிட்டேன்.

கண்ணை முழிச்சுப் பார்க்கும்போது... பர்ண சாலையில படுத்திருக்கேன். உன்னை மாதிரியே நானும் மயக்கம் போட்டுட்டேன்னுதான் தோணுது. ஒரு ஆம்பளைக்குப் போய் இப்படிப் பயம் வரலாமான்னு... என்னை நானே சாடிக்கிட்டிருக்கேன்..."

"பயம்கிறது மனித இயல்புதானே? இதிலென்ன இருக்கு, நரேன்? சினிமாவுல வர்ற ஹீரோக்கள் நூறு அடி உயரத்தில இருந்து டைவ் அடிச்சு சிரிச்ச முகத்தோட குதிக்கிற

மாதிரி காட்டறாங்க... அதெல்லாம் சாத்தியப்படற விஷயமா? சரி... அதை விட்டுத் தள்ளுங்க...

நேத்து நைட்டுலே எவ்ளோ தூரம் மலைக்காட்டுக் குள்ளே போனோம்? நாம்ப குதிச்ச இடத்துக்கும் இந்த பர்ணசாலைக்கும் இடைப்பட்ட தூரத்தை நெனைச்சாலே... மலைப்பா இருக்கே?

நம்ம ரெண்டு பேத்தையும் அங்கிருந்து பர்ண சாலைக்கு கொண்டு சேர்த்தது சிவகுரு ஐயாவாகத் தானிருக்கும். இல்லையா?"

"நிச்சயமா..."

"நம்மை எப்படி கொண்டு வந்து சேர்த்திருப்பாரு? அவ்ளோ தூரம் நாம்ப நடந்து போறதுக்கே... எப்படியெல்லாம் சிரமப்பட்டோம்? வயசானவரு... எப்படி நம்மை இங்க சேர்த்திருப்பாரு?"

"கண்ணு முழிச்சுப் பார்த்ததுமே... எனக்கு நானே கிள்ளிப் பார்த்துக்கிட்டேன். நாம எப்படி இங்க வந்தோம்னு தலையைப் பிச்சுக்கிட்டேன். அப்புறம்தான் ஒரு முடிவுக்கு வந்தேன்..."

"என்ன முடிவு?"

"சிவகுரு ஐயா ஒரு சித்தரா இருப்பாரோங்கிற டவுட் நமக்கு இருந்துச்சு இல்லையா? அது தப்பு! 'சிவகுரு ஐயா சாட்சாத் சித்தரேதான்'கிற முடிவுக்கு நான் வந்துட்டேன்..."

"கண்டிப்பா... அப்படித்தான் இருக்கும் நரேன்! வாசுதேவன் இப்போ ஏகப்பட்ட ஆத்திரத்துல இருப்பான். ஏமாற்றத்திலேயும் ஆத்திரத்திலேயும் அப்பாவை ஏதாச்சும் பண்ணிடுவானோன்னு ரொம்ப பயமா இருக்கு."



"சிவகுரு ஐயா ஒரு சித்தருங்கிற முடிவுக்கு இப்பத் தானே வந்தோம்? ஒரு சித்தரோட அன்பும் அருட்கடாட்சமும் கிடைச்சிருக்கே? இது எவ்வளவு பெரிய விஷயம்? நல்லதே நடக்கும்னு நம்புவோம்.

கங்கையம்மாவை ஒரு வாட்டி நேர்லே பார்த்துட் டோம்னா... எல்லாப் பிரச்சனைக்கும் ஒரு தீர்வு கிடைக்கும்னு... என் மனசுக்குப் படுது..."

"பவுர்ணமி அன்னிக்கு நடு ஜாமத்துல மருந்து மலையில பஞ்சலிங்க தரிசனத்துக்கு அவங்க வருவாங் கல்ல? அங்க வச்சுப் பார்த்துட்டாப் போச்சு."

"ஊஹூம்... அவங்க இடத்துக்கே போய் பார்க்கிறது தான் நல்லதுன்னு... உள் மனசுக்குப் படுது."

"மருந்து மலை சரிவுக்கு மறுபக்கமா இறங்கி, பயங்கரமான வனாந்தரத்துல அந்தக் குகையை எப்படித் தேடிக் கண்டுபிடிக்கிறதாம்?"

"முயற்சி பண்ணினா முடியாதது ஒண்ணுமே யில்லை... மருந்து மலை சிவன் மேல பாரத்தைப் போட்டு காரியத்துல இறங்கினா... வழி தன்னால தெரிஞ்சுட்டுப் போகுது."

"சிவகுரு ஐயாகிட்டே அனுமதி கேட்க வேணாமா?"

"நம்மளை இங்கே கொண்டு வந்து சேர்த்த கையோட... அவரு திரும்பவும் கிளம்பிப் போயிட்டாராம். மூலிகை பறிக்கிறதிலே நேத்து தடை வந்துட்டதால... இனி இப்போதைக்கு பர்ண சாலைக்குத் திரும்பி வரமாட்டாராம்.

ஒரு வாரம் கூட ஆகலாம்ன்னு சாமிநாதன் சொல்லிட்டிருந்தாரு..."

"அதனால அவரோட அனுமதியை எதிர்பார்க்காம நாமளே அந்தக் குகையைத் தேடிப் போகலாம்னு சொல்றீங்களா?"

"போக வேண்டியதுதான்... ஆனா அதுல ஒரு சின்னத் திருத்தம்... இந்த வாட்டி நான் மட்டும்தான் போகப் போறேன்..."

"இ... இல்ல நரேன்! நான் இதுக்கு ஒருக்காலும் ஒத்துக்கவே மாட்டேன். நீங்க தனியாப் போய்... ஆபத்துல மாட்டிக்கிட்டீங்கன்னா...? இன்னமும் அப்பாவை மீட்க முடியாம தவிச்சுட்டிருக்கோம்... வேணாம்... சேர்ந்து வேணும்னா போகலாம்."

"உன்னைக் கூட்டிட்டுப் போக நான் தயாரா இல்லை நேத்ரா! நேத்து நைட்டுலே... அந்த வாசுதேவனோட எத்தனை தடிப்பசங்க இருந்தாங்க... பார்த்தேயில்லை? அவங்க உன்னைப் பார்த்த பார்வையே சரியில்லை... வேணாம்... நீ கூட வர்றது உசிதமில்ல..."

"உங்களை மட்டும் தனியா அனுப்பிட்டு... நான் எப்படி நிம்மதியா இருக்க முடியும்? என்ன ஆச்சோ? ஏதாச்சோன்னு உயிரைக் கையில பிடிச்சிக்கிட்டு தவிக்கணும். அப்படித் தவிக்கிறதுக்கு... பேசாம நானும் உங்க கூடவே வந்துடறேனே?"

"என்ன நேத்ரா? புரிஞ்சுக்காம பேசறியே? நீ ஒரு அழகான இளம்பெண்... சும்மா அப்சரஸ் மாதிரி ஜொலிக்கிறே... உனக்கு வேற விதமான ஆபத்து ஏற்படும்னு எச்சரிக்கிறேன். மறுபடியும் மறுபடியும் நானும் கூட வர்றேன்னு அடம் பண்றியே?"



"வருங்கால மனைவியோட கண்ணீரைத் துடைக்கிற துக்காக வனாந்தரத்துக்கு நீங்க வந்து இவ்ளோ மெனக் கெடறதைப் பார்த்தா... உள்ளூர எனக்கு உறுத்தலாத்தான் இருக்கு... போதும்பா... உங்களைத் தனியா அனுப்ப நான் தயாரா இல்ல...!

சிவகுரு ஐயா வர்ற வரைக்கும் நாம்ப காத்திருக்கலாம். நாமளா எந்த முடிவும் எடுக்கிறது தப்பு! அவர்கிட்டே கலந்துக்காம நாம்ப எதையும் செய்யக்கூடாது நரேன்!"

திட்டவட்டமாகப் பேசியவளைப் பார்த்து இதமாக முறுவல் பூத்தான் நரேந்திரன்.

"சரி... உன் இஷ்டம் நேத்ரா! டென்ஷன் ஆகாதே... சுனையில குளிச்சுடறியா? வா... துணைக்கு வர்றேன். குளிச்சுத் தயாரானதும் சாமிநாதன் தர்ற காய்கனிகளைக் கொறிச்சுட்டு... மூலிகை மருந்து தயாரிக்கிறதிலே கூடமாட ஒத்தாசை பண்ணிட்டிருக்கலாம்."

"ஒத்தாசையா? நம்மால என்ன செய்ய முடியும்?"

"இடிக்கிறது... பொடிக்கிறது... அரைக்கிறதுன்னு நம்மால முடிஞ்ச சின்னச் சின்ன ஒத்தாசைகள் செய்து பொழுதைப் போக்க வேண்டியதுதான்...!"

"சரி... இதோ நானும் தயாராயிட்டு வந்துடறேன்!" என்றபடி பர்ணசாலைக்குள் புகுந்தாள் நேத்ரா.

விரைவில்... ஆருயிர்க்காதலனைப் பிரிந்து வனாந் தரத்தில் நிர்க்கதியாய் நிற்கப் போகிறோம் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

## 12

நேரம் நத்தையாய் நகர்ந்து கொண்டிருந்தது.

"மூலிகை மருந்து தயாரிக்கும் போது... விடாம மனசுக்குள்ளே மந்திர உச்சாடனம் பண்ணிக்கிட்டே இருக்கணும். அப்போதான் அதுலே பவர் கூடும்னு சிவகுரு ஐயா சொல்வாங்க...

அரைக்கிறதிலே இடிக்கிறதிலே ஒரு பக்குவம் இருக்கு. கொஞ்சம் தவறினாலும் மூலிகை மருந்து வேலை செய்யாது. நீங்க எனக்கு உதவியே ஆகணும்னு பிரியப் பட்டா... அதோ அந்தப் படிகாரக் கல்லை வேணும்னா உடைச்சுப் பொடியா தூள் பண்ணிக் கொடுங்க... அதுவே போதும்."

சாமிநாதன், நரேந்திரனிடம் மெல்லிய குரலில் கூறிவிட்டு... ஏதேதோ பச்சிலைகளிலிருந்து மென்மையான நரம்புகளைக் கவனமாய் நீக்கிவிட்டு வட்ட வடிவக் கல்லில் வைத்து மைய அரைக்கலானான்.

'அப்பாவை எப்படி மீட்கப் போகிறோம்? வாசுதேவன் அவரை இந்தக் காட்டில் எந்த இடத்தில் மறைத்து வைத்துக் கொடுமை செய்கிறானோ?

சிவகுரு ஐயா எப்போது திரும்ப வருவார்? உச்சியிலிருந்து குதிக்கும்போது மரம், செடி, கொடிகளை உரசி உராய்ந்து கொண்டுதானே குதித்தோம்?

சிராய்ப்போ, சின்னக் காயமோகூட ஏற்படாமல் எப்படி எங்களைக் காப்பாற்றி இந்தப் பர்ணசாலைக்கு கொண்டு



வந்து சேர்த்தார் என்று தெரியவில்லையே? அப்பா தசரதனிடம் சிவகுரு ஐயா நட்பு ரீதியாகப் பழகியிருக்கிறார்.

நண்பனின் மகள், மருமகனின் மீது அதிக அக்கறையும் சிரத்தையும் காட்டுகிறார்.

அந்தப் பெரிய கும்பலிடமிருந்து சின்னத் தூசு கூடப் படாமல் எங்களைக் காப்பாற்றியிருக்கிறாரே?

இது சாதாரண மனிதரால் சாத்தியப்படுமா?

ஊஹூம்... இவர் சித்தரேதான்!

சரி! இவ்வளவு சக்தி வாய்ந்தவரால்... அப்பாவை அவர்களிடமிருந்து மீட்க முடியாதா என்ன?

சிவகுரு ஐயாவுக்கு அது ஒன்றும் பெரிய விஷயமே இல்லையே?

நண்பனை அந்தக் கயவர்களிடமிருந்து உடனடியாகக் காப்பாற்றிக் கொண்டு வராமல்... ஏன் காலதாமதம் செய்கிறார் என்று தெரியவில்லையே?

மனதில் என்ன நினைத்தாலும்... மறுகணமே அவருக்குத் தெரிந்து விடுகிறது.

அப்பாவை நினைத்து வேதனையில் நான் துடிதுடித்துக் கொண்டிருப்பதும்... சிவகுரு ஐயாவுக்குத் தெரிந்துதானே இருக்கும்?

தெரிந்திருந்தும்... நண்பனைக் காப்பாற்ற முயற்சி செய்யாமல் இருக்கிறாரே?

என்ன காரணமாக இருக்கும்?

எங்கள்மீது இவ்வளவு அக்கறை காட்டுபவர்... நண்பன் மீது சின்ன அக்கறைகூட காட்டாமல் இருப்பது ஏன்?

இவர் இப்படி இருப்பதற்கு ஏதோ முக்கியமான காரணம் இருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. அதை வெளிப்படையாக நம்மிடம் சொன்னாலாவது ஓரளவுக்கு நிம்மதியாக இருக்கலாமே?

சிவகுரு ஐயா வந்ததும்... இதை வெளிப்படையாகக் கேட்டுப் பார்த்துவிட வேண்டியதுதான்.

ஐயோ! நான் ஒரு மக்கு. நான் இவ்வாறு நினைப்பது கூட... இந்நேரத்திற்கு அவருக்குத் தெரிந்திருக்குமே?

தப்பு.:.. தப்பு! இந்த அளவுக்கு அவர் அடைக்கலம் கொடுத்து தங்க வைத்து... அந்தக் கயவர்களிடமிருந்து காப்பாற்றியதே பெரிய விஷயம்....

நடப்பது நடக்கட்டும். அந்தச் சிவனின் மீதும் சிவகுரு ஐயாவின் மீதும் நம்பிக்கை வைத்து காத்திருக்க வேண்டியது தான்... வேறு வழியே இல்லை!'

தனக்குள் எண்ணமிட்டபடியே சாமிநாதன் பச்சிலைகளை விமுதாக அரைப்பதை வேடிக்கை பார்த்த படியே இருந்தாள் நேத்ரா.

நரேந்திரன் படிகாரக் கல்லை இடித்துப் பொடியாக்கி விட்டு... நெற்றிச் சுருங்க தீவிர சிந்தனையில் மூழ்கியபடியே அவ்வப்போது பர்ணசாலையின் வாசலையே நோட்டமிட்டபடி இருந்தான்.



அன்று முழுக்க சிவகுரு வரவே இல்லை.

இரவு ஒன்பது மணிக்கே தூக்கம் கண்களை அசத்த...

மணிக்கட்டிலிருந்த வாட்சில் பார்வையைப் பதித்த நேத்ரா... மெல்ல நரேந்திரனின் புஜத்தில் தட்டினாள்.

"தூக்கமா வருது நரேன்... நான் போய்ப் படுத்துக்கட்டுமா?"

"தாராளமா... எனக்குத் தூக்கம் வர்ற வரைக்கும் இப்படியே வேடிக்கை பார்த்துட்டிருந்துட்டு... அப்புறமா நானும் தூங்கறேன்... குட் நைட் நேத்ரா!

சாளரத்து வழியா எட்டிப் பார்த்துட்டு வீணா மனசு சஞ்சலப்படாம... நிம்மதியாத் தூங்கு சரியா?"

"சரி... குட் நைட் நரேன்!" தலையாட்டிவிட்டு ஓலைத் தடுப்புக்கு அப்பால் சென்று ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

காற்று வெளியே பலமாய் வீசியதால்...

மரக் கிளைகள் பயங்கரமாய் அசையும் சப்தம் தெளிவாய்க் கேட்டது.

அன்று ஏனோ தெரியவில்லை. படுத்த உடனே தூக்கம் அவளை ஆரத் தழுவிக் கொண்டது.

அதே நேரம் விதி விகாரமாய்ச் சிரித்தது.

# 13

ஒரு மணி நேரம் கடந்ததும்... சட்டென்று நரேந்திரன் எழுந்தான்.

அதே நேரத்தில்... சாமிநாதன் தனது பணிகளை முடித்துவிட்டு ஓலைப் பாயை விரித்துக் கொண்டிருந்தான்.

"ஐயா என்கிட்ட முடிக்கச் சொன்ன வேலையை முடிச்சாச்சு... இனி மேற்கொண்டு ஐயா வந்ததும்தான்... அவர் உத்தரவிட்ட பின்னாடிதான் எந்த வேலையும் செய்யணும்!" பேசியபடியே பர்ணசாலையின் ஓலைக் கதவை வெறுமனே சாற்றிவிட்டு வந்தான்.

"என்ன சார் ஏதோ யோசனை பண்ணிட்டிருக்கீங்க?" நரேந்திரனை ஏறிட்டான் சாமிநாதன்.

நரேந்திரன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறி திணறியபோது... சாமிநாதனே பேச ஆரம்பித்தான்.

"என்னடா இது? வனாந்தரத்துலே இருக்காங்களே? இவங்களுக்குக் காட்டு மிருகங்களாலும் மத்தவங்களாலும் இதுவரைக்கும் ஆபத்தே ஏற்பட்டது இல்லையா? கொஞ்சம்கூட பயமே இல்லாம இருக்காங்களேன்னு?... நீங்க ஆச்சரியப்படறீங்க... இல்லையா சார்?"

"ஆமா..."

"அரிய வகை மூலிகைகளோட வேர்க்கட்டுகளை உள்ளார அடுக்கி வைச்சிருக்கோம். அந்த வாசனைக்கு இந்தப் பர்ணசாலையைச் சுற்றிலும் எந்தவித விஷ ஜந்துக்களும் அணுகவே அணுகாது.



அதுவும் தவிர... சிவகுரு ஐயா சதா சர்வகாலமும் மந்திர உச்சாடனம் பண்ணிட்டே இருப்பாரு... ஐயா கிட்டே பவர் இருக்கு. தீய எண்ணத்தோட யாரும் கிட்ட அணுக முடியாது. இந்தப் பர்ணசாலையை சுற்றி கண்ணுக்குத் தெரியாத ஒரு பாதுகாப்பு வளையம் இருக்குன்னே சொல்லலாம்...

அதனால எந்த ஆபத்தும் இதுவரைக்கும் வந்ததில்லை... இனிமேலும் வரவே வராதுன்னு உறுதியா நம்பலாம் சார்!"

"எனக்கு அந்த நம்பிக்கை நேத்தைக்கே வந்தாச்சு சாமிநாதன்!" புன்னகைத்தான் நரேந்திரன்.

"நல்லது சார்! படுத்துக்கலாமா? அதோ அந்த மண் கூஜாவுல தண்ணி இருக்கு. வேற ஏதாச்சும் உங்களுக்குத் தேவைப்பட்டா கூச்சப்படாம கேளுங்க சார்."

"ருசியான காட்டுக் கனிகளைச் சாப்பிட்டு... வயிறு நிறைவா இருக்கு. வேற எதுவும் தேவைப்படாது சாமிநாதன்! மிக்க நன்றி."

"நன்றி எல்லாம் சொல்லாதீங்க... இது என் கடமை. சிவகுரு ஐயா உங்களை நல்லபடியா கவனிச்சுக்கச் சொல்லியிருக்காரே? படுத்துக்கோங்க...!"

"சரி!" ஓலைப்பாயில் மல்லாந்து படுத்து மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டான் நரேந்திரன்.

'கங்கையம்மா பஞ்சலிங்கத் தரிசனத்துக்கு வராமல் இருந்துவிட்டால் என்ன செய்வது?

அந்தம்மாவை எப்படியும் பார்த்து விட வேண்டுமே? அவர் இருக்கும் குகையைத் தேடிச் செல்ல வேண்டியது தான்.

நேத்ராவை உடன் அழைத்துச் சென்றால்.. வழியில் என்னென்ன ஆபத்து காத்திருக்கிறதோ? யார் கண்டது?

தனியாகச் செல்கிறேன் என்றால்... அதற்கு இவள் சம்மதிக்கவே மாட்டேன்கிறாளே?

இவளுக்குத் தெரியாமல்... நான் இப்போதே கிளம்பிப் போக வேண்டியதுதான். இதுதான் உசிதமான காரியம்!

வழியில் எது நடந்தாலும் எதிர்கொள்ள வேண்டியது தான்... மருந்து மலை சிவனின் மீது பாரத்தைப் போட்டுத் துணிந்து செல்ல வேண்டியதுதான்...

அதை விட்டுவிட்டு பர்ணசாலைக்குள்ளேயே உட்கார்ந்து பொழுதைக் கடத்துவது முட்டாள்தனம் அல்லவா?

நேத்ரா இங்கு பாதுகாப்பாக இருக்கிறாளே? அது போதும் எனக்கு...'

பக்கவாட்டில் மெல்லத் திரும்பிப் பார்த்தான் நரேந்திரன்.

சீரான குறட்டை ஒலி எழுப்பியபடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் சாமிநாதன்.

விருட்டென்று எழுந்து ஓசைப்படாமல் நடந்து ஓலைத் தடுப்புக்கு அப்பால் படுத்திருந்த நேத்ராவை நோட்டமிட்டான்.



"நேத்ரா... நேத்ரா...!" இருமுறை அழைத்துப் பார்த்தான்.

பதில் இல்லை.

'பாவம்! அடிச்சுப் போட்ட மாதிரி தூங்கறா...' தனக்குள் முணுமுணுத்துவிட்டு பூனைப் பாதம் வைத்து நடந்து பர்ணசாலையின் கதவை விலக்கி வெளிப்பட்டான்.

கதவை இழுத்து வெறுமனே சாற்றி விட்டு... சுற்றும் முற்றும் பார்த்தான்.

'அடர்ந்த வனாந்தரத்தில் பகலில் சென்றாலே... எதையும் தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டமாச்சே?

இரவு நேர இருட்டில் வழியும் தெரியாது... வாய்க்காலும் தெரியாதே?

அந்தக் குகையை எப்படித் தேடிக் கண்டுபிடிக்கப் போகிறேன்?

ஊஹூம்... முன்வைத்த காலை பின்வைக்கவே கூடாது. முதலில் மருந்து மலையின் உச்சிக்குச் செல்ல வேண்டியதுதான்...'

யோசித்தபடியே விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

அடிவாரத்திலிருந்த பர்ணசாலையின்மீது ஒரு கணம் பார்வையைப் பதித்து விட்டு... செடி, கொடி, புதர்கள் அடர்ந்த மலைப் பாதையின் மீது மெல்ல ஏறலானான்.

இருளில்... ஒரு ஜோடி கண்கள் அவன் செல்லும் திக்கையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தன.

தூரத்தில்... நரி தீனமாய் ஊளையிட்டதைக் கேட்டதும்... அந்த ஒரு ஜோடிக் கண்கள் நிலா வெளிச்சத்தில் பளபளவென்று மின்னின.

## 14

நேத்ராவுக்கு... நேரம் நகர நகர அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

'நரேன் எங்கே போய் விட்டார்?

ஒருவேளை... சாமிநாதனுக்கு உதவுவதற்காக காய்கனிகளையோ... வில்வ இலைகளையோ பறிக்கச் சென்று விட்டாரோ?

அதோ... சாமிநாதன் மட்டும் காட்டுக் கனிகளைப் பறித்துக் கொண்டு தனியாக வருகிறாரே?'

ஓட்டமும் நடையுமாக அவன் எதிரே போய் நின்றாள்.

"நரேன் உங்க கூட வரலையா?"

"இல்லையே? நான் கண் முழிக்கும்போது என் பக்கத்துல அவரு இல்லை. நான் சுனையில குளியல் போட்டுட்டு நேரா பழம் பறிக்கப் போயிட்டு இப்பத்தான் வரேன்...

புது இடம்கிறதால சீக்கிரமா எழுந்து காத்தாட உலாவப் போயிருக்கலாம். பதட்டப்படாம இருங்க. வந்துடுவாரு..."

'அப்படியும் இருக்கலாமோ? என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல்... ஏன் இவர் பர்ணசாலையை விட்டு வெளியில் செல்கிறார்?'



முணுக்கென்று உள்ளூர கோபம் முளை விட்டது.

மாற்றுடை எடுத்துக் கொண்டு சுனைக்குச் சென்று அவசரமாய்க் குளியல் போட்டுக் கொண்டு திரும்பி வந்தபோது... அவளுக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது.

'நரேன் இன்னமும் வரவில்லையே?

அவர் விடியற்காலையில் எழுந்து காத்தாட உலாவப் போனது மாதிரி தெரியவில்லையே?

ஒருவேளை... நடு ராத்திரியில் எழுந்து கங்கையம்மா இருக்கும் குகையைத் தேடிப் போய் விட்டாரா?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

நேற்று நான் அவரைத் தனியாகப் போக வேண்டாம் என்று தடுத்தபோதே... அவரது முகமே சரியில்லையே?

அதற்குப் பின்பு என்னிடம் சரியாக முகம் கொடுத்தே பேசவில்லையே?

ஏதோ தீவிர யோசனையிலேயே மூழ்கிப் போய் இருந்தாரே?

நடுநிசியில் எழுந்து என்னிடம் சொன்னால் நான் தடுத்து விடுவேன் என்று... சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டாரே?

ஏன் இன்னமும் திரும்பி வரவில்லை?

சென்ற இடத்தில் அவருக்கு ஏதாச்சும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ?

ஐயோ... இதற்குத்தானே நான் அவரைத் தடுத்தேன்.

போகும் வழியில்... வாசுதேவனின் சகாக்களிடம் மாட்டிக் கொண்டாரோ?

ஐயையோ... அப்படி மாட்டியிருந்தால்?

இந்த நேரத்திற்கு... அந்த வெறி பிடித்த பாவிகள் கொன்றே போட்டிருப்பார்களே?

ஒருவேளை... காட்டு மிருகங்களாலும் விஷ ஜந்துக் களாலும்கூட அவருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாமே?

அவருக்கு ஏதோ நேர்ந்து விட்டது?

அதனால்தான் அவரால் திரும்பி வரமுடியவில்லை. விடிவதற்குள் திரும்பி வந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் வனாந்தரத்திற்குள் சென்றிருக்கிறார் போலும்.

ஆனால்... அவரால் முடியவில்லை.

வரமுடியாதபடி ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டாரா?

அல்லது அந்தக் கயவர்கள் அவரையே 'முடித்து' விட்டார்களா என்றே தெரியவில்லையே?

ஐயோ... நான் என்ன செய்யப் போகிறேன்?

அப்பாவைத் தேடிக் காட்டிற்குள் வந்தோம்.

அவரைப் பற்றி ஒரு துப்பும் துலங்கவில்லையே...? என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில்... நரேனை நான் பறிகொடுத்து விட்டேனே?



நரேன்! நரேன்! ஏன் என்னைத் தனியாக தவிக்க விட்டுட்டுப் போனீங்க?

உங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணு ஆயிடுச்சுன்னா... அதை என்னால தாங்கவே முடியாது.

மறுகணமே நான் என் உயிரை விட்டுருவேன்.

ஐயோ! என் மனசாட்சி அறுக்குதே?

இந்த ஆபத்து என்னாலதானே உங்களுக்கு வந்தது?

எனக்காக... என் அப்பாவுக்காக... அப்பாவைத் தேடிக் கண்டுபிடிக்கிறதுக்காக வனாந்தரத்துக்கு வந்து ஆபத்தில மாட்டிக்கிட்டீங்களே?

இப்போ... உங்களையும் அப்பாவையும் நான் எப்படிக் கண்டுபிடிக்கப் போறேன்?

உங்க ரெண்டு பேத்தையும் ஆபத்துல இருந்து எப்படி மீட்கப் போறேன்?

எங்கே? எப்படி? எந்த ஆபத்துல மாட்டியிருக் கீங்கன்னு எனக்குத் தெரியாதே?

முதல்லே... நீங்க இப்போ உயிரோட இருக்கீங் களான்னுகூட சந்தேகமா வருதே?

இல்லை... நீங்க நிச்சயமா உயிரோடதான் இருப்பீங்க.

நான் உங்களை மனப்பூர்வமா ஆத்மார்த்தமா நேசிக்கிறேன்.

என் காதலை அன்பை நேர்லேயோ... ஃபோன் மூலமோ நான் அதிகமா வெளிப்படுத்த மாட்டேங்கிறேன்னு... நீங்க அடிக்கடி என்கிட்ட வருத்தப்படுவீங்க...

ஆனா... உண்மையிலேயே உங்களை நான் என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேன்... நரேன்!

என் உள்ளுணர்வு என்கிட்டே சொல்லுது... நீங்க நிச்சயமா உயிரோடதான் இருப்பீங்க....

உங்களுக்கு எதுவும் ஆகியிருக்காது...

அந்தளவுக்கு பகவான் என்னைக் கைவிட மாட்டாருன்னு நான் நம்பறேன்...

நரேன்! நீங்களும் என்மேல உயிரையே வைச்சிருக் கீங்களே? நீங்க இப்படிச் செய்யலாமா?

இப்பவே என் பாதி உயிர் போயிடுச்சு. தெரியுமா?

யாரோ பலவந்தமா என்னைப் பிடிச்சு நெருப் பாற்றிலே தள்ளி விட்டாப்பல இருக்கு...

வேதனையில புழுவா துடிதுடிக்கிறேன்.

நீங்கதான் என் ஜீவன்! நீங்கதான் என் ஆதாரம்! நீங்கதான் எனக்கு சகலமும்...

நீங்க இல்லாம என்னால ஒரு நிமிஷம்கூட இந்தப் பூமியிலே வாழ முடியாது.

உங்களுக்கு என்ன ஆச்சோ? அது எனக்கும் ஆகட்டும்... இதோ... நானும் கிளம்பி வர்றேன்...'



தாரை தாரையாக கண்ணீர் வழிய... தனக்குள் தீர்மானித்துக் கொண்டவள்... பர்ணசாலையின் வாசலை நோக்கி விரைந்தாள். அங்கே...

## 15

**வா**சலின் குறுக்கே கையை நீட்டித் தடுத்தான் சாமிநாதன்.

"எங்கேம்மா போறீங்க? நரேந்திரனைத் தேடிக்கிட்டு வனாந்தரத்தில அலையப் போறீங்களா? வயசுப் பொண்ணைக் கூடவே கூட்டிக்கிட்டுப் போனா... அது நல்லதில்லைன்னு... நெனைச்சுத்தானே உங்களை நரேந்திரன் இங்கேயே விட்டுட்டுப் போனாரு..?

பர்ணசாலையிலே நீங்க பாதுகாப்பா இருப்பீங்கன்னு நம்பித்தானே ராத்திரியிலே எழுந்து போயிருக்காரு? அவரு எப்படியும் திரும்ப வந்துடுவாருன்னு நம்பிக்கையோட பொறுமையா காத்திருங்க."

"என் மனசெல்லாம் பதறுதே? இங்கே எப்படி நிம்மதியா நான் இருக்க முடியும்?"

"அதுக்காக..? திக்குத் தெரியாத காட்டுல எங்கேன்னு போய் நரேந்திரனை நீங்க தேடுவீங்க? ஐயா... எந்த நேரத்திலும் திரும்பி வந்துடுவாரு... அவரு வந்ததும் உங்களைப் பத்திக் கேட்டா... நான் என்ன பதில் சொல்றது? 'வயசுப் பொண்ணை வனாந்தரத்துக்குப் போறதுக்கு எப்படி நீ அனுமதிச்சே?'ன்னு... என்னை ரொம்பவும் கோவிச்சுப்பாரு..."

"எங்கப்பாவைப் பத்தி ஒரு விவரமும் தெரியலை. எனக்காகக் காட்டுக்கு வந்த நரேனும் காணாமப் போயிட்டாரே? எல்லாம் என்னாலதான்... நான் மட்டும் இங்கே பாதுகாப்பா இருந்து... என்னத்தை சாதிக்கப் போறேன்?"

தழுதழுத்தக் குரலில் பேசிய நேத்ரா... அழுகையை அடக்க முடியாமல் கேவினாள்.

"ஐயாவுக்கு உங்க மேல தனிப் பிரியம்... இதுவரைக்கும் அவரு இங்க வேற யாரையுமே தங்க அனுமதிச்சதில்ல... பர்ணசாலைக்குன்னு ஒரு புனிதம் இருக்கு... கண்டவங்களையும் தங்க அனுமதிச்சா... இதோட புனிதம் கெட்டுரும்னு ரொம்பக் கண்டிப்பா இருப்பாரு...

உங்களை இங்க அனுமதிச்சாருன்னா... அதுக்கு முக்கியமான காரணம் இருக்கு... கள்ளம், கபடம், கல்மிஷம் இல்லாம நேர்மையா பக்தியா பகவானோட அனுக்கிரகத் திற்குப் பாத்திரமானவங்களை... சிவகுரு ஐயாவுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

தனக்குப் பிடித்தமானவங்களை... ரொம்பவும் அழவிட்டு அவரு வேடிக்கை பார்க்க மாட்டாரும்மா... கொஞ்சம் பொறுமையா இருங்க... ஐயா திரும்ப வந்துட்டா... உங்க பிரச்சனைகளுக்கு எல்லாம் ஒரு முடிவும் வந்துடும்... கவலைப்படாதீங்க...

தயவுசெஞ்சு மனசைத் தளர விடாதீங்க... உள்ளே போங்கம்மா!"



பரிவுடன் பேசிய சாமிநாதனை ஒரு கணம் ஏறிட்ட நேத்ரா... சேலைத் தலைப்பால் தன் கண்ணீரைத் துடைத்தபடி ஓலைத் தடுப்புக்கு அப்பால் சென்று மெல்ல அமர்ந்தாள்.

மனக்கண்ணில் நரேந்திரன் சிரித்த முகத்துடன் வந்து வந்து போனான்.

உடம்பிலிருந்த ஜீவன் வெளியேறி விட்டதைப் போலவும், உடம்பே தக்கையாகிப் போனது போலவும் இருந்தது.

"நரேன்! என் கதியைப் பார்த்தீங்களா? அப்பாவைக் காணோம். தேடி வந்த இடத்தில உங்களைத் தொலைச்சுட்டு... யாருமில்லாத அனாதையா நிர்க்கதியா நிற்கிறேனே?

எனக்காக... உங்க வீட்டுல பொய் சொல்லிட்டு என்கூட வந்தீங்களே? என்னைப் பத்திரமா இங்கே விட்டுட்டு ஆபத்தைத் தேடி நீங்க போனீங்களே? எப்பேர்ப்பட்ட தியாக உள்ளம்?

அனலிடைப்பட்ட புழுவாத் துடிக்கிறேனே? எப்படி யாவது திரும்ப வந்துடுங்களேன்.

உங்களைப் பத்தி ஏதாச்சும் கெட்ட தகவல் வந்துடுமோன்னு பயம்மா இருக்கு. அதைக் கேட்ட மறுகணம் நான் உயிரோட இருக்க மாட்டேன். இதே காட்டுல என் உயிரை நான் விட்டுருவேன்.

'அப்பாவையும் உங்களையும் தொலைச்சுட்டு நான் எதுக்கு வாழணும்? கடவுளே! எந்தப் பெண்ணுக்குமே இந்த நிலைமை வரக்கூடாது...”

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அதில் முகம் புதைத்து மவுனமாய்க் கண்ணீர் உகுத்தாள்.

அவ்வப்போது பக்கவாட்டில் திரும்பி ஓலைத் தடுப்பின் இடுக்கு வழியாக நோட்டமிட்டாள்.

இவள் சாப்பிடுவதற்காக காட்டுக் கனிகள் நிரம்பிய மூங்கில் கூடையை மண்கூஜாவின் அருகே வைத்து விட்டு... பர்ணசாலையின் வாசலிலேயே அமர்ந்து இருந்தான் சாமிநாதன்.

“காதலனைத் தேடிக் கொண்டு காட்டுக்குள் நேத்ரா சென்று விட்டால்...? சிவகுரு ஐயாவுக்கு என்ன பதில் சொல்வது...?” என்ற பயத்தில் சாமிநாதன் அந்தண்டை இந்தண்டை நகராமல் வாசலில் நந்தி போல் அமர்ந்திருப்பதை நேத்ராவால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

எவ்வளவு நேரம்தான் அழுதாளோ? அவளுக்கே தெரியவில்லை.

அழுதழுது மனமும் உடலும் சோர்ந்து போய் அப்படியே சரிந்து முடங்கிப் படுத்தவள்தான்... அசந்து போய் தூங்கி விட்டிருந்தாள்.

சட்டென்று எழுந்தாள் நேத்ரா.

சுளுந்து வெளிச்சம் பரவியிருந்ததைப் பார்த்ததும்... மணிக்கட்டிலிருந்த வாட்சை உற்றுப் பார்த்தாள்.



'இரவு பதினொரு மணியா?

இவ்வளவு நேரமும் நான் எப்படித் தூங்கிக் கொண டிருந்தேன்?

மனதில் சின்ன விசனம் ஏற்பட்டாலும்... தூக்கம் வராமல் இரவு முழுவதும் நான் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு இருப்பேனே?

அப்பாவையும் நரேனையும் காணாமல் தவிக்கிறேன். இவ்வளவு பெரிய கவலை மனதைப் பாறாங்கல்லாய் அழுத்திக் கொண்டிருக்கும்போது... என்னால் எப்படி அசந்து தூங்க முடிந்தது?

விழிகளில் இன்னமும் தூக்கக் கலக்கம் மிச்ச மிருக்கிறதே?

இது எப்படிச் சாத்தியம்?'

புறங்கையால் கண்களைக் கசக்கிக் கொண்டு மெல்ல எழுந்து வெளிப்பட்டாள்.

சிவகுரு ஐயா தியானம் செய்யும் இடத்திற்கு அருகே வந்து நின்றாள்.

அங்கு ஒரு சாண் அளவில் லிங்கமும் அதனருகே சிறிய அம்மன் விக்ரகமும் காணப்பட்டன.

அதன் அடியே காட்டுப் பூக்கள் தூவப்பட்டிருந்தன. அதற்கு நேர் எதிர்ப்புறம், அகன்ற மண்சட்டியில் இருந்த கங்குகளிலிருந்து ஏதோ அகிற்புகை மெல்லியதாய் சுகந்த மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

சுகந்த நறுமணம்தான்... அதன் வாசனை வித்தியாசமாய் இருப்பதை உணர்ந்தாள் நேத்ரா.

'ஓ... இப்போதுதான் எனக்குக் காரணம் புரிகிறது. சதா அழுது கொண்டிருக்கும் என்னை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் திணறிய சாமிநாதன்தான்... இந்தப் புகையைப் போட்டிருக்கிறார்.

ஓலைத் தடுப்புக்கு அப்பால் புகையின் வாசம் பரவிய போது... நான் ஏதோ பூஜைக்கு சாம்பிராணி புகை போடுகிறார் என்றல்லவா நினைத்தேன்?

இது ஏதோ மூலிகை வாசம்தான்... அப்படியே என்னைக் கிறங்க வைத்து நிம்மதியாகத் தூங்க வைத்து விட்டதே?

வழக்கமாக சாமிநாதன் படுத்திருக்கும் இடத்தில்.... அவரைக் காணோமே?

பர்ணசாலையின் கதவு வேறு சாற்றப்பட்டிருக்கிறது. மெதுவாகத் திறந்து பார்க்கலாம்..."

வெறுமனே சாற்றியிருந்த கதவை மிக மெதுவாகத் திறந்தாள் நேத்ரா.

வாசல் திண்ணையில் வெள்ளை விரிப்பால் தலை முதல் கால் வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு... குளிருக்கு முடங்கிப் படுத்திருந்தான் சாமிநாதன்.

வெளியில் வந்து கதவை இழுத்து மெல்லச் சாற்றி விட்டு வலது கை ஆட்காட்டி விரலால் கதவில் இரண்டு முறை தட்டினாள்.

மெதுவாக தொண்டையைச் செருமினாள்.



ஊஹூம்... சாமிநாதன் அசைந்து கொடுக்கவே இல்லை.

'என்னை மன்னிச்சிடுங்க சாமிநாதன்! உங்க வார்த்தையை மீறி நான் போறேன். என்ன ஆச்சோ? ஏதாச்சோங்கிற பயத்தில நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துக்கிட்டு இருக்கிறதைவிட... வனாந்தரத்துக்குள்ளே ஆபத்தைத் தேடிப் போறது எவ்வளவோ மேல்ங்கிற முடிவுக்கு நான் வந்துட்டேன்.'

மனதிற்குள் முணுமுணுத்தபடியே ஓசைப்படாமல் மெல்ல நடந்தாள்.

பத்தடி தூரம் வரை திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்த நேத்ரா... தயங்கி நின்றாள்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். பவுர்ணமி நிலவு பால் ஒளியைப் பொழிந்து கொண்டிருந்தது.

தூரத்தில் மேகங்கள் மோதிக் கொண்டு குமுறிக் கொண்டிருந்தன.

திக்குத் தெரியாத காட்டில்... எந்தத் திசையில் பயணிப்பது என்றே தெரியவில்லையே?

விழிகள் விரிய கிளைப் பாதைகளை உற்று உற்றுப் பார்த்தாள்.

'இதோ... இந்தப் பாதை வழியாகத்தானே அன்று பஞ்சலிங்கத் தரிசனத்தை முடித்து விட்டு வந்தோம்?

நரேன் அநேகமாக இந்தப் பாதை வழியாகத்தான் சென்றிருப்பார்.'

மனதில் ஊகித்தபடி அந்த மலைப்பாதையின் மீது தட்டுத் தடுமாறி ஏறிச் செல்ல ஆரம்பித்தாள்.

முட்புதர்கள் அவ்வப்போது அவளது சேலையைக் கிழித்துப் பதம் பார்த்தன.

உருட்டுக்கற்களும் வழுக்குப் பாறைகளும் அவளை ஆங்காங்கே இடற வைத்து சறுக்கி விடப் பார்த்தன.

ஓரிடத்தில் சறுக்கித் தடுமாறி ஒரு கருங்கல்லில் விழுந்ததில்... அதன் கூரான பகுதி முழங்காலைச் சிராய்த்து விட்டது.

விண் விண் என்று வலி தெறிக்க...

சேலையைச் சற்று உயர்த்தி அடிபட்ட இடத்தில் தொட்டுப் பார்த்தாள். பிசுபிசுவென்று இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

எழுந்து கொள்ளக்கூடத் திராணியில்லாமல்... விழுந்த இடத்திலேயே செய்வதறியாது அமர்ந்திருந்தாள் நேத்ரா.

## 16

பலத்த காற்று வீசியதால்... காட்டு மரங்கள் பேயாட்டம் போட்டன.

காற்றில் மண் வாசனையும் மூலிகை மணமும் கலந்து வந்து நாசியைத் துளைத்தன.

ஐயோ... மழை வேறு வரும் போலிருக்கே?



எப்படி இந்தப் பாதையில் ஏறிச் செல்லப் போகிறேன்?

ஒரு சில இடங்களில் இடுப்பளவுக்குக் காலைத் தூக்கி வைத்து ஏற வேண்டுமே?

நரேனுடன் வந்ததால்... அன்று அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு ஏறிச் சென்று விட்டேன்?

ஆனால் இன்று...?

நரேன் எங்கே போயிட்டீங்க?

'பார்த்து பத்திரம் நேத்ரா!'ன்னு கரிசனமா நொடிக்கொரு தரம் சொன்னீங்களே?

நள்ளிரவில் நடுக்காட்டுல எப்படி விழுந்து கிடக்கிறேன் பார்த்தீங்களா?

அப்பா! 'வயசுப் பொண்ணை வீட்டுல தனியா விட்டுட்டுப் போக மனசில்லைம்மா... பக்கத்து வீட்டுப் பாட்டியை துணைக்கு வந்து படுத்துக்கச் சொல்லும்மா... பத்திரமா இருந்துக்கோம்மா'ன்னு... மாய்ஞ்சு மாய்ஞ்சு சொல்வீங்களேப்பா!

உங்களையும் இழந்து, எனக்கு வாழ்க்கை தரப் போறவரையும் இழந்து... நடுஜாமத்துல அநாதரவா எப்படித் தவிக்கிறேன் பாருங்கப்பா?

நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்?

எனக்கு எதற்காக இந்தக் கதி ஏற்பட்டது?

இன்றைக்கு எனக்கு ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும். வாழ்வா? சாவா? என்று பார்த்துவிட வேண்டியதுதான்.

பஞ்சலிங்கத் தரிசனம் செய்யும்போது... சுவாமியின் சிரசிலிருந்து பூ விழுந்ததே!

அவ்வளவு பெரிய மணியிலிருந்து அனிச்சையாக மணியோசை ஓங்கி ஒலித்ததே?

இதெல்லாம் நல்ல அரிய சகுனங்கள் ஆயிற்றே?

சிவகுரு ஐயாவின் தயவும் அன்பும் கிடைத்ததே? இத்தனையும் கிடைத்தும்... எனக்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது?

சரி... சுய பச்சாதாபப்பட்டு பிரயோஜனம் இல்லை...!'

கீழுதட்டை அழுந்தக் கடித்து பொங்கி வந்த அழுகையை அடக்கியபடி எழுந்து மெல்லத் தடுமாறியபடி நடக்கலானாள்.

பலத்த காற்றுடன் மெல்லத் தூறல் வேறு போடத் தொடங்கியது.

ஐந்தே நிமிடங்களில் தூறல் வலுத்து மழை பெய்யத் துவங்கியது.

டமடமவென்று காதைச் செவிடாக்கும்படியாக இடிச் சத்தம்...

ஆகாயத்தைக் கீறிய தினுசில் மின்னலொன்று பளீரென்று முகம் காட்டி விட்டு மறைந்தது.

'அப்பப்பா! என்ன வெளிச்சம்?'

எங்கோ நரி தீனமாய் ஊளையிடும் சப்தத்தைக் கேட்டதும்... நேத்ராவுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போனது.



அரை இருளில் பாதை ஓர முரட்டு வேர்களும்கூட பார்வைக்கு மலைப் பாம்புகளாய் நெளிந்து... பீதியைக் கிளப்பின.

மலைக்காட்டுப் பாதையில் சாதாரணமாகவே உருட்டுக் கற்களும் வழுக்குப் பாறைகளும் ஆளை அடியோடு சறுக்கிவிட... கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும்.

மழை வேறு வலுத்து விட்டதால்...

மலைக் காட்டுப்பாதையில் செம்மண், மழைநீரில் குழைந்து சொதக்... சொதக்... என்று ஒரு எட்டெடுத்து வைப்பதற்குள் போதும் போதுமென்றிருந்தது.

மீண்டும் நரி ஊளையிடும் சப்தம் கேட்டதும்...

மழையில் நனைந்த புறாக்குஞ்சு போல் நடுநடுங்கிப் போனாள்.

'காட்டு மிருகங்கள் நடமாடும் வனப் பகுதி ஆயிற்றே?

நரிக்கோ வேறு கொடிய மிருகங்களுக்கோ... நரேன் இரையாகிப் போயிருப்பாரோ?

என்னையும் அறியாமல்... நான் எதற்கு நடுங்கு கிறேன்? அப்படி எதுவும் நடந்திருந்தால்...? அதே கொடிய மிருகங்கள் என்னையும் தங்களுக்கு இரையாக்கட்டும்.'

வைராக்கியத்தோடு தொடர்ந்து நடந்தாள்.

'பவுர்ணமி அன்று பஞ்சலிங்க தரிசனத்துக்கு கங்கையம்மா வருவாரா?

அந்தம்மாவைப் பார்ப்பதற்காக துறவிகளும் மற்றவர்களும் வருவார்கள் என்று கேள்விப்பட்டோமே?

அப்படியென்றால்... மருந்து மலையின் உச்சிக்குச் சென்றால்... மற்றவர்களைப் பார்க்கலாமா?

அந்த பக்தர்கள் எந்த வழியாகச் சென்றிருப்பார்கள்?'

டக்கென்று நரேந்திரன் நேற்று மதியம் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

"சாமிநாதன் ஒரு விஷயம் சொன்னாரு நேத்ரா! மேகமூட்டமா இருக்கு... மழை வரும் போலிருக்கு.

மழை வர்ற சமயத்துல ஜனங்க மருந்து மலைப் பக்கமே வர மாட்டாங்க... இந்த வாட்டி பவுர்ணமி தரிசனத்துக்குப் பக்தர்கள் வர்றது சந்தேகம்தான்...

அது ஒரு திறந்த வெளிக் கோவில். அதோட மலை மேல ஏறி இறங்கறது ரொம்பவும் கஷ்டம்.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிங்கிறதால... மழை நேரத்துல ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள பக்தர்கள் ரொம்பவே பயப்படுவாங்கன்னு... சொன்னாரு நேத்ரா!"

வாசுதேவனின் ஆட்கள் வேற நடமாடறாங்க... 'நிஜம்' நிகழ்ச்சியில பரபரப்பா வேற செய்தி வந்துட்டதால... கங்கையம்மா இனிமே பகிரங்கமா பவுர்ணமி அன்னிக்கு வரமாட்டாங்கன்னு... எனக்குத் தோணுது.

அதுக்காகத்தான் அவங்க இருக்கிற இடத்தை நாமளே தேடிப் போய்..."



நரேந்திரன் பேசி முடிக்கும் முன்... நேத்ரா அவசரமாய்க் குறுக்கிட்டாள்.

"என்ன நரேன்? சின்னக் குழந்தை மாதிரி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்றீங்க? நைட்லே தான் ஆபத்துல இருந்து மீண்டு வந்திருக்கோம்.

கொஞ்சம் நிதானமா பொறுமையா இருங்க. சிவகுரு ஐயா வந்ததும் அவரையே கேட்போம். அவரு என்ன சொல்றாரோ? அதன்படி நாம நடந்துப்போம். அதுதான் நமக்கு நல்லது. சரியா?"

ஒப்புக்குத் தலையாட்டியவன்தான்... அதற்கு மேல் அவன் இவளிடம் சரியாய் எதுவும் பேசாமல்... தீவிர யோசனையிலேயே மூழ்கிப் போயிருந்ததை எண்ணிப் பார்த்தபடியே... பெரிய பாறைகளில் சிரமப்பட்டுக் கவனமாய் ஏறி நடந்தாள்.

சட...சட...சடவென்ற பெரும் சப்தத்துடன் மரக்கிளைகள் ஏதோவொரு மரத்திலிருந்து விழுந்ததைக் கேட்டு திக்கென்று அதிர்ந்து நின்றாள்.

சிறிது நிதானித்துவிட்டு மீண்டும் பத்து நிமிடங்கள் சற்றே ஏறிச் சென்று மலைப் பாதையில் தட்டுத் தடுமாறி நடந்தபின்... சமதளப் பரப்பு வந்தது.

'சமதளப் பரப்பில் கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்பு... மீண்டும் ஏற்றமான மலைப் பாதையில் பயணித்தால் மருந்து மலை பஞ்சலிங்க திறந்த வெளிக் கோவிலை அடைந்து விடலாம்.'

மனதில் சிறு நிம்மதி ஜனித்தது நிஜம்!

சமதளப் பரப்பு என்றாலும் அடர்த்தியான மரங்களுடன் பாதை குண்டும் குழியுமாகத் தானிருந்தது.

மழையின் வேகம் சற்றே தணிந்திருந்தது. அடர்த்தியான மரங்கள் இருந்ததால்... நிலா வெளிச்சம் அவ்வளவாக பூமியில் ஸ்பரிசிக்கவில்லை.

விழிகள் தெறிக்க உற்றுக் கவனித்துப் பார்த்து நடக்க வேண்டியதாய் இருந்தது.

இடுப்பளவுக்கு வளர்ந்திருந்த முட்செடி அவளது முழங்கையைக் கீறிவிட...

"உஸ்... அம்மா!"

தகதகவென்று தீயாய் எரிந்த முழங்கையை மெல்லத் தடவி விட்டுக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

'பள்ளம் எது? அதல பாதாளம் எதுவென்றே தெரியவில்லையே?

சற்று நேரத்தில் இந்தப் பாதை வலது புறமாக வளைந்து திரும்பும் அல்லவா?'

யோசித்தபடியே நடந்தபோது பாதை ஒரு வளைவில் திரும்புவது போலிருந்தது.

நிதானமாகத் தடுமாறி நடந்தபோது... காட்டு நாய் மெல்லக் குரைக்கும் சப்தம் கேட்டது.

திடீரென்று அந்தச் சப்தம் நின்று போய்... காட்டு நாய் ஓலமிட்டு அழும் ஓசை கேட்டது.



'நாய் ஊளையிட்டு அழுகிறதே? இது அபசகுனம் அல்லவா? எங்கிருந்து சப்தம் வருகிறது?'

நாலாபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்து விட்டு... அந்த வளைவில் தடுமாறி நடந்தபடி... நேர் எதிரே பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட... வீலென்று அலறினாள்.

அவள் அலறிய அலறலில்... அந்தக் கானகமே கிடுகிடுத்தது.

## 17

**நே**த்ராவின் உடம்பில் உதறல் எடுத்தது. திகிலாலும் பயத்தாலும் விழிகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவளையும் அறியாமல் கைகளால் துழாவி... அருகில் கைக்கு அகப்பட்ட மரத்தைச் சட்டென்று கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

'ஐயையோ! அது என்ன? வெள்ளை வெளேரென்று ஏதோவொரு உருவம் நிற்கிறதே?

ஆயிரம் ட்யூப் லைட் போட்டாற் போன்று என்ன ஒரு வெளிச்சம்?

ஒருவேளை இது மோகினிப் பிசாசாக இருக்குமோ? இல்லை... இதுதான் வனமோகினியா?'

திக்... திக்... திக்கென்று இதயத் துடிப்பு பன்மடங்காக எகிறியிருந்தது.

மரத்தைக் கட்டிப் பிடித்தபடி விழிகளை இறுக மூடியிருந்த நேத்ரா 'நமசிவாய... நமசிவாய...!' என்று விடாமல் பஞ்சாட்சர மந்திரத்தை ஜபித்தாள்.

ஒரு சில கணங்களில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு வலது கையால் மார்பில் கையை வைத்து அழுத்தியபடி தைரியத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு... விழிகளைத் திறந்து உற்றுப் பார்த்தாள்.

இது... இது... வனமோகினியும் இல்லை... மோகினிப் பிசாசும் அல்ல...

ஏதோ ஒரு மரத்தைப் போல் அல்லவா இருக்கிறது? கிளைகளும் இலைகளும் ஜெகஜோதியாக இருக்கின்றனவே...?

ஆமாம்... காற்றில் இலைகளும் கிளைகளும் அசைகின்றனவே?

ஆம்... இது மரமேதான்...

பளீரென்ற வெளிச்சத்தை அள்ளித் தரும் மரம்.

இதயத்தில் படபடப்பு அடங்கி... மூளை மெல்ல சிந்திக்கத் தொடங்கியது.

"காட்டில் இதுபோன்ற மரங்கள் உண்டு. தனியாக துணிச்சலாக காட்டிற்குச் செல்லும் இளைஞர்கள்... இது போன்ற மரத்தை திடீரென்று பாக்கும்போது... அதிர்ச்சியில் உறைந்து சில சமயங்களில் பயத்தில் இரத்தம் கக்கி இறந்து விடுவார்கள்.



தனியாகக் காட்டிற்குப் போன வாலிபனை மோகினிப் பிசாசு அடித்து விட்டது என்று வெளியில் பேசிக் கொள்வார்கள்.

வெளிச்சத்தை அள்ளி வழங்கும் மரத்திற்கு ஜோதி மரம் என்று பெயர். பழங்காலத்தில் இதுபோன்ற மரங்கள் இருந்ததற்கான சான்றுகள், இலக்கியங்களிலும், காவியங் களிலும் உள்ளன. மகாகவி காளிதாசன் இயற்றிய ரகுவம்சத்தில் கூட இதைப் பற்றிய குறிப்பு இருக்கிறது..."

அப்பா தசரதன் முன்பொரு சமயம் இவளிடம் கூறியது... இப்போது மெல்ல நினைவுக்கு வந்தது.

'இது ஒரு வகையில் அரிய மரம்... காணக் கிடைக்காத மரம். கிட்டத்தட்ட பொக்கிஷம் மாதிரின்னு வச்சுக்கோயேன்... இதுல என்ன விசேஷம்ன்னா... பகல்லே இந்த மரத்தைப் பார்த்தா... சாதாரண மரத்தைப் போல்தான் இருக்கும்... ஒரு வித்தியாசமும் தெரியாது...

இரவுலே மட்டும்தான் ஜெகஜோதியா வெளிச்சம் தரும். நல்லா விஷயம் தெரிஞ்சவங்க ஜோதி மரத்தின் கிளையை ஒடிச்சு அதை இருட்டுல... இரவு நேரத்துல வெளிச்சத் துக்காகப் பயன்படுத்துவாங்களாம்...

சாதுக்கள், துறவிகள், சித்தர்களுக்குத்தான்... இந்த மரத்தை இனம் கண்டுபிடிச்சு பயன்படுத்தத் தெரியும். ஒரு சில காட்டுவாசிகளுக்கும் இதைப் பத்தித் தெரிஞ்சிருக்கு."

அப்பா அன்று சொன்ன வார்த்தைகள்... அவளது செவிகளில் ரீங்காரமிட்டன.

பயமும், திகிலும் மறுகணமே மாயமாகிப் போக... மனதில் நிம்மதியும் சின்னத் திருப்தியும் தலை தூக்கின.

'ஆஹா... இத்தனை கஷ்டத்திலும் மனதில் சின்னதாய் மகிழ்ச்சி தோன்றுகிறதே? அரிய ஜோதி மரத்தைப் பார்க்கும் பாக்கியம் ஏற்பட்டிருக்கிறதே!'

அந்த மரத்தை நோக்கி நிதானமாக நடந்தாள்.

சற்றுமுன் ஜோதி மரத்தைப் பார்த்துவிட்டு... பீதியில் அலறி உறைந்தவளுக்கு... அந்த மரத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை முகிழ்த்தது.

'இன்னமும் பத்தடி தூரம்தான்... ஜோதி மரத்திற்குப் பக்கத்தில் சென்று விடலாம்!' என்று மனம் கணக்குப் போடும் சமயத்தில்...

அவளது விழிகள் எதையோ கண்டு நிலைகுத்தி நின்றன.

மீண்டும் நரி ஊளையிடும் சப்தம் காதைக் கிழித்தது.

நாய்களும் நரிகளும் ஊளையிடுகின்றனவே? இது நல்லது அல்லவே?

மனதில் மறுபடியும் சொரேல் என்று திகில் ஊறியது.

அதே சமயத்தில்... ஜோதி மரம் தந்த வெளிச்சத்தில் சுற்றிலும் ஓரளவுக்கு நன்கு பார்க்க முடிந்தது.

ஜோதிமரத்திற்கு அப்பால்... சுமார் ஏழெட்டு அடி தூரத்தில்... ஓர் உருவம் மெல்ல நகர்ந்து சென்று கொண்டிருந்தது.



'அது என்ன?'

உற்றுப் பார்த்தாள் நேத்ரா.

'வெள்ளை உருவம் நகர்கிறதே... எப்படி?

ஊஹூம்... யாரோ ஒருவர் வெள்ளைத் துணியால் தலையைப் போர்த்தியிருப்பது போல் தோன்றுகிறதே?

கிட்டத்தட்ட வள்ளலாரைப் போன்று ஒரு தோற்றம்!

மெல்ல நடந்து செல்வதைப் பார்த்தால்... மருந்து மலை பஞ்சலிங்க திறந்த வெளிக் கோவிலுக்குத்தான் போவது போல் தெரிகிறதே?

யாராய் இருக்கும்?

வாசுதேவன் அனுப்பிய ஆளாய் இருக்குமோ?

நடை உடையைப் பார்த்தால்... அப்படித் தெரிய வில்லையே?

சாதுவாய்... சாந்தமாய்... சாத்வீகமாய் நடந்து செல்கிறாரே?

இது சித்தர்கள் நடமாடும் வனப்பகுதி அல்லவா? இன்று பவுர்ணமி வேறு! கொட்டும் மழையைக் கூடப் பொருட்படுத்தாமல் மருந்து மலை உச்சிக்குப் பஞ்சலிங்க தரிசனம் செய்யப் போகிறாரே?

இவரும் சித்தரோ?

கண்டிப்பாக அப்படித்தான் இருக்கும்...! என்று என் உள்மனம் சொல்கிறதோ?

இவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டியதுதான்.

எது நடந்தாலும் சரி... துணிந்தவனுக்குத் துக்கமில்லை என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

அவர், கண் பார்வையிலிருந்து மறைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்...!'

நடையை எட்டிப் போட்டாள் நேத்ரா.

ஜோதி மரத்தை ஆர்வமாய் ஊன்றிப் பார்த்தபடியே அதைக் கடந்து நடந்தாள்.

இந்த மலைப் பாதையில் பலமுறை நடந்து பழக்கப்பட்டவரைப் போன்று... நிதானமாகத் தட்டுத் தடுமாறாமல் முன்னே சென்று கொண்டிருந்தவரைத் தொடர்ந்து நடந்து சென்றபோது... நேத்ராவுக்கு அவ்வளவு சிரமம் தெரியவில்லை.

மலைப்பாதை ஏற்றமாக மேல் நோக்கிச் சென்றது.

மூச்சிரைக்க அவரைத் தொடர்ந்தபடியே ஏறிச் சென்ற நேத்ராவுக்கு...

அவரது காலில் விழுந்து தன் நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி கேட்க வேண்டும் என்று தோன்றியது.

'சிவகுரு ஐயாவை மீண்டும் பார்க்க முடியவில்லை. இவரிடம் அமுது மன்றாடியாவது உதவி கேட்க வேண்டியது தான்... கங்கையம்மாவின் குகைக்குச் செல்லும் பாதையைக் காட்டிக் கொடுத்தால்கூடப் போதுமே...!'

யோசித்தபடியே மூச்சிரைக்க ஏறிச் சென்றாள்.



'இதோ... பஞ்சலிங்க திறந்த வெளிக் கோவிலும் வந்து விட்டதே?

இனியும் தாமதிப்பது சரியில்லை... வள்ளலாரைப் போன்று நடந்து செல்லும் பெரியவரை அணுகி உதவி கேட்டுவிட வேண்டியதுதான்...!'

"ஐயா! நிர்க்கதியா நிற்கிறேன் ஐயா! எனக்கு நீங்கதான் உதவணும்..." தழுதழுத்தபடி கெஞ்சினாள்.

அவர் முதுகு காட்டியே நின்றிருந்தார்.

பதில் இல்லை.

அன்று போல்... இன்றும் காற்று பலமாய் வீசியது.

அப்போது...

## 18

கவலையும் பயமும் அன்று முழுவதும் நேத்ராவை ஆட்டிப் படைத்ததால்... சாமிநாதன் கொண்டு வந்து வைத்த பழங்களை அவள் தொடவே இல்லை.

பசி மயக்கத்திலும் திகிலிலும் அவளது உடல் தள்ளாடியது. காற்று வீசிய வேகத்தில் விழுந்து விடுவோமோ என்ற பயத்தில்... பஞ்சலிங்கத்திற்கு நேர் எதிரே நின்றிருந்த நாகலிங்க மரத்தின் கிளையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

கீழே உதிர்ந்திருந்த இலைச் சருகுகள் சலசலவென்ற சப்தத்துடன் உருண்டோடின.

பலத்த காற்று வீசியதால்... முதுகு காட்டி நின்றிருந்தவரின் தலை வரை முக்காடு போல் போர்த்தி யிருந்த வெள்ளைத் துணி விலகி நழுவியது.

அதே கணத்தில் அவர் மெல்லத் திரும்பிப் பார்த்தார். காதைப் பிளக்கும் இடியோசையைத் தொடர்ந்து வானில் மின்னல் மின்னி மறைந்தது.

பளீரென்ற வெளிச்சத்தில்... அவரது முகத்தைப் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

"அ... அப்பா... நீ... நீங்களா?"

நேத்ராவுக்குத் தனது விழிகளையே நம்ப முடிய வில்லை.

'சதா அப்பாவின் ஞாபகத்தில் நான் இருப்பதால்... எதிரே இருப்பவரின் முகம்... அப்பாவைப் போல் தெரி கிறதா? அப்பாவேதானா?

வாசுதேவனின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருந்தவர்... இங்கு எப்படி வந்தார்?

சித்தர்கள், நினைத்த மாத்திரத்தில் பல்வேறு ரூபங்களை எடுத்து நடமாடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே?

ஒருவேளை... இந்தச் சித்தர் அப்பாவின் ரூபமெடுத்து உலாவுகிறாரோ?

நடப்பதெல்லாம் அதிசயமாக இருக்கிறதே? நான் காண்பது கனவா? நனவா?

கிள்ளிப் பார்த்தால் வலிக்கிறதே? இது நிஜம்தான். சிவகுரு ஐயாதான்... அப்பாவின் ரூபத்தில் நடமாடுகிறாரா?'



மனதுக்குள் அடுக்கடுக்கான கேள்விகள் முளை விட்டன.

"என்ன நேத்ரா? அப்படிப் பார்க்கிறே? அப்பாவை அடையாளம் தெரியலையா?"

சாட்சாத் அப்பாவின் குரல்தான்... அப்பாவேதான்!

"அப்பா...!" தழுதழுத்தபடியே ஓடிச் சென்று அவரது கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் நேத்ரா.

"வாசுதேவனின் கும்பல் கிட்டேயிருந்து எப்படிப்பா தப்பிச்சு வந்தீங்க? நீங்க காணாம போனதும் உங்களைத் தேடிக்கிட்டு நானும் நரேனும் இந்தக் காட்டுக்கே வந்துட்டோம் அப்பா!

சிவகுரு ஐயாதான் எங்களுக்கு அடைக்கலம் தந்தாரு... பெரிய ஆபத்திலிருந்தும் அவர்தான் எங்களைக் காப்பாத்தினாரு...

உங்களை மீட்கணும்னா... கங்கையம்மாவை நேரிலே சந்திக்கணும். அவங்களைச் சந்திச்சா... ஒரு தீர்வு கிடைக்கும்னு நரேன் ரொம்பவே நம்பினாரு...

என்கிட்ட கூடச் சொல்லிக்காம... நடுராத்திரியிலே அந்தம்மாவைப் பார்க்கிறதுக்காக கிளம்பிப் போனவருதான்... திரும்பி வரவே இல்லை...

நமக்காகக் காட்டுக்கு வந்தவரு... அவருக்கு என்ன ஆச்சோ? தெரியலை...

அதான் நானும் அவரைத் தேடிக்கிட்டு இங்கே வந்துட்டேன்...

நீங்க காணாம போனதிலேருந்து இதோ இந்த நிமிஷம் வரைக்கும் நான் துடிச்ச துடிப்பு இருக்கே? அது இதோ இந்தப் பகவானுக்குத்தான் தெரியும்..."

பஞ்சலிங்கத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு 'கோ'வென்று கதறினாள் நேத்ரா.

அவளது புஜத்தில் மிருதுவாய் ஒரு கரம் படிந்ததும்... சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

காவி நிறத்தில் புடவையுடன் கழுத்தில் ருத்திராட்ச மாலையையும் ஸ்படிக மாலையையும் அணிந்தபடி நெற்றியில் விபூதியும் பெரிய குங்குமமும் துலங்க ஜடாமுடியுடன் ஒரு அம்மாள் நின்றிருந்தார்.

வயது அறுபதுக்குள் இருக்கலாம்.

முகத்தில் அலாதியாய் ஒரு தேஜஸ்! உதட்டில் ஒரு தெய்வீகப் புன்னகை ஒட்டிக் கொண்டிருந்தது.

"மனசை என்னிக்குமே தளரவிடக் கூடாது நேத்ரா! கடைசி வரைக்கும் நம்பிக்கையைக் கைவிடவே கூடாது. இவ்ளோ நேரமும் வைராக்கியமா... எது நடந்தாலும் போராடிப் பார்த்துடலாம்கிற உத்வேகத்தோட துணிஞ்சு தைரியமா... மலை உச்சி வரைக்கும் வந்தியே?

உன்னை நான் பாராட்டறேன்... எப்பவும் அதே மனோதிடத்தோடதான் இருக்கணும். புரிஞ்சுதா?"

நீர்த் திரையிட்ட விழிகளோடு அந்தம்மாவை ஏற இறங்கப் பார்த்த நேத்ரா... திகைத்துப் போய் தசரதனை ஒரு



கணம் ஏறிட்டு விட்டு... மீண்டும் அந்தம்மாவின் மீதே பார்வையைப் பதித்தாள்.

"நீங்க?" தயங்கி நிறுத்தினாள்.

"கங்கையம்மாவே...தான்!" புன்னகைத்தார்.

அவளது முகத்தில் குபீரென்று ஆச்சரியமும் திகைப்பும் பரவ... சட்டென்று கைகளைக் கூப்பி... அந்தம்மாளின் பாதங்களில் பணிந்தாள்.

"ஊஹூம்... பகவானின் சன்னிதானத்துக்கு முன்னாடி யார் காலிலும் விழக்கூடாது. எழுந்திரு!

என்னடா இது? மூணு தலைமுறையைக் கடந்தும் இன்னமும் கூன் போடாம முதுமையில தளர்ச்சியடையாம இருக்கேனேன்னு பார்க்கிறியா?"

"ஆ... ஆமா!"

"எல்லாமே சஞ்சீவி மூலிகையோட மகிமையால தான்..."

"அ... அந்த மூலிகையைப் பத்தி தெரிஞ்சுக்கணும். அதை வச்சு பணமாக்கணும்கிற வெறியிலதான்... அந்த வாசுதேவன் அப்பாவைக் கடத்தினான். அப்பா கடவுள் புண்ணியத்துல எப்படியோ தப்பிச்சுட்டாரு. இது விஷயமா உங்களைத் தேடி வந்த நரேனைக் காணோமே?

ஒருவேளை அவரு அந்தக் கும்பல்கிட்டே மாட்டிக் கிட்டாரோ?" கவலையுடன் கேள்வி கேட்டவளை உற்றுப் பார்த்துவிட்டு கலகலவென்று சிரித்தார் கங்கையம்மா.

"வாசுதேவன் கிட்டே உங்கப்பா மாட்டிக்கிட்டாருன்னு உனக்கு யார் சொன்னாங்க நேத்ரா?"

அவளது முதுகுக்குப் பின்னாலிருந்து குரல் வந்ததும்... சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

சிவகுரு நின்று கொண்டிருந்தார்.

"ஐயா... நீங்க திரும்பி வர்ற வரைக்கும் என்னால பொறுமையா பர்ணசாலையில காத்திருக்க முடியலை.

மனக்கவலை என்னை ஆட்டிப் படைச்சதாலே... உங்ககிட்ட அனுமதி கேட்காம... இங்க கிளம்பி வந்துட்டேன்... நரேனும் அதே தப்பைத்தான் செய்தாரு.

உங்களுக்கு சகலமும் தெரிஞ்சிருக்குமே? முதல்லே நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்!" என்று இரு கரங்களையும் கூப்பினாள்.

"என் கேள்விக்கு இன்னமும் நீ பதில் சொல்லலை!" என்று மந்தகாசமாய்ப் புன்னகைத்தவரை... குழப்பத்துடன் ஏறிட்டாள்.

"வாசுதேவன்தான் கடத்தியிருக்கணும்னு... நானாகத் தான் யூகிச்சேன்.

ஏன்னா.. முதல் நாள் வீட்டுக்கு வந்த மனுஷன்... அப்பா எதுக்கும் வளைஞ்சு கொடுக்காம இருந்ததும் கோபாவேசமா ஏமாற்றமா எழுந்து போனாரு...

ஆங்காரமா மூர்க்கத்தனமா அப்பாவை எச்சரிச்சுட்டுப் போனதை நான் பார்த்தேன். மறுநாளே அப்பா வீட்டுக்கு வரலை...



வாசுதேவன் தன் சகாக்களோட அப்பாவைக் காட்டுக்கே கடத்திட்டுப் போயிருக்கணும்னு... நரேன் யூகிச்சாரு... நாங்க யூகிச்சபடியே அந்தக் கும்பலோட வாசுதேவன் இங்கேதானே நடமாடிட்டிருக்கான்...?"

"உங்க யூகம் சரிதான்.. ஆனா வாசுதேவன் உங்கப்பாவைக் கடத்தவே இல்லை..."

"யூகம் சரிதான்னு... சொல்றீங்க. வாசுதேவன் கடத்தவே இல்லேன்னும் சொல்றீங்க. குழப்பமா இருக்கே ஐயா!" நேத்ரா, தசரதனையும் சிவகுருவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"வாசுதேவன் கடத்த முற்படுவான். அது மட்டுமல்ல பேராசையாலே அவன் எந்த எல்லைக்கும் போவான்னு தெரிஞ்சுதான்... தசரதன் சட்டுன்னு மருந்து மலைக்கு அவராவே கிளம்பி வந்துட்டாரு..."

"அ... அப்படியா? இப்படித்தான் நடக்கும்னு ரொம்பத் துல்லியமா கணிச்சு... என்கிட்ட கூட சொல்லிக்காம காட்டுக்குக் கிளம்பி வந்திருக்காரே?

ரொம்ப ஆச்சரியமா இருக்கு... அப்போ... நரேன் என்ன ஆனாரு? தயவுசெய்து சொல்லுங்க ஐயா!"

பதில் ஒன்றும் வரவில்லை.

மூவரும் மவுனமாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு இருந்ததும்...

உள்ளூர திகில் கிளை விட்டுப் படர்ந்தது.

# 19

காட்டுக்குள் தன்னந்தனியாய் மலைப்பாதை மீது ஏறி வந்ததைவிட... இப்போதுதான் அதிகப்படியாய் இதயத் துடிப்பு எகிறியதைப் போன்ற உணர்வு... நேத்ராவுக்கு ஏற்பட்டது.

"அப்பா! என்னப்பா இது? இப்படி மூனு பேரும் மவுனமா இருக்கிறதைப் பார்த்தா... எனக்கு ரொம்ப திகிலா இருக்கே? நரேனுக்கு என்ன ஆச்சுப்பா? நம்மாலதானேப்பா அவருக்கு இந்தக் கதியாச்சு? அவருக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... நா... நான்... உயிரோடவே இருக்க மாட்டேன்... அப்பா!" உடைந்து போய் அழத் தலைப்பட்டாள் நேத்ரா.

"நேத்ரா! இதோ... நான் இங்கதானிருக்கேன்!"

ஒரு சரிவிலிருந்து மரக்கிளைகளை ஒதுக்கியபடி வந்து கொண்டிருந்தான் நரேந்திரன்.

அவனைக் கண்டதும் நேத்ராவுக்கு உலகமே மறந்து போனது. ஓடிச்சென்று அவன் எதிரே நின்றவள்... "உங்களுக்கு ஒண்ணும் ஆகலையே? நரேன்! ஐ லவ் யூ ஸோ மச்... உங்க அளவுக்கு நான் அன்பை வெளிப்படுத்தறதே இல்லைன்னு... என் மேல குறைபட்டுப்பீங்களே? இப்ப சொல்றேன்? கேட்டுக்கோங்க... நீங்க இல்லாம என்னால ஒரு நிமிஷம்கூட வாழ முடியாது. நீங்க மட்டும் வராம இருந்திருந்தா... நான் கண்டிப்பா என் உயிரை விட்டுருவேன்!" என்றபடி விசும்பினாள்.



உரிமையாய் அவளை இழுத்துத் தன் மார்போடு சாய்த்துக் கொண்டான் நரேந்திரன்.

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? நான்தான் பத்திரமா வந்துட்டேனே? கண்ணைத் துடைச்சுக்கோ... நடந்த விஷயங்களைப் பத்தி சொன்னா... நீ ரொம்ப ஆச்சரியப்பட்டுப் போவே!"

"என்ன நடந்துச்சு நரேன்?" புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... அவனது பிடியிலிருந்து மெல்ல விலகி சங்கோஜமாய்ச் சுற்றிலும் இருந்தவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு... ஆர்வமாய் நரேந்திரனை ஏறிட்டாள்.

"நேத்து ராத்திரி மலைப்பாதை மேல ஏறி வந்துட்டிருந்தேன். செடிகொடிகளையும் மரக்கிளைகளையும் ஒதுக்கிக்கிட்டு யாரோ என்னைப் பின்தொடர்ந்து வர்ற மாதிரி சலசலப்புச் சப்தம் கேட்டுட்டே இருந்தது. ஏதாவது கொடிய மிருகமா? இல்ல... வாசுதேவனோட ஆட்களான்னு... தயங்கிகிட்டே நான் போயிட்டிருந்தப்போ... யாரோ ஒருத்தன் மரக்கட்டையால ஓங்கி என் தலையில அடிச்சுட்டான். நான் அப்படியே தலையைப் பிடிச்சுக்கிட்டு திரும்பிப் பார்த்தப்போ... வாசுதேவன்தான் தன் ஆட்களோடு நின்னுட்டிருந்தான். நான் அப்படியே மயங்கி சரிஞ்சுட்டேன்."

"ஐயோ... தலையில பலமா அடிச்சுட்டானா?" பதறினாள் நேத்ரா.

"பதட்டப்படாதே நேத்ரா! நான் கண் விழிச்சப்போ... மூலிகைகளை சின்ன மஞ்சத் துணியில கட்டி அதை

வைச்சுக் காயத்துக்கு... இந்த கங்கையம்மாதான் ஒத்தடம் கொடுத்திட்டிருந்தாங்க... பக்கத்துல ஜடாமுடியோட அவங்க கணவர்... எதிர்த்தாப்பல சிவகுரு ஐயாவும், மாமாவும் நின்னுட்டிருந்தாங்க...

மாமாவைப் பார்த்ததும்... எனக்கு ஆச்சரியம் தாங்கல... ஏதோ மூலிகைச் சாற்றை சிவகுரு ஐயா, எனக்குக் குடிக்கக் கொடுத்தாரு... உனக்கு ஒண்ணு தெரியுமா? மாமாவும் சிவகுரு ஐயாவும் ஒண்ணுதான்... என்ன முழிக்கிறே? எஸ் நேத்ரா!

சிவகுரு ஐயாவைப் போலவே சித்து விளையாட்டுக்கள் எல்லாம் மாமாவுக்கும் அத்துபடி... அவரைப் போலவே இவருக்கும் ஞானதிருஷ்டி எல்லாம் உண்டு..."

"அப்படியா?" ஆச்சரியத்திலும் சந்தோஷத்திலும் விழிகளில் கண்ணீர் தளும்ப... தசரதனைப் பெருமிதமாய் ஏறிட்டாள்.

தூரத்தில் மீண்டும் காட்டு நாய்களும் நரிகளும் ஊளையிடும் சப்தம் கேட்டதும்... அனைவரும் அந்தத் திக்கை நோக்கி திரும்பிப் பார்த்தனர்.

"நேத்து ராத்திரி என்னை அடிச்சுப் போட்டுட்டு அந்தக் கும்பல் நீரோடையைக் கடக்க முற்பட்டபோது... காட்டு வெள்ளம் திடீர்னு பிரவாகமெடுத்து வந்து அடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு... ஒருத்தர்கூட மிஞ்சல... அந்தக் கும்பல்லே யாரோ ஒருத்தரோட உடம்பு கரையோரத்திலேயோ.. பாறை இடுக்கிலேயோ சிக்கியிருக்கும்னு நெனைக்கிறேன்... அதான்



நரிக்கூட்டமும், நாய்களும் இரை கிடைச்ச சந்தோஷத்துல ஊளையிடுது...!"

நரேந்திரன் பேசி முடித்ததும் கங்கையம்மா சிரித்தார்.

"கெடுவான் கேடு நினைப்பான்னு சொல்வாங்க. அது சரியா போச்சு பார்த்தியா நேத்ரா? அபூர்வமான விஷயமெல்லாம் அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்காது.

கிடைச்சுட்டா... அதைத் தப்பான வழிக்கு பயன்படுத்த ஆரம்பிச்சிடுவாங்க... சில ரகசியங்கள் ரகசியமாத்தான் இருக்கணும்... அப்படி இல்லேன்னா... அதனால ஊர் உலகத்துக்குத்தான் கெடுதல்!

தசரதன் ரொம்ப நல்லவர்... அவர் சிவகுருவோட சேர்ந்து அரிய வகை மூலிகைகள் மூலமா... மனித சமுதாயத்துக்குச் சேவை செய்துட்டு இங்கேயே இருக்கணும்னு பிரியப்படறாரு...

நேத்ரா! நீயும் நரேந்திரனும் மருத்துவர்கள். உங்களுக்கு ஒரு சில மூலிகைகளைப் பத்தின தகவல்களை சிவகுரு சொல்வாரு... அதை வைச்சு உங்க மருத்துவம் மூலமா... தீராத நோயோட தவிக்கிற நல்ல மனம் படைச்சவங்களுக்கு நீங்க உதவணும். மனுஷங்களைப் பார்க்கிற பார்வையிலேயே எடை போடற திறமை உங்ககிட்ட இருக்கு...!" என்று கூறிவிட்டு நிறுத்தினார் கங்கையம்மா.

"அது மட்டுமில்ல... உயிரே போகக்கூடிய நிலைமை வந்தாலும் கடைசி வரைக்கும் வைராக்கியமா, விடா முயற்சியோட போராடற குணம் உங்களுக்கு இருக்கிறதால...

எந்த ரகசியத்தையும் கட்டிக் காப்பீங்கங்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு... எல்லாமே உங்களுக்கு வைக்கப்பட்ட சோதனைகள்தான்... எல்லாத்தையும் தாண்டி புடம் போட்ட தங்கமா ஜொலிக்கிறீங்க... நீங்க வாழ்வாங்கு வாழணும்...!" கைகளை உயர்த்தி ஆசிர்வதித்தார் சிவகுரு.

அருகில் இருந்த காட்டுப் பன்னீர் புஷ்ப மரத்தின் அடியில் உதிர்ந்திருந்த பூக்களைக் கொஞ்சம் அள்ளிய தசரதன்... இருவரின் மீதும் அட்சதையாய் தூவி விட்டு... இருவரின் கரங்களையும் ஒன்றுசேர்த்து வைத்தார்.

"மருந்து மலை ஈசனோட அன்புக்குப் பாத்திரமாயிட்டீங்க. நீங்க இதுக்கு ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்கணும். நீங்க அமோகமா இருக்கணும். மருத்துவத்திலே நிறைய சாதிக்கணும்..."

தசரதன் பேசி முடித்த மறுகணமே... அந்தப் பெரிய மணி அனிச்சையாய் ஓங்கி ஒலிக்க... 'சிவாய நம' என்று பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தபடி கங்கையம்மா, சிவகுரு, தசரதன் ஆகியோர் சிவனை வலம் வந்து தியானத்தில் அமர... தூரத்தில் இருந்தபடி ஆன்மிக அதிர்வில் விழிகளில் கண்ணீர் புரள, நரேந்திரனுடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நேத்ரா.

# உன்னைத் தேடித் தேடியே...

## 1

பூஜை அறையிலிருந்து வந்த சாம்பிராணியின் நறுமணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது.

தியானத்தை முடித்துக் கொண்டு எழுந்த ஜனனி... சூடம் ஏற்றி ஆரத்தி காட்டினாள். ஈரக் கூந்தலில் டவலைச் சுற்றி இறுக்கமாய் கொண்டை யிட்டிருந்தாள்.

பவளமல்லி மாலை சாற்றப்பட்டிருந்த மாங்காடு காமாட்சி அம்மனின் திருவுருவப் படத்தை உற்று நோக்கி வணங்கிக் கொண்டிருந்த அம்மா திலகத்தின் அருகே வந்து நின்றாள் ஜனனி.

ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்ட திலகம்... "ரொம்ப நேரமா தலையில டவலை சுத்திட்டிருக்கே ஜனனி!

டவலை உடனடியா எடுத்துட்டு தலையை நல்லா உலர்த்தணும். இல்லேன்னா... நீர் கோர்த்துக்கும். வா... உனக்கு நான் சிக்கெடுத்து விடறேன்" என்று கரிசனமாய் கூறினாள்.

"இதோ... நீ சொன்னபடியே செய்துடறேன்... ஏம்மா... நான் இன்னமும் சின்னக் குழந்தையா? எப்பப் பாரு... தலை துவட்டி விடறேன்... பின்னி விடறேன்... சிக்கெடுத்து விடறேன்... ஊட்டி விடறேன்னு... என்னை பச்சைக் குழந்தை மாதிரியே ட்ரீட் பண்ணிட்டிருக்கே?

பி.ஈ. என்ஜினீயரிங் முடிச்சுட்டு. ஒரு வருஷா வேலைக்குப் போயிட்டிருக்கிற பொண்ணு நான்! அது உனக்கு ஞாபகத்துல இருக்கா? இல்லையா அம்மா?" புன்முறுவல் பூத்தபடியே கேட்டாள் ஜனனி.

"நல்லா கேளும்மா ஜனனி! உன் ஸ்கூட்டியில நீ அழகா ஆபீசுக்குப் போயிட்டு வர்றதைப் பார்த்து... நான் பெருமிதப்பட்டுட்டு இருக்கேன். கை நிறைய சம்பாதிக்கிறே... பையன் நமக்கு இல்லையேங்கிற குறையை... நீ தீர்த்து வச்சுட்டே...

அறிவுலே, திறமையில, தைரியத்துல... நீ அப்படியே என்னைக் கொண்டு பிறந்துட்டே... உங்கம்மாவுக்கு சதா தொண தொணன்னு துளைச்சு எடுக்கிறதைவிட்டா... வேற என்ன தெரியும்?"



மகளுக்கு பரிந்துகொண்டு வந்த கணவர் ராம துரையை... முறைத்துப் பார்த்தாள் திலகம்.

"அப்பாவுக்கும், பொண்ணுக்கும் என்னைப் பார்த்தா... ரொம்பவும் இளக்காரமாப் போச்சா? அம்மாடி ஜனனி! என்னைப் பார்த்து என்ன கேட்டே? இன்னமும் உன்னை சின்னக் குழந்தையா நான் ட்ரீட் பண்றேன்னு... நீ சலிச்சுக்கிறியா?

உனக்கு அம்பது வயது ஆனாலும்... எனக்கு நீ என்னிக்கும் குழந்தை தான்... நீ பெரிய ஆபீசைக் கட்டி ஆண்டால் கூட... என் கண்ணுக்கு நீ பச்சை மண்ணுதான்! உண்மையான தாய்ப்பாசத்தை புரிஞ்சுக்காம... அப்பாவோட சேர்ந்து கேலி பண்றியேம்மா?"

அம்மா திலகத்தின் விழிகளில் கண்ணீர் திரண்டதைப் பார்த்ததும்... ஜனனி சட்டென்று அம்மாவின் கரத்தை ஆதுரமாய் இறுகப் பற்றிக் கொண்டாள்.

"ஏம்மா இப்படிக் கோவிச்சுக்கிறே? சும்மா விளையாட்டுக்குத் தானே... அப்பா சீண்டிப் பேசறாரு... உன்னைப் போய்... நான் இளக்காரமா நெனப்பேனா? இப்படியொரு அம்மா கிடைக்கிறதுக்கு... நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும்னு... என்னோட கொலீக்ஸ் கிட்டே சொல்லி நான் பெருமைப்பட்டிருக்கேன். தெரியுமா?"

"ஜனனி! உன்னோட அக்கா ரஞ்சனி, உன் அளவுக்கு அழகியும் இல்ல... உன்னை மாதிரி படிப்போ, திறமையோ அவளுக்கு அமையலே... பத்தாம் கிளாஸைத் தாண்டறதே பெரும்பாடாப் போச்சு. படிப்பு மண்டையில ஏறலைன்னா...

என்ன செய்ய முடியும்? சமையல், தையல், வீட்டு வேலைகளை நேர்த்தியா செய்யக் கத்துக் கொடுத்துட்டு... உன்னோட சொந்த அத்தையோட மூத்த மகனுக்கு, அவளைக் கட்டிக் கொடுத்திட்டோம்.

சின்ன வயசிலேயே அவளைப் புகுந்த வீட்டுக்கு அனுப்பிட்டோம். சொந்தத்துலேயே கொடுத்துட்டோம். எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்ல... ரஞ்சனியோட வாழ்க்கை சுமூகமா போயிட்டிருக்கு... எனக்கு உன்னைப் பத்தின கவலை தான்...!"

"என்னைப் பத்தி ஏம்மா கவலைப்படறே? கை நிறைய சம்பாதிக்கிறேன். சொந்தக் கால்லே நிக்கிற பொண்ணைப் பார்த்து நீ பெருமை தானே படணும்?

என்னோட திறமைக்கு இன்னும் இரண்டே மாசத்துல ப்ரமோஷன் கிடைக்கப் போகுதுன்னு... ஆபீஸ்லே ஒரு பேச்சு அடிபடுது; தெரியுமா? எதுக்காக நீ அனாவசியமா கவலைப்படறேன்னு புரியலை?"

"வயசுப் பொண்ணை வீட்டுல வச்சுட்டிருந்தாலே... பெத்தவளுக்கு வயித்துல நெருப்பைக் கட்டிக் கிட்டாப்பல இருக்கும்னு சொல்வாங்க... அது நூத்துக்கு நூறு நிஜம் தெரியுமா? நான் வயித்துலே நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கேன்...

"பத்தாம் பசலித்தனமா பேசாதே திலகம்! நீ பேசறது உனக்கே நல்லாயிருக்கா? கம்முனு இரேன்" அதட்டினார் ராமதுரை.

"ஊகும்... நான் ஜனனிகிட்டே விஷயத்தை சொல்லித் தான் ஆகணும். அவளும் அதைத் தெரிஞ்சுக்கணும்.



அது தெரிஞ்சா... இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையா, ஜாக்கிரதையா நடந்துப்பாள்ல?" திலகம் பதிலுக்கு வாதாடினாள்.

"அவகிட்ட அந்த விஷயத்தைச் சொல்லி... அவளை ஏன் டென்ஷன் ஆக்கணும்?"

"அவகிட்ட சொல்லிடறது தான் நல்லது. அப்புறம்... முன்னாடியே ஏன் சொல்லி வைக்காம போயிட்டோம்னு நாம்ப கிடந்து தவிக்கக்கூடாது... பாருங்க... அதான்."

"இதுக்கு மேல நான் தடுத்தாலும் நீ கேட்கவா போறே?"

ராமதுரையையும் திலகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள் ஜனனி.

"அம்மா! ப்ளீஸ்... அது என்ன விஷயம்னு சொல்லுங்கம்மா... நீங்க சொல்றது தான் சரி! எதுவா இருந்தாலும் சொல்லிடணும். பெத்த பொண்ணுகிட்டே எதுக்காக நீங்க மறைக்கணும்? நீங்க சொல்லுங்கம்மா."

"அது வந்து... நானும் உங்கப்பாவும் மாசாமாசம் பவுர்ணமி அன்னிக்கு திருவண்ணாமலைக்குப் போவோம் இல்லையா?"

"ஆமா... கிரிவலத்தை முடிச்சுட்டு சோர்ந்துபோய் வீட்டுக்கு வருவீங்க... பல வருஷமா தவறாம அங்க போயிட்டு இருக்கீங்களே? இப்போ... அதுக்கு என்ன?"

ஆர்வம் மேலிட கேட்ட மகளை ஊன்றிப் பார்த்தாள் திலகம்.

நிகு நிகுவென்ற உயரம்... உயரத்திற்கேற்ற பருமன்... பாலில் ஒரு சிட்டிகை குங்குமப் பூவைக் கலந்தாற் போன்று பளிச்சென்ற நிறம்... அசரடிக்கும் பேரழகு... ராஜ களை யுடன் மிளிர்ந்த ஜனனியைப் பார்க்கும்போது... இனம் புரியாத பயம், அவளது அடிவயிற்றைப் பிசைய வைத்தது.

"உனக்கு ஏதாச்சும் ஆயிடுமோன்னு... எனக்கு ரொம்ப பயமா இருக்கு ஜனனி!

உனக்கு வயசு ஆக ஆக எனக்கு ராத்திரியிலே தூக்கமே வரமாட்டேங்குது. பூப்போல இருக்கிற உன் முகத்தை, விடி விளக்கு வெளிச்சத்துல உத்துப் பார்த்துக் கிட்டே... மவுனமா தினமும் கண்ணீர் வடிச்சுட்டு இருக் கேன்மா...

உங்கப்பா இவ்ளோ பேசறாரே? அவருக்கும் உள்ளூர திகில்தான்... அவரு தன்னோட கவலையை வெளிப்படுத்திக் கலைன்னாலும்... என்னால உறுதியா சொல்ல முடியும் ஜனனி!

நாளுக்கு நாள் அவரு எப்படி மெலிஞ்சுட்டே போறாரு?... மனசுக்குள்ளே உன்னைப் பத்தின கவலை தான் அரிச்சுட்டிருக்கு அவருக்கு!... அதனால தான் அவரு உடம்பு ஒரேயடியா விட்டுப் போச்சு...?" தேம்பினாள் திலகம்.

சடாரென்று திரும்பி அப்பா ராமதுரையை ஏறிட்டாள் ஜனனி.

"அம்மா சொல்வது உண்மைதான் போலும்! அப்பா திடமானவர் தைரியமானவர் ஆயிற்றே? அவரே பயப்படுற அளவுக்கு என்ன நடந்துவிட்டது? எதற்கு கவலைப்பட



வேண்டும்? அப்பா சாதாரணமாக எதற்கும் அசைந்து கொடுக்கமாட்டாரே? அவரே தினமும் கவலைப்படுகின்றார் என்றால்?... ஏதோவொரு விபரீதம் எனக்கு நடக்கப் போகிறதோ?"

ஜனனி வைத்த கண் வாங்காமல் திலகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

திகில், அவளது மனமெங்கும் கிளை விட்டுப் படர்ந்தது.

## 2

"திருவண்ணாமலையில... அப்படி என்ன தான் நடந்துச்சு? நீங்க ரெண்டு பேரும் நிம்மதியில்லாம தினமும் கவலைப் பட்டு மருகுகிற அளவுக்கு... என்ன நடந் துச்சு? எந்தப் பிரச்சினைக்கும்... நிதானமா யோசிச்சா... நாம்ப அதுக்கு தீர்வைக் கண்டுபிடிச்சுடலாமே அம்மா? சொல்லும்மா."

"திருவண்ணாமலையில கிரிவலம் வரும்போது... அஷ்டலிங்கங்களை நாம தரிசனம் பண்ணுவோம். இல்லையா?"

"ஆமா..." ஜனனி இதுவரை ஒரே ஒருமுறைதான் கிரிவலத்திற்குச் சென்று வந்திருந்தாள்.

"கிரிவலப் பாதையில... குபேர லிங்கத்துக்குப் பக்கத்துல ஒரு மரத்தடியில் ஒரு சாமியாரைப் பார்த்தோம். அவரு பிச்சைக்காரரா? இல்ல... பைத்தியக்காரரான்னு யாராலும் கணிக்க முடியாது. திடீர்னு எங்களைப் பார்த்து

கையை அசைச்சுக் கூப்பிட்டாரு... அப்போ எங்களுக்கு குழந்தைகளே இல்ல...

'உனக்கு ரெண்டு பெண் குழந்தைங்க பிறக்கும். அதனால சிவன் மேல பாரத்தைப் போட்டு சந்தோஷமா போயிட்டு வான்னு சொன்னாரு...'

அவரு சொன்னபடியே ரஞ்சனியும் நீயும் பொறந்தீங்க... முதல் குழந்தை பிறந்த உடனே... அந்த சாமியாரைப் பார்த்து நன்றி தெரிவிக்கணும்னு நாங்க பிரியப்பட்டோம்.

ரஞ்சனிக்கு ஒரு வயசு ஆகும்போது... அவளை உங்க பாட்டிகிட்டே விட்டுட்டு... நாங்க அவரைப் பார்க்கப் போனோம். எங்களை உட்காரச் சொன்னாரு.

"என்ன?... முதல் குழந்தை கிடைச்சாச்சா? அடுத்த தை மாசத்துல பவுர்ணமி அன்னிக்கு வெள்ளிக்கிழமையில தெய்வீகக் களையோட உனக்கு ஒரு மகாலட்சுமி பிறப்பா... அவ பிறக்கிற நேரம்... உங்களுக்கு யோகம்தான்...

அவ வளர்ந்து ஆளாயி கல்யாண வயசை எட்டிப் பிடிக்கும்போது அவளுக்கு மிகப் பெரிய கண்டம் இருக்கு. இதை ஞாபகத்துல வச்சுக்கோங்க... பகவானுடைய பாதங்களைக் கெட்டியாப் பிடிச்சுக்கிட்டு... அவரைத் தஞ்சம் அடையுங்க... மத்ததை அவரு பார்த்துப்பாருன்னு சொன்னாரு...

அவரு சொன்ன மாதிரியே தை மாசம் பௌர்ணமியில தான் நீ பொறந்தே... நீ பொறந்ததும் உங்கப்பாவுக்கு வியாபாரத்துல நல்ல அபிவிருத்தி தான்...



எங்களைப் பொறுத்தவரை அவரு ஒரு சித்தர்தான். அவரு எல்லோருக்கும் அருள்வாக்கு சொல்றதில்லையாம். கொடுப்பினை உள்ளவங்களுக்குத் தான் அது வாய்க்குமாம். அவரு சொன்னபடியே எல்லாம் நடந்ததே?

அப்படின்னா... உனக்கு மிகப் பெரிய கண்டம் இருக்குன்னு சொன்னரே? அதுவும் நடந்துடும்னு ரொம்ப பயமா இருக்கு ஜனனி! உனக்கு இப்போ கல்யாண வயசும் வந்தாச்சே? எந்த நிமிஷம் என்ன நடக்குமோன்னு... நான் செத்துச் செத்துப் பிழைச்சுட்டிருக்கேன் ராஜாத்தி!"

"எப்பவோ அவரு சொன்னதை நெனச்சு... இத்தன வருஷமா கவலைப்பட்டு... ரெண்டு பேருமே உடம்பைக் கெடுத்துக்கிட்டிருக்கீங்களே?" இருவரையும் பரிதாபமாய் பார்த்தாள் ஜனனி.

"நீ வேலைக்குப் போயிட்டு வீடு திரும்பற வரைக்கும்... நான் உசுரைக் கையில பிடிச்சுட்டிருக்கேன். உனக்கு கல்யாணம் பண்ணி வைச்சுடணும்னு... நானும் அப்பாவும் முடிவு பண்ணியிருக்கோம். கல்யாணம் நல்லபடியா நடந்து முடியறவரைக்கும்... நீ பேசாம வீட்டிலேயே இரேன்... எனக்குக் கொஞ்சமாவது நிம்மதியா இருக்கும் இல்லையா ஜனனி?"

அம்மா திலகம் கெஞ்சாத குறையாக... அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"என்னம்மா நீங்க? நல்ல வேலை கிடைக்கிறது... எவ்வளவு பெரிய விஷயம்? கிடைச்ச வேலையை வேண்டாம்னு உதறிட்டு... வீட்டோட முடங்கிக் கிடக்கச்

சொல்றீங்களா? இப்படித்தான் நடக்கணும்னு விதி இருந்தா... அது நடந்து தானே தீரும்? வீட்டிலேயே அடைஞ்சு கிடந்தா... வர்ற கண்டம் விலகிப் போயிடுமா என்ன?... என்னால வேலையை விட முடியாதும்மா... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க."

"திலகம்! அவ சொல்றதும் நியாயம்தானே? ஆபத்து வரணும்னு விதி இருந்தா... நாலு சுவத்துக்குள்ளே ஒளிஞ்சு இருந்தாலும் வந்தே தீரும்... நடக்கிறது நடக்கட்டும்.

அந்த சித்தர் சொன்ன மாதிரி... கடவுள் மேல பாரத்தைப் போடுவோம். அவரு பார்த்துப்பாருன்னு நம்பிக்கையோட இருக்க வேண்டியது தான்... நம்பிக்கை தானே வாழ்க்கை? அதைவிட்டுட்டு வேலையை விடச் சொன்னா... ஜனனி எப்படி சம்மதிப்பா? நீயே சொல்லு."

உரிமையுடன் மனைவியை அதட்டினார் ராமதுரை. நீண்ட பெருமூச்செறிந்தாள் திலகம்.

"கடவுள் கைவிட மாட்டாருங்கிற நம்பிக்கையில தான்... என் உயிர், உடம்போட ஒட்டிக்கிட்டிருக்கு. ரஞ்சனியை உங்க தங்கச்சியோட மூத்த மகனுக்கு கட்டிக் குடுத்தோம். அவ நிம்மதியா இருக்கா...

உங்க தங்கச்சி, தன்னோட இரண்டாவது புள்ளைக்கு... நம்ம ஜனனியைக் கட்டி வச்சுடணும்னு ஆசைப்படறாங்க... ஹூம்! சின்ன மாப்பிள்ளை... கண்ணுக்கு லட்சணமா நம்ம ஜனனிக்கு ஏத்தவராத் தான் இருக்காரு... பெரிய படிப்பு படிச்சுட்டு பிரபலமான கல்லூரியில இளம் லெக்சரரா வேலை பார்க்கிறாரு...



பேசாம சட்டு புட்டுன்னு ரெண்டு பேத்துக்கும் கல்யாணத்தைப் பண்ணி வச்சுட்டோம்னா... நாம நிம்மதியா இருக்கலாம் இல்லியா? ஜனனி அந்த கண்டத்துலே இருந்து எப்படியாவது தப்பிச்சுடணும்.

மூச்சுக்கு முன்னூறு முறை கடவுள்கிட்டே... நான் அதைத் தான் வேண்டிக்கிறேன். உங்க தங்கச்சிகிட்டே... நீங்க இது விஷயமாப் பேசினீங்களா?"

"பேசாம இருப்பேனா திலகம்? அம்புஜம் தான் ஜனனியை ரெண்டாவது மருமகளாக்கிக்கணும்னு துடிக்கிறாளே? அம்புஜம் இது விஷயமா சின்ன மாப்பிள்ளை ஜெகன்கிட்டே பேசினாளாம்...

ஹிஸ்டரி டிபார்ட்மெண்ட்லே சின்ன மாப்பிள்ளை லெக்சரரா இருக்காருல்ல? அவரு ஏதோ ஆராய்ச்சியில ஈடுபட்டிருக்காராம். ஆராய்ச்சி முடியற வரைக்கும்.. கல்யாணத்தைப் பத்தின பேச்சை எடுக்க வேணாம்னு... கண்டிப்பா அம்புஜத்துக்கிட்டே சொல்லிட்டாராம்... என்ன செய்றது? நாம்ப கொஞ்சம் பொறுமையா இருந்து தான் ஆகணும்..."

"சின்ன மாப்பிள்ளை கல்யாணத்தைப் பண்ணிக் கிட்டு... ஆராய்ச்சி செய்யக்கூடாதா? அவரோட முயற்சிக்கு ஜனனி உறுதுணையா இருப்பாளே தவிர... எதுக்கும் தடை சொல்லமாட்டாளே? அப்புறம் என்னத்துக்கு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாராம்? சரி... அவரோட இஷ்டம்? இதுக்கு மேல நாம்ப வேற என்ன செய்ய முடியும்?"

திலகம் புலம்பியபடி அடுக்களையை நோக்கி நகரப் போனாள்.

"திலகம்! சித்ரா பவுர்ணமி நெருங்கிட்டிருக்கு. ஒவ்வொரு சித்ரா பவுர்ணமி அன்னிக்கும் நாம்ப மூணு நாள் திருவண்ணாமலையில ஆசிரமத்துல தங்குவோம் இல்லையா? இந்த வாட்டி அம்புஜம் நம்மகூட வரேன்னு சொல்லியிருக்கா...

அவ மட்டுமில்ல... மூத்த மாப்பிள்ளையும், குட்டிப் பாப்பாவோட நம்ம ரஞ்சனியும் வர்றாளாம்... அதனால கார் வசதிப்படாது... மினி வேனுக்கு சொல்லி வச்சுடலாம்னு இருக்கேன்.

அப்புறமா ஞாபகப்படுத்து! டிராவல் ஏஜன்ஸிக்கு ஃபோன் பண்ணனும்."

"சரிங்க... ஏம்மா ஜனனி! இந்த வாட்டியாவது நீ எங்ககூட வாயேன். குடும்பத்தோட போயிட்டு வந்த திருப்தி... எங்களுக்குக் கிடைக்குமே?"

"இல்லம்மா... எனக்கும் சேர்த்து நீ தான் மனமுருக வேண்டிக்கிட்டு வந்துடுவியே... அது போதாதா? நான் இங்கே வழக்கம் போல பத்திரமா இருந்துப்பேன்.

எனக்கு அருமையா சமைக்கக் கத்துக் கொடுத் திருக்கே... மின்னல் வேகத்துலே சமையலை முடிச்சுட்டு... சாப்பிட்டுட்டு ஆபீஸ் கிளம்பிடுவேன்.

வீட்டுக்கு வந்தா பத்து நிமிஷம் டி.வி. பார்த்துட்டு கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்தா... நேரம் போறதே தெரியாது. மூணு நாள் மாயமாப் பறந்துடும். என்னைப் பத்தின கவலையை விட்டுட்டு... நிம்மதியா சாமி கும்பிட்டுட்டு வாங்க..."



அம்மாவின் கன்னத்தை வருடி விட்டு... ஜனனி அவசரமாய் தன் அறைக்குள் புகுந்துகொண்டாள்.

திருவண்ணாமலைக்கு தாங்கள் கிளம்பிச் சென்றதும்... ஜனனி ஆபத்தை நோக்கிப் பயணப்படப் போகின்றாள் என்பதை... ராமதுரை - திலகம் தம்பதியினர் கனவிலும் கருதவில்லை என்பது நிஜம்.

# 3

ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு, அலுவல கத்திற்குள் நிதானமாக நுழைந்தாள் ஜனனி. வழக்கம் போல் கால் மணி நேரத் திற்கு முன்னதாகவே வந்து விட்டிருந்தாள்.

வரவேற்பறையில் அமர்ந்து ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளை ஒரு புரட்டு புரட்டி விட்டுத்தான்... தனது கேபினுக்குள் அவள் நுழைவது வழக்கம்!

இன்று என்னவோ... செய்தித்தாள்களில் அவள் பார்வையை ஓட்டினாளே தவிர... அவளது மனம் எதிலும் ஒட்ட மறுத்து முரண்டியது.

சட்டென்று எழுந்து தனது கேபினுக்குள் சென்று, சுழல் நாற்காலியில் அமர்ந்தாள்.

"அவ வளர்ந்து ஆளாயி... கல்யாண வயசை எட்டிப் பிடிக்கும்போது அவளுக்கு பெரிய கண்டம் இருக்கு..." என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப... அவளது செவிகளில் எதிரொலித்த வண்ணம் இருந்தன.

ஏ.சி. அறையிலும் அவளுக்கு குப்பென்று வியர்த்துப் போனது.

ஹேண்ட் பாக்கெட்டிலிருந்த வாட்டர் பாட்டிலை எடுத்து, தொண்டைக்குள் சரித்த தருணத்தில்... அவளது செல்ஃபோன் அவசரக் குரலில் அலறியது.

செல்லில் தெரிந்த நம்பரை கவனித்தாள்.

செல்ஃபோன் திரையில் ஜெகனின் பெயர் மின்னி மின்னி சிரித்தது.

அவள் பிறப்பதற்கு முன்பே... திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையிலிருந்த சித்தர் கூறிய அருள்வாக்கைப் பற்றியும்... அதை நினைத்து அம்மாவும், அப்பாவும் கவலையில் பயந்து சாவதைப் பற்றியும்... ஜெகனிடம் சொல்லலாமா? வேண்டாமா? என்று ஜனனியின் மனதில் பட்டிமன்றப் போராட்டம் நடந்தது.

யோசனையுடன் செல்ஃபோனை உயர்ப்பித்தாள்.

"ஹலோ... குட்மார்னிங் அத்தான்."

"மார்னிங் ஜனனி! உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணுமே?"

"தாராளமா பேசுங்க... ஆபீஸ் டைம் ஆரம்பிக்கிறதுக்கு இன்னும் பத்து நிமிஷம் இருக்கு. வீட்டுல அத்தை, பெரிய அத்தான், ரஞ்சனி, குட்டிப் பாப்பா எல்லாரும் சவுக்கியந்தானே?"

"என்னைத் தவிர... ஒருத்தரையும் விட்டு வைக்காம குசலம் விசாரிக்கிறியே? என்ன ஓரவஞ்சனை உனக்கு? என்னைப் பத்தி விசாரிக்கணும்னு தோணலையா?"

"சாரி... சாரி! அத்தான்... உங்க சவுக்கியத்துக்கு ஒரு குறையும் இருக்காதுங்கிற நம்பிக்கை! அதனாலதான் விசாரிக்கலை. போதுமா? நீங்க மட்டும் என்னவாம்? என்னைப் பத்தி அக்கறையா ஒரு வார்த்தை கேட்டீங்களா? நல்லாயிருக்கியான்னு கேட்டா... குறைஞ்சா போயிடுவீங்க..."



"சளைக்காம வாதாடறதிலே... நீ கெட்டிக்காரியாச்சே? நான் ஏன் விசாரிக்கலை தெரியுமா? நீ இங்கு சுகமே... நான் அங்கு சுகமான்னு பாடட்டுமா?

என் மனசுல சதா நீ இருக்கே... சொகுசா சுகமா இருக்கே... அதனால தான் உன்னைப் பத்தி விசாரிக்கணும்னு தோணலை. நான் எப்பவும் உன் நெனப்பா தானிருக்கேன் நீயும் அப்படித்தான் இருக்கேன்னு நெனக்கிறேன்..."

"அப்படியா?" இழுத்தாள் ஜனனி.

"என்ன அப்படியா? அப்படித்தான்னு நான் நெனக்கிறேன்..." அழுத்தம் திருத்தமாகக் கூறினான் ஜெகன்.

"அப்படித்தான்னா... சரி தான்!"

இதைக்கேட்டதும் ஜெகனின் மனதில் ஜிலு ஜிலுன்னு ஐஸ்க்ரீம் மழை வழிந்தோடியது போலிருந்தது.

"இப்படி பூடகமா பதில் சொல்லியே தப்பிச்சுடுவியே? வெளிப்படையா ஐ லவ் யூ அத்தான்'னு சொன்னா... நீ என்ன குறைஞ்சா போயிடுவே ஜனனி?"

"காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்க்கு கிளாஸ் எடுக்கிற இளம் விரிவுரையாளர் நீங்க! ஞாபகம் இருக்கட்டும். முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசணும்னு சொன்னீங்க... நேரமாயிட்டிருக்கு."

"ஹும்! சீக்கிரமா சொல்ல வேண்டியதை சொல்லிட்டு ஃபோனை வச்சுடுங்க அத்தான்னு... மறைமுகமாச் சொல்றியா? சரிதான்... விஷயத்துக்கு வர்றேன். வீட்டுல அம்மா வர வர ரொம்ப நச்சரிக்கத் தொடங்கிட்டாங்க..."

"கேள்விப்பட்டேன் அத்தான்! ஆராய்ச்சி முடியற வரைக்கும் கல்யாணப் பேச்சை எடுக்க வேணாம்னு... நீங்க சொன்னீங்களாம்..."

"ஆமா... அந்தக் காலத்துல கட்டப்பட்ட அரண் மனைகள், கோயில்கள், சிற்பங்கள், மாட மாளிகைகளை ஆராய்ச்சி பண்ணிட்டிருக்கேன்.

கட்டிடக் கலை அந்தக் காலத்துல எவ்ளோ நுணுக்கமா வேலைப்பாடுகளோட வியக்கத்தக்க வகையில அமைஞ்சிருக்குங்கிறதை விரிவா ஸ்டடி பண்ணிட்டிருக்கேன்..."

"அந்த ஆராய்ச்சியில நீங்க வெற்றியடையணும்னு மனப்பூர்வமா வாழ்த்தறேன். சாரி! வாழ்த்தற அளவுக்கு எனக்கு வயசாயிடலை. அதனால பகவான்கிட்டே வேண்டிக் கிறேன்..."

"தேங்க்யூ ஜனனி! உன்னை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. ஏன் தெரியுமா? பட்டு கத்தரித்தாற் போல நாசூக்கா நீ பேசறே... சொந்த அத்தான்! அதுவும் வருங் காலக் கணவனா இருந்தாலும் தினமும் ஃபோன்லே பேசறதை நீ அனுமதிக்கிறதில்ல... கடமையே கண்ணா யிருக்கே...

கல்யாணத்துக்கு முன்னாடி எதையாச்சும் சாதிச்சு காட்டணும்கிற உத்வேகத்தை... மறைமுகமா எனக்கு ஏற்படுத்தினதே நீதான்! நீ கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும் ஜனனி."



"இதுதான் முக்கியமான விஷயமா அத்தான்?"

"இல்ல... நான் சொல்ல வந்தது வேற...! சித்ரா பவுர்ணமி நெருங்கிட்டு வருதுல்ல? உங்க வீட்டுலேர்ந்தும் எங்க வீட்டுலேர்ந்தும் திருவண்ணாமலை கிரிவலத்துக்குப் போறாங்கல்ல?"

"ஆமா... மூணு நாள் தங்கப் போறாங்க..."

"நான் அந்த சமயத்துல 'செவல்பட்டி' கிராமத்துக்குப் போலாம்னு இருக்கேன். அங்கே ஆயிரம் வருஷத்துக்கு முந்தைய பழமையான குடவரைக் கோயில் இருக்காம்.

உள்ளே ஏராளமான சிலைகள் செதுக்கப் பட்டிருக்காம்... அந்த இடத்துக்குப் போய் ஆராய்ச்சி பண்ணிட்டு வரலாம்னு நான் முடிவு பண்ணியிருக்கேன்."

"ஓ... அந்த செவல்பட்டி கிராமம்... இங்கிருந்து ரொம்ப தூரமோ?"

"ஆமாம் ஜனனி! சிவகாசியில இருந்து சங்கரன்கோயில் செல்லும் பாதையில 'செவல்பட்டி' கிராமம் இருக்கு. அங்கிருந்து ஒரு கி.மீ. தூரம் போனா... குடவரை பாம்பாலம்மன் கோயில் வருமாம்...

அங்கே 300 அடி உயர மலை இருக்காம். இந்த மலையின் நடுவே பாறையைக் குடைஞ்சு... இந்தக் குடவரை கோயிலை அழகா உருவாக்கியிருக்காங்களாம்... ஜனனி! நான் செவல்பட்டிக்கு போகப் போற விஷயத்தை...

எங்க வீட்டுல யார்கிட்டேயும் சொல்லலை... நீயும் தெரிஞ்சதா காட்டிக்க வேணாம். உன்கிட்டே மட்டும் ஏன் சொல்றேன்னா... அது ஆபத்து நிறைஞ்ச இடமாம்...

ஒருவேளை நான் திரும்பவும் வராமலே போயிட்டா...? நீ அதுக்கு அப்புறமா இந்தத் தகவலை எங்க வீட்டுக்கு சொல்வேயில்ல...?

என் மேல ஆணை! நீ இந்த விஷயத்தை இப்போதைக்கு யார்கிட்டேயும் மூச்சுவிட வேணாம். விஷயம் தெரிஞ்சா... எங்கம்மா அழுது அழிச்சாட்டியும் பண்ணி எனக்கு முட்டுக்கட்டை போட்டு... என்னைப் போக விடாம தடுத்துடுவாங்க..."

'குடவரைக் கோயிலில் ஆபத்து காத்திருக்கிறதா? ஜெகன் ஆபத்தை நோக்கிச் செல்கிறாரா? ஒருவேளை... இவர் திரும்பி வராமலே போய்விட்டால்...?'

ஜனனிக்கு திக்கென்றிருந்தது. பயத்தில் குடல் முடிச்சுப் போட்டுக்கொண்டது.

## 4

"உங்க ஆராய்ச்சிக்கு தோதான இடம்... அக்கம் பக்கத்து ஊர்கள்லே கிடைக்கலையா அத்தான்? எதுக்காக அவ்ளோ தூரத்துல இருக்கிற இடத்தைத் தேர்ந்தெடுத்தீங்க? அதுவும் ஆபத்தான இடம்னு வேற சொல்றீங்க? எதுக்காக இவ்ளோ ரிஸ்க் எடுக்கிறீங்க?"

ஜனனியின் குரலில் பதற்றம் தொனித்ததைக் கண்டு மெல்ல நகைத்தான் ஜெகன்.



"அதுக்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கு ஜனனி! எங்கப்பா பல வருடங்களுக்கு முன்னாடியே பிழைப்பு தேடி சென்னை வந்து வியாபாரத்தை ஆரம்பிச்சு அப்படியே செட்டிலாகிட்டாரு. இது உனக்கே தெரியுமே? அவரு கூடவே எங்க பாட்டியும் வந்து சென்னையிலேயே இருந்துட்டாங்க..."

"ஆமா... அதுவும் தெரியுமே? பாட்டி ஏழு வருடங்களுக்கு முன் இறந்துட்டாங்க... மாமா மூணு வருஷத்துக்கு முன்னாடி மாரடைப்பால காலமாயிட்டாரு. செவல்பட்டி கிராமத்தை நீங்க எதுக்காக செலக்ட் செய்தீங்க...? அதைச் சொல்லுங்க முதல்லே" படபடத்தாள் ஜனனி.

"எங்க பாட்டியோட பிறந்த ஊரே அதுதான்! எங்கப்பாவுக்கு அங்க நிறைய பால்ய சிநேகிதர்கள் உண்டு. எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லே இருந்து... இவரு பாட்டிகூட அங்க போனதும் உண்டு. இவரைத் தேடி நண்பர்கள் வந்துட்டுப் போனதும் உண்டு."

"ஓ... அந்தக் குடவரை பாம்பாலம்மன் கோயில்... உங்களுக்கு குல தெய்வமா?"

"அவசரப்படறியே ஜனனி! பாட்டியோட பிறந்த ஊர் தான் அது. எங்க குல தெய்வம் சென்னைக்குப் பக்கத்துல படப்பையில இருக்கிற சிவன் கோயில்னு... உனக்குத் தெரியாதா...?"

"அட... ஆமா! பதட்டத்துல மறந்து போச்சு. மேற்கொண்டு சொல்லுங்க அத்தான்."

"எங்கப்பாவுக்கு 'சண்முகம்'னு நெருங்கின சிநேகிதர் இருக்காரு. அப்பா இறந்து மூணு வருஷத்துக்கு மேலாகப்

போகுது. இன்னமும் அவரை மறக்காம... அடிக்கடி அவரு ஃபோன் பண்ணி நம்ம குடும்பத்தைப் பத்தி விசாரிப்பாரு.

பெத்த புள்ளை மாதிரி என் மேல பாசமா இருக்கிறாரு. மனசுல ஏதாவது கஷ்டம் வந்துச்சுன்னா... உடனே எனக்குத்தான் ஃபோன் பண்ணுவாரு.

அவரு சமீபத்துல ஃபோன் பண்ணி ஒரு விஷயத்தை சொன்னாரு. அதைக் கேள்விப்பட்டதும் எனக்கு இங்கே இருப்பே கொள்ளலை. எப்படா செவல்பட்டிக்கு போவோம்னு இருக்கு."

"அப்படி அவரு என்னதான் சொன்னாரு?"

"அந்தப் பகுதியில ஜடாமுடியோட... ஒரு சித்தர் இருந்தாராம். அவரு சொன்னது அப்படியே பலிச்சிருக்காம். அங்க இருக்கிறவங்க அவரைத் தெய்வமாவே நெனச்சு பயபக்தியோட கும்பிட்டு வந்தாங்களாம். பத்து வருஷத்துக்கு முன்னாடி அந்த சித்தர் ஜீவ சமாதி அடைஞ்சுட்டாராம்.

அந்த மலை உச்சியில தான் அவரோட சமாதி இருக்காம். இன்றளவும் பயபக்தியோட அவரை வேண்டிக் கிட்டு பூத்தூவி அந்த இடத்துல விளக்கு ஏத்திட்டு சில பேர் இறங்கி வர்றதும் உண்டாம்...

சண்முகம் ஐயா, அந்த ஊருலே ஒரு ஜமீன்தார் வீட்டுலே கணக்குப் பிள்ளையா இருக்காரு. ஜமீன்தாருக்கு அந்த சித்தர் மேல அலாதி பக்தியாம்... மாசத்துல பவுர்ணமி அன்னிக்கு மலையில இருக்கிற சமாதிக்கு பூப்போட்டு கும்பிடுவாராம். கூடவே நம்ம சண்முகம் ஐயாவை அழைச்சுட்டுப் போவாராம்...



சமீபத்துல ஜமீன் பங்களாவுல ஏதேதோ அமானுஷ்யமான நிகழ்ச்சிகள் நடக்குதாம்..."

'சித்தர்... அருள்வாக்கு' என்றதுமே... ஜனனிக்கு கிரிவலப் பாதையிலிருந்த சித்தர் 'பெரிய கண்டம்' வரப் போவதைப் பற்றி கூறியது... சட்டென்று ஞாபகத்திற்கு வந்தது.

அவளது மேனி ஒரு கணம் சிலிர்த்துப் போனது. "அ... அமானுஷ்யமா? அப்படி என்ன நடந்துச்சாம்?" திக்கித் திணறியபடி கேட்டாள் ஜனனி.

"ராத்திரியிலே ஜமீன் பங்களாவுல யாரோ நடமாடற மாதிரி இருக்காம்... அதுவும் தவிர அந்தக் குகையிலேயும் நடமாட்டம் இருக்கிற மாதிரி தெரியுதாம்...

இது எல்லாத்தையும்விட... அந்தக் குடவரை கோயிலுக்கு முன்னாடி... சமீபத்துல யாரோ ஒருத்தருடைய பிணம் கிடந்துச்சாம்... உடம்பெல்லாம் நீலம் பாய்ஞ்சு கிடந்துச்சாம்... பிணத்து மேல ஏடு இருந்துச்சாம்...

அதுல "இது... தொடரும்! இப்படிக்கு சித்தன்'னு எழுதப்பட்டிருந்தாம்... அதைப் படிச்சவங்க சித்தர் தான் சூட்சும ரூபத்துல வந்து கொன்னுட்டாரு'ன்னு பேசிக்கிறாங் களாம்..."

"என்னது? சித்தர் போய் கொலை செய்வாரா? இது என்ன சுத்த அபத்தமா இருக்கே? சேச்சே..." கோபத்தில் ஊசிப் பட்டாசாய் பொரிந்தாள் ஜனனி.

"சண்முகம் ஐயாவுக்கும் இதே கோபம்தான்! ஆனா ஊர்லே ஜனங்க சில பேரு...! 'ஏட்டுல 'சித்தன்'னு

எழுதியிருக்கே?... அதனால கொலைக்கு சித்தர் தான் காரணமா இருந்திருக்கணும்'னு பேசறாங்களாம்... அதை அவரால தாங்க முடியலை.

ஜமீன் மாளிகையிலேயும் குடவரை கோயிலுக் குள்ளேயும் சமீபகாலமா தெரியற நடமாட்டத்துக்கும், இந்த கொலைக்கும் கண்டிப்பா ஏதோ சம்பந்தம் இருக்கும்னு... சண்முகம் ஐயா நம்பறாரு...

ஜீவ சமாதி அடைஞ்ச சித்தர் சாந்தமே உருவான வராம்... அவருக்கு கோபம் வந்து... யாரும் பார்த்த தில்லையாம்...

அப்பேர்ப்பட்டவரு போயி... சூட்சும ரூபத்தில வந்து கொலை செய்வாரா?'ன்னு வேதனையாக் கேட்கிறாரு...

கொலை செஞ்சது யாரு? கொலை செஞ்சு அந்தப் பழியை ஜீவ சமாதி அடைஞ்ச சித்தர் மேல... ஏன் போடணும்?

ஜமீன் மாளிகையிலேயும், குடவரைப் பாம்பாலம்மன் கோயிலுக்கு உள்ளேயும் யாரு நடமாடறாங்க? என்ன காரணத்துக்காக இப்படிப் பீதியைக் கிளப்பி விட்டாங்க?

அந்தக் கொலை நடந்ததுக்கு அப்புறம்... ஜனங்க மலை உச்சிக்கும் மலை அடிவாரத்துல இருக்கிற குடவரைக் கோயிலுக்கும் போறதுக்கே பயப்படறாங்களாம். பவுர்ணமி வெள்ளி செவ்வாய்னு விசேஷ நாட்கள்லே தான்... ஜனங்க அங்க போவாங்க போல...

இப்போ... கொலை நடந்ததுக்கு அப்புறமா... ஜன நடமாட்டமே இல்லையாம். காரணம் என்னன்னா... அந்த



ஏட்டுலே 'இது... தொடரும்'னு எழுதப்பட்டிருந்தது இல்லையா? இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட உடனே... 'ஐயா! நான் செவல்பட்டிக்கு கூடிய விரைவில வந்து சேர்றேன்'னு சொல்லிட்டேன் ஜனனி!"

என்ன சொல்வது? என்று தெரியாமல் மவுனம் காத்தாள் ஜனனி.

"உண்மையான காரணம் என்னன்னு கண்டு பிடிக்கணும். அது என் கடமைன்னு... உள் மனசுக்கு பட்டுச்சு ஜனனி! என் சின்ன வயசுலே எங்கப்பா அந்த ஊருக்குப் போகும்தெல்லாம்...

அந்த சித்தரை தரிசிக்காம வரமாட்டாரு. அந்த சித்தர் ஒரு தெய்வீகப் புருஷர்னு எங்கப்பா பெருமையா சொல்றதை நான் கேட்டிருக்கேன்.

ப்ச்!... அவரை நேரிலே தரிசிக்கத்தான் குடுத்து வைக்கலை... அட்லீஸ்ட் அவர் ஜீவ சமாதி அடைஞ்ச இடத்தைப் பார்த்து வணங்கிட்டு வரணும்னு ஆசை!

சரி... நான் ரொம்ப நேரமா பேசிட்டிருக்கேன். உனக்கு ஆபீஸ் டைம் ஆரம்பமாயிடுச்சு. வச்சுடறேன். பை ஜனனி."

அவளது பதிலுக்கு காத்திராமல் செல்ஃபோனை அணைத்துவிட்டான் ஜெகன்.

இனம் புரியாத திகிலில் உறைந்து போய் அமர்ந் திருந்தாள் ஜனனி.

# 5

அடுத்து வந்த மூன்று நாட்களும் நத்தையாக நகர்ந்தன. இரு தலைக் கொள்ளி எறும்பு போல், தவித்துக் கொண் டிருந்தாள் ஜனனி.

இரவில் சுத்தமாய் தூக்கத்தைத் தொலைத்து விட்டு விட்டத்தைப் பார்த்து வெறித்துக் கொண்டிருந்தாள்.

ஜெகன் செவல்பட்டிக்குச் செல்வதைத் தடுக்கவும் முடியாது. தடுக்கவும் கூடாது. தடுத்தாலும் கேட்கும் மனநிலையில் அவன் இல்லை.

வீட்டிற்குத் தெரியாமல், அவன் அங்கு செல்லப் போகும் விஷயத்தை வெளியில் சொல்லாமல் இருப்ப தற்கு... அவளது மனசாட்சி இடம் கொடுக்கவில்லை.

'ஆபத்தை நோக்கி ஜெகன் செல்கிறார். இதைப் பற்றி யாரிடமும் மூச்சு விடக்கூடாது என்று அத்தான் எனக்கு ஆணையிட்டுள்ளார். நான் அதை மீறவும் முடியாது. அத்தானுக்கு ஏதாவது பெரிய விபரீதம் நேர்ந்துவிட்டால்...?

'உண்மையை மறைத்து... என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டாயே ஜனனி?' என்று அம்புஜம் அத்தை என்னை ஏசுவாரே? யார் ஏசினால் எனக்கு என்ன? அத்தானுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டால்... அதை என்னால் தாங்க முடியுமா?

ஊகூம்... மறுகணமே நான் உயிரை விட்டு விடுவேனே? என்ன செய்யப் போகிறேன் நான்? கடவுளே... எனக்கு நீதான் ஒரு வழி சொல்ல வேண்டும். இந்த



இக்கட்டிலிருந்து எப்படி மீளப் போகிறேன்? பெரிய பிராணாவஸ்தையாக இருக்கிறதே?'

தலையனை நனையும் வண்ணம் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த ஜனனி... விடியும் தறுவாயில் அவளையும் அறியாமல் மெல்ல உறங்கிவிட்டிருந்தாள்.

சுற்றிலும் இருட்டு...! ஏதோ பீடம் போன்ற அமைப்பில் யாரோ ஒருவர் பத்மாசனமிட்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்டு... ஜனனி நெருங்கிச் சென்று உற்று நோக்குகிறாள்.

ஜடாமுடியுடன் விழிகளை மூடியபடி சித்தர்! அவரது நெற்றியில் விபூதிப் பட்டை!... உடம்பிலும் மார்பிலும் வெள்ளை வெளேரென்று விபூதியைப் பூசியிருந்தார்.

திடீரென்று மூடிய விழிகளை அவர் திறக்கிறார்... அகன்ற சிவந்த விழிகளைக் கண்டதும்... ஜனனிக்கு சிலீரென்று மேனி புல்லரிக்கிறது. விழிகளால் சைகை காட்டி அருகில் வரும்படி சமிக்ஞை செய்கிறார் சித்தர்.

மந்திர சக்திக்கு கட்டுண்டது போல்... பவ்யமாய் அவரருகே சென்று குனிகின்றாள் ஜனனி.

அவளது நெற்றியில் விபூதியைப் பூசிவிட்டு... உச்சந்தலையைத் தொட்டு ஆசீர்வதிக்கிறார்.

விழிகளை மூடி வணங்கி நிமிர்ந்த ஜனனி... மீண்டும் கண் திறந்த போது... அந்த சித்தர் மாயமாய் மறைந்துவிட்டிருந்தார்.

அவர் அமர்ந்திருந்த பீடத்தை உற்றுநோக்கிய போது... அது பீடமல்ல! அது ஒரு சமாதி என்பதை உணர்ந்து திகைக்கிறாள் ஜனனி.

மீண்டும் மேனி சிலிர்க்கின்றது...

"சமாதியா? இங்கு தான் சித்தர் ஜீவ சமாதி அடைந்தாரா?"

அவளையும் அறியாமல் முணுமுணுக்கிறாள்.

தூக்கம் சட்டென்று கலைய... வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் ஜனனி.

விடி விளக்கின் மெல்லிய ஒளியில் சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள். அதிகாலை நான்கு மணி!

கனவு போலவே தோன்றவில்லை... அவ்வளவு தத்ரூபமாக ஜடாமுடி சித்தர் காட்சியளித்து விட்டிருந்தார்.

'கனவில் சித்தர் காட்சியளித்து நெற்றியில் விபூதி பூசி ஆசி வழங்கியிருக்கிறாரே? இதற்கு என்ன அர்த்தம்?

கவலைப்பட்டு அழுது கடைசியில் பகவானின் மீது பாரத்தைப் போட்டு... என்னையும் அறியாமல் உறங்கி விட்டிருக்கிறேன். என் பிரார்த்தனை சித்தரின் செவிகளுக்கு எட்டிவிட்டதோ? அதனால்தான் தரிசனம் தந்துவிட்டாரோ? 'எதைப் பற்றியும் கவலைப்படாதே நானிருக்கிறேன் உனக்கு' என்று சொல்லாமல் சொல்கிறாரோ? அப்படித்தான் இருக்க வேண்டும். நினைத்துப் பார்க்கையில்... நிஜமாகவே புல்லரிக்கிறதே? சித்தரின் ஆசி எனக்கு ஆரம்பத்திலிருந்து வாய்த்திருக்கிறதோ?

நான் பிறப்பதற்கு முன்பே திருவண்ணாமலை யிலிருந்த சித்தர் அருள்வாக்கு கூறியிருக்கிறார். 'அந்த ஜடாமுடி சித்தரை நேரிலே பார்க்கத்தான் கொடுத்து வைக்கலை... அட்லீஸ்ட்! அவர் ஜீவ சமாதி அடைஞ்ச



இடத்தைப் பார்த்து வணங்கிட்டு வரணும்னு ஆசை' என்று ஜெகன் கூறினாரே? அதே சித்தர் தனது ஜீவ சமாதியைக் காட்டி... எனக்கு தரிசனம் அளித்துவிட்டாரே? நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்? அப்பாடா... மனதில் உள்ள பாரம் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் அல்லவா விலகிவிட்டது?

இன்று காலை பத்து மணிக்குத் தானே... அனைவரும் வேனில் திருவண்ணாமலைக்குக் கிளம்புகின்றனர்? கிளம்பிச் செல்லட்டும். நானும் ஆபீசுக்கு மூன்று நாட்கள் விடுமுறை போட்டுவிட வேண்டியது தான்."

மனதிற்குள் தீர்மானித்தபடியே... அவிழ்ந்த கூந்தலைக் கோதிக் கொண்டையிட்டுக் கொண்டு, குளியலறையை நோக்கி விரைந்தாள் ஜனனி.

அவள் குளித்து முடித்துவிட்டு பூஜையறையில் விளக்கேற்றி தியானம் செய்துவிட்டு... முன்னறைக்கு வந்தபோது... ராமதுரையும் திலகமும் பிரயாணத்திற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

"உங்கத்தை இப்பத்தாம்மா... போன் பண்ணினா... கொஞ்ச நேரத்துல அவங்க கிளம்பி இங்க வந்துட றாங்களாம். ஜெகன் மாப்பிள்ளையையும் கூட வரச் சொல்லி அம்புஜம் கெஞ்சினாளாம். ஆராய்ச்சி சம்பந்தமா நிறைய வேலை இருக்கிறதால வர முடியாதுன்னு சொல்லிட்டாராம். இன்னிக்குக்கூட காலேஜ்க்கு லீவு போட்டுட்டு லீவுல உட்கார்ந்து ஏதோ பெரிய புத்தகங்கள்லே இருந்து குறிப்பு எடுக்கப் போறதா மாப்பிள்ளை சொன்னாராம். கடமையே குறிக்கோளா இருக்காரு. நீயும்

அப்படித்தான் இருக்கே... நல்ல பொருத்தமான ஜோடி தான்!" பெருமிதமாய் சிரித்தார் ராமதுரை.

ஒரு புன்னகையை பதிலுக்கு தந்த ஜனனி... நீண்ட கூந்தலைத் தழைய வாரிப் பின்னலிட்டபடியே... யோசனையில் மூழ்கினாள்.

'அத்தான் லீவு போட்டுவிட்டு வீட்டிலிருக்கிறார். மற்றவர்கள் திருவண்ணாமலைக்குச் சென்றதும்... இவர் செவல்பட்டிக்கு கிளம்பப் போகிறார்... அதற்குள் நானும் ஆபீசுக்கு லீவு சொல்லிவிட்டு அத்தானைப் பார்த்துப் பேச வேண்டும். 'அவருடனே நானும் செவல்பட்டிக்குச் செல்ல வேண்டியது தான்.'

ஜெகனைத் தேடிச் செல்ல... அவள் முடிவெடுத்து விட்டாள். விதி சிரித்தது! இருவருக்கும் ஒரு முடிவு கட்ட ஆர்வமாய் காத்திருந்தது.

# 6

அலுவலகத்திற்குச் சென்று தயாராய் எழுதி வைத்திருந்த விடுமுறை கடிதத்தை பியூனிடம் கொடுத்துவிட்டு... ஜெகனின் வீட்டை நோக்கி ஸ்கூட்டியில் மிதமான வேகத்தில் பயணித்தாள்.

ஜனனி அந்த வீட்டை அடைந்தபோது... கதவு பூட்டப் பட்டிருந்தது. அவளுக்குள் ஏமாற்றம் முற்றுகையிட்டது.

'அதற்குள்ளாகவா அத்தான் கிளம்பிச் சென்று விட்டார்? நான் வருவதை முன்கூட்டியே செல்ஃபோனில் தெரிவிக்காமல் போய்விட்டேனே? இப்போது என்ன



செய்வது? என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை... முன் வைத்த காலைப் பின் வைக்கப்போவதும் இல்லை... அத்தானைத் தேடிக் கொண்டு 'செவல் பட்டிக்கே' சென்றுவிட வேண்டியது தான்... என்ன ஆனாலும் சரி... நடப்பது நடக்கட்டும்... அதற்கு மேல் சிவனும் சித்தரும் பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் மீது பாரத்தைப் போட்டுச் செல்ல வேண்டியதுதான்...

அதைவிட்டுவிட்டு... இங்கேயே இருந்தால் 'என்ன ஆயிற்றோ? ஏதாயிற்றோ? என்ற கவலையில் நிமிடத்திற்கு நிமிடம் செத்துப் பிழைக்க வேண்டியதுதான்...

"ஹாய் ஜனனி! என்ன? என்னைத் தேடிக்கிட்டு வீட்டுக்கே வந்துட்டே? நீ தனியா கிளம்பி ஒருநாளும் வந்ததில்லையே? பக்கத்துல கடை வரைக்கும் போயிருந்தேன்... திடீர்னு வந்து நின்னு சர்ப்ரைஸ் குடுக்கிறியே... வா! உள்ளே வா ஜனனி."

மலர்ந்த முகத்துடன் அவளை வரவேற்றுவிட்டு... வீட்டின் கதவை அவசரமாய் திறந்து உள்ளே புகுந்தான் ஜெகன்.

"நான் வரதுக்கு கொஞ்சம் லேட்டாயிருந்தா... நீ அப்படியே திரும்பிப் போயிருப்பியே? ஒரு ஃபோன் பண்ணிட்டு வந்திருக்கலாமே ஜனனி? உட்காரு" உபசரித்துவிட்டு அவளுக்கு நேரெதிரே வந்து அமர்ந்தான்.

"இன்னிக்கு நீங்க லீவு போட்டுட்டு... வீட்டுல முக்கியமான ஹிண்ட்ஸ் எடுத்துட்டு இருக்கிறதா... கேள்விப்பட்டேன். அதான் அப்படியே கிளம்பி வந்துட்டேன்.

அதுவும் தவிர... இது பத்தி ஃபோன்லே பேசினா... தோதுப்படாதுன்னு தோணுச்சு. நேர்லே பேசிக்கலாமேன்னு ஃபோன் பண்ணாம இருந்துட்டேன்... ஆபீசுக்குப் போய் மூணு நாளைக்கு லீவு லெட்டர் கொடுத்துட்டு... நேரா இங்க தான் வந்தேன்?"

ஜனனியின் முகத்தை ஊன்றிப் பார்த்தான் ஜெகன். "என்ன விஷயம் ஜனனி? ஃபோன் பண்ணியிருந்தா... நான், நீ கூப்பிடற இடத்துக்கே வந்திருப்பேனே? நீ எதுக்கு வீணா சிரமப்படணும்? சரி... நீ என்னத்துக்கு மூணு நாள் லீவு போட்டே? கிரிவலத்தை முடிச்சுட்டு அவங்க வர்ற வரைக்கும்... வீட்டிலேயே உட்கார்ந்தா உனக்கு போரடிக்காதா? நீ சின்ஸியர் சிகாமணியாச்சே?"

"எனக்கு எப்படி போரடிக்கும்? நான்தான் உங்க கூட செவல்பட்டிக்கு வரப் போறேனே?"

"மை காட்! என்ன ஜனனி இது? பெரியவங்களுக்கு இது தெரிஞ்சதுன்னா... அவ்வளவுதான்!"

"எப்படித் தெரியும்? நாம்ப சொல்லாம... அவங்களுக்கு இந்த விஷயம் தெரியறதுக்கு... வாய்ப்பே இல்லையே?"

"யோசிச்சுத்தான் பேசிறியா? அவங்க மூணு நாளைக்கு அப்புறம் வந்துடுவாங்கல்ல? அப்ப தெரிஞ்சுடுமே?"

"அவங்க வர்ற சமயத்துல... நாமளும் சமர்த்தா வந்து சேர்ந்துடலாம். அப்போ பிரச்சினை வராதுல்ல?"

"மூணுநாள் கழிச்சு கண்டிப்பா திரும்பி வந்துடுவோம்னு சொல்றியா? நமக்கு ஏதாவது ஆபத்து வந்துட்டா? திரும்ப முடியாமலே போயிட்டா... என்ன செய்யறது? என் ஆர்வத்துக்காக... எனக்காக... நான் அங்கே போகணும்னு முடிவு செய்திருக்கேன். நீ எதுக்காக வீணாக் கூட வந்து சிக்கல்லே மாட்டிக்கிறே?"



"இல்ல... எனக்கு நம்பிக்கை இருக்கு. நாம்ப பத்திரமா திரும்பி வந்துடுவோம். நம்புங்க அத்தான்."

"சண்முகம் ஐயாவே மறுபடியும் எனக்கு ஃபோன் பண்ணி... 'நீ புறப்பட்டு வராதேப்பா... அமானுஷ்யமான நிகழ்வுகள் நடக்கிறதைப் பார்த்தா... உன் உயிருக்கு ஏதாச்சும் ஆபத்து வந்துடுமோன்னு பயமாயிருக்கு. அதனால நீ வர வேணாம். ஆராய வந்த இடத்துல ஆபத்துல மாட்டிக்குவே... அதனாலே நீ வரவே வேணாம்னு கண்டிப்பா சொல்லிட்டாரு... தெரியுமா?"

"எதை வச்சு இவ்ளோ நம்பிக்கையா சொல்றே?"

"இன்னிக்கு அதிகாலையில கனவுலே... ஜடாமுடி சித்தரோட தரிசனம் கிடைச்சது. அது மட்டுமில்ல... ஆரம்பத்திலிருந்தே நம்ம குடும்பத்துக்கு சித்தரோட அனுக்கிரகம் இருந்துட்டே வருது... திருவண்ணாமலை கிரிவலப் பாதையில..." என்று ஆரம்பித்து சகலத்தையும் விடாமல் அவனிடம் சொன்னாள் ஜனனி.

"நீ சொன்னதை வச்சுப் பார்க்கும்போது... எனக்கும் அதே நம்பிக்கை தான் வருது... சரி! நீயும் வா! உனக்குத் தேவையான திங்க்ஸை எடுத்து வச்சுக்கணுமே?"

"வச்சுட்டேன். டிராவல் பேக்கை வீட்டுலே கட்டிலுக்கு அடியில ஒளிச்சு வச்சிருக்கேன். எப்படியும் உங்களைக் கன்வின்ஸ் பண்ணிடலாம்கிற நம்பிக்கை இருந்ததால...

எல்லாத்தையும் ரெடி பண்ணி வச்சுட்டேன். ஆமா... நாம்ப எப்போ கிளம்பப் போறோம்?"

"நைட் கிளம்பலாம்னு இருந்தேன். நம்ம கார்லேயே போயிடலாம். நீயும் வர்றதால நைட் டிராவல் அவ்ளோ நல்லதில்லை... நீ உன் ஸ்கூட்டியில வீட்டுக்கு உடனடியாப் போ... தயாரா இரு! கார்லே நான் வந்துடறேன். சீக்கிரமா கிளம்பிட்டா... பத்தரை பதினோரு மணிக்கெல்லாம் போய் சேர்ந்துடலாம்... சண்முகம் ஐயாவுக்கு நாம்ப வரப் போற தகவலைச் சொல்லிடறேன். சொல்லிட்டா... நாம்ப நைட் தங்கறதுக்கு வேண்டிய ஏற்பாட்டை அவர் செய்துடுவாரு..."

ஜனனிக்குள் பெருத்த நிம்மதி ஜனித்தது.

"சீக்கிரமா வந்துடுங்க அத்தான்! நான் ரெடியா இருப்பேன்" ஹேண்ட் பேக்கை தோளில் மாட்டிக்கொண்டு அவசரமாய் வெளியேறினாள். விதியும் நிழலாய் அவளைப் பின் தொடர்ந்தது.

## 7

**சொ**ன்னபடியே விரைவிலேயே வந்து விட்டிருந்தான் ஜெகன்.

காரில் முன் பக்கத்தில் வந்து அமர்ந்தாள் ஜனனி.

மிதமான வேகத்தில் ஓட்டிய ஜெகனை ஏறிட்டாள்.

"சண்முகம் ஐயாகிட்டே சொல்லிட்டீங்களா அத்தான்?"

"ஓ... சொல்லிட்டேன்."



"சண்முகம் ஐயா வீட்டுல யார் யாரெல்லாம் இருக்காங்க?"

"எதுக்கு கேட்கிறே ஜனனி? நாம்ப அவரோட வீட்டுல தங்கப் போறதில்ல..."

"அப்பாடா... இப்பத்தான் நிம்மதியா இருக்கு. அவங்க கிராமத்திலேயே வாழ்ந்தவங்க இல்லையா? என்னதான் சொந்த அத்தானா இருந்தாலும்... கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடி... இந்தப் பொண்ணு அத்தான்கூடத் தனியாக புறப்பட்டு வந்திருக்காளேன்னு நெனப்பாங்க. அதுக்குத் தான் தயங்கினேன். ஐயாவோட வீட்டுலே நாம்ப தங்கப் போறதில்லைன்னா... வேற எங்க தங்கப் போறோம்?"

"சண்முகம் ஐயா, ஜமீன்தாருக்கு கணக்குப் பிள்ளை மட்டுமில்ல... அவரோட வலது கை மாதிரி கூடவே இருப்பாராம். நண்பர்கள் மாதிரி ரெண்டு பேரும் ஒளிவு மறைவு இல்லாம... மனசு விட்டுப் பேசிப்பாங்களாம்.

நான் வரப் போறதைப் பத்தி ஜமீன்தார் கிட்டே... சண்முகம் ஐயா சொன்னாராம். 'காலேஜுலே லெக்சரர், அதுவும் நம்ம குடவரைக் கோயிலை ஆராய்ச்சி பண்ண வர்றாரு... அவரை நம்ம மாளிகையிலேயே தங்கிக்கச் சொல்லுங்க சண்முகம்!'னு... ஜமீன்தார் உத்தரவே போட்டுட்டாராம். அதனால நாம்ப இன்னிக்கு ஜமீன்தார் மாளிகையில தான் தங்கப் போறோம்..."

"அப்படியா...?"

அதற்கு மேல் பேசத் தோன்றாமல்... சிந்தனை வயப் பட்டவளை... திரும்பிப் பார்த்து முறுவலித்தான் ஜெகன்.

"என்ன ஜனனி? முகம் அப்படியே வாடிப் போச்சே? ஜமீன் மாளிகையிலே தங்கறதுக்கும் உனக்குத் தயக்கமா இருக்கா?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்ல அத்தான்! இந்த மட்டுமாவது தங்கறதுக்கு இடம் கிடைக்குதே? இதுவும் இல்லேன்னா... நம்ப நடுராத்திரி திண்டாடித்தானே போகணும்? எப்பவுமே கிடைக்கிறதை வச்சு திருப்திப் பட்டுக்கணும். அதுவும் ஜமீன் மாளிகையிலே தங்கப் போறோம். நம்ம வரவை ஜமீன்தாரே ஆவலோட எதிர் பார்த்துட்டிருக்காரே... யாருக்கு கிடைக்கும் இப்பேர்ப்பட்ட வாய்ப்பு?"

"உன் முக வாட்டத்துக்கு வேறொரு காரணம் இருக்கு. சொல்ல விருப்பமில்லாம... பேச்சைத் திசை திருப்பிட்டே... சரிதான்! நான் என்ன நெனக்கிறேன் தெரியுமா? பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி இருக்குன்னு... எனக்குள்ளே ஒரு குஷி!"

"எனக்கு உள்ளூர 'திக் திக்'குனு அடிச்சுட்டே இருக்கு. உங்களுக்கு குஷியா இருக்குதாமா? அது எப்படி குஷி வரும்னு புரியலையே?"

"அவ்ளோ நம்பிக்கையாப் பேசி... பிடிவாதமாக் கூடவே கிளம்பி வந்தே... இப்போ திக் திக்குனு அடிச்சுக்குதா?..." மெல்ல நகைத்தான் ஜெகன்.

"நம்பிக்கை இருந்தாலும்கூடவே திகிலும் இருக்காதா பின்னே? கிண்டல் பண்ணாம... நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க அத்தான்!"



"குஷிக்கான காரணத்தைக் கேட்கிறியா? சொல்றேன். சண்முகம் ஐயா என்ன சொன்னாருங்கிறதை மறந்துட்டியா? சமீபகாலமா ஜமீன் பங்களாவிலே அமானுஷ்யமான நிகழ்வுகள் நடக்குதுன்னு சொன்னாருல்ல? அது என்ன? ஏதுன்னு ஆராயணும்னு எனக்கு ஆசை... அப்படி ஆராயணும்னா... ஜமீன்தாரோட அனுமதி வேணும். அவர்கிட்டே அனுமதி வாங்கி ஜமீன் மாளிகையில தங்கி ஆராயணும். இல்லையா?"

"இப்போ என்னாச்சு பார்த்தியா? பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி ஜமீன்தாரே நம்மை அவரோட மாளிகையில தங்கச் சொல்றாரு... இதைக் கேள்விப்பட்டதும் உள்ளூர குஷியா இருக்காதா ஜனனி?"

"வாஸ்தவம் தான்! புது இடத்துலே சாதாரணமாவே தூக்கம் வராது. நாம தங்கப் போற ஜமீன் மாளிகையில அமானுஷ்யம் நடக்கும்னு வேற சொல்றீங்க... தூக்கம் சுத்தமா வரப் போறதில்ல... நானொரு பைத்தியம் அத்தான்! நாம என்ன தூங்கறதுக்கா போறோம்? கண்டிப்பா இன்னிக்கு நைட்லே இருந்து ஆராய்ச்சியை ஆரம்பிச் சுடுவோம் அப்படித்தானே?"

"அப்படித்தான்... அதுக்கு என்ன இப்போ?"

"இல்ல... நீங்களே அவ்ளோ தூரத்துக்கு காரை ஓட்டிக்கிட்டு வந்தா... ரொம்ப டயர்டா ஆயிடுவீங்க. எனக்கும் டிரைவிங் தெரியுமில்லையா? நான் கொஞ்ச நேரம் நிதானமா டிரைவ் பண்றேன். நீங்க அந்த நேரத்துல ஒரு குட்டித் தூக்கம் போட்டுக்கலாம் பாருங்க... ரிலாக்ஸாகவும், புத்துணர்ச்சியாகவும் இருக்கும்... அதனால தான் சொல்றேன்."

"ஓ.கே... ஜனனி! உன் வார்த்தையை என்னிக்கும் நான் மீறமாட்டேன். நீ நிதானமா கவனமா ஓட்டக்கூடியவள். தாராளமா டிரைவ் பண்ணு! நீ சொன்னாப்பல ரெண்டு பேரும் மாறி மாறி கொஞ்சம் குட்டித் தூக்கம் போட்டாத் தான்... ராத்திரிக்கு கண்முழிக்கத் தோதா இருக்கும்...

அதோ அங்க ஆளுக்கொரு இளநீர் சாப்பிட்டுட்டு பயணத்தைத் தொடருவோம்..." என்றபடி சாலையோர மரத்தடியில் இருந்த இளநீர் கடையின் முன் காரை நிறுத்தினான் ஜெகன்.

இரவு பதினொரு மணியை நெருங்குவதற்கு முன்பாகவே 'செவல்பட்டி'யை அடைந்து விட்டிருந்தனர்.

ஒரு டீக்கடையின் முன்பாக காரை நிறுத்தினான் ஜெகன். "ராத்திரி பதினொரு மணி ஆகப் போகுதுங்க... கடையை மூடப் போறோம்... இனி காலையில தான்..." வாசலிலிருந்த பெஞ்சை தூக்கி உள்ளே வைத்தபடி குரல் கொடுத்தார் கடைக்காரர்.

"நாங்க டீ சாப்பிட வரலைங்க... இங்க சண்முகம் ஐயாவைப் பார்க்க வந்தோம். ஜமீன் மாளிகைக்கு வரச் சொன்னாரு. ஜமீன் மாளிகை எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமா?"

காரில் அமர்ந்தபடியே தலையை மட்டும் வெளியில் நீட்டிக் கேட்டான் ஜெகன்.

விதிர் விதிர்த்துப் போய் சட்டென்று திரும்பிப் பார்த்தார் கடைக்காரர்.

"இ... இப்படியே நேரா போயி, சோத்துக்கை பக்கமா திரும்புங்க... திரும்பின உடனே பிரமாண்டமான ஜமீன்



மாளிகை கண்ணுக்குத் தட்டுப் பட்டுரும். ஆமா... இன்னிக்கு ராத்திரி அங்கேயா தங்கப் போறீங்க?"

கிராமத்துக்காரருக்கு உரிய வம்புத்தனம் குரலில் தொனிக்க... கடைக்காரர் ஜெகனின் அருகில் அமர்ந்திருந்த ஜனனியை ஆர்வமாய் நோட்டமிட்டார்.

"உங்க தகவலுக்கு நன்றி ஐயா!" என்றபடி காரை ஓட்டினான்.

"மூக்கை நுழைக்கிறதுக்கு ஆலாய் பறக்கிறதைப் பாரேன். வம்பு தும்பு பேசறதுக்கு மேட்டர் கிடைக் கலைன்னா... இவங்களுக்கு தூக்கம் வராது போல..." சலித்துக்கொண்டான் ஜெகன்.

'ஜமீன் மாளிகை என்றதுமே... கடைக்காரர் விதிர்த்துப் போய் திகிலுடன் பார்த்தாரே...? ஏன்? எதற்கு? எங்கள் இருவரையும் அவர் ஏன் பரிதாபமாய் நோட்டமிட வேண்டும்? கேள்விகளை சுமந்தவண்ணம் எண்ண அலைகள் அடுக்கடுக்காய் எழும்பி... ஜனனியின் இதயத்தைப் பலமாய் மோதின.

## 8

சண்முகம் அவர்களை இன்முகத் துடன் வரவேற்று ஜமீன்தார் தேவேந்திர பூபதியிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"உங்களுக்காகத் தான் பூபதி ஐயா இவ்ளோ நேரமா காத்திருந்தாரு" சண்முகம் புன்னகைத்தார்.

"ரொம்ப சந்தோஷம் ஐயா! உங்க அறிமுகமும் அன்பும் எங்களுக்குக் கிடைத்தது பெரிய விஷயம்" கைகளைக் கூப்பினான் ஜெகன்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க தம்பி! ஒரு லெக்சரர் நம்ம மாளிகையில தங்கி ஆராய்ச்சி பண்ணினா... அது எங்களுக்குத் தான் பெருமை... உங்களுக்கு என்ன தேவைப்பட்டாலும் கூச்சப்படாம கேளுங்க... உங்க ஆராய்ச்சி முடிஞ்சு, நீங்க போற வரைக்கும் உங்களுக்கு ஒரு குறையும் இல்லாம பார்த்துக்கணும்னு.... நான் இங்க சொல்லி வச்சிருக்கேன்... அப்போ... நீங்க ஓய்வெடுங்க... மத்ததைக் காலையில பார்த்துக்கலாம்..."

"சரிங்க ஐயா... ரொம்ப நன்றி."

ஜமீன்தார் அவ்விடத்தை விட்டு அகன்றதும்... சண்முகம் இவர்களின் அருகே வந்தார்.

"உங்க ரெண்டு பேத்துக்கும் பக்கத்தில் பக்கத்துல ரெண்டு அறைகள் சகல வசதிகளோட இருக்கு... இந்த ஹாலின் வலது கோடியில பாருங்க... அந்த அறைகள் தான். குடிக்கத் தண்ணி, பிஸ்கட் பாக்கெட்டுகள், பழங்கள் எல்லாம் இருக்கு... ஆங்... தம்பி! நான் சொன்னது ஞாபகம் இருக்குல்ல? ஜடாமுடி சித்தரு மேல அவதூறு பரப்பினவங்களை எப்படியாச்சும் கண்டுபிடிக்கணும். சமீபகாலமா நான் ராத்திரி வீட்டுக்குப் போறதில்ல... பூபதி ஐயா தான் என்னை இங்கேயே துணைக்கு இருக்கும்படி சொல்லிட்டாரு. ஏதாவது அவசரம்னா... உங்க கட்டிலுக்கு பக்கவாட்டுல இருக்கிற சிவப்பு பட்டனை அழுத்துங்க... நான் உடனே ஓடியாந்துடுவேன். சரியா ஜெகன்? நீ தாழ்ப்பாள் போட்டு ஜாக்கிரதையா படுத்துக்கோ அம்மா! வரட்டுமா?"

நீளமாய் பேசிவிட்டு ஜமீன்தார் சென்ற திசைப்பக்கம் ஓட்டமும் நடையுமாய் விரைந்தார் சண்முகம்.



தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளில் இருவரும் நுழைந்தனர். பேக்கை வைத்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள் ஜனனி.

மிகப் பெரிய அறை! டேபிள் சேர்... விஸ்தாரமான கட்டில்! கட்டிலின் மீது அமர்ந்தாள்.

'பக்கவாட்டு சுவரில் நடுமத்தியமாய் ஒரு கதவு இருக்கிறதே?' யோசித்தபடியே எழுந்து கதவில் கை வைத்துத் தள்ளினாள்.

'ஓ... ஜெகன் அத்தான் சீரியஸான முகபாவனையுடன் டைரியில் ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டிருக்கிறாரே? இது அந்த அறைக்கும் இந்த அறைக்கும் இடைப்பட்ட கதவு போலிருக்கிறது.

சப்தமிடாமல் மீண்டும் கதவைச் சாற்றிவிட்டு கட்டிலின் மீது அமர்ந்தாள்.

புது இடம்... தூக்கம் வரமறுத்துப் பிடிவாதம் பிடித்ததால் தான் கொண்டு வந்த புத்தகத்தை எடுத்து வைத்து வாசிக்கத் தொடங்கினாள்.

சரியாக நேரம் நள்ளிரவு ஒரு மணியைத் தொட்ட போது... 'தொம் தொம்' என்று அழுத்தமான காலடி ஓசை மாடியிலிருந்து வந்தது. அடுத்த சில கணங்களில் டமார் என்று சப்தம்... சிலீரென்று ஏதோ கண்ணாடி உடையும் ஓசை வந்தது.

திடுக்கிட்டு எழுந்து நின்றாள் ஜனனி.

அவளுக்கு குப்பென்று வியர்த்துப் போனது. பக்கத்து அறைக் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது.

"ஏதோ சப்தம் கேட்டதும் அத்தான் அதை நேரில் பார்த்து ஆராயக் கிளம்பிவிட்டாரோ? திறக்கப்பட்டது, அவரது அறைக் கதவு தானா? எதற்கும் பக்கவாட்டிலிருக்கும் இடைக் கதவைத் திறந்து பார்த்துவிட வேண்டியது தான்."

ஜனனி நினைத்தது சரிதான்! ஜெகன் அந்த அறையில் இல்லை... சப்தம் வந்த இடத்தை நோக்கி அவர் சென்றிருக்கிறாரே? ஏதாச்சும் ஆபத்து வந்து விட்டால்...?"

திகில் அவளை ஆட்டிப் படைத்தது.

ஏதேதோ தடிமனான பொருட்களை வேண்டுமென்றே யாரோ தரையில் தூக்கிப் போடுவது போல்... தொடர்ந்து சப்தம் வரவே... அவள் ஒரு கணம் யோசித்தாள்.

ஜெகன் தங்கியிருந்த அறையிலிருந்த கட்டிலை நெருங்கி ஊன்றி கவனித்து... பக்கவாட்டிலிருந்த சிவப்பு பட்டனை பலங்கொண்ட மட்டும் அழுத்திவிட்டு... அந்த அறையை விட்டு வெளிப்பட்டாள்.

'அந்த பட்டனை அழுத்தினால்... சண்முகம் ஐயா உடனே ஓடி வருவேன் என்று கூறி இருந்தாரே? அவரும் ஜமீன்தாரும் எந்த அறையில் தங்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லையே?

வலது கோடியிலிருந்த அனைத்து அறைகளும் சாத்தப்பட்டு இருளில் மூழ்கியிருந்தன.

மாளிகையின் பிரமாண்ட ஹாலின் மத்தியில் அலங்காரமாய் தொங்கிய சரவிளக்குகள் அணைக்கப் பட்டிருந்தன.



மாடியிலிருந்து தொடர்ந்து சப்தம் வந்த வண்ண மிருந்தது. மேலே செல்வதற்கான மாடிப் படிகள் ஹாலின் மத்தியில்தான் இருந்தன. படிகளை நோக்கி வேகமாய் நடந்தாள்.

வெறி கொண்டவனைப் போல் யாரோ சிரிக்கும் சப்தம் மேலிருந்து வந்தது.

'பயங்கரமான கொலை வெறி பிடித்தவனைப் போல் யாரோ சிரிக்கிறார்களே? அந்த சிரிப்பு சப்தம் ஜமீன் மாளிகையில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கிறதே?

நள்ளிரவில்... அமானுஷ்யமாய் சப்தமும், சிரிப்பொலியும் சாதாரணமாய் யார் கேட்டிருந்தாலும் மயக்கம் போட்டு விழுந்திருப்பார்கள். அத்தான் மீது நான் வைத்திருக்கும் நேசமும் அக்கறையும் தான்... எனக்கு அசாத்திய துணிவையும் தைரியத்தையும் கொடுத்துவிட்டது போலும்.'

எண்ணியபடியே அவள் மாடிப்படிகளை நெருங்கும் சமயத்தில்... தடதடவென்று யாரோ ஓடி வரும் சப்தம் கேட்டு சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

இரண்டு மூன்று வேலையாட்கள் விரைந்து ஓடி வர... அவர்களுக்கு பின்னால் சண்முகம் ஐயா வேகமாக வந்து கொண்டிருந்தார்.

"நீ நில்லும்மா... மேலே போகாதே... ஓரமா ஒதுங்கி நின்னுக்கோ..." அவர் அவசரமாய் குரல் கொடுத்ததும் மாடிப் படியில் காலை வைக்கப் போன ஜனனி... துரிதமாய் ஒதுங்கி நின்று கொண்டு, மீண்டும் சண்முகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

அதற்குள் அவளருகில் வந்துவிட்ட சண்முகம், 'நீ ஜெகனைத் தேடிக்கிட்டு மாடிக்குப் போகலாம்னு வந்தியா?' என்றார்.

ஆமாம் என்பது போல் தலையசைத்துவிட்டு, சப்தம் வந்த திக்கை நோக்கி அண்ணாந்து பார்த்தாள்.

யாரோ எதன் மீதோ மோதிக் கொண்டு பொத்தென்று விழும் சப்தம் கேட்டது.

அடுத்த சில கணங்களில் மாடிப்படிகளில் 'தொம் தொம்' என்று ஓசை எழுப்பியபடி யாரோ இறங்கி வரும் சப்தம் கேட்டது.

என்ன ஆச்சரியம்? கம்பளிப் போர்வையை யாரோ போர்த்திக் கொண்டு இறங்குவது போலிருக்கிறது. ஆனால்... உருவம் சுத்தமாய் கண்ணுக்குத் தென்படவில்லை.

இறங்கி வரும் உருவத்துக்குரிய கால்களும் தென்படவில்லை. தலைப்பகுதியும் தென்படவில்லை. அதே சமயம் ஏதோ உருவத்திற்குப் போர்த்தினாற் போல் கம்பளிப் போர்வை மட்டும் சப்தமிட்டபடி இறங்கி வந்தது.

கடைசிப் படியில் இறங்கியதும் அந்தப் போர்வை இவளிருக்கும் பக்கம் திரும்பி, நெருங்கி வந்து ஒதுங்கி நின்றிருந்தவளை உற்றுப் பார்த்தாற் போலிருந்தது.

மறுகணமே அவளது கன்னத்தை ஒரு முரட்டு ஆண் கரம் தட்டிவிட்டு புஜத்தில் அழுத்தமாய் கரத்தை வைத்தாற் போலிருந்தது.

ஜனனி பீதியில் வீலென்று அலறிவிட்டாள். அடுத்த கணமே வெறி கொண்டவனைப் போல் மீண்டும் சிரிக்கும்



சப்தம் கேட்டது. சிரித்தபடியே அந்த கம்பளிப் போர்வை நிதானமாக நடந்து, அந்த பிரமாண்டமான ஹாலை விட்டு வெளியேறியது.

உள்ளுக்குள் உதறலெடுக்க... குப்பென்று வியர்த்து வழிய திகிலுடன் நின்றிருந்தவளை ஏறிட்டார் சண்முகம்.

"வர வர இது ரொம்ப ஆட்டம் காட்ட ஆரம்பிச்சுடுச்சு. ஜமீன்தார் பூபதி ஐயா இரவுலேகூட ஹால்லே பளிச்சுன்னு விளக்குகள் எரியணும்னு உத்தரவு போட்டிருக்காரு.

ஆனா மொத்த விளக்குகளையும் அணைச்சு இருள்லே மூழ்கடிக்க வச்சுட்டு... இது ரொம்பவே அக்கிரமம் பண்ணுது.

நீ தைரியமா இரு தாயீ... நாங்க எல்லோரும் இருக்கோம் இல்லியா? டேய்... ஏன்டா மசமசன்னு நிக்கிறீங்க? இருட்டா இருக்குல்ல?

லைட்டைப் போட்டுட்டு வாங்க... மேலே என்ன சேதாரம் ஆயிருக்குன்னு பார்க்கலாம்."

"காத்து கருப்பு நடமாடுது இந்த மாளிகையில... நம்ம முனியன் பயத்துல காய்ச்சல் விழுந்து ஜன்னி கண்டு செத்தே போயிட்டேன். இனி... யாரு யாரெல்லாம் எந்த கதிக்கு ஆளாகப் போறாங்களோ? தெரியலையே..."

வேலையாட்களில் ஒருவன் முணுமுணுத்தபடி புலம்பியபடி சென்றதைக் கேட்டதும்...

ஜனனிக்கு இதயம் இரண்டாகி விடும் போல்... வேகமாய்த் துடித்தது.

# 9

**வி**ளக்குகள் பளீரென்று உயிர் பெற்றன. சட்டென்று அண்ணாந்து மாடியைப் பார்த்தாள் ஜனனி. நிதானமாய் மெல்ல இறங்கி வந்தான் ஜெகன்.

அவனது நெற்றியோரம் சிராய்ப்பு காயத்தைப் பார்த்ததும் பதறிப் போனவளாய்... அவனருகே சென்று நின்றாள்.

"என்னாச்சு அத்தான்? நெத்தியில காயம் பட்டிருக்கு?"

"ப்ச்! அது கிடக்கட்டும். நீ எதுக்கு அர்த்த ராத்திரியில ரூமை விட்டு வெளியில வந்தே? என்னைத் தேடிக்கிட்டு ஓடி வந்தியாக்கும்? எப்படி அலறினே தெரியுமா? தேவையா உனக்கு?"

உரிமையுடன் கடிந்துகொண்டான் ஜெகன்.

"விடுப்பா... உனக்கு என்ன ஆச்சோன்னு அவ பதறி வெளியில வந்திருக்கா... விட்டுத் தள்ளு! நெத்தியில எப்படி உனக்கு காயம் வந்துச்சு? அதைச் சொல்லு...!"

சண்முகம் அவனது கரத்தைப் பற்றிக் கொண்டார்.

"இந்த காத்து கருப்பு அமானுஷ்யத்தாலே... உங்களுக்கு ஆபத்து ஏற்பட்டா... அந்தப் பாவம் எனக்குத்தான். எதுக்குடா இதைப் பத்தியெல்லாம் உன்கிட்ட சொன்னோம்னு இருக்கு ஜெகன்."

"கவலைப்படாதீங்க ஐயா! எல்லாம் வெட்ட வெளிச் சத்துக்கு வரக்கூடிய நேரம் வந்தாச்சு. காத்து, கருப்பு, அமானுஷ்யம்னு எதுவுமே இல்ல... இது வேற சமாச்சாரம்."



"நீ என்ன சொல்றே?"

"இது ஒரு வகையான கண்கட்டு வித்தை. கூடிய விரைவில் இதை யாரு எந்த நோக்கத்துக்காக செய்யறாங்கன்னு கண்டுபிடிச்சுடலாம். கண்ணுக்குத் தெரியாத அந்த உருவம்... மேலே கடைசியா பூட்டப்பட்டிருக்கிற அறைக் கதவைத் திறக்க முயற்சி பண்ணி... அது முடியாததால கண்ணாடி ஜன்னலை உடைச்சு உள்ளே போயிருக்கு.

அங்க இருக்கிற பெரிய பெரிய பேரேடுகள், லெட்ஜர்கள், கணக்குப் புத்தகங்களை வேணும்னே தூக்கித் தூக்கிப் போட்டிருக்கு. வெளியில காவலா நின்னுட்டிருந்தவரை தாக்கிட்டுத்தான் உள்ளே போயிருக்கும் போலிருக்கு... உள்ளே எதையோ தேடி ஏமாந்து எல்லாத்தையும் தூக்கி வீசிப் போட்டு வெளியே வந்தப்போதான்... நான் எதிர்ப்பட்டேன்.

கண்ணுக்குத் தெரியாத உருவம்கிறதால... என்ன... ஏதுன்னு நான் யோசிச்சு சுதாரிக்கிறதுக்குள்ளே... எதிர்பாராம என்னைப் பிடிச்சு தூணுல மோத வெச்சுத் தள்ளி விட்டுட்டுப் போயிட்டான். அதனாலதான் நெத்தியில காயம் ஏற்பட்டுடுச்சு... மருந்து போட்டா சரியாயிடும்.

நாளைக்குப் பவுர்ணமி. பகல் நேரத்துல குடவரைக் கோவிலையும் குகையையும் ஆராய்ஞ்சுடலாம். ராத்திரியில மலையில இருக்கிற ஜடாமுடி சித்தரோட சமாதியைப் பார்க்கணும்... நீங்க ராத்திரி எங்ககூட வர்றீங்களா ஐயா?"

"இல்லை ஜெகன்! ஜடாமுடி சித்தர் மீது சுமத்தப்பட்ட வீண் அவதூறு நீங்கணும். உண்மை என்னன்னு

நிரூபிக்கப்பட்டதும்தான்... நான் தரிசனம் செய்யப் போகணும்னு... சங்கல்பம் பண்ணியிருக்கேன். எதுக்கும் நீங்க ஜாக்கிரதையா போயிட்டு வாங்க... துணைக்கு வேலையாட்களை உங்ககூட அனுப்பி வைக்கட்டுமா?"

"வேணாம்... வேணாம். அது சரிப்பட்டு வராது. நாங்க ரொம்ப ஜாக்கிரதையா இருந்துப்போம். நீங்க கவலைப் படாதீங்க."

"சரி... நீங்க போய் தூங்குங்க. ஞாபகமா கதவைத் தாழ் போட்டுக்கோம்மா... எந்தச் சப்தம் கேட்டாலும் தனியா கிளம்பிப் போயிடக்கூடாது. சரியா? காலையில பார்க்கலாம்."

மறுநாள் காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு இருவரும் குடவரைக் கோவிலை அடைந்தனர். முன்னூறு அடி உயர மலையின் நடுவே பாறையைக் குடைந்து குடவரைக் கோவில் அழகாக உருவாக்கப்பட்டிருந்தது.

பக்தர்கள் யாரும் அங்கே காணப்படவில்லை. பாம்பாலம்மன் கோவில் என அழைக்கப்படும் குடவரை கோவிலுக்குள் மெல்ல நுழைந்தனர். அங்கு அமர்ந்த நிலையில் விநாயகரும், நின்ற கோலத்தில் பெருமாளும் அருள்பாலித்தனர். அத்துடன் ஒரு பெண் தெய்வச் சிலையும் இருந்தது. மலையைக் குடைந்து இந்தச் சிற்பங்களை வரிசையாகச் செதுக்கி உள்ளனர்.

"ஜனனி! இந்தச் சிற்பங்கள் எல்லாமே ஒரே கல்லிலே உருவாக்கி இருக்காங்க.... ஆச்சரியமா இருக்குல்ல? சேர மன்னன் காலத்துல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால கட்டப்பட்ட குடவரைக் கோவிலா இருந்தாலும்... அதன் பொலிவை இழக்காம இருக்குல்ல...?"



"அதான்... நானும் ஆச்சரியமாப் பார்த்துட் டிருக்கேன்..."

கோவிலுக்கு மூன்று வாசல்கள் இருந்தன. பத்தடி உயரத்தில் நான்கு தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தத் தூண் ஒவ்வொன்றிலும் நந்தி, சிங்கம், யானை, அன்னம் போன்ற சிற்பங்கள் கலைநயத்துடன் வடிவமைக்கப் பட்டிருந்ததை... விழிகள் விரியப் பார்த்தாள் ஜனனி.

"இங்கேயே நின்னுட்டிருந்தா எப்படி? இங்கிருந்து கொஞ்ச தூரம் நடந்து போனா... குகை வருமாம். அதையும் ஆராய்ஞ்சு பார்த்துடலாம்... வா ஜனனி!"

'குகை' என்ற வார்த்தையைக் கேட்டதுமே... ஜனனிக்கு உள்ளூர திகில் கிளை விட்டுப் படர்ந்தது.

## 10

குடவரைக் கோவிலிலிருந்து கால் மணிநேரம் நடந்து சென்றதும்... அந்தக் குகை தென்பட்டது. வாசல், ஒரு ஆள் உயரத்துக்குக் காணப்பட்டது.

முதலில் நடந்தும், குனிந்தும் பின்னர் தவழ்ந்தும் செல்லும் வகையில் அந்தக் குகை அமைந்திருந்தது. தவழ்ந்து சிறிது தூரம் சென்றதும்... அமர்ந்து தியானம் செய்யும் வகையில் குகையின் அமைப்பு இருந்ததை... இருவரும் வியப்புடன் சுற்றிலும் பார்த்தனர்.

அங்கு அமர்வதற்கு வசதியாக ஒரு கல்லில் மேடை போல் நீளமாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கு இரண்டு புலித் தோல்கள் காணப்பட்டன.

"ஜனனி! இதைப் பார்த்தியா? இங்கே உட்கார்ந்துதான் சித்தர்களும் முனிவர்களும் தவமிருந்திருப்பாங்க..."

"ஆமா அத்தான்! அப்படித்தான் இருக்கணும்..."

இருவரும் நிதானமாய் அந்த இடத்தைத் தாண்டி உள்ளே சென்றனர்.

உள்ளே செல்லச் செல்ல... இரண்டு பாதைகள் வந்தன. ஒரு பாதையில் சூரிய வெளிச்சம் உள்ளே புகுந்து மணல் பரப்பு தெரிந்தது. குகைக்குள் ஜில்லென்று காற்றும் வீசியது.

பத்து நிமிடங்கள் தொடர்ந்து அந்தப் பாதையில் நடந்தபோது... கீழே மணற்பரப்பில் பாதி புதைந்து கிடந்த ஒரு சிறு டைரியைக் கண்டெடுத்த ஜெகன், அதைத் தனது பேண்ட் பாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்தினான்.

"ஜனனி! போதும்... வா! நாம்ப இன்னொரு பாதையில போய்... அங்கே என்னென்ன இருக்குன்னு பார்க்கலாம்."

ஆனால் அந்தப் பாதையோ கும்மிருட்டாக இருந்தது. கும்மிருட்டாக இருந்ததோடு... காற்றும் அதிகமாக இல்லை. காற்றே இல்லாததால் நான்கடி எடுத்து வைப்பதற்குள் மூச்சு திணறியது.

ஜெகன் ஜனனியின் கையைப் பிடித்து அவசர அவசரமாய் அதை விட்டு வெளியேறினான்.

"மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம்னு பல காலமா அதுல பயிற்சி பெற்றவங்க வேணும்னா... தம் பிடிச்சு இந்தப் பாதைக்குள்ளே போயிட்டு வரலாம். நமக்கு



முடியாது. அதுவும் இந்தப் பாதையோட எல்லை எதுன்னு இதுவரைக்கும் யாருக்குமே தெரியாதாம்... சண்முகம் ஐயா என்கிட்டே சொல்லியிருக்காரு."

"அப்படியா?" அந்தப் பாதையைத் திரும்பித் திரும்பி பார்த்தபடியே நடந்தாள் ஜனனி.

"அத்தான்! எனக்கு என்னமோ... இந்தப் பாதைக் குள்ளே ஒரு உருவம் நகர்ந்து போன மாதிரித் தெரிந்தது. நீங்க கவனிச்சீங்களா?"

"ஊகூம்... அப்படியெல்லாம் எதுவும் இருக்காது. என் கண்ணுக்கு எதுவுமே தட்டுப்படலையே? இது உன்னோட மனப்பிரமையா இருக்கும். ஒரே கும்மிருட்டா கிடக்கு. உனக்கு மட்டும் உருவம் தெரிஞ்சுதாக்கும்?"

அவளது பேச்சை நம்பாமல்... வேண்டுமென்றே அவளை இழுத்துக் கொண்டு வேகமாய் அவன் நடந்து சென்ற விதம்... ஜனனிக்கு விநோதமாய் இருந்தது.

மீண்டும் மலையடிவாரத்திலிருந்த குடவரைக் கோவிலுக்கு அருகே வந்தனர்.

அடிவாரத்திலிருந்து மலை உச்சியை அண்ணாந்து பார்த்தனர்.

"ஜனனி! இந்த மலையில இருக்கிற பாறைகள் ஒவ்வொண்ணும் அடுக்கி வச்சாப்பல ஒருவிதத் தோற்றமா இருக்குல்ல...?"

"ஆமா... முன்னூறு அடி உயரத்துல... பார்க்கும் போதே ஒரு பிரமிப்பை ஏற்படுத்தறாப்பல இருக்கு."

"மலை உச்சியில இருந்து பார்த்தால்... சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் மலை தெரியுமாம். சரி! இந்தக் கோவிலுக்கு தென்கிழக்கு மூலையில தண்ணீர் தானாகவே பெருக்கெடுத்து வரும் ஊற்று இருக்கிறதாக... நான் கேள்விப்பட்டேன். அது எங்கே இருக்குன்னு... தேடிப் பார்த்துடலாம். வா!"

சிறிது நேரத்தில் சதுர வடிவமாய் செதுக்கப்பட்டிருந்த ஒரு பள்ளத்திலிருந்து ஊற்று நீர் பெருகி வருவதைக் கண்டனர்.

குனிந்து படுத்து பள்ளத்தில் கையை விட்டு நீரை அள்ளிப் பருகினாள் ஜனனி.

"வாவ்! அத்தான்! தேங்காய் தண்ணீர் மாதிரி அவ்வோ இனிப்பா இருக்கு. இந்த மலைக்குப் பக்கத்துல இப்படி யொரு ஊத்துத் தண்ணியா? ஆச்சரியமா இருக்கு!"

ஜெகன், பக்கத்தில் கீழே கிடந்த நீண்ட மரக் கொம்பைப் பள்ளத்தினுள் விட்டுப் பார்த்தான்.

"பார்க்க... சதுர வடிவ சின்னப் பள்ளம் மாதிரி இருந்தாலும்... ஆழம் ஜாஸ்தியாத்தான் இருக்கும் போலிருக்கு. கொம்பு முழுசா முங்கியும் தரை தட்டுப் படவே இல்லை..."

"ரெண்டு மூணு வாய் தண்ணியைக் குடிச்சுப் பாருங்களேன். விருந்து சாப்பாட்டை சாப்பிட்ட மாதிரி வயிறு திம்முன்னு ஆயிடுச்சு. நாளைக்கு வரைக்கும் பசியே எடுக்காது போலிருக்கு."



ஜெகனும் குனிந்து தண்ணீரை அள்ளிப் பருகினான்.

"உண்மைதான் ஜனனி! இந்தத் தண்ணியை எடுத்து சாமி விக்கிரகங்களுக்கு அபிஷேகம் பண்ணிட்டு... இதே தண்ணியைக் குடிச்சுட்டு சித்தர்கள் தியானத்துல அப்படியே உட்கார்ந்துடுவாங்க போலிருக்கு... பல மணி நேரம் ஆனாலும் பசி தாகம் எடுக்காம இருக்கும் இல்லையா?"

"இந்தக் குடவரைக் கோவில், மலை, இந்தப் பகுதி எல்லாமே ரகசியங்கள் நிறைஞ்சதா இருக்கு அத்தான்! ஆமா... மலை மேலே இருக்கிற சித்தர் சமாதியை எப்போ போய் பார்க்கப் போறோம்?"

"எதுக்குக் கேட்கிறே?"

"ஜடாமுடி சித்தரைக் கனவுலே தரிசனம் செய்த திலிருந்து... எனக்கு இருப்பே கொள்ளலை... நேரிலே சித்தரோட சமாதியைப் பார்த்து வணங்கணும். விளக்கேத்தி வெச்சு வேண்டிக்கணும்னு ஒரே ஆசை. அதான் கேட்டேன்."

"இன்னிக்கு பவுர்ணமி வேற... ராத்திரியில மலை மேலே போய் சித்தரோட சமாதியைப் பார்க்கலாம். சரியா?"

"அதுவரைக்கும் இங்கதான் இருக்கப் போறோமா? இன்னும் நிறைய டைம் இருக்கே?"

"இல்ல... ஜமீன் மாளிகைக்கே போயிடலாம். நீ நேத்து நைட்டெல்லாம் தூங்கலை... பாவம்! கொஞ்சம் நேரம் ஓய்வெடு... நானும் ஜமீன்தாரைப் பார்த்து சில விஷயங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக்க விரும்பறேன்..."

என்றபடி பேண்ட் பாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்தியிருந்த அந்தச் சிறு டைரியை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

"சரி! உங்க இஷ்டம் அத்தான்! மாளிகையில நான் கண் அசந்ததுக்கு அப்புறம்... என்கிட்ட சொல்லிக்காம நீங்க மட்டும் கிளம்பிப் போயிட மாட்டீங்களே?"

"சேச்சே! சத்தியமா... உன்னைத் தனியா விட்டுட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். போதுமா?"

"அப்பாடா... இது போதும்."

நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி புன்னகைத்தாள் ஜனனி.

"நைட்டுலே இங்கே நாம்ப வரும்போது... மறக்காம மினி டார்ச்சை எடுத்துட்டு வரணும்..."

"ஆமாமா... விளக்கேத்தணும். அதுக்குத் தேவையானதை எடுத்துட்டு வரணும். உதிரிப் பூக்களும் கொஞ்சம் மல்லிகைச் சரமும் மாளிகையில கேட்டு வாங்கி எடுத்துட்டு வரப் போறேன்..."

"ஆராய வந்த இடத்துல... பூஜை பண்ண ஆரம்பிச்சுட்டியா?" அவளைக் குறும்புத்தனமாய்ப் பார்த்து நகைத்தான் ஜெகன்.

"நீங்க உங்க வேலையைப் பாருங்க... நான் என்னோட திருப்திக்கு விளக்கேத்திப் பூப்போட்டு கும்பிட்டுக்கிறேன். ஜடாமுடி சித்தர் ரொம்ப சக்தி வாய்ந்தவருன்னு... சண்முகம் ஐயா சொன்னதா நீங்கதானே என்கிட்ட சொன்னீங்க? இது போதாதுன்னு... என் கனவிலேயே அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிட்டாரு...



நான் அப்படியே புளகாங்கிதம் அடைஞ்சு போயிட்டேன். நீங்க என்னடான்னா... கிண்டல் பண்றீங்களே அத்தான்?"

"நோ... நோ! நான் கிண்டல் பண்ணலை. படிச்சவ... ஆபீசுல பெரிய பதவியில கைநிறைய சம்பாதிக்கிற இந்தக் காலத்துப் பொண்ணு நீ! இவ்ளோ பக்தியா இருக்கிறதை நெனைச்சு நான் பெருமைப்படறேன்... தெரியுமா?"

இருவரும் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரை நோக்கி நிதானமாய் நடந்தனர்.

குடவரைக் கோவில் தூணின் மறைவிலிருந்து ஒரு உருவம்... இவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

## 11

பவுர்ணமி நிலவு பால் ஒளியை சிந்தியவண்ணம் மோகனமாய் சிரித்துக் கொண்டிருந்தது.

சிறிய டார்ச்சை உயிர்ப்பித்தபடி மலைப் பாதையில் மூச்சு வாங்க ஏறிக் கொண்டிருந்தாள் ஜனனி.

நான்கடி முன்னே நடந்து கொண்டிருந்த ஜெகன்... நின்று நிதானமாய்த் திரும்பிப் பார்த்தான்.

"உனக்கு இந்தக் கஷ்டம் தேவையா ஜனனி? பார்க்கவே பாவமா இருக்கு எனக்கு...!"

"வாழ்நாள்லே இந்தச் சித்ரா பவுர்ணமியை என்னால மறக்கவே முடியாது. இப்படியொரு திரில்லான அனுபவம்

யாருக்குக் கிடைக்கும்? கொஞ்ச நேரத்துல ஜடாமுடி சித்தரோட சமாதியை நேரில் பார்க்கப் போறோமேன்னு... உள்ளூர எவ்ளோ ஆர்வமும் எதிர்பார்ப்பும் அலை மோதுதுன்னு... எனக்குத்தானே தெரியும்?

சரி... அதை விடுங்க.... இன்னிக்கு மதியம் நீங்க தனியா ஜமீன்தார்கிட்டே பேசிக்கிட்டிருந்தீங்களே? பேசினதிலே என்ன விவரத்தைத் தெரிஞ்சுக்கிட்டீங்க?

ஆங்... இன்னொரு விஷயத்தைக் கேட்கணும்னு நெனச்சுட்டிருந்தேன்... குகையில.. வெளிச்சமா இருந்த பாதையில... மணற்பரப்புலே ஏதோ டைரியைக் கண்டெடுத் தீங்களே? அதுலே ஏதாச்சும் நமக்கு வேண்டிய முக்கியமான தகவல் கிடைச்சுதா? அதைப் பத்தி நீங்க என்கிட்டே ஒண்ணுமே சொல்லலையே அத்தான்?"

"ஜடாமுடி சித்தரோட தீவிர பக்தையாவே ஆயிட்டே நீ...! மனசுக்குள்ளே அவரைப் பிரார்த்தனை செய்தபடியே கவனமா மலையேறி வா... கவனத்தைச் சிதற விடாம முழு ஈடுபாட்டோட விளக்கேத்தி வேண்டிக்கோ... சரியா?

எப்படியும் நாளைக்கு எல்லா விஷயமும் வெட்ட வெளிச்சத்துக்கு வந்துடும். வந்த வேலை முடிஞ்சதுன்னு... சண்முகம் ஐயா கிட்டே சொல்லிட்டு நாம்ப கிளம்ப வேண்டியதுதான்..."

அதற்கு மேல் அவள் எதைப் பற்றியும் கேட்கவில்லை. ஜெகன் கூறியது உண்மைதான்... பாறைகளை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைத்தாற் போலிருந்த மலை மீது ஏறுவது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லைதான்.



கவனம் சிதறினால் கால் சறுக்கி உருண்டு விழுந்து கபால மோட்சம் அடைய வேண்டியதுதான்...

சிரமப்பட்டு மலை உச்சியை அடைந்த பின்பு... சுற்றும் முற்றும் பார்த்தாள். உச்சியில்... நடுநாயகமாக இருந்த சமதளப் பரப்பில் சித்தரின் சமாதி அமைந்திருந்தது.

அதன் எதிரே சிறு உடுக்கை கட்டப்பட்ட சூலம் நடப்பட்டிருந்தது. சூலத்திற்கும் சமாதிக்கும் இடையே அணையா தீபம் ஏற்றப்பட்டிருந்தது.

மலைக் காற்று சுழன்றடித்த போதிலும்... அணையா தீபம் கொஞ்சம்கூட அலைக்கழியாமல்... நிதானமாய் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும்... இருவரும் அதிசயித்துப் போய் ஒரு கணம் நின்று விட்டனர்.

ஜனனி மீண்டும் சமாதியின் மீது பார்வையைப் படர விட்டாள்.

என்னே அதிசயம்? கனவில் வந்தது போலவே... ஜடாமுடியுடன் சித்தர் பீடம் போன்ற அமைப்புடன் இருந்த சமாதியில் அமர்ந்து இவர்களையே பார்த்துக் கொண டிருந்தார்.

தீட்சணியம் மிக்க அந்தப் பார்வையைப் பார்த்ததும் ஜனனிக்கு ஜிவ்வென்று மேனி சிலிர்த்தது.

இரு கரங்களையும் தலைக்கு மேலே தூக்கிக் கூப்பி வணங்கினாள்.

"ஐயனே! என்ன பாக்கியம் நாங்கள் செய்தோம்?" அவளையும் அறியாமல் தழுதழுத்தாள்.

வேறு எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜெகன்... அவளது குரலைக் கேட்டதும் படாரென்று திரும்பிப் பார்த்தான்.

"எ... என்னாச்சு ஜனனி?"

தலைக்கு மேலே உயரத் தூக்கிய அவளது கரங்களைப் பார்த்து திகைத்தபடி கேட்டான்.

"அ... அதோ... அங்கே பார்த்தீங்களா? ஜடாமுடி சித்தர் அப்படியே என் கனவிலே வந்தாப்பலேயே சமாதி மேல உட்கார்ந்திருக்கிறதை... உ... உண்மையிலேயே நாம்ப ரொம்ப புண்ணியம் செய்திருக்கணும் அத்தான்!"

அவன் சமாதியை நோக்கி பார்வையைச் செலுத்தினான்.

"எ... எங்கே? என் கண்ணுக்கு ஒண்ணுமே தெரியலையே?"

"அங்கதான்... சித்தர் காட்சி கொடுத்துட்டு உடனே மறைஞ்சுட்டாரு அத்தான்... நான் பார்த்துட்டேன். கண்குளிர தரிசனம் செஞ்சுட்டேன். என்னை நம்புங்க அத்தான். சத்தியமா ஒரு கணத்துக்கு முன்னாலே... என் கனவிலே வந்த மாதிரியே உடம்பெல்லாம் விபூதி பூசிக்கிட்டு... தீட்சணியமா ஒரு பார்வை பார்த்தாரு. நான் அப்படியே ஆடிப் போயிட்டேன். நிஜமாத்தான் நான் சொல்றேன்..."

அவளது விழிகளிலிருந்து கண்ணீர் பிரவாகமெடுத்து வழிந்து கொண்டிருந்தது.

"நான்... நம்பறேன் ஜனனி! உனக்குப் பொய் சொல்ல வராதுன்னு எனக்குத் தெரியும்... இதோ எனக்கும் உடம்பு



புல்லரிச்சுப் போச்சு. தெரியுமா? எனக்கு உன் மேல ரொம்ப பொறாமையா இருக்கு... அதே சமயம் பெருமையாவும் இருக்கு...

ஏன்னா... எனக்குக் கிடைக்காத தரிசனம் உனக்குக் கிடைச்சுடுச்சே... அதுவும் இரண்டாவது தடவையா?

என்ன அப்படிப் பார்க்கிறே? கனவுலே ஒரு வாட்டி... நேரிலே இரண்டாவது வாட்டி... இதுக்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேணும்னு பெரியவங்க சொல்றது சரிதான்... நல்ல விஷயம் நடந்திருக்கு.

இந்த நேரத்துல நீ அழலாமா? சந்தோஷப்பட வேண்டிய விஷயம் இது ஜனனி!" என்றபடி உரிமையாய் அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான் ஜெகன்.

"இது ஆனந்தக் கண்ணீர்தான்!" கூறியவள்... தனது ஹேண்ட் பேக்கிலிருந்து நெய் தீபம் ஏற்றுவதற்குத் தேவையானவற்றை வெளியில் எடுத்தாள்.

சிறு மண் அகலில் திரியிட்டு தீபம் ஏற்றினாள். இந்தத் தீபமும் சுழன்று அடித்த காற்றிலும் நிதானமாய்ச் சிறிதும் அலைக்கழியாமல் சுடர் விட்டுப் பிரகாசித்ததும்...

ஜனனி மண்டியிட்டு அமர்ந்து சமாதியைத் தொட்டு வணங்கினாள். சமாதியின் அருகே அகன்ற மண் கிண்ணத்திலிருந்த விபூதியைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டு... ஜெகனுக்கும் பூசி விட்டாள்.

ஜெகன் பத்தடி தூரம் நடந்து... அங்கு இரு பெரிய பாறைகளுக்கு இடையே இடுக்கு போல் தெரிந்த குறுகலான

பாதையில்... டார்ச் லைட்டை உயிர்ப்பித்து உற்று நோக்கினான்.

"ஐயோ... அம்மா... ஆ... ஆ...!"

பெருங்குரலெடுத்து யாரோ கீழேயிருந்து அலறும் சப்தம் கேட்டது.

ராத்திரியில் அமானுஷ்யமாய் ஒலித்த அந்தக் குரல்... மலைப் பிரதேசம் முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

மழையில் நனைந்த புறாக்குஞ்சாய்... பயத்தில் நடுங்கிப் போன ஜனனி... ஜெகனின் புஜத்தை இறுகப் பற்றிக் கொண்டாள்.

ஆபத்பாந்தவனாய் அவளைத் தன் தோளோடு சேர்த்து ஜெகன் இறுக அணைத்துக் கொண்டான்.

இலைச் சருகுகள் மிதிபட்டு பலமாய் நொறுங்கும் சப்தம் கேட்டு... இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

# 12

சண்முகம் நிதானமாய் இவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்.

அவரது நெற்றியில் விபூதி பளிச்சென்று துலங்கிக் கொண்டிருந்தது. கழுத்தில் ருத்ராட்சம் அணிந்திருந்தார்.

இவர்களது முகத்தில் பீதி படர்ந்திருக்க... அவரோ அலாதியான புன்னகையோடு ஏறிட்டார்.



"என்ன ஜெகன்? ஆச்சரியமா பார்க்கிறே? சித்தர் சமாதி இருக்கிற மலைக்கு வரமாட்டேன்னு சொன்ன மனுஷன்... வந்து நிக்கிறாரேன்னு பார்க்கிறியா? மனசு கேட்கலை... உங்களுக்கு இந்த இடம் புதுசு. தெரியாத இடத்துல ஏதாவது ஆபத்துல நீங்க மாட்டிக்கக் கூடாதுல்ல! அதான் கிளம்பி வந்துட்டேன்..."

புன்னகைத்தபடியே வட்ட வடிவமான பாறை ஒன்றில் மெல்ல அமர்ந்தார்.

"கீழே யாரோ பயங்கரமா அலறின சப்தம் வந்ததே? இந்த நேரத்துல அப்படியொரு அலறலைக் கேட்டதும்... தூக்கி வாரிப் போட்டுடுச்சு ஐயா!"

மெல்லிய குரலில் பேசினாள் ஜனனி.

"குடவரை பாம்பாலம்மன் கோவிலுக்கு முன்னாடி... ஒருத்தன் மகா பாவத்தைப் பண்ணினான். வினை விதைச்சவன்... வினையை அறுப்பான்னு சொல்வாங்க.

அவன் செய்த பாவமே அவனுக்குத் தண்டனையைக் குடுத்துடுச்சு... கொஞ்ச நாளைக்கு முன்னே குடவரைக் கோவிலுக்கு முன்னே... ஒரு பிணம் கிடந்துச்சுன்னு சொன்னேனே? அந்தக் கொலையைச் செய்தவனுக்கு... பாம்பாலம்மனே தண்டனையைக் கொடுத்துட்டா... பாம்பு கடிச்சு உடம்புல நீலம் பாய்ஞ்சு செத்துட்டான்..."

"என்னய்யா சொல்றீங்க? பிணத்து மேல ஒரு ஏட்டுல சித்தர் எழுதின மாதிரி எழுதி... சித்தர் மேல அவதூறு பரப்பினவனா செத்துப் போயிட்டான்?" ஆர்வமாய்க் கேட்டான் ஜெகன்.

"அவனேதான்...!"

"குகைப் பாதையில... நான் ஒரு சின்ன டைரியைக் கண்டெடுத்தேன். அதுல அரிய வகை மூலிகைகளைப் பத்தின குறிப்பும்... அதற்குரிய பலன்களும் எழுதப் பட்டிருந்தது.

அதுலே மாய வேர்ங்கிற மூலிகை வேரை சுவாசிச்சா... கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு மாயமா மறைஞ்சுடுவோம்னு போட்டிருந்தது..."

"அப்புறம் அதுலே வேறென்ன தகவல் உனக்குக் கிடைச்சது?" குறுக்கு கேள்வி கேட்டார் சண்முகம்.

"ஜமீன் மாளிகைக்குச் சொந்தமான புதையல் குகைப் பாதையில ஓரிடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும்... எந்த இடத்துல புதைக்கப்பட்டிருக்குங்கிற தகவல்...

ஜமீன் மாளிகையில மாடியில கஜானா வைக்கப் பட்டிருக்கிற அறையில தேடினா கிடைக்கும்னு அதுலே போட்டிருந்தது."

"இந்த டைரி யாரோடதா இருக்கும்னு... நீ நெனைக்கிறே?"

"குடவரை பாம்பாலம்மன் கோவிலுக்கு முன்னாடி பிணத்தைப் போட்டு சித்தர் மேல அவதூறு பரப்பினவன்... அத்தோட ஜமீன் மாளிகையில அமானுஷ்யமா நடமாடி எல்லோருக்கும் பீதியைக் கிளப்பினவன்...

நடு ராத்திரி மாயமா மறைஞ்சு வந்து புதையல் இருக்கிற ரகசியத்தைத் தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான்...



மாளிகையில நடமாடியிருக்கான். அவன் தேடி வந்த தகவல் கிடைக்காத ஏமாற்றத்தால கண்டதையும் போட்டு உடைச்சு நாசம் பண்ணிட்டு மாய வேர் உபயத்துல மாயமா மறைஞ்சு நடமாடி... அத்தனை பேரையும் பயமுறுத்தியிருக்கான்.

இன்னிக்குக்கூட இருட்டான குகைப் பாதையில ஒரு உருவம் தெரிஞ்சதா... ஜனனி சொன்னா. அது அவனாத் தான் இருக்கணும். நான் இன்னிக்கு மதியம்... ஜமீன்தார் கிட்டே விசாரிச்சேன்."

"புதையலைப் பத்திக் கேட்டியா ஜெகன்?"

"கேட்டேன். புதையல் இருக்கிறது உண்மைதான்னு சொன்னாரு. அவங்கப்பா காலத்துல தங்களுக்குச் சொந்தமான தோட்டத்துல கிணறு வெட்டும்போது புதையல் கிடைச்சுதாம்.

அதுலே வைர அட்டிகைகள், வைர வளையல்கள், வைர மோதிரங்கள்னு முழுவதும் வைரங்கள் பதிக்கப்பட்ட நகைகள் கிடைச்சதாம்.

ஆனா... அதை ஜமீன் மாளிகையில ரகசியமா வச்சிருந்தபோது... குடும்பத்துக்கு நிறைய கெடுதல்கள் ஏற்பட்டதாம்.

புதையலை வச்சிருந்தா... ஜமீனுக்கே ஆபத்து ஏற்பட்டு விடும்னு பயந்து... அதை அப்படியே குகையில கொண்டு போய் புதைச்சுட்டாங்களாம். அது எங்கே புதைக்கப்பட்டிருக்குன்னு குறிப்பெழுதி பெரிய ஜமீன்தார் யாருக்கும் தெரியாம மறைவா மாளிகையில வச்சாருன்னு சொன்னாரு..."

"வேற யாரு" ஜடாமுடி சித்தராத்தான் இருக்கும். அவரோட சக்தியே சக்தி. ஜெகன்! எல்லாம் உன் மூலமா வெளிப்படணும்னு பிராப்தம் இருக்கு போலிருக்கு...!" என்றபடி அவனது கரத்தைப் பற்றினார் சண்முகம்.

"பார்த்தீங்களா? உங்களுக்குத் தரிசனம் கிடைக் கலைன்னு வருத்தப்பட்டீங்க... ஆனா ஐயா ரூபத்துல வந்து ஃபிரண்ட்லியா பேசி சகலத்தையும் நமக்குப் புரிய வச்சுட்டாரு பார்த்தீங்களா? கிரேட்!"

ஜனனி இதைக் கூறியதும்... அவனையும் அறியாமல் மலை உச்சியை அண்ணாந்து பார்த்துக் கைகூப்பி வணங் கினான் ஜெகன்.

பூரண நிலவு புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தது.